Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 5 | செந்தமிழ் மாத சஞ்சிகை | இதழ் 11

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ரஜப்மீ 1934 நவம்பர்மீ

1. மிஃராஜ் இரவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ... 357
2. நீதிநபி ... 401
3. உருது பாஷையும் நம்மவரும் ... 404
4. மேளுட்டைப் பின்பற்றியதன் பலன் ... 406
5. தீண்டாமை விலக்கின் அ[illegible] ... 412
6. ஈரான் தேசத்து ஷ்கிரீகள் ... 417
7. ஔரங்ஜீபும் வண்டி[illegible]ம் ... 420
8. பகுத்தறிவோ! பகுத்தறிவு!! ... 423
9. முல்லாவும் காதியானியும் ... 427
10. நாயக சரிதையில் நம்மவரின் தவறு ... 433
11. நம் பிரதிநிதிகள் ... 436

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
26 NOV 1934

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,
"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,
43-A, போஸ்டாபீஸ் தெரு,
G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
208339
சென்னை-600 008

OFFICE OF THE DIRECTOR OF BOOKS
28 NOV 1934
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 ரஜப் மீ 1934 ளூ நவம்பர் மீ	இதழ் 11

மிஃராஜ் இரவும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும்

மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து (=கஃபாவிலிருந்து) மஸ்ஜிதுல் அக்ஸா (பைத்துல் முகத்தஸ்) வரை தன் அடியாரை இரவில் செல்லும்படி செய்தவன் தூயவன். (பனீ இஸ்ராயீல்.)

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலமுதல் இற்றைநாள் வரை, அதாவது 1355 வருஷகாலமாக மிஃராஜ் இரவு, ஒரு புனித நாளாகக் கருதப்பட்டு வருகிறது. மேலும், பெருமானார் (ஸல்.) அவர்களின் உம்மத்தவர்களான நமக்கு இறைவன் இனியில்லா வண்ணம் அருள்புரிந்த ஓர் இரவுமாகும். இந்த இரவில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இப்பூதவுடலுடன் ஏழு வானங்களையும் கடந்து, “ஆலமே மலக்கூத்”தைப் பார்வையிட்டு இறைவனுடன் உரையாடி வந்தார்களென்றால் இவ்விரவின் மகாத்மியத்தை விளக்கவும் வேண்டுமோ? எனவே, மிஃராஜினால் நமது முஸ்லிம் சகோதரர்கள் அடைந்த பயன் யாது? இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயம் என்னே? இந்தப்பயனை நாம் எவ்விதத்தில் அடையலாம் என்ற விஷயங்களை கவனியாது, முஸ்லிம் என்று தங்களை கூறிக்கொள்ளும் ஓர் சிலர், முல்ஹிதுகளும், தஹ்ரீகளும், நபித்துவத்தை நிராகரிப்போரும் செய்த சில ஆட்சேபனைகளைக் கிளப்பிக்கொண்டு அதாவது, மிஃராஜானது சரீரத்துடன் நடைபெற்றதில்லை; அது ஆத்மார்த்தமானது? என்ற விவாதத்திலீடுபட்டிருக்கின்றனர். ஆதலால், நாம் முதலில் மிஃராஜ் விஷயமாய், திருகுர்ஆன் ஹதீதுகளில் கூறப்பட்டிருக்கும் ஆதாரங்களை விளக்கிவிட்டு, பின்னர் மிஃராஜ் ஆத்மார்த்த காட்சியெனப் பிதற்றப்படும் கூற்றைச் சர்ச்சை செய்வோமாக!

மிஃராஜ் விவரம்

புகாரி, முஸ்லிம் ஆகிய ஸஹீஹான ஹதீது கிரந்தங்களில், மிஃராஜின் விபரத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கும் செய்திகளின் சாராம்சம் வருமாறு:—

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு மிஃராஜு நிகழ்ந்த இரவில், அவர்கள் 'மஸ்ஜிதுல் ஹராமி'ல் அதாவது, கஃபாவிலுள்ள 'ஹத்தீமி'ல் படுத்துக்கொண்டிருந்தார்கள். நாயகமவர்கள் தூக்கத்துக்கும் விழிப்புக்கும் மத்தியமான நிலைமையிலிருந்தபோது, ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள்வந்து, நாயகமவர்களை 'ஜம்ஜம்' கிணற்றினண்டையில் அழைத்துச்சென்று, அவர்களின் நெஞ்சைப் பிளந்து, அதை ஜம்ஜம் ஜலத்தால் கழுவினார்கள். பின்னர் ஈமான் (விசுவாசம்) ஹிக்மத் (ஞானம்) ஆகியவைகளால் நிரப்பப்பட்டிருந்த ஒரு தட்டைக் கொண்டுவந்து, அதை நாயகமவர்களின் நெஞ்சில் நிரப்பி, அதை மூடிவிட்டார்கள். பின்னர் நாயகமவர்களை 'புராக்' என்ற வாகனத்தில் ஏற்றிக்கொண்டு "பைத்துல் முகத்தஸ்" சென்று, அவ்விடத்திலிருந்து வானுலகத்துக்கழைத்துப் போனார்கள். அங்கு ஏழு வானங்களையும் கடந்தபின், ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் தங்கள் அசல் வடிவத்தில் நாயகமவர்களுக்கு வெளியானார்கள். பிறகு ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் நாயகமவர்களுடன் குத்ரத்தின்கலம் நடப்பதின் சப்தம் கேட்குமிடம் வரை வந்தார்கள். பின்னர் அடியானுக்கும் ஆண்டகைக்குமிடையிலுள்ள திரை அகற்றப்பட்டு, நாயகம் (ஸல்.) அவர்கள் இறைவனுடன் தனிமையில் உரையாடினார்கள். இவ்வுரையாடிய விவரத்தைக்கூற எழுதுகோலாலும் முடியாது, நாவும் சக்தி பெறாது.

இச்சமயம், நாயகமவர்களின் உம்மத்துகளாய நம்மவருக்கு இறைவன் 50 நேரத்துத் தொழுகையை கடமையாக ஏற்படுத்தினான். "உம்மத்தேமுஹம்மதீ"களில் 'ஷிர்க்கு' என்ற இணைவைத்தலைச் செய்யாதிருக்கிற ஒவ்வொருவருக்கும் மஃபிரத் (பிழை பொறுத்தல்) என்னும் முந்தாணியின் நிழலில் அபயம் கிடைக்குமென்ற நற்செய்தியும் நாயகமவர்களுக்குச் சொல்லப்பட்டது. நாயகமவர்கள் இவ்வாத்மார்த்த நன்கொடைகளை பெற்றுக்கொண்டு திரும்புகையில், ஹஜ்றத் மூஸா நபியவர்களிடம் வந்தபோது, "தேவன் சந்நிதானத்தில் கிடைத்ததென்ன?" என்று ஹஜ்றத் மூஸா நபியவர்கள் விசாரித்தார்கள். அதற்கு நாயகமவர்கள், '50 நேரத்துத் தொழுகை' என்று கூறவே, "தங்களுடைய உம்மத்துகளால் இத்தனை நேரத்துத் தொழுகைகள் நிறைவேற்ற முடியாது; திரும்பச் செல்லுங்கள்" என ஹஸ்ரத் மூஸா (அலை.) கூறினார்கள். பின்னர், நாயகமவர்கள் இறைவனிடம் மறுபடியும் சென்று மன்றாடினார்கள். இந்த ஐம்பது நேரத்துத் தொழுகையில் ஓரளவு குறைந்தது. பின்னர் நாயகம் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களிடம்வந்து பலமுறை திரும்பியதின் பயனாக, 50 நேரத்துத் தொழுகை, 5 நேரத்து தொழுகையாக குறைக்கப்பட்டு, இவ்வாறு குறைக்கப்பட்ட தொழுகையை ஒழுங்காய் நிறைவேற்றுபவருக்கு 50 நேரத்துத் தொழுகையின் பலன் கொடுக்கப்படுமென்றும் இறைவனால் அருளப்பட்டது என்பதே.

மிஃராஜின் நோக்கம், பலன்

அல்லாஹ் தன்னுடைய திருஷ்டாந்தங்களை காண்பிப்பதற்காக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை மிஃராஜுக்கு அழைத்ததாக தனது திருமறையில் கூறியிருக்கிறான். தவிரவும், திருமறையில் மஸ்ஜிதுல் ஹறாமும், மஸ்ஜிதுல் அக்ஸாவும் கூறப்பட்டிருப்பதும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமாகும். ஹஜ்றத் இப்ராஹீம் கலீல் (அலை.) அவர்களின் புதல்வர்களான ஹஜ்றத் இஸ்மாயீல் நபியவர்களுக்கு அறப் தேசமும், ஹஜ்றத் இஸ்ஹாக் நபியவர்களுக்கு ஷாம் தேசமும் கொடுக்கப்பட்டது. இப்ராஹீம் நபியவர்களுக்குப் பின், நாயகமவர்கள் திருஜனன மேற்படும் வரை தோன்றிய நபிமார்களெல்லாம் ஹஜ்றத் இஸ்ஹாக் நபியவர்களின் சந்ததியினராகவே இருந்தனர். இவர்கள் யாவரும் ஷாம் தேசத்திலுள்ள 'பைத்துல் முகத்தஸ்' என்ற 'மஸ்ஜிதுல் அக்ஸா'வுக்கு மட்டிலும் காரியகர்த்தர்களாக ஆனார்கள். ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களின் புதல்வர்கள் பைத்துல்லாவாகிய கஃபாவுக்கு மட்டிலும் காரியகர்த்தர்களாக இருந்து வந்தனர். இறைவன் நாயகமவர்களை, எல்லா நபிமார்களுடைய தன்மைகளும் ஒருங்கே அமையப் பெற்றவர்களாகச் சிருஷ்டித்து, அகில உலக நபியாக ஆக்கியிருந்ததால், அவர்கள் கஃபாவின் காரியகர்த்தராக இருந்ததுடன் பைத்துல் முகத்தஸுக்கும் காரியகர்த்தராக இருக்கவேண்டியது அவசியமாக இருந்தது. இதனால்தான் நாயகமவர்கள் 'ஸாஹிபுல் கிப்லத்தைனி' இரண்டு கிப்லாவுடையவர்களாக இருந்தார்கள். அன்றியும் மிஃராஜின் போது, பைத்துல் முகத்தஸில்

எல்லா நபிமார்களுக்கும் இமாமாக இருக்கும் பேறும் கிடைத்தது. எனவே, இப்ராஹீம் நபியவர்களின் சொத்துக்கள் அவர்களுடைய புத்திரர்களுக்கிடையில் பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தவை "ஹக்கீகத்தே முஹம்மதியா" வில் மறுபடியும் ஒன்று சேர்க்கப்பட்டன. ஆத்மார்த்த உலகின் ஆதிக்கத்தைத் தந்தருளுவதற்காக இறைவன் தன்பால் நாயகமவர்களை அழைத்து, 50 நேரத்துத் தொழுகைகளை ஐந்து நேரத்துத் தொழுகையாக விதித்து, நாயகமவர்களின் உம்மத்துகளுக்கு அவர்களில் ஷிர்க்கு செய்யாதிருப்பவர்களைத் தவிர்த்து—மஃபிரத்துச் செய்வதாக (பிழை பொறுப்பதாக) வாக்களித்ததுடன், சத்தியத்துக்கு விரோதியாக வுள்ளவர்களை ஒழித்து இஸ்லாத்துக்கு வெற்றியும் உதவியும் அளித்தல் ஆகிய காரியங்கள் இறைவனாலளிக்கப் பட்டன. எனவே முஸ்லிம்களாகிய நாம்,இந்த மிஃராஜின் மூலமாக நாயகமவர்களுக்கும் நம்மவருக்கும் கிடைத்த அநுகூலங்களை நினைத்து அவ்வல்லோனை ஸ்தோத்திரம்செய்து, அவன் நம்மீது விதித்த கடமையை நிறைவேற்றுவதாக பிரதிக்ஞைசெய்து கொள்வது அவசியமாக இருக்க, இதை விட்டு விட்டு, இக்காலத்திலுள்ள சிலர் நபிகள் நாயகமவர்களுக்குக் கேற்பட்ட மிஃராஜு ஆத்மார்த்தமானது என வாதாட முற்பட்டு, மக்களின் கொள்கையை மாற்றி, வேறு வழியிற்றிருப்ப முயற்சிப்பது வருந்தத்தக்க விஷயமாகும். ஆயினும், பொது ஜனங்களுக்கு உண்மையை விளக்குவான் வேண்டி இவ்விவாதத்தின் சாராம்சத்தை விளக்குவாம்.

மிஃராஜு ஆத்மார்த்தமானதா?

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் முதல் கலீபாவான ஹஸ்றத் அபூபக்ரிப்னு அபீகுஹாபா (ரலி.) அவர்களுக்கு 'ஸித்தீக்' என்ற பட்டமும், நாயகமவர்களின் கொடிய விரோதியான அபூஜஹ்லுக்கு "அபூஜஹ்லு" என்ற பெயரும் இச்சம்பவத்தால் தான் கிடைத்தன. எவ்வாறெனில், ஸ்தூல சரீரத்துடன் ஒருவர் வானமண்டலங்களில் சஞ்சாரம் செய்வது புத்திக்கு எட்டக்கூடிய விஷயந்தானாவென்பது இவ்விடத்தில் முக்கிய பிரசினையாகும். இறைவனிடமிருந்து வானவர் மூலமாக, வேதவசனம் ஒருவருக்கு வருவதாக நம்புபவர்களுக்கு, வேதவசனத்தை வானவர் மூலமாக அடைபவர், ஸ்தூலத்துடன் வானமண்டங்களில் சஞ்சாரம் செய்வதை நம்புவது புத்திக்கெட்டாத விஷயமன்று. தவிரவும் நபிகள் நாயகமவர்கள் தங்கள் ஆத்மா மாத்திரம் வானமண்டலயாத்திரை செய்ததாகக் கூறி இருந்தாலும், அல்லது சொர்ப்பனங்கண்டதாகக் கூறி இருந்தாலும், அபூஜஹ்லு போன்றவர்கள் இதை நிராகரித்து, நபிநாயகமவர்களைப் பொய்ப்பிக்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் இதற்குமாற்றமாய் ஸ்தூலத்துடன் வானமண்டல யாத்திரை செய்தார்கள் என்ற பிரச்சினை உண்டானதால் தான், அபூஜஹ்லு முதலியோர், நாயகமவர்களை நிராகரிக்கவும் பொய்ப்பிக்கவும் செய்தனர் என்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும்.

நாயகமவர்கள் ஸ்தூலத்துடன் வானமண்டல யாத்திரை செய்தார்களென்பது புத்திக்கெட்டாத விஷயமாகும் என்பதற்கு மூன்று உதாரணங்கள் பிரதானமாகக் கூறப்படுகின்றது. அவைகளாவன :—

1. கனத்த ஜடலம் ஆகாயத்தின்மேற் செல்லுதல் புத்திக்கு மாறானது.

2. சொற்ப நேரத்துக்குள் பூமியிலிருந்து வானுலகங்களிற் சென்று அவைகளைச் சுற்றிப் பார்த்துத் திரும்ப வருதல் புத்திக்கு எட்டாத விஷயம்.

3. பூமிக்குமேலுள்ள அக்கினி மண்டலத்தில் உடலம் எரிந்துபோகுமாதலால் அதைக் கடந்துசெல்வது முடியாத காரியம். என்பதே.

இம்மூன்று பிரதான வினாக்களும் கீழே குறிப்பிடப்படுபவைகளைக் கொண்டு மறுக்கப் பட்டுப் போகிறது. அது வருமாறு :—

1. தற்போது நைட்ரோஜனின் உதவியால் ஆகாயவிமானங்கள் ஜனங்களையும், பீரங்கிக் குண்டுகளையும் ஏற்றிக்கொண்டு ஆகாயத்தில் பறக்கின்றனவாதலால், கனத்த உடல் ஆகாயத்தின்மேற் செல்லமுடியாது என்று கூறுவது புத்திக்கெட்டாத விஷயமென்று இக்காலத்தில் கூறமுடியாது.

2. சூரியகாந்திகள், சந்திர கலைகள் ஆகியவைகள் மணிக்கு 72 கோடி மைல் தூரம் செல்வதாக வானசாஸ்திரிகள் கணித்திருக்கும்போது, ஒளியமயமாகவுள்ள நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சூரிய சந்திர கிரணங்களினுடையவும், கிரகங்களினுடையவும் நடமாட்டத்தைப் பார்க்கினும் பல்லாயிரக்கணக்கான வேகத்துடன் ஆகாயமண்டலங்களைச் சுற்றிப்

பார்த்து வருவது முடியாத காரியமன்று. தவிரவும், நாயகமவர்கள் மிஃராஜ் பயணம் புறப்படுவதற்குமுன், அவர்களின் நெஞ்சம் பிளக்கப்பட்டு, இவ்வையகத்துக்குரிய மிருக சக்திகள் கழிக்கப்பட்டு வானுலக யாத்திரைக்கு வேண்டிய அம்சங்கள் நிரப்பப்பட்டதாக ஹதீதில் கூறப்பட்ட பின்னர், இதில் சந்தேகப்படுவதற்கு எவ்வித காரணமுமில்லை.

சகல உடலங்களையும் கரித்துவிடக்கூடிய சக்தி அக்கினிக்கில்லையாதலின், அக்கினிமண்டலத்தில் உடலம் கரிந்துபோகுமென நினைப்பதும் தவறு. ஏனெனின், அநேக ஜீவப்பிராணிகளும், செடி கொடிகளும் அக்கினியால் கரிந்துபோகாது அதிலேயே வாசஞ் செய்துவருவதாக தத்துவ ஞானிகள் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள். தவிரவும், இப்புவியில் வெந்நீரூற்றுகள் பலவிடங்களிலிருப்பதாகவும், ஊற்றுநீரிலிருந்து வெளிக்கிளம்பும் ஆவியின் உஷ்ணத்தால் அவ்வூற்றின் பக்கத்தில் செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறதென்றும், அவ்வூற்று ஜலம் பூமியில் கொஞ்சதூரம் ஓடி, உஷ்ணம் குறைந்தபின்னரே ஜனங்கள் அதில் குளித்துத் தங்களது ஸ்தூல வியாதிகளைப் போக்கிக்கொள்கிறார்களென்றும், இத்தகைய கொடுமையான வெந்நீருக்குள் மீன்கள் இருக்கின்றனவென்றும், அவ்வூற்றுக்குச் சென்று வந்தவர்கள் கூறுகிறார்கள். ஆகவே உஷ்ணமானது சகல ஸ்தூலங்களையும் கரித்துவிடக்கூடியதாக இல்லையென்பதை இதிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். மேலும் வானுலக யாத்திரைக்கு முன்னர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நெஞ்சு பிளக்கப்பட்டு, அதில் பரமண்டல யாத்திரைக்கானவைகள் நிரப்பப்பட்டிருப்பதால், இவ்வக்னிமண்டலம் நாயகமவர்களின் உடலத்தை கரிக்கச் சக்தி பெறவில்லையென்று நாம் அறிந்துகொள்கிறோம். ஆகவே, நாயகமவர்கள் பரமண்டல யாத்திரையானது, யுக்தி சாஸ்திரப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதாகவே இருக்கிறது. ஆயினும், யுக்தி சாஸ்திரத்தில் அதிகம் ஆழமான ஆராய்ச்சி செய்யப்பட்டு பல அபூர்வ விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னுள்ள சில யுக்திவாதிகள் கேட்ட இவ்வினாக்களை இப்பொழுதுள்ள யுக்திவாதிகள் கேட்கத் துணிவதில்லை. எனினும், நபிகள் நாயகமவர்களின் நபித்துவத்தின்மீது நம்பிக்கையில்லாதவர்களும், நாத்திகர்களும் பொதுஜனங்களை ஏமாற்றி தங்கள் கட்சியில் சேர்க்க முயற்சிப்பவர்களும் இக்காலத்திலும் இவ்வினாக்களை கடாவுகின்றார்கள். ஆனால் இவர்கள் தங்களைப் பகிரங்கமாக நாத்திகர் என்றோ, நாயகமவர்களின் நபித்துவத்தில் நம்பிக்கை கொள்ளாதவர்கள் என்றோ கூறினால், முஸ்லிம்கள் தங்களது மாயப் பிரசாரத்தில் சிக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்திருப்பதால், இவ்விஷயத்தை வெளியிடாமல், தங்களை யுக்திவாதிகள் என்றும், ஒவ்வொரு விஷயத்தையும் அறிவென்னும் அளவுகோலைக் கொண்டு அளந்து பார்ப்பவர்களென்றும் கூறிக்கொள்ளுகின்றார்கள். அத்துடன் இன்னோர் பொதுஜனங்களை ஏமாற்றி, தங்கள் மாயவலையில் சிக்கவைக்க சில ரிவாயத்துகளையும் தங்கள் கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டவும் செய்கின்றனர். ஆனால் அந்த ரிவாயத்துகள் யாவும் ஸஹீஹான ரிவாயத்துகளாக இல்லையென்பதற்குத் தக்க ஆதாரங்களிருக்கின்றன. ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா, (ரலி.) ஹஜ்றத் முஆவியா, இமாம் ஹஸன் பஸரி (றஹ்.) ஆகியவர்களின் ரிவாயத்துகளில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஆன்மா மாத்திரம்தான் வானுலகு யாத்திரை செய்துவந்ததாகக் காணப்படுகிறதென்பதற்கு ஆதாரமிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இப்பெரியார்கள் கூறிய ரிவாயத்துகள் வருமாறு:—

"முஆவியத்துப்னு அபீஸுப்யானிடம், மிஃராஜு விபரத்தைப்பற்றி கேட்கப்பட்டபோது, 'இது அல்லாஹ்வின் புறத்திலிருந்துண்டான உண்மையான சொப்பனம்' என்று கூறினார் என்பதாக, யஃகூபுப்னு அத்பத்திப்னில் முகையரா எனக்குக் கூறினார் என்பதாக இஸ்ஹாக்கைத் தொட்டும் ரிவாயத்து செய்யப்படுகிறது."

இந்த ரிவாயத்தில் முஆவியா (றலி.) அவர்கள் கூறிய விஷயம் "சொப்பனம்" என்பதே அல்லாமல் ஆத்மா மட்டிலும் வானுலக யாத்திரை செய்ததாகக் கூறப்பட்டில்லை. ஆதலால், யுக்திவாதிகள் தங்களுடைய வாதத்துக்கு இந்த ஹதீதை ஆதாரமாகக் காட்டுவது சரியன்று. நிற்க, முஆவியா (றலி.) கூறியதாக யஃகூப் என்பவர் சொன்னாரென இந்த ரிவாயத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஹஜ்றத் முஆவியா (றலி.) அவர்கள் காலத்தில் யாகூப் என்பவர் இருக்கவில்லையாதலால், யாகூப் என்பவருக்கு வேறு யாரேனும் முஆவியா (றலி.) கூறியதாகச் சொல்லியிருக்க வேண்டும்.

எனவே, ஹதீதுச் சட்டப்படி இந்த ஹதீதுக்கும் "முன்கத்திஉ'' என்று பெயர். ஆதலால், இந்த ஹதீது பலமற்றது.

"நபிகள் நாயகமவர்களின் உடலம் இழக்கப்படவில்லை; ஆனால் அவர்களது ஆன்மா இரவில் கொண்டுபோகப்பட்டது'' என்று ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா, கூறியிருப்பதாக அபூபக்கர் ஸித்தீக் (றலி.) அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் தமக்குக் கூறியதாக முஹம்மது என்பவர் அறிவித்தார். இந்த ரிவாயத்தில் முஹம்மது என்பவர் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்காவைப் பார்க்கவில்லையாதலால், அபூபக்கர் ஸித்தீக் (றலி.) குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவர் கூறியதைக் கேட்டுத்தான் அவர் அவ்வாறு கூறியிருப்பதாகத் தெரிகிறது. எனவே, ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.) குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவர் என்பது இன்னாரெனத் தெரியவில்லையாதலின் ஹதீதுச் சட்டப்படி இதுவும் 'முன்கத்திஉ' என்ற சட்டத்தின்கீழ் வந்துவிடுகிறது. ஆதலால் இது சரியான ஹதீதன்று. எனவே, முஸ்லிம்களாகிய நாம், ஜும்ஹூரீன்களான பெரும்பான்மையோர்களின் மத்ஹபுப்படி, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஸ்தூலத்துடன் மிஃராஜுக்குச் சென்றார்கள் என்றே நம்ப வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

நீதி நபி

நவாப் ஸத்ருயார்ஜங் பகதூர் பிரசங்கம்

சகோதரர்களே! நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மிகவும் இருள் சூழ்ந்திருந்த காலத்தில், நபியாக அனுப்பப்பட்டு, எவ்விதச் சாமானும் முஸ்தீப்பு மில்லாத நிலைமையில், ஜனங்களிடை இஸ்லாமியப் பிரசாரம் புரிந்தார்கள். நாயகமவர்களின் நற்குண நன்நடத்தையின் காரணமாக அநேக ஆத்மாக்கள் அவர்களின் அழைப்பை ஒப்புக்கொண்டன மகான் அவர்களுக்குக் கிடைத்த பெரிய வேட்டை ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் அவர்களாகும். எனவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், இஸ்லாமியப் பிரசாரம் ஆரம்பித்த காலத்தில், ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் அவர்கள் வியாபார நிமித்தம் வெளிதேசஞ் சென்று திரும்பவருகிறார்கள். குறைஷித் தலைவர்கள் ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.) அவர்களைக் கண்டுகொள்ளவருகிறார்கள். பல விஷயங்களும் பேசப்படுகிறது. ஹஜ்றத் அவர்கள் மக்காவிலுள்ள புதிய சமாசாரங்களை விசாரிக்கிறார்கள். அதுபொழுது அபூஜஹ்லு என்பான், "அபூதாலிபுடைய சகோதரரின் அநாதைப் புதல்வர், தனக்கு அல்லாஹுத ஆலா 'வஹீ' அனுப்புவதாகக்கூறுகிறார்!' என்ற சமாசாரத்தை அறிவித்தனன். இச்சம்பவத்தை, இஸ்லாத்தின் பரம விரோதியான ஒருவனின் நாவிலிருந்து, ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் கேள்விப்படுகிறார்கள். இதர பேச்சுக்களைத் தள்ளிவிட்டு, உடனே நாயகம் (ஸல்.) அவர்கள் சமூகத்தில் வருகிறார்கள். அபூஜஹ்லு சொன்ன செய்தியை விசாரித்து, நாயகமவர்கள் அதற்குக் கூறிய பதிலைக்கேட்டுத் திருப்தியடைகிறார்கள். உடனே கலிமாவை ஓதுகிறார்கள். "நான் எவரிடத்திலேனும் இஸ்லாத்தைப்பற்றி கூறினாலும் அவர் அதை (ஆரம்பத்தில்) நிராகரிக்கவே செய்தனர் ஆனால், அபூபக்கரைத் தவிர, இவரிடத்தில் இஸ்லாத்தை நான் சமர்ப்பித்தபோது, அவர் எவ்விதக் குணக்குமுமின்றி அதை ஒப்புக்கொண்டார்'' எனக்கூறி ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் அவர்கள் ஈமான் கொண்ட விபரத்தை நாயகம் (ஸல்.) அவர்களே நவின்றிருக்கிறார்கள்.

இதற்குப்பின், அக்காலத்தில் சிறுவராக இருந்த 'ஷேரெகுதா' ஹஜ்றத்அலீ (றலி.) அவர்கள், இஸ்லாத்தைத் தழுவினார்கள். பின்னர் ஹஜ்றத் 'ஸஅதுப்னு வகாஸ்,' ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத்' முதலிய ஏனைய பெரியார்கள் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். ஸ்திரீகளில் யாவருக்கும் முதலில்ஹஜ்றத் கதீஜத்துல் குப்ரா (றலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். இதில் முக்கிய விசேஷம் யாதெனில், இஸ்லாம் வாள்பலத்தினால் பரவிற்று என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்பெரியார்கள்

இஸ்லாத்தைத் தழுவிய காலத்தில் இஸ்லாத்தின் வாள் உரையிலிருந்து உருவப்படவில்லை என்பதே.

இருவித கூட்டம்

இப்பொழுது இரண்டுவிதமான கூட்டத்தினர் உண்டாகிவிட்டனர். ஒன்று நபிகள்நாயகமவர்களின் உண்மை சிஷ்யர்கள். மற்றொரு கூட்டத்தினர், நாயகமவர்களை எதிர்ப்பவர்கள். ஆகவே இந்தக் காலம் உறுதி, ஸ்திரம் ஆகியவைகளைக் காட்டவேண்டிய காலமாக இருக்கிறது. எதிர்ப்பு என்ற இப்பிரவாகத்தில் நாயகமவர்கள் பூரண ஸ்திரத்தைக் காண்பித்தார்கள். ஆனால், இவ்விஸ்திரமானது ஒரு அரசனுடையவோ, ஒரு வைத்தியனுடையவோ, ஒரு தத்துவ விற்பன்னனுடையவோ ஸ்திரமாக இல்லாது, இது தனக்கு 'தூது' என்ற அந்தஸ்தை அளித்தவனின் உறுதியாக இருந்தது. தவிர, நாயகமவர்கள்மீது கற்கள் வீசி எறியப்பட்டன. ஆனால் அவர்களோ அக்கல்மாறி பொழிபவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை புரிகிறார்கள்; அவர்களுக்கு நல்லுதவி புரியும்படி இறைவனை இறைஞ்சுகிறார்கள். மேலும் நாயகமவர்கள் செல்லும் பாதையில் முட்கள் போடப்பட்டன; அசங்கிதங்கள் கிடக்கும்படி செய்யப்பட்டன; தூஷணை செய்யப்பட்டது. கடைசியாக கஃபா என்ற தேவாலயத்திலும்கூட அவர்களுக்கு 'அமன்' கிடைக்காதுபோயிற்று. எனவே நாயகம் (ஸல்.) அவர்கள் அங்கு வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும்போது விஷமத்தனத்தைத் தொழிலாகக் கொண்ட காபிர்கள், அவர்களைக் கஷ்டப்படுத்த வேண்டுமென யோசித்து, அவர்கள் 'ஸஜ்தா'ச் செய்து கொண்டிருக்கும்பொழுது எங்கோ ஓரிடத்திலிருந்து ஒட்டகத்தின் உதப்பியைக் கொண்டு வந்து அவர்களின் இருபுஜங்களின் மீதும் வைத்துவிடுகிறார்கள். அதனுடைய பளுவின் காரணமாக நாயகமவர்கள் தலையை உயர்த்தாமலிருக்கிறார்கள். இச்செய்தி ஹஜ்றத் பாத்திமத் துஸ்ஸஹ்றா (றலி.) அவர்களுக்குத் தெரிகிறது. அவர்கள்வந்து அவைகளை அகற்றுகிறார்கள்.

நாயகமவர்கள், தங்களிடம் பகைமை பாராட்டிக்கொண்டும் தங்களுக்கு இடைஞ்சல் செய்துகொண்டும் இருக்கிற யாவருக்கும்கூட, இவ்வுலகத்திலுள்ள எல்லா பாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென்பதில் முயற்சியுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் உண்மையறியா மாக்கள், நாயகமவர்களின் உயிருக்கே உலைவைத்துவிட வேண்டுமென்ற நோக்கங்கொண்டு, அவர்களைப் பின்தொடர்ந்துகொண்டிருந்தார்கள். இவை இணைவைப்பவர்களுடையவும் முஷ்ரிக்குகளினுடையவும் நிலைமையாகும்.

நிற்க, வேதக்கிரந்தங்களை அடைந்த யூத கிறிஸ்தவமதத் தலைவர்களும்கூட நபிகள்நாயகமவர்களுக்கு விரோதமாகவே இருந்தார்கள். அரப்தேசத்திலுள்ள 'நஜ்ரான்' என்ற ஊரைப் பற்றியும், அதைச் சுற்றியுள்ள பிரதேசத்தைப் பற்றியும் இற்றைநாளிலும் பத்திரிகைகளில் செய்தி வருவதை நீங்களறிவீர்கள். அக்காலத்தில் இப்பிரதேசம் கிறிஸ்தவர்கள் நிறைந்த இடமாக இருந்தது. இங்கிருந்து கிறிஸ்துவர்களின் தூதுக்கூட்டமொன்று மதீனாவுக்கு வந்தபோது, நபிகள் நாயகமவர்கள் மஸ்ஜிது நபவியில் அவர்களுக்கு இடமளித்தார்கள். பின்னர் நபிகள் நாயகம் அவர்களுக்கும், கிறிஸ்துவத் தூதுக் கூட்டத்தாருக்குமிடையில் மத சம்பந்தமான விவாதம் நடைபெற்று, இவ்விவாதம் சமரஸமான ஒரு முடிவுக்கு வராததால் *முபாஹலாச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கேற்ப நபிகள் நாயகமவர்கள் ஹஜ்ரத் அலீ (றலி.), இமாம் ஹஸன், ஹுஸைன், பாத்திமத்துஸ்ஸஹ்றா (றலி.) ஆகியவர்களை அழைத்துக்கொண்டு வந்தார்கள். கிறிஸ்துவத் தலைவர்கள் இந்த ஒளிபொருந்திய முகங்களையும், வனப்பம் நிறைந்த வடிவங்களையும் பார்த்துப் பயந்துவிட்டார்கள்; அவர்களது ஹிருதயங்களில் பீதி குடிகொண்டது. இந்நிலைமையில் அவர்களிலுள்ள வயோதிகப் பாதிரி ஒருவர் தமது சகாக்களிடம், "இப்போது நான் பார்க்கிற இந்த முகங்கள் அல்லாஹு தஆலாவின்மீது சத்தியம் செய்யுமையாயின் மலைகளை

*ஒரு விஷயத்தில் இரு கக்ஷியினருக்குள் விவாதம் ஏற்பட்டு, அவ்விவாதம் சமரஸமான முடிவுக்கு வராவிடில், "இவ்விஷயத்தில் அசத்தியவான்களாக இருக்கிற கக்ஷியாரை சபித்துப் போட வேண்டு"மென்று இரு கக்ஷியாரும் இறைவனிடம் பிரார்த்திப்பது வழக்கம், இப்படி பிரார்த்தனை செய்வதானது திறந்தவெளியில் நிகழவேண்டும். இரு கக்ஷியினரின் பெண்டு பிள்ளைகளும்கூட இருக்கவேண்டும். இவ்வாறு பிரார்த்தனை செய்வதற்கு "முபாஹலா" என்று பெயர்.

யும்கூட அவைகளின் இருப்பிடத்தைவிட்டு அகற்றிவிடும்'' என்று கூறினர். பின்னர் அவர்கள் முபாஹலாச் செய்வதற்கு மறுத்து விட்டனர்.

சமத்துவ நடத்தை

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மதத்தின் தலைவாசலை யாவருக்கும் திறந்துவைத்துவிட்டார்கள். தனிப்பட்ட நபருக்கோ, அல்லது தனிப்பட்ட ஒரு கூட்டத்தாருக்குமட்டிலுமோ அதனை குத்தகைக்கு விட்டுவிடவில்லை. இஸ்லாத்தில் யாரும் "றபி"யாகவோ, "முஅப்பிதா"கவோ இல்லை.* மேலும், நபிகள் நாயகமவர்களின் வம்சத்தைச் சேர்ந்த சாதாத்துகளாகவோ அல்லது வேறெந்த குலத்தவராகவோ இருந்தாலும் சரியே, முஸ்லிம் என்ற வகுப்பார் யாவரும் ஒன்றுபோலவே மதத்தினால் நன்மையடைகின்றனர். மதத்தில், ஞானத்தில், அவ்லியாதனத்தில், விலாயத்தில், கல்வியில், கலையில் யாவருக்கும் பாகமுண்டு. எனவேமிகவும் தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்பட்டவர்களிலும் நமக்குத் தலைவர்களாகவும், இஸ்லாத்தில் விசேஷ மகத்துவ முள்ளவர்களாகவும் ஏற்பட்ட அறிஞர்களும்,ஆரிப்களும் ஜனித்தனர்.

அந்தக் காலத்தில் ஜனங்கள் பற்பல வகுப்பினராகப் பிரித்து வைக்கப்பட்டு, ஹபஷியாகவுள்ளவர் எப்பொழுதும் அடிமையாக இருப்பதற்கென்றே இருந்தனர். ஆனல் இஸ்லாம் இவ்விதப் பாகுபாட்டை எல்லாம் உடைத்தெரிந்து விட்டது. ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களுக்கு இக்ரிமா என்ற பெயருள்ள ஒரு ஹபஷி அடிமை இருந்தார். ஹதீது கலையில் இவருக்கிருந்த பாண்டித்துவம் அறிஞர்களுக்குத் தெரிந்த விஷயமே. எனவே, இஸ்லாமிய போதனையின் தாராளத் தன்மையை மேலே யான் எடுத்துக்கூறிய விஷயத்திலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

ஹஜ்றத் பிலாலுக்கு, இஸ்லாத்தில் மிகப் பெரிய அந்தஸ்து இருந்து வருகிறது. இவர் மார்க்க பக்தி நிறைந்த ஹபஷியாவார். இவர் ஆரம்பத்தில் ஒரு காபிருக்கு அடிமையாக இருந்து கொண்டிருந்தார். இஸ்லாம் இவருடைய இருதயத்தில் ஊரிவிட்டபோது, இவருக்கு மிகக்கொடிய வேதனை எல்லாம் கொடுக்கப்பட்டது. ஆயினும், அவர் இஸ்லாத்தில் மிக உறுதியாகவே இருந்தார். அறப்நாட்டில் கொதித்துக் கொண்டிருந்த கற்றரையில் இவரைக் கட்டிப்போட்டு நெஞ்சின்மீது பளுவான கல் எடுத்து வைக்கப்பட்டு "நீ லாத்து உஜ்ஜாவை வணங்க ஆரம்பிக்கும்வரை உனக்கு இந்த வேதனைதாம் கொடுக்கப்படு" மென்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனல் அவர் இக்கொடுமைகளை எல்லாம் சகித்துக்கொண்டு "அஹது, அஹது" என்றே கூறினர். இறுதியாக, ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் அவர்கள், அவரை விலைக்கு வாங்கி, அடிமையாயிருப்பதை விட்டு விடுதலை செய்து விட்டார்கள். இவர் ஹபஷி அடிமையாக இருந்து, விடுதலை பெற்றவராக இருந்தும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தர்பாரில், இவருக்கு விசேஷ அந்தஸ்து இருந்து வந்தது. நாயகமவர்கள் இவரைப்பார்த்து "பிலாலே! நன்றாகச்செலவு செய்யும்; அல்லாஹ் விடத்தில் குறைவொன்றுமில்லை," என்று கூறுவார்கள். இன்றும் கூட மஸ்ஜிது நபவிக்குச்சென்று பார்ப்போமாகில், எல்லா ஸ்தூபிகளைப் பார்க்கினும் உயாந்த ஸ்தூபி ஒன்றிருப்பதைக்காண்போம். அதற்கு "ரயீஸா" என்று பெயர். இந்த இடத்தில் தான் ஹஜ்றத் பிலால் அவர்கள் நின்றுகொண்டு ஏக தெய்வவாக்கியத்தைக் கூறிக்கொண்டிருந்தார்கள். (பாங்கு சொல்லிக்கொண்டிருந்தார்கள்.)

ஒரு முறை பிலாலும் அவரது சில துணைவர்களும் ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கும்போது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் சென்ற அபூஸுப்யான் அவர்களது ஓரத்தில் ஒதுங்கிப்போனர். அப்பொழுது ஹஜ்றத் பிலால்(றலி.)அவரைப் பார்த்து "இன்னமும் இஸ்லாம் இவரது தலையைவளைக்கும் படிசெய்யவில்லையா?"என்று கூறினர். தற்செயலாக அங்குவந்த ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் இவ்வார்த்தைகளைச் செவியுற்றார்களாதலின், உடனே, ஹஜ்றத் பிலாலை நோக்கி, "பிலாலே! நீர் குறைஷித்தலைவர்களைப்பற்றி இம்மாதிரி கூறுகின்றீரோ"

(இதன் தொடர்ச்சி 406-ம் பக்கம் பார்க்க.)

*யூத கிறிஸ்துவர்களில் மதத் தலைவர்களாகவுள்ள பாதிரிமார்கள், பிஷப்புகள் ஆகியவர்களை 'றபி' என்றும், 'முஅப்பித்' என்றும் அழைப்பதுடன், மதத்தில் அவர்களுக்கு விசேஷ மதிப்பு கொடுத்து அவர்களிடமே பாப மன்னிப்பு முதலிய காரியங்களுக்குச் செல்வது வழக்கம்.



உருது பாஷையும் நம்மவரும்

முப்பத்தைந்துகோடி மக்களைத் தன்னகத்தே கொண்ட இப்பரத நாட்டில், பற்பல ஜாதிமத வேற்றுமைகள் இருந்துகொண்டிருப்பதுபோல, அந்தந்த ஜாதியாரும், தங்கள் தங்கள் சமூகத்துப் பாஷையென ஒரு பாஷையைப்பேசி வருகிறார்கள். பலப்பல பாஷையை இவர்கள் பேசுவதுபோல, இவர்களது பழக்க வழக்கங்களும் ஆசாரங்களும் வெவ்வேறாக இருக்கின்றன. எனவே, இவ்விந்திய நாடானது ஒரு தேசமாகவும், இத்தேசமக்கள் ஒரு நாட்டு மக்களாகவும் இருந்தபோதினும், உண்மையில் பல்வேறு தேசத்தார், பல்வேறு சமூகத்தார்போலிருந்து வருகிறார்கள். இதனால் தான், முற்காலத்தில் இவ்விந்திய நாடு 56 தேசாதிபதிகளால் தனித்தனியே ராஜ்யபரிபாலனம் செய்யப்பட்டுவந்து, இடையிடையே தோன்றிய பல அரசர்கள், படைபலத்தால் பல அரசர்களை ஜெயித்துத் தங்களது ஆட்சிக்கு ஐக்கியப்பட்டிருக்கும்படி செய்வதும், பின்னர் வலிமிகுந்த வேறொருவர் அதனை உடைத்தெறிந்து, வேறொரு ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்திக்கொள்வதுமாக இருந்தது. இறுதியாக இஸ்லாம் மதம் தோன்றி, இந்தியாவில்வந்து, அது நுழைந்தபின்னர், முஸ்லிம்கள் பல நாட்டினரையும் ஜெயித்து ஒரு குடைக்குள் இவ்விந்திய நாட்டை ஆண்டுவந்தனர். பின்னர், ஆங்கிலேயரது ஆட்சி ஏற்பட்டது. முஸ்லிம்களது ஆட்சியும், ஆங்கிலேயரது அதிகாரமும் ஏற்பட்ட பின்னர்தான் இந்தியாவை ஒரே தேசமென்றும், இந்திய மக்களை ஒரேதேச மக்களென்றும் உணரத்தலைப்பட்டனர். இவ்வுணர்ச்சிக்கு அனுசரணையாக இந்நாட்டு மக்களின் தர்மமும் ஒரே அஸ்திவாரத்தைக் கொண்டதாக இருந்தது. அதாவது, ஹிந்துக்களுள் ஜைனர் என்றும், வைஷ்ணவர் என்றும், சைவர் என்றும், ஆரியர் என்றும் தனித்தனியாகப் பிரிந்திருந்தாலும் அவர்கள் தங்களை ஒரே மதத்தவர் என்றே கருதுகிறார்கள். எனினும், ஒரே மதத்தவர் என்று தங்களைக் கூறிக்கொள்கிற இவர்களனைவரையும் ஒரே வட்டத்துக்குள் ஐக்கியப் படுத்தக்கூடிய சாதனங்களேதுவும் இவர்களுக்கு இல்லாமற் போய்விட்டது. எல்வாறெனின், ஹிந்துமதத்தார், சமஸ்கிருத பாஷையை, தங்களது வேதபாஷை யென்று கருதினாலும், அப்பாஷை இதுகாலை உலகின் உயிருள்ள பாஷையாக எண்ணப்படாததால், ஹிந்துக்கள், ஹிந்து தர்மம் என்ற ஒருமதத்தைப் பின்பற்றியவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களை ஒன்றுசேர்த்து இணைப்பதற்குத்தகுதியற்றதாகி விட்டது. இனி, முஸ்லிம்களின் வேதபாஷையாகிய அறபியானது, முஸ்லிம் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்களைத்தான் ஒன்றாய் இணைக்க முடியுமே யன்றி முஸ்லிமல்லாதாரை ஒன்று சேர்க்கமுடியாது. இதுபோல் இவ்விந்தியாவிலுள்ள ஏனையமதஸ்தர்களின் வேதபாஷையு மிருந்துவருகிறது. ஆதலால், இந்தியாவிலுள்ள இந்தியர் யாவரையும் இணைப்பதற்குத்தக்க பொதுப்பாஷை ஒன்று இந்தியருக்கு இருக்கவேண்டியது அவசியமாகும். இந்தியாவில்வழங்கப்படும் தமிழ், தெலுங்கு, மகராஷ்டிரம், கன்னடம், துளுவம், வங்காளம், புஷ்து முதலிய பாஷைகளைக் கவனிக்கப்புகுந்தால், அவைகள் இந்தியாவெங்கும் பரவுவதற்குத் தகுதிவாய்ந்தனவாக இல்லை. ஆதலின், இனி எஞ்சி இருப்பது ஹிந்தியும் உருதுவும்தான். இவ்விருபாஷைகளும் பெயரளவிலும் எழுத்தளவிலும் வித்தியாசப்பட்டிருக்கின்றனவே யன்றி, உண்மையில் அவைகளுக்குள் அதிக வித்தியாசமில்லை. ஆயினும் உருது பாஷையானது, முஸ்லிம்களின் பாஷை என்று, ஹிந்துக்களில் பெரும்பாலான விஷயமுணரா மக்களால் கருதப்பட்டு வருவதால்,

இதனை அபிவிருத்தி செய்வதற்கு இடமில்லாமலாகிவிட்டது. ஹிந்தியைப் பிரசாரம் செய்வதற்கு, ஹிந்துக்களில் ஒரு சாரார் செய்யும் பகீரதப் பிரயத்தனத்தில் பத்திலொரு பங்குகூட, உருதுபாஷையின் அபிவிருத்திக்கு நாம் பிரயத்தனஞ் செய்யாமலிருப்பதற்கு, நம்மவருக்கு இயற்கையாயுள்ள அஜாக்கிரதையும் பொடுபோக்குத்தனமுமே காரணமாகும். ஆயினும், அது நாட்டில் தானாகவே வளர்ந்துவருகிறது. எனவே, இந்தியாவிலுள்ள 35 கோடி மக்களில் மூன்றிலிரண்டு பாகத்தினர் இந்தப் பாஷையை நன்குபேசவும் எழுதவும் தெரிந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் ஒரு சிறு முயற்சி செய்யப்படின் எஞ்சிய சொற்பத் தொகையினரும் இதனை எளிதில் தெரிந்து கொள்ளலாம். எனவே, பொதுப் பாஷையாக அமைவதற்கு உருது பாஷை ஏற்ற பாஷையாகும். இன்ஷா அல்லாஹ் இனி இந்தியாவுக்கு ஏற்படும் பொதுப் பாஷையும் இந்த உருதுவாகத்தானிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இந்திய சுயராஜ்யத்துக்கு உழைத்துவரும் காங்கிரஸ் மகா சபையும் இந்தப் பாஷையையே "இந்தியாவின் பொதுப் பாஷை" என்று தீர்மானித்துளது. ஆனால் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமையை உணர்ந்து, உருது தெரிந்தவர்களுக்கும் ஹிந்தி தெரிந்தவர்களுக்கும் ஒரு சமரஸம் ஏற்படுவான்வேண்டி, இந்தியாவின் பொதுப் பாஷைக்கு இந்துஸ்தானி என்றும், அதற்குரிய அக்ஷரம் பாரசீக அக்ஷரம் அதாவது நடைமுறை உருது பாஷைக்கு இருக்கிற அக்ஷரமென்றும், ஹிந்திக்கு தேவநாகரி அக்ஷரம், அதாவது நடைமுறை ஹிந்திப் பாஷைக்கு இருக்கிற அக்ஷரமென்றும் நிர்ணயித்துளது. எனவே ஹிந்தி பேசுபவர், உருது அக்ஷரத்தையும், உருது பேசுபவர் ஹிந்தி அக்ஷரத்தையும் தெரிந்துகொள்வார்களாயின் இவ்விரு பாஷையும் ஐக்கியப்பட்டுவிடுவது வெகு சுலபம். ஆதலின், உருதுபாஷை வரப்போகும் இந்திய சுயநிர்ணயத்தில் இந்திய பொதுப் பாஷையாக இருப்பது நிச்சயம்.

நிற்க, உருது பாஷைக்கும் முஸ்லிம்களுக்கும் நெருங்கிய சம்பந்த மிருந்துவருகிறது. எனவே, இப்பாஷைக்குரிய அக்ஷரமானது, முஸ்லிம்கள் இந்தியாவில் ஆட்சி புரிந்தனர் என்பதையும், இப்பாஷைக்கு உற்பத்திக் கர்த்தர் முஸ்லிம்கள்தாம் என்பதையும் அறிவிப்பதாக இருக்கிறது. தவிரவும், இந்தப் பாஷை முஸ்லிம் அரசர்களால் வளர்க்கப்பட்டபாஷையாக இருப்பதால், முஸ்லிம்களுக்குச் சம்பந்தப்பட்ட அநேகங் கலைகளைப்பற்றிய நூல்களும், மதக்கிரந்தங்களும் இப்பாஷையில் இயற்றப்பட்டிருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, அறபிப்பாஷையைக் கற்றுக்கொள்ளாத முஸ்லிம்கள், சிறிது சிரமமெடுத்து, இரண்டொரு வருடகாலம் இப்பாஷையைக் கற்றுக்கொள்வதி லீடுபடுவராயின், இஸ்லாம் மதக்கிரந்தங்கள் அனைத்தையும் உருதுபாஷையின் உதவியால் உணர்ந்து கொள்ளலாம். ஏனெனில், முக்கியமான அறபிக் கிரந்தங்களனைத்தும் இப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. உருது பாஷை தெரிந்த ஒருவர், உருதுபாஷையில் இயற்றப்பட்ட இஸ்லாம் மதகிரந்தங்களைப் பார்வை யிடுவாராயின், வெகு சொற்ப காலத்துக்குள் சிறந்த மார்க்க அறிஞராகிவிடலாம். நிற்க, ஹைதராபாத் நவாப் அவர்களின் உதவியால், மேனாட்டு நவீனக்கல்விகள், சாஸ்திரங்களனைத்தும் இப்பாஷையில் மொழிபெயர்க்க ஏற்பாடாகி, அநேகம் சாஸ்திரங்கள் சம்பந்தப்பட்ட நூல்கள் உருது பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. இதன்றியும் உருது அபிவிருத்திச் சங்கத்தாரால் அநேகம் அரிய நூல்கள் உருதுபாஷையில் எழுதப்பட்டு வருகின்றன. உருது பாஷையிலேயே சர்வகலாசாலைப்படிப்பு முழுவதையும் போதிக்கவேண்டும் என்ற கொள்கையில், ஹைதராபாத் உதுமானியா சர்வகலாசாலை நிறுவப்பட்டுப் பெரும்பாலான பாடங்கள் உருதுவிலேயே போதிக்கப்பட்டு வருகின்றன. எனவே, கீழ்நாட்டுப் பாஷைகளில் இஃது சிறந்து விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் இவ்வளவு அம்சங்களும் பொருந்திய இந்தப் பாஷையை தமிழ்நாடு, மலையாளம், கன்னடம்போன்ற தென்தேசமெங்கும் பரவச் செய்வதற்கான முயற்சி சரியான விதத்தில் நம்மவர் இன்னும் எடுத்துக் கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இதற்கு மாறாக, ஹிந்திப் பாஷையை நமது நாட்டில் பரவச் செய்வதற்காக சில வருஷங்களுக்குமுன், இச்சென்னையிலேயே 'தக்ஷண பாரத ஹிந்தி பிரசார சபை' யென்று ஒரு சபை, வட இந்திய ஹிந்து சகோதரர்களால் ஏற்படுத்தப்பட்டது. இச்சபையை காந்திஜீ ஆரம்பித்து வைத்தார். இதன் பிரசாரகர்களும், கிளை ஸ்கூல்களும் ஜில்லா, டவுன்

கள் பலவற்றிலும் நியமிக்கப்பட்டு, இதுபொழுது ஆயிரக்கணக்கானவர்கள் ஹிந்தியைக் கற்றுவருகிறார்கள். இதுவரை இந்தச் சபையினரால் நடத்தப்பட்ட ஹிந்தி பரீட்சையில் 38 ஆயிரம்பேர்கள் வரை கலந்துகொண்டதாகவும் தெரிகிறது. தவிரவும், ஜில்லா போர்டு ஸ்கூல்களிலும், இதர கல்லூரிகளிலும் இப்பாஷையைப் போதிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, சில ஸ்கூல்களில் இப்பாஷை போதிக்கப்பட்டும் வருகிறது. ஆனால் முஸ்லிம்களாகிய நாம், உருது பாஷையின்பால் அதிக தேவையுள்ளவர்களாக இருந்தும், நமது நாட்டு கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களில் இதனை போதிக்கத்தக்க முயற்சி எடுத்துக் கொள்ளாமலும், அப்பாஷை போதிப்பதற்கு அரசாங்கத்தார் சம்மதமளித்திருக்கும் நிலைமையில், அதனை அமுலில் கொண்டுவர எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாமலிருப்பதும் வருந்தத்தக்க விஷயமாகும். இனியேனும் முஸ்லிம்கள் இந்நற்காரியத்தில் சிரத்தை காட்டி, அவ்வுயரியபாஷை, ஆங்கில கலாசாலையிலுள்ள நமது மாணவர்களிடமும் ஏனைய முதியோர் இளையோரிடமும் பரவச் செய்வதற்கான முயற்சி எடுப்பார்களென்று நம்புவதுடன், அதுவே நம் சமூகத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாகுமென்பதையும் அன்பாய் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

மேனாட்டைப் பின்பற்றிய தன் பலன்

ஐரோப்பா முன்னேற்ற மடைந்திருப்பதும், ஆதிக்கங்கொண்டிருப்பதும், கீழ்நாட்டுப் பிரதேசங்கள் பின்னடைந்து அடிமைப்பட்டிருப்பதும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் உண்மை விஷயமாகும். இவ்வித முன்னேற்றமும் வீழ்ச்சியும், புதிய விஷயமன்றி எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருப்பவைதான். ஒரு சமூகம் தன் விசேஷ நற்குண நன்னடக்கையால் முன்னேற்றமடைந்து, அதன் பலனாக அரசாங்கத்தையும் ஆதிக்கத்தையும் அடைகிறது. பின்னர், அக்குணமும் நடத்தையும் கொஞ்சங்கொஞ்சமாகக்குறைந்து, அதற்கு ஒழுக்கத்தில் வழுக்கு ஏற்பட்டுவிடுகின்றது. அதன் பலனாக அச்சமூகத்துக்கிருந்த ஆதிக்கமும் அரசாங்கமும் ஒழிந்து, முன்னேற்றமடைவதற்கான தன்மையும் திறமையுமுள்ள வேறொரு சமூகம் ஆதிக்கத்துக்கு வருகிறது. எனவே இரவுபகலைப்போல் மாறி மாறி, ஒரு சமூகம் செல்வாக்கிலும் இன்னொரு சமூகம் வீழ்ச்சியிலும் வந்துகொண்டிருப்ப

(403-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்றார்கள். பின்னர், இம்மாதிரி சொல்லி இருக்கக்கூடாது என்னும் எண்ணம் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களுக்கு உண்டாகி, உடனே நாயகமவர்களின் திருச்சமூகம் சென்று, நடந்த விருத்தாந்தத்தைக் கூறினார்கள். அதற்கு நாயகமவர்கள், ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் அவர்களைப்பார்த்து "நீங்கள் இம்மாதிரி கூறி அவரது மனத்தை முறித்துவிடலாமா? என பதில் கூறினார்கள். உடனே ஸித்தீக் (றலி.) அவர்கள் ஹபஷி அடிமையாக இருந்து தம்மால் விடுதலை செய்யப்பட்ட ஹஜ்றத் பிலாலிடம் வந்து "தோழர்களே! நான் கூறிய வார்த்தைகள் உங்கள் மனத்தை வருத்தப் படுத்தவில்லையா?" என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், இல்லை என்று பதில் கூறினார்கள். இதற்குப் பின்னர்தான் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களுக்கு மனச்சாந்தி ஏற்பட்டது.

இதுதான் இஸ்லாம் மதம் ஹபஷிகளை நடத்திய முறையாகும். இப்பொழுது அமெரிக்காவைப் பாருங்கள். அப்ரஹாம் லன்கன், (அமெரிக்கபிரசிடென்ட்) ஹபஷி (நிக்ரோ) களுக்கு எல்லா உரிமைகளையும் கொடுப்பதாக வாக்களித்திருந்தும், அங்கு இன்றுவரை எந்த ஹபஷியும் அமெரிக்கப் பிரசிடென்டாகவில்லை. கவர்னராகவேனும் ஆகவில்லை. இப்பதவிகளைக் கொடுக்க வெள்ளையர் தயாராகவுமில்லை.

நேயர்காள்! மேலே கூறப்பட்டவைகளைக் கொண்டு இஸ்லாத்தின் சமத்துவ உணர்ச்சியை நன்கு தெரிந்து கொள்வீர்களென்பது திண்ணம்.

தால் முஸ்லிம்களுக்கும் இந்த இருவித நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

இன்று உலகின் முன்னேற்றவழியிற்சென்றுகொண்டிருக்கிற சமூகத்தினருக்கிருக்கிற கல்வி, கைத்தொழில், செல்வம், செல்வாக்கு, ஆதிக்கம் ஆகியயாவும், ஒரு காலத்தில் முஸ்லிம்களுக்கும் இருந்துவந்தது. இன்னும் செல்வந்தரான ஒரு சமூகத்துக்குக் கிடைக்கக்கூடிய சகல சம்பத்துகளும் முஸ்லிம்களுக்கும் கிடைத்திருந்தது. முஸ்லிம்களுக்கிருந்த இச்செல்வமும் அதிகாரமும் பலநூற்றாண்டுகள் வரை இருந்தன. ஆனல், எந்தத்தன்மையின் பலனுக முஸ்லிம்களுக்கு முன்னேற்ற மேற்பட்டதோ அந்தத்தன்மையானது முஸ்லிம்களிடமிருந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குறைய ஆரம்பிக்கவே முஸ்லிம்களுக்கு க்ஷீணதிசை ஏற்படத் தொடங்கிற்று. சமூகங்களின் முன்னேற்றமும் க்ஷீணதிசையும் ஒருநாளில் ஏற்பட்டுவிடாதாகையால், முஸ்லிம்கள் கெட ஆரம்பித்துப் பல நூற்றாண்டுகள் சென்றும் தற்கால நூற்றாண்டுதான் அவர்களின் அழிவின் கடைசி எல்லையாக இருக்கிறது.

சென்ற ஒரு நூறு அல்லது ஒன்றேகால் நூறு வருஷங்கள் தாம், முஸ்லிம்களுக்கு மிகவும் இருள் சூழ்ந்த காலமாகும். எனவே, உலகத்தின் சகல பாகங்களிலும் அவர்கள் பலமான இன்னல்களுக்கு ஆளாகவேண்டிய திருந்தது. அவர்கள் சுகமாகவும் சௌகரியமாகவும் இவ்வுலகில் இருக்க இந்த ஒன்றேகால் நூற்றாண்டில் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. இஃதென்ன? இஸ்லாம் ஆரம்பமானது முதல் இன்றுவரை அவர்களுடைய வாழ்க்கை எப்பொழுதும் கலகமாகவே இருந்தது. வல்லரசுகள் எப்பொழுதும் அவர்களுடன் யுத்தஞ்செய்து கொண்டே இருந்தன. ஆனல், உலகின் ஒரு பாகத்தில் முஸ்லிம்களுக்கு நாசமும் அழிவும் ஏற்பட்டாலும்கூட வேறொருபாகத்தில் ஆதிக்கமும் செல்வாக்கும் இருந்து கொண்டிருந்தது. அவர்களுக்கிருந்த ஒரு அரசாங்கம் அழிந்துவிட்டாலும் முழுபலத்துடனும் பெருமையுடனும் கூடிய வேறொரு அரசாங்கம் இருந்து கொண்டிருந்தது.

ஆனல், சென்ற நூற்றாண்டில், 'ஐரோப்பாவின் முன்னேற்றம்' என்ற சூரியன் அதன் உச்சஸ்தானத்திலும், அதன் ராஜீய வேலைகள் கடைசி எல்லையிலும் பரிபூரணத்தன்மை அடைந்தபோது, கீழ்நாடெங்கும் அதன் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால், உலகின் எந்த பாகத்திலுள்ள முஸ்லிம்களும் பத்திரமாக இருக்க முடியாது இவர்களுடைய அரசாங்கங்களெல்லாம் அழிந்து விட்டன. அல்லது ஐரோப்பாவின் செல்வாக்குக்குள் வந்து விட்டன. எனவே இவர்களின் சுயேச்சையும் சுதந்திரமும் பெயருக்கு மாத்திரமே இருந்தனவாதலால், முஸ்லிம்களைத் தவிர இதர கீழ் நாட்டுச் சமூகத்தினரும் ஐரோப்பாவின் நாடு பிடிக்கும் பசிக்கு இறையாயினர்.

இந்தக் கஷ்டங்களும், சங்கடங்களும், ஐரோப்பாவின் பிரமிக்கத்தக்க சக்தியும் கீழ்நாட்டார்களையும் பயப்படச்செய்து விட்டன. இப்பொழுது "நிற்பதற்குக் காலுமில்லை; இருக்க இடமுமில்லை" என்ற பழமொழிக்கேற்ப, மிகவும் பரிதபிக்கத் தக்க நிலைமையை அடைந்து விட்டோம் என்பதை கீழ் நாட்டார் உணர ஆரம்பித்து விட்டனர். ஆனல், நாட் செல்லச் செல்ல, இந்தப்பயம் பலமான உணர்ச்சியாக உருவெடுத்து, பொது விழிப்பு என்ற அலையானது கீழ்நாட்டில் பரவிவிட்டது. அதாவது, இழந்துபோன தங்களது கண்ணியத்தையும் பெருமையையும் அடைவதற்கு எவ்வாறான முறைகளைக் கையாள வேண்டுமென கீழ்நாட்டிலுள்ள ராஜதந்திரிகளும் நிபுணர்களும் சிந்திக்கலாயினர். தவிரவும் இவர்களில் அரசாங்க ஆதிக்கமுள்ள சமூகத்தாரின் நிலைமையும் ஐரோப்பாவினல் ஆபத்துக்குள்ளிருந்தது. எனவே, தங்களது சுயேச்சையையும், தேச எல்லைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தங்களிடம் யுத்தத்திற்கு வருபவர்களை எதிர்த்து தற்காப்பேனும்செய்து கொள்வதற்காகவும்வேண்டிய சக்தி இருக்கட்டுமென்பதற்காக, தங்களது பொருளாதார நிலைமையையும், ராணுவ சக்தியையும் சரிப்படுத்துவதில் ஈடுபட்டனர். எனவே, அடிமைத்தனத்திலும், ஆளப்படுவதிலுமிருந்த சமூகத்தார் விழிப்படைந்து சுயேச்சையையும், சுயநிர்ணயத்தையும் அடைவதற்காக அவர்களின் ஹிருதயங்கள் துடிக்க ஆரம்பித்துவிட்டன. முஸ்லிம்கள் அனைத்தையும் இழந்து கல்வி, ஒழுக்கம், செல்வம் ஆகியவைகளில் அவர்கள் எதற்கும் தகுதியில்லாதவர்களாக இருந்தபோதிலும் கீழ்நாட்டில் ஏற்பட்ட பொதுவிழிப்பால் அவர்களும் தூண்டப்பட்டனர். ஆகவே துருக்கி, எகிப்து, இராக்,

ஷாம், அரப், இந்துஸ்தான், ஈரான் ஆகிய தேசங்களின் முஸ்லிம்களிடமும் பொதுவாக முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிவிட்டது. அதாவது இஸ்லாமிய உலகம் முழுவதிலுமுள்ள ராஜதந்திரிகள் தேசத்தையும் சமூகத்தையும் முன்னணிக்குக் கொண்டுவருவதற்கான முறைகளைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார்கள் என்று சொல்லலாம்.

(3)

இக்காலை கீழ்நாட்டு மக்கள் முன்னிலையில், முன்னேற்றமும் ஆதிக்கமும் பொருந்திய சமூகமாகத் தோன்றுவதெல்லாம் ஐரோப்பா தான். ஆதலால் பெரும்பாலான சமூகத்தார் தங்களது முன்னேற்றம் என்ற ராஜபாட்டையில், தங்களுடைய வேலையை நிர்ணயிப்பதற்கு ஐரோப்பாவை முன்மாதிரியாகக் கொண்டுளனர். இன்னும் முன்னேற்றம் அடைவதற்கு ஐரோப்பாவைப் பின்பற்றுவதவசியமெனக் கருதி தங்களாலியன்றவரை ஐரோப்பாவைப் பின்பற்றவும் ஆரம்பித்தனர். ஈதென்ன? இந்தியாவைத் தவிரவுள்ள இதர தேசங்களிலும் ஐரோப்பாவைப் பின்பற்றுவது முன்னேற்றமடைவதற்கான வழி என்றும் கருதப்பட்டது. முடிவாகக் கூறுமிடத்து, கீழ்நாட்டிலுள்ள ஆளும் ஜாதியார் ஆளப்படும் ஜாதியார் ஆகிய யாவரும், முன்னேற்றமடைவதன் இரகசியம் ஐரோப்பாவின் வாழ்க்கை முறையையும், ஆசாரத்தையும் கைக்கொள்வதில் மறைந்திருக்கிறது என்று கருதினர். கீழ்நாட்டாரிடை இம்மாதிரியான மனமாற்றமுண்டாகுவது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்ல. ஏனெனில் வீழ்ச்சியிலும், க்ஷீணதசையிலுமிருக்கிற சமூகத்தார், தங்களுடைய பலஹீனத்தை உணர ஆரம்பித்துவிடுவார்களாயின், அவர்கள் எப்பொழுதும் முன்னேற்றமடைந்த ஆளும் ஜாதியாரைப் பின்பற்றுவதிலேயே சார்ந்துவிடுவது சகஜமாக இருக்கிறது. இத்தன்மைபோல் முஸ்லிம்கள் ஆளும் ஜாதியாராகவும், முன்னேற்றமடைந்தவர்களாகவுமிருந்த காலத்தில், ஆளப்படும் ஜாதியார் முஸ்லிம்களின் நாகரீகத்தையும், வாழ்க்கை முறையையும், பாஷையையும், கல்விகளையும் அடைவதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் முஸ்லிம்களைச் சகலவிதத்திலும் பின்பற்றுவது தான் பெருமையாகவும் கண்ணியமாகவுமிருந்தது.

இந்தியாவானது உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் அதிக வைதீகமுள்ள தேசமாகையால், இந்தியர் தங்களுடைய தீவிரமான மனப்பான்மையின் காரணமாக இதர சமூகத்தினருடன் கலந்துறவாட விரும்பமாட்டார்கள். அவ்வாறிருந்தும் முஸ்லிம்களின் ஜெயசீலத்தன்மைக்குமுன் அவர்களும் தலைவணங்க நேரிட்ட காரணத்தால், இங்குள்ள பல்வேறு சமூகத்தாரும் முஸ்லிம்களின் நாகரீகத்தையும் கலைகளையும் பின்பற்றினர்.

முஸ்லிம்கள் தங்களுடைய ஆதிக்கத்திலுள்ள தேசத்தில், தங்களால் ஜெயிக்கப்பட்ட பிரதேசத்தில் தங்களுடைய நாகரீகம், கல்வி, கலை ஆகியவைகளுக்கு எவ்வளவு செல்வாக்கு ஏற்படுத்தினார்கள், ஜெயிக்கப்பட்ட பிரஜைகள் தங்களுக்குள்ள யாவற்றையும் துறந்துவிட்டு முஸ்லிம் நாகரீகத்தைக் கற்றுக்கொள்வதற்கும், அவர்களுடைய கல்விகளைப் பயிலுவதற்கும் எம்மாதிரி தலைவணங்கினார்கள் என்ற விபரங்கள், இங்கு விவரிக்கப்படுவதற்கு இடவசதி கிடைக்காததால் விடுத்தனம்.

(4)

முற்காலத்தில் முஸ்லிம்களுக்கிருந்த உன்னதமும் வல்லமையும் இப்பொழுது ஐரோப்பாவுக்கு இருந்துவருகிறது. ஆதலால், வீழ்ச்சியடைந்த சமூகத்தார், இன்று ஐரோப்பாவைப் பின்பற்றுவது அவசியமெனக் கருதுவதுடன் இதைத் தவிர முன்னேற்றத்துக்கான வழி வேறொன்றுமில்லையென எண்ணுவதற்கும் முற்பட்டு விட்டனர். ஆனால் ஐரோப்பாவை பின்பற்றுவதென்பது, கீழ்நாட்டிலுள்ள எல்லாசமூகத்தாரிடமும் ஏககாலத்தில் உண்டாகிவிடுவதில்லையாகையால் ஐரோப்பாவின் ஆதிக்கம் பெருகப் பெருக பற்பல தேசத்தாரும் அவர்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்டுக்கொண்டே இருந்தனர். கீழ்நாட்டின் சில தேசத்தாரைத் தவிர பாக்கியுள்ள எல்லா சமூகத்தாரும் அவர்களுடைய செல்வாக்கின்கீழ் வந்துவிட்டார்களாதலின், இவ்வாறு செல்வாக்குக்குட்பட்ட சமூகத்தாரில் சிலர், இரண்டு தலைமுறையாக அவர்களைப் பின்பற்றி வருகின்றனர். மற்றுஞ் சிலர், இப்பொழுதுதான் புதிதாகக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக இராக், அரப் ஆகிய தேசங்களில் ஐரோப்பிய நாகரீகம் மகா யுத்தத்துக்குப் பின்னர் தான் குறிப்பிடத்தக்க விதமாக ஏற்பட்டது.

எவ்வாறாயினும், கீழ்நாட்டில், மேனாட்டு நாகரீகம் புகுந்து இவ்வளவு சொற்பகாலம்தானாயினும் இதற்குள், அதன் பலாபலனும் வெளியாக ஆரம்பித்துவிட்டது. ஆகவே, மேனாட்டு நாகரீகத்தை கீழ்நாடு பின்பற்றுவது நன்மையா தீமையா என்பதைப்பற்றி ஒரு முடிவு செய்வது இப்பொழுது கஷ்டமான காரியம். இரண்டாவதாக, ஐரோப்பியரின் முன்னேற்றத்துக்குரிய காரணங்கள் இன்னின்னவை என்று நாம் கண்டுபிடித்திருப்பவை யதார்த்தத்தில் சரியாக இருக்கிறதா? அல்லது அவைகளில் நாம் தவறிவிட்டோமா? என்றும் கவனிக்க வேண்டியதிருக்கிறது.

(5)

ஐரோப்பாவைப் பின்பற்றியதால்-ஐரோப்பிய நாகரீகத்தைக் கைக்கொண்டதால்—உலகத்திலுள்ள பற்பல சமூகத்தாருக்கும் ஏற்பட்ட நன்மை தீமைகளைப்பற்றி விவரமாக விவாதிப்பதற்கு, ஒரு வியாசம் போதாதாகையால் நாம் இந்தியாவை மாத்திரம் கவனித்து, அதிலும் முஸ்லிம்களின் நிலைமையை மட்டும் மட்டிட்டு, ஐரோப்பாவைப் பின்பற்றியதால் நாம் என்ன லாபமடைந்தோம், எதை இழந்து உட்கார்ந்திருக்கிறோம் என்பதை மட்டும் குறிப்பிடுவது போதுமானதாகும்.

முன்னேற்றம், முன்னேற்றம் எனக் கூக்குரலிடுவது கொண்டு இம்மைப்பேறுகள்தான் கருத்தாகும். இவைகள் அடியிற்கண்ட மூன்று அம்சங்களில் அடங்கியிருக்கின்றனவென்று சுருக்கமாகக் கூறலாம்:—

1. அரசாங்கம், தேச ஆதிக்கம் ஆகியவைகளை அடைதலும், பூமிக்குச் சொந்தக்காரராகுதலும்.

2. கைத்தொழில், வர்த்தகம் ஆகிய முன்னேற்றத்துக்கான முறைகளின் காரணமாக சமூகத்துடையவும் தேசத்துடையவும் செல்வத்தை அதிகப்படுத்துதல்.

3. கல்வி, கலை ஆகியவைகளில் நிபுணத்துவமடைதல், ஆராய்ச்சித் துறைகளை விஸ்தீரணப்படுத்துதல்.

(6)

மேலே கூறப்பட்ட லௌகீக முன்னேற்றத் துறைகளின் எவ்வழியில் முஸ்லிம்கள் விசேஷ முற்போக்கடைந்திருக்கிறார்கள்? மேனாட்டு நாகரீகக் கல்வியானது, லௌகீகத் துறையில் இவர்களுக்கு எவ்வளவு நன்மை செய்திருக்கிறது? என்ற விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். ஆனாலும் அவைகளை விரிவாகக் கூறாமல் சுருக்கமாகவே கூறுவாம்:—

1. முஸ்லிம்கள் தங்கள் அரசாங்கத்தையும், ராஜீய அதிகாரத்தையும் இழந்தபின்னரே மேனாட்டு நாகரீகத்தையும், வாழ்க்கை முறையையும் பின்பற்றினர். ஆனால், முஸ்லிம்களில் பெரிய பெரிய ஜமீன்தார்களும், ஜாகீர்தார்களுமிருந்தனர் என்பது நிச்சயம். இப்பிரபுக்கள் தாம், சமூகம் தலையெடுப்பதற்கு எப்பொழுதும் காரணஸ்தர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்களின் தர்மத்தாலும் நன்மதிப்பினாலுமே தேசியக் கைத்தொழில்களும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாய் நம் முஸ்லிம்கள் இப்புதிய சுழல்காற்றில் தங்களுடைய ஆஸ்தியை மிகத் துரிதமாக இழந்துவிட ஆரம்பித்துவிட்டனர். எனவே, வட்டி கடன், வீண் செலவு, விளையும் பயனைச் சிந்தியாதிருத்தல் ஆகியவைகள் அவர்களின் மூதாதையரின் ஜாகீர்களுக்குச் சனியனாக அமைந்தன. இந்த ஆபத்தில், படியாத ஜமீன்தாரென்ன? படித்தவர்களும் சிக்குண்டுவிட்டனர். அதாவது மேனாட்டு நாகரீகமும், கல்வியும், வாலிப ஜமீன்தார்களின் உள்ளத்தில், மேனாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ஆராய்ச்சி முறைகளையும் அறிவுகளையும் கொண்டு பிரயோஜனம் பெற்றுத் தங்கள் தொழில்களை முன்னேறச் செய்ய வேண்டும், தங்கள் நிலங்களை அதிக பலன் தரத்தக்கனவாகச் செய்யவேண்டும், இம்முறையில் முன்னேற்றமடைந்து இந்தியாவின் செல்வத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியை உண்டாக்கவில்லை.

ஆனால், ஐரோப்பாவின் பிரபுக்களைப்போன்று செலவு செய்வதைத்தான் கற்றுக்கொடுத்தது. எனவே, இந்தச் செல்வத்தை எவ்விதத்தில் அடைய முடிகிறது? ஒரு ஜமீன்தார் எம்முறையைக்கைக் கொள்ளுவதால் தன்னுடையதொழிலில் முன்னேற்றமடைகிறான்? என்பதைக் கற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எங்கேனும் ஓரிடத்தில், ஒன்றிரண்டு நபர்கள் புதிய கருவிகளின் மூலமாகத் தங்களுடைய தொழிலை விருத்திசெய்து, செல்வத்தை ஓரளவு பெருக்கிக் கொண்டிருப்பது மாத்திரம் திருப்தியளிக்

காது. ஏனெனின், அவர்களுடைய லக்ஷக்கணக்கான சகோதரர்கள் தங்களுடைய பெருவாரியான வருவாயையுள்ள ஜமீன்களை, என்றைக்குமாக இழந்து விட்டிருக்கும்போது, சிலருடைய சொற்ப முன்னேற்றம் திருப்தியளிக்குமா?

2. தற்கால தேசீய கைத்தொழில்கள் யாவும் கொஞ்சங் கொஞ்சமாக அழிந்துபோயினவென்றும், எஞ்சி இருக்கிற சொற்பதொழில் முறைகளும்கூட அதனுடைய அசல் நிலைமையில் இல்லையென்றும் பெரும் பெரும் நிபுணர்களும் விஷயமுணர்ந்தவர்களும் கூறும் நிலைமையில், நாம் நவீனகலைகளைக்கற்று, நமது தேசீயக் கைத்தொழில்களை விருத்திசெய்யத் துணிந்துவேலை செய்து, நம்முடைய சாமான்களை வெளிதேசங்களுக்கு அனுப்பி அதிகலாபம் சம்பாதிக்க வேண்டியதிருக்க, நமது தொழில்களை அவைகளின் அசல் நிலைமையில் வைக்கக்கூட நம்மால் முடியவில்லை என்றால், நமதுநிலைமையை என்னவென்று கூறுவது.

வியாபார நிலைமையோவெனில், அதில் நமக்கு எவ்வித அந்தஸ்து மில்லாதிருக்கிறது. இந்தியாவின் வியாபாரம் அந்நிய நாட்டு முதலாளிகளின் கையிலிருக்கிறது. இவர்கள் தங்கள் சாமான்களின் மூலமாகவும் வர்த்தகத் திறமையின் மூலமாகவும் கோடிக் கணக்கான ரூபாய்களை பிரதிவருஷமும் இந்தியாவிலிருந்து கொண்டு போகிறார்கள். இந்தியாவிலும் சிலதொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றனவாயினும் (அவைகளுக்குரிய மெஷின் சாமான்கள் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்டபோதினும் சரியே) அந்தத் தொழிற்சாலைகள் நமது தேவையைப் பூர்த்திசெய்வனவாயில்லை. இந்தியாவிலேயே காகிதம், சோப்பு கண்ணாடி முதலிய சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும், லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்கு இந்தச் சாமான்கள் அந்நியநாட்டிலிருந்து தருவிக்கப்படுகின்றனவாதலால் அந்நியநாட்டுச் சாமான்களுடன் போட்டிபோட நமக்குஇன்னமும் இயலவில்லை.

3. முன்னேற்ற முறையில், நம்முடைய கல்வித்திறமை மூன்றாவதாக இருக்கிறது. இந்தியாவில் கல்வி பரவி, முஸ்லிம்கள், குறைந்தது அரைநூற்றாண்டாக இந்தக் கல்வியைக் கற்பதில் ஈடுபட்டிருந்த போதினும், இக்கல்வியைக் கற்றதால் நமக்கும் கொஞ்சம் பொருள் லாபம் ஏற்பட்டிருக்கிறதேயொழிய நம்முடைய கல்வித் திறமையினாலும், ஆராய்ச்சி வன்மையினாலும், கல்வியில் ஏதேனும் அபிவிருத்தி செய்த பண்டிதரோ நிபுணரோ நம்மில் இன்னும் உண்டாகவுமில்லை; தங்களுடைய வாணாளைக் கல்வித் தொண்டுக்காகவே தத்தம்செய்த ஒருவர்க்கும் உண்டாகவுமில்லை; புதிய கல்வியை நமது பாஷையில் கொண்டுவந்து, நமது பாஷையின் கல்விக் களஞ்சியங்களைப் பெருகச்செய்யவும் கூட நம்மால் முடியவில்லை. சுருங்கக்கூறுமிடத்து, சென்ற ஐம்பது ஆண்டுகளாக மேனாட்டுக் கல்வியை நாம் கற்றும், கல்வி உலகில் நமது சமூகத்துக்கு எவ்விதக் கீர்த்தியோ அல்லது அந்தஸ்தோ ஏற்படத்தக்க குறிப்பிட்ட எவ்வேலையும் நாம் செய்யவில்லை என்பது திண்ணம்.

(7)

நாம் எதைக் கற்றுக்கொள்ள வேண்டியதிருந்ததோ, அதைக் கற்றுக்கொண்டிருந்தோமாகில் நம்முடைய நிலைமை இவ்வாறான கேவலஸ்திதிக்கு வந்திராது. ஆனால், எதை நாம் கற்றுக் கொள்ளக் கூடாதோ அதைக் கற்றுக்கொண்டதால் நம்மால் இயன்றவரை, ஐரோப்பாவின் வெளிப்படையான நாகரீகத்தையும் வாழ்க்கை முறைகளையும் கைக்கொள்வதில் எவ்விதக் குறையும் செய்தோமில்லை. இதனால் நமது தேசத்தில் நாடகக்கொட்டகைகள், சினிமாக்கள், கூத்தாடுமிடங்கள், சாராயக் கடைகள் ஆகியவைகளை ஏற்படுத்திக் கொண்டோம். நம்முடைய உடை, வாழ்க்கைமுறை முதலிய உல்லாசக் காரியங்களில் ஐரோப்பாவைப் பின்பற்றினால் நாகரீக முன்னேற்றமடைந்த ஜனங்களாக நாம் கருதப்படுவோம் என்று நினைத்துக் கொண்டோமாயினும் துரதிஷ்ட வசமாக நமக்கு இதில் வெற்றிகிடைக்கவில்லை. ஏனெனின், இக்காலத்தில் அரசாங்கம், பலம், செல்வம் உள்ள சமூகமே முன்னேற்றமும் நாகரீகமுமுள்ள சமூகமாகக் கருதப்படுவதால், இவை இல்லை யென்றால், ஒன்றுமே இல்லை என்பது தான் பொருள்.

சென்ற நூற்றாண்டின் இறுதிவரை, ஜப்பான் ஓர் அற்பவஸ்த்துவாகக் கூட மதிக்கப்படவில்லை. ஆனால், ரஷியா போன்ற பெரிய அரசாங்கத்துடன் அது யுத்தம் செய்து ஜெயித்துவிடவே, அது நாகரீக முன்னேற்றமடைந்த தேசம் என்பதில் எவருக்கும் சந்தேக மிருக்கவில்லையாதலால், நாகரீகமடைந்த ஒவ்வொரு

தேசமும் அதன்பால் நட்பு என்ற கையை நீட்ட ஆரம்பித்தன. செல்வத்தையே கதியென்றிருக்கிற சமூகத்தார் நம்மைக் கௌரவிப்பதற்கு, நம்மிடத்தில என்ன இருக்கிறது? நாம் ஹிஜாஸ் பிரசினையையோ, கிலாபத் மஸ் அலாவையோ, அல்லது வேறு ராஜீய விஷயங்கள் சம்பந்தமான நமது கோரிக்கைகளையோ சமர்ப்பித்துக்கொள்ளவும், அதற்காக நாம் கூச்சலிடவும், நம்முடைய கிளர்ச்சியைக்கண்டு முன்னேற்ற மடைந்த அரசாங்கங்கள் பயந்து பணிந்துவிடுமென்று நாம் நினைக்கவும் நமக்கெவ்வாறு தைரியம் உண்டாயிற்று? ஆகவே இவ்வரசாங்கங்கள், சக்திக்கு மாத்திரம்தான் பணியக் கற்றுக்கொண்டிருக்கின்றனவே யொழிய, கோரிக்கைகளின் முக்கியாம்சத்தையும் அதன் உண்மையையும் கவனிப்பதேயில்லை. ஆனால் இக்கோரிக்கைகளுக்குப் பின்னின்று வேலைசெய்துகொண்டிருக்கும் சக்தி எம்மாத்திரமிருக்கிற தென்பதையே அவைகள் கவனிக்கின்றன. எனவே ஒரு சமூகத்தினரின் கோரிக்கையை ஒப்புக்கொள்ளாமலிருக்க வேறு வழியில்லை என்றும், இதை நிரா கரிப்பதற்கான மார்க்கங்களனைத்தும் அடைபட்டுவிட்டன என்றும் ஏற்பட்ட பின்னர்தான், கடைசியாக அந்தக் கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இஸ்லாம் மதம் நம்மில் உற்பத்தி செய்த உணர்ச்சியும், தத்துவமும் நம்மில் இருந்திருந்தால், இன்னும், நம்முடைய முன்னோர்களிடமிருந்த அசைக்கமுடியாத உறுதியும் துணிச்சலும் நம்மில் இருந்திருந்தால், லோகாதய அரசாங்கங்கள் நம்முன் சரணடைந்திருக்கும். ஆனால், அந்தத் தத்துவமும், உணர்ச்சியும், உறுதியும், துணிச்சலும், ஊக்கமும் இப்பொழுது எங்கே இருக்கிறது? அவைகளை நாம் வெகுகாலத்திற்கு முன்னமே இழந்து விட்டோம். அந்நியரும் இதை நன்கறிவர். ஆனால் இஸ்லாத்தை நாம் இவ்வாறு அலக்ஷியம் செய்தும்கூட, நமக்கு இப்பொழுது கிடைத்திருக்கிற சொற்பமும் இஸ்லாத்தின் பொருட்டு ஞலேயாகும். எனவே இன்றும்கூட இஸ்லாத்தின் பெயரால் இந்திய சட்டசபையிலும் மாகாணச் சட்டசபைகளிலும் நமக்குரிய ஸ்தானங்களைக் கேட்கிறோம். இஸ்லாத்தின் பெயரைச்சொல்லி உத்தியோகத்தில் பதவிகளை விரும்புகிறோம். ரயில்வே இலாக்காவில் "எங்களது வகுப்பாரின் உத்தியோகப்பதவிகள் மிகக்குறைவாக இருக்கிறது" என்று அரசாங்கத்தைக் கேட்கிறோம். "நாங்கள் முஸ்லிம்களாக இருப்பதால் எங்கள் கல்விக்காக விசேஷ ஏற்பாடு செய்யுங்கள்; எங்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுங்கள்; நாங்கள் கல்வி அறிவற்றவர்களாக இருப்பதால் சலுகை காட்டப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களா யிருக்கிறோம்" என்றெல்லாம் கூறுகிறோம்.

நாம் பலஹீனர்களாக இல்லாதிருந்தால் அந்நியர் நம்மீது எதற்காக குத்துப்பாடு செய்யப் போகின்றார்கள்? நம்முடைய பாத்தியதைகளில் பிரவேசிக்க நமது சகோதர வகுப்பினருக்கு எங்கிருந்து தைரிய மேற்படப்போகிறது? இப்பொழுது நமக்கு ஏற்பட்டு வரும் கஷ்டங்களெல்லாம் நம்முடைய கெட்டசெய்கைகளின் பலனேயாகும். முடிவாகக் கூறுமிடத்து, நாம் எடுத்துக்கொண்ட வேலைத்திட்டமானது, நிச்சயமாக வெற்றியற்றதாக ஆகிவிட்டது. நம்முடைய முக்கியத்துக்கும், நம்முடைய சமூக ஆசாரத்துக்கும் போதிய விதமாக நாம் அடையவேண்டிய அந்தஸ்தை அடைய முடியவில்லை. ஆதலால், நம்முடைய வேலைமுறையைப்புனராலோசனை செய்யவேண்டியது அவசியமாகும்.

ஆகவே, இத்தேசத்தில் நாம் கண்ணியத்துடனும் மரியாதையாகவும் எவ்வாறு வாழ வேண்டும்? நம்முடைய சமூகத்திட்டம் எவ்விதமாக இருக்க வேண்டும்? என்பதை நாம் ஒன்றுகூடி முடிவு செய்யவேண்டும். நம்முடைய சிதறிய சக்திகளை எல்லாம் ஒன்றுகூட்டி ஒரு காரியவழியை நிர்ணயிக்கவேண்டும். இனிமேல் நமது சமூகத்தாருக்கு இத்தேசத்தில் இருக்கிற முக்கிய நோக்கம் என்ன என்பதை, நாம் மற்றவர்களுக்குக் காண்பித்து விடவேண்டும். தற்போது நம்மிடம் ஒரு நோக்கமுமில்லை, ஒரு திட்டமுமில்லை, அத்துடன் நமது தலைவர்கள் ஒற்றுமையாக ஒரு விஷயத்தைக் கூறுவதுமில்லை. இவ்விதமான நிலைமை எவ்வளவு காலம்வரை இருப்பது? முஸ்லிம்கள் எவ்வளவு காலம்வரை தங்களுடைய முடிவைப் பற்றி அஜாக்கிரதையாக இருப்பார்கள்? என்பதைக் கவனிக்கவேண்டும். உலகத்தில் எங்கு பார்த்தாலும் கலவரமாகவே இருக்கிறது. ஒவ்வொரு வர்க்கத்தாருடையவும் தலைவிதி இன்னதுதான் என்று முடிவு செய்யப்

பட்டு வருகிறது. ஆகவே, இப்பொழுது எந்த ஜாதியார் எவ்வளவுக்கு உறுதியுடனும் ஊக்கத்துடனும் காரியம் பார்க்கிறார்களோ அந்த அளவுக்கு அந்த ஜாதியார் தங்களுக்குரியபாத்தியதை அடைகிறார்கள். எனவே, இஸ்லாத்துக்கு இடையூறாக இருக்கும் மேனாட்டு நாகரீகம் பரவிவரும் இக்காலத்தில், முஸ்லிம்கள் கண்ணை மூடிக்கொண்டு வாளாவிராமல் தங்களது மார்க்கம் சமூகம், நாகரீகம் ஆகியவைகளைக் காக்க, ரக்ஷிக்க, பெருக்க முன்வருவார்களாக.

தீண்டாமை விலக்கின் அந்தரங்கம்

(எதார்த்தவாதி இயம்புவது.)

(சென்றமாத 392-ம் பக்கத் தொடர்.)

லாகூரில், லாலா லஜ்பத்ராயால் நிறுவப்பட்ட 'ஸர்வெண்ட் ஆப்தீபீபிள் சொசைட்டி'யின் ஏற்பாட்டால், 1927-ம்வருடம் மார்ச்சு மாதம் 26-ம் தேதியன்று வால்மீகிய, தீண்டாதாரின் ஓர் கூட்டங்கூடிற்று. அதில் லாஹூர் காங்கிரஸ் கமிட்டித் தலைவரான லாலாதுனிசந்து, லாலாதுனிசந்து அம்பாலவி, பண்டித் பரஸுராம் ஸாஹிப், குமாரி லஜ்யாவந்திலாலா ஷூத்யாராய், டாக்டர் கோபிசந்து பார்கூ, லாலா லஜ்பத்ராய், பாய்பரமானந்தா, மஹ்த்தா நந்து கிஷ்வர், தம்தாஸ் ஸூரீ, மிஸஸ் ஸரோஜினி நாயுடு, சேட் ஜம்னலால் பஜாஜ் முதலிய அநேக பிரபல காங்கிரஸ் லீடர்கள் சேர்ந்து, பிரசங்கங்களாற்ற முற்பட்டு, தீண்டாதார்களுக்கு போதிக்கையில்,

ஜம்னலால் பஜாஜ்

"உங்கள் இல்லங்களையும், பாத்திரங்களையும் வஸ்திரங்களையும், சுத்தமாகவைத்துக் கொள்ளுங்கள்; மது, மாமிசம் புசிப்பதை விட்டு விடுங்கள்; யாருடைய (முஸ்லிம், கிறிஸ்தவர்களின்) எச்சில் உணவையும் உண்ணவேண்டாம். உங்கள் பாலர்களுக்கு கல்வி போதியுங்கள்"

லாலா லஜ்பத்ராய்

"நீங்களே, உங்களைத் தீண்டாதாரர்களாகச் செய்துவைத்திருக்கிறீர்கள்; (இவை எத்துணை அநீதியாகும்) நாங்கள், உங்களை தீண்டாதார்களாக நினைப்பதேயில்லை, நாங்கள், தீண்டப்படாத சகோதரர்களை எங்களுடன் சேர்த்துக்கொள்ளலாமென முயற்சித்தாலும், நீங்கள் எங்களிடம் பீதிகொண்டு வெறித்தோடுகிறீர்கள் (அவர்கள் ஓடுவதெல்லாம் உங்களின் இம்சையையும், ஏமாற்றங்களையும், இன்னும் மறவாம லிருக்குங் காரணத்தினாலேதான்) எனவே நீங்கள் ஒற்றுமையை (தனது சுயக் கருத்தில் வருகிறார்) கையாடல்வேண்டும்; நீங்கள் 'ஜத்தா' (கூட்டம்) கூடி வேலைசெய்வீர்களாகில் உங்களை எவரும் இம்சிக்க முடியாது. ஹிந்துக்கள் உங்களை, தங்கள்பக்கமாக அழைப்பதால் நீங்கள் அவர்களுக்கு, அத்யாவசியப்படுகிறதென எண்ணவேண்டாம். (நன்றாய் சொன்னார்). நாங்கள், உங்களை அழைப்பதெல்லாம் நீங்கள், எங்கள் புயங்களாகவும், நாங்கள் உங்கள் புயங்களாகவும் இருக்குங் காரணத்தால்தான். (இவை எப்போதிருந்து?) யாருக்கு, எவரின் தயவையும் எதிர்பார்க்கத்தேவையில்லை; உங்களை நாங்கள் சகோதரர்களென அழைக்கிறோம். (பெரிய உபகாரமேசெய்துவிட்டீர்கள்) நாங்கள் உங்களின் சகோதரர்களாவோம். (எத்தனைநாட்களாய்?) நாங்கள் உங்கள் அவசியங்களைப் பூர்த்திசெய்ய முயற்சி செய்வோம். (முயற்சி மட்டுந்தானா?) அவ்வாறு நாங்கள் ஒருவேளை செய்யாவிட்டாலும் நமக்குள் சகோதரத்துவத்தில் வித்தியாச மேற்படலாகாது. (இதுவே மூலவிஷயம்) மேலும் பிரசாரகர்கள், வேலை செய்வதற்காக உங்களிடம் வருவார்களாகில், அவர்களுக்கு நீங்கள் சகாயஞ் செய்யுங்கள்; உங்களில் சங்கடன் உண்டாக்கிக் கொள்ளுங்கள், ஒரு சகோதரனை (இதன் கருத்து உயர்வகுப்பு ஹிந்துக்களாவார்) எவரும் இம்சிப்பாராகில், மற்றவர் (தீண்டாதார்) அவரின் உதவிக்காக எழுந்து நிற்கவேண்டும். சங்கடனென்பது வலிவாகும்; பலமாகும்; சக்தியாகும்! தனிப்பட்டவனை ஓர் ஆடும் கூட அடித்துவிடும். 'சங்கட்டா' வாகிக் கொள்ளுங்

கள் எத்தர்மத்தில் நீங்கள் இருக்கிறீர்களோ அதில் சுகமாக யிருங்கள்; ஹிந்துயத்திலே தனிப்பட்டிருங்கள்; உங்களமீது எவரும் சோராவாரிசெய்வார்களாகில், எல்லோரும் ஒன்றித்து அதை எதிருங்கள்; உங்களை 'சங்கட்டா' செய்துகொள்வீர்களாகில், நாங்கள் உங்களுக்கு உதவியளிப்போம்; எவ்விடத்திலாவது பாடசாலை அல்லது கிணறுகள் கட்டவேண்டுமேயானல், (புதிதாக இவைகள் கட்ட என்ன தேவை, ஹிந்துக்களின் பாடசாலைகள், கிணறுகள் போதாதா? போதும். ஆனல் அவைகளில் தீண்டாதார் புழங்குவது தர்மவிரோதமாகலாம்) எங்களிடம் வாருங்கள். நாங்கள் உங்களுக்கு சகாயஞ் செய்யலாம். என கூறிமுடித்த உடன், கிளர்ச்சியுண்டாக்கும் இப்பிரசங்கமானஇஃதை கேட்ட ஓர் வால்மீகியன், (இவன் லாலாஜீயாலேயே வழக்கப்பட்டவனக யிருக்கலாம்) எழுந்து "இதோ குழுமியிருக்கும் இவர்களை (தீண்டாதார்களை) நீங்கள் கிணற்றில் குதிக்கும்படி ஆக்ஞை யிடுவீர்களானனும் இவர்கள் தயாராகவே இருக்கின்ருர்கள். மேலும் இவர்களெல்லாம் உங்களைத் துயர்ந்தே இருக்கிருர்கள் எனச் சொல்ல ஆரம்பித்தான்.

முஸ்லிம்கள்கூட சேராமலிருக்குமாறு தீண்டாதார்களிடம் 8 அறுதிவாக்கியங்கள்

அதன்பின் பண்டிதராம் கோபால்ஜீ சாஸ்திரி யானவர், அவர்களை கீழ்காணும் 8 அறுதிமானங்களையும் ஒப்புக்கொள்ளச் செய்தார்.

(1) வால்மீகியர் (தீண்டாதார்)கள் எவருடைய (வஸ்துவையும்) புசிக்கலாகாது; அதனல் ரோகங்கள் உற்பத்தியாகின்றது. (ரோகம் உண்டாகப் போவதென்ன? இவை எல்லாம் தங்கஎில்லத்தில் அவர்கள் அன்ன ஆகாரங்கள், கேட்டுவிடக் கூடாதென்ற முன் ஏற்பாடேயாகும்)

(2) வால்மீகியர் ஹிந்துக்களாவர். ஹிந்துக்கள் செத்தவிடக்குகளைப் புசிக்கமாட்டார்களாதலால், வால்மீகரும் செத்தவிடக்குகளைப் புசிக்கலாகாது.

(3) வால்மீகியர், குரு வால்மீகரின் அடியார்களாவர். வில்மீக குருவோ 'கோ'வை பூஜித்து வந்தார். அறுந்தறுவாயில் அநேக வால்மீகியர் 'கோ'வை மாதா எனக் கருதுகிருர்களில்லை. அவர்கள் இனிமேலாவது 'கோ'வை மாதாவெனக் கருதி அதை பூஜிக்க வேண்டும்; அதை அறவே அறுக்கலாகாது.

(4) ஹிந்துக்கள் பிரேதங்களை எரித்துவிடுகின்றனர். ஆனல் அநேக வால்மீகியர் முஸ்லிம்களின் சேர்க்கையின் காரணத்தால், பிரேதங்களை எரித்துவிடுவதற்குப் பதிலாய் புதைத்துவிடுகின்றனர். இந்த வழக்கத்தை விட்டு இனி பிரேதங்களைப் பொசுக்கியேவிட வேண்டும்.

(5) நீங்கள் வால்மீகியராக இருப்பதால், விவாக சமயத்தில் ஹிந்துக்களைப்போல் நீங்களும் காறை கட்டிக்கொள்ள வேண்டும். உங்களில் சிலரிடம் மௌல்விகளைக்கொண்டும், கிறிஸ்துவர்களைக் கொண்டும் மணமுடித்துக் கொள்ளும் வழக்க மிருப்பதால் இனி அவ்வாறு செய்யாது, இது முதற்கொண்டு வால்மீகியர், பிராமணர்களைக் கொண்டே காறை போட்டுக் கொள்ள வேண்டும்.

(6) வால்மீகியர் ஒவ்வொருவரும் மதுகுடியை விட்டுவிட வேண்டும்.

(7) விவாக சமயங்களில் கஞ்சிநிச்சிகளைக் கூப்பிட்டு ஆட்டமிடக் கூடாது.

(8) சிருர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கு விரோதமாக தீண்டாதார்களுக்கு ஓர் ஹிந்து வக்கீலின் போதனை

அதன்பின் நாராயணதாஸ் என்ற வக்கில் எழுந்து, கிளர்ச்சியை உண்டாக்கும் பாஞ்சாலக் கீதமொன்று பாடி ஆற்றிய பிரசங்கம் வருமாறு:—

"நீங்கள் ஹிந்துக்களாவீர்களாதலின், உங்களுக்கு ஹிந்துக்களைவிட ஹிந்து மதத்தின்மீது அதிக அக்கரையுண்டு; நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எனவே, ஒற்றுமையாவதற்கு நான்கு விஷயங்கள் முக்கியமானதாகும்:

(1) ஒரு குருவை—ஸ்வாமி வால்மீகரை ஒப்புக்கொள்ள வேண்டும்.

(2) வால்மீகர் ராமாயணத்தை ஒப்புக்கொண்டதுபோல் நீங்கள் ஓர் பௌதீயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.

(3) ஓர் பஜனையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

(4) ஈஸ்வரர் ஒருவரை ஒப்புக்கொள்ள வேண்டும்.

நீங்கள் இவ்வாறு ஆனபின், உங்களை அநேகர் பரிகசிப்பார்களானால் அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். எவரும் உங்களை ஹிம்ஸித்தால் நீங்கள் ஒன்றுசேர்ந்து அவருக்கு வேலைசெய்வதை பகிஷ்கரித்துவிட வேண்டும்.

(5) ஹிந்துக்களுடன்சேர்ந்து கோ, ரட்சணை செய்ய வேண்டும்.

(6) ஹிந்துக்களுடன் சேர்ந்து மயான பூமியை ரட்சணை புரியுங்கள்.

இங்ஙனம் ஹிந்துக்கள் கூடச்சேர்ந்து கோ,மாதாவையும்,மயான பூமியையும் ரட்சணை புரியுவீர்களாகில் உங்கள் ஒற்றுமை ஆழ்ந்திருக்கும். மேலும் ஹிந்துக்கள் கோயில்களை இடிப்பதற்கு பிறர் பிரயத்தனப் படுவார்களாகில் அத்தருணத்தில் நீங்கள் ஹிந்துக்களோடு சேர்ந்து அவர்களை எதிர்க்க வேண்டும். ஹிந்துக்கள் எதிர்க்கப்படுவார்களானல் நீங்கள் ஹிந்துக்களுக்கு உதவியாக இருக்கவேண்டும். இன்னும் நீங்கள் ஹிந்துக்கள் கூடச்சேர்ந்து ஓர் பெரிய சக்தியை ஸ்தாபித்து விடுவீர்களாகில் உங்கள் பக்கல் எவரும் தீய பார்வையைக் கொண்டு நோக்க முடியாது.

மேலும் அப்பிரசங்கியானவர், வால்மீகர்களுக்காக சில கீதங்களையும் கற்றுக்கொடுத்து, காலை மாலை அவைகளைப் படித்து வரும்படி போதித்து மிருந்தார்.

இஃது மட்டுமன்று, இஃதைப்போன்ற இதர அநேக ரிப்போர்ட்டுகளையும் எழுதலாமாயினும் தீண்டாமை விலக்கு இயக்கமானது என்ன கருத்துக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தென்பதை நம் நாட்டு சகோதரர்கள் அறிந்து கொள்வதற்கு மேற்கூறப்பட்ட குறிப்புகளே போதியனவாகுமெனத் தெரிந்து விடுத்தனம்.

தீண்டாமை விலக்கின் முக்கிய நோக்கம்

வாசக கனவான்கள், மேற் கூறப்பட்ட குறிப்பு வசனங்களால் தெரிந்து கொள்வதாவன:—

(1) சங்கடனிய மகாஷாக்கள், தங்கள் சுய நலங்கருதியே "தீண்டாமை விலக்கு" இயக்கத்தை ஆரம்பித்தார்களேயன்றி தீண்டார்தார்களுக்கு சமபாத்தியதை கொடுக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டன்று.

(2) தங்கள் அரசியல், மதிப்பை நிலைநாட்டுவதற்காகவும், அதை விர்த்தி செய்வதற்காகவுமேயாகும்.

(3) ஆரம்பத்தில் எப்போதும் ஹிந்துக்களாக எண்ணப்படாதவர்களையும், தங்களுடன் ஹிந்துக்களைப் போன்று நடாத்தப்படாதவர்களையும் தற்போது ஹிந்துக்களாகச் செய்யும் காரணமென்னவெனில், அவர்கள் மாகாண சட்டசபைகளிலும், இந்திய சட்டசபைகளிலும், இதர கவர்ன்மெண்டு நிர்வாகங்களிலும் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி, தங்களின் மெஜாரிட்டி பாத்தியத்தால், தாங்கள் நாடுவதெல்லாம் செய்யலாமென்ற உத்தேசந்தான்.

(4) "ஹிந்து ராஜ்யம்" ஏற்படுவதற்குத் தடைக்கல்லாக நிற்கும் முஸ்லிம்களை மிகைத்து, அவர்களை அச்சமூட்டும் நிமித்தம் தீண்டாதார்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, ஹிந்து சங்கடனிய பட்டாளங்களின் சிப்பாய்களாக அவர்களை ஆக்கி, முஸ்லிம்களைப் பயமுறுத்துவதற்குமேயாகும்.

(5) சண்டையிட அவசிய மேற்படுமானல், மௌடீக, கஷ்ட ஜீவன, பலமுள்ள அவர்களை முஸ்லிம்களுடன் சண்டைசெய்ய அனுப்பலாமென்ற நோக்கமுந்தான்.

(6) முஸ்லிம் வீட்டு ஜனங்கள் 'பர்தா' அனுஷ்டானிகளாய் இருப்பது கொண்டு தோட்டிகளின் அத்யாவசியம் அவர்களுக்கு ஏற்படுமாதலால், அவர்களை (தீண்டாதார்களை) தங்கள்வசப்படுத்திக்கொண்டு, அவர்களை (முஸ்லிம்வீட்டு ஜனங்களை) நிர்ப்பந்தப்படுத்தி இம்சிக்க நாடியுமேதான்.

(7) கோ, சம்ரட்சணைக்காக செய்யவேண்டிய முயற்சியெல்லாஞ் செய்துபார்த்துவிட்டு, இதுபொழுது அவர்களை (தீண்டாதார்களை) அதுவிஷயமாய்த் தூண்டி முஸ்லிம்களின் தெருக்களையும், அவர்களின் கசாப்புக்கடைகளையும் சுத்தஞ்செய்யாது அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, பயமுறுத்தி முஸ்லிம்கள் கோ, வதை செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்ற கருத்துமேதான்.

முஸ்லிம் அபிமானிகள் கவனித்தல் வேண்டும்

தற்சமயம் முஸ்லிம் அபிமானிகள் கவனிக்க வேண்டிய விஷயமாவது :—நமது நாட்டு அன்பர்கள் எவ்விதமும் முஸ்லிம்களை க்ஷீணிக்கச் செய்து சகலவித ஆதிக்கத்தையும், பொறுப்

பையும் தங்கள் கைவசம் செய்துகொள்வதற்கு இரவு பகலாக கவனஞ்செலுத்தி வருகிறார்கள். இவ்வித நிலைமையில் முஸ்லிம்கள் தங்கள் வகுப்பாரின் பாத்தியதைகளை புறம்பே தள்ளிவிட்டு முஸ்லிம்களையும், ஆங்கிலேயர்களையும் இந்நாட்டைவிட்டு விரட்டிவிட வேண்டுமென்னும் மூலக் கொள்கையுடையோரின் (ஹிந்துக்களின்) அடியார்களாக இருந்துவருவது அழகாகுமா?

காங்கிரஸ் வாதிகளின் நடவடிக்கைகளில் இயங்கி, மகாசபையினரின் அடியார்களாக இருக்கும் முஸ்லிம்கள், இந்திய முஸ்லிம்களின் கதி அபாயத்திலிருக்கிறதென்பதை நோட்டமிடமாட்டார்களா?

காங்கிரஸின்மீது பிரீதிகொண்ட சில முஸ்லிம்கள், நாங்கள் காங்கிரஸுடன் ஒத்துழைக்கிறோமேயன்றி, ஹிந்து சங்கடனியர்கூடவும், தீண்டாமை விலக்கு இயக்கத்தினரோடும் ஒத்துழைக்கவில்லையே எனக் கூற எழும்புவார்களாகில்,

காங்கிரஸ்வாத ஹிந்துக்களும் இவ்வியக்கங்களில் சேர்ந்திருக்கின்றனர்.

இத்தகைய விஷயமறியாதவரும், உண்மையை உணராதவரும் கோ, ரட்சணை, சுத்தி, தீண்டாமை விலக்கு முதலிய இயக்கங்களில் ஒன்றிலாவது காங்கிரஸிய ஹிந்து மெம்பர்கள் போதிய ஆதிக்கம் பெருமலிருக்கிறார்களாவென்பதையும் தெரிந்துகொள்ளல் வேண்டும். மற்றவர்களை ஏன் பேசவேண்டும்? தீண்டாமைவிலக்கு இயக்கத்தை நோக்குவோமாகில், அதை காந்திஜீ ஆதரிப்பதோடு, அதன் பிரதான அமுல் நடாத்துவோருமாவார். மேலும் அதை சிரமேற்கொண்டுள்ள இதர காங்கிரஸின் பெரிய லீடர்களெல்லாம் அது விஷயமாய் முயற்சிசெய்தும் வருகிறார்கள். அதுவகைக்காக காங்கிரஸிலிருந்தே ரூபாய்கள் செலவிடப்பட்டு வருகிறது. இதற்கு ஸ்வாமி சிரத்தானந்தரின் கூற்றே சான்றாக நிற்கிறது. அஃது யாதெனில்,

"தீண்டாமை விலக்கை, மகாத்மா காந்தி தமது புரோகிராமின் முந்திய பாகமாக வைத்திருக்கிறார். நான் டில்லியில் ஓர் 'தீண்டாமை விலக்கு சபை' திறந்தேன். லாலா லஜபதிராய் அதன் பொக்கிஷத்திற்காக 500 ரூபாயும் கொடுத்து, மகாத்மாஜீயின் துணையைக்கொண்டு ஓர் பெரிய தொகையை காங்கிரஸ் காரியக் கமிட்டியிடம் கேட்கும்படி யோசனை கூறினார். நான் அவ்வாறே செய்தேன்." (பர்தாப் லாகூர், 1-2-23)

இப்போது நாம் கவனிக்கவேண்டியதென்னவெனில், காங்கிரஸ் வாதிகளில் ஒரு சிலர், இவ்வேலையைச் சிரமேற்கொண்டு நடாத்தி வருகிறார்களென்பது மட்டுமன்று, ஆயிரக் கணக்கான ரூபாய்கள் காங்கிரஸ் பண்டிலிருந்தும் இதுவகைக்காக செலவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஒருபோது சில தீண்டாதார்கள் முஸ்லிமாக ஆகிவிட்டார்களென, ஓர் ஸமாஜியின் வார்த்தையைக் கேட்ட காந்திஜீயானவர், றொம்ப விசனமுற்று, "இங்ஙனம் அவர்கள் ஆனது மிகபாதகமான கருமமே, தீண்டாமை விலக்கு வேலை ஹிந்துக்களுக்கே உரியது" எனக் கூறினார்.

காந்திஜீயின் முந்திய நோக்கம்

தீண்டாமைவிலக்கு சம்பந்தமாய், காந்திஜீக்கு முதலில், தீண்டாதார் முஸ்லிம்களாக ஆகிவிடுகிறார்களென கேள்விப்பட்ட மாத்திரத்தில் அங்ஙனம் நிகழ்ந்துவந்தால் ஹிந்துக்களின் நிலை பாதிக்கப்படுமென்ற கருத்துக் கொண்டே அவருக்கு அதில் அனுதாபமிருந்தது.

பிந்திய நோக்கம்

ஆனால் லாஹூர் காங்கிரஸில் சட்டமறுப்பு தீர்மானிக்கப்பட்டு, நடாத்தப்பட்டு வந்த போது, தங்கள் வகுப்பாரின் நிலைமைகளுக்கு பாதகம் வாராவண்ணம் தற்காப்பு நிமித்தம், இந்திய அரசியல் முறையில் சர்வ ஆதிக்கமும் தாங்களே பெறவேண்டுமென்ற நோக்கம் காங்கிரசியஹிந்துக்கள் கொண்டிருப்பதைக் கண்ட மைனாரிட்டியினரான முஸ்லிம்களும், தீண்டா வகுப்பார்களும், அவ்வியக்கத்தில் சேராது ஒதுங்கி இருந்த சமயம், இவ்வாறு இந்திய வகுப்பாரில் பிளவுபட்டு இவர்கள் சிதறி நிற்பதைக்கண்ட அரசாங்கத்தார், இந்திய மக்களில் எல்லா வகுப்புத்தலைவர்களையும் லண்டனுக்குவிளித்து தத்தம் நோக்கங்களை வெளியிடச் சொன்னபோது, ஒவ்வொரு வகுப்புத்தலைவர்களும், தங்கள் வகுப்பின் நோக்கங்களை வெளியிட்டு தங்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளையும் கோரிக்கொண்டு வரும்போது, தீண்டாத வகுப்பாரின் தலைவராகச் சென்றிருந்த டாக்டர் அம்பேத்கார் என்பார், தம்வகுப்பார் ஹிந்துக்

களல்லவெனவும், எந்த மதத்திலும் தங்களுக்கு சம்பந்தமில்லை எனவும், தாங்கள் தனித்த சித்தாந்தமுடைய ஓர் தனிவகுப்பார்களெனவும், மதவிஷயமாய் தங்களுக்கும் ஹிந்துக்களுக்கும் யாதொரு சம்மந்தமுமில்லையெனவும், தங்களுக்கு கோயிலோ, குளமோ, சாமியோ, குருக்களோ, எதுவுமில்லை எனவும், ஹிந்துக்கள் தங்களை, அவர்கள் வகுப்பாரின் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்வதற்கு எவ்விதக் காரணமுமில்லை எனவும், அவ்வாறு தங்களை அவர்கள் கூடச் சேர்ப்பது சுயநலங்கருதிய சூட்சியே எனவும், தாங்கள் இதர மைனாரிட்டி பார்ட்டியாரைப் போன்று ஓர் தனிப்பார்ட்டியாரெனவும், தங்களுக்கும், தனி ஸ்தானங்களே விருப்பமானதால், தாங்களும், தனித்தொகுதியையே ஆதரிப்போர்களென்னும் உண்மையை வெகு சவிஸ்தாரமாக அரசாங்கத்தார்முன் எடுத்துக் கூறியதைக்கண்ட ஹிந்துத்தலைவர்களின் இதயங்களில் பாணமெய்தன போன்று நொம்பல மேற்பட்டு, இனி, தங்கள் வகுப்பின் மெஜாரிட்டி பாத்தியத்தின் வலுக்குறைந்து விடுமெனக் கண்டு பீதிகொண்டவர்களாய், இனி தீண்டாதார்களை தங்களுடன், ஐக்கியப்படுத்திக்கொள்ளாவிடில், தங்கள் பெருந் தொகுதி பாத்தியம், மிகுந்து பாதிக்கப்படுமென எண்ணி, லண்டனிலேயே இவர்கள் புரோக்கிராம் தயார்செய்து கொண்டு இந்தியா வந்தபின், சட்டமறுப்பியக்கம் முறியடிக்கப்பட்டு, காங்கிரஸ் தலைவர்கள் சிறைவாசஞ் செய்துவருங்கால், தீண்டாதாரை உயர்தர ஹிந்துக்களுடன் சேர்த்து அவர்களை சமத்துவமாக பாவிக்க வேண்டுமென்றும், எல்லா ஹிந்துக்களும் சேர்ந்துழைத்து அவர்களை தங்கள் இனத்தவராகச் சேர்த்துக் கொண்டு, அவர்களும், தங்களினத்தவரெனவே காட்டவேண்டுமெனவும், இவர்களோடு (தீண்டாதாரோடு) உயர்தர ஹிந்துக்களெனப்படுவோர், ஓர் சமரசமேற்படுத்திக் கொள்ளாவிட்டால், தான் பட்டினிகிடந்து உயிர் நீர்ப்பதாயும், காந்திஜீயானவர் சபதஞ்செய்து கொண்டபின், ஹிந்துக்களில் கலக்கந்தோன்றி, தீண்டாதாரின் "போலித்தலைவ"ரோருவரோடு ஓர் ஹிந்துத் தலைவர் சமரசமேற்படுத்திக் கொண்டபின், காந்திஜீ விரதம் விட்டார்.

இந்திய மக்களனைவருக்கும் பெருந் தலைவரென பறைசாற்றப்படும் ஓர் தலைவரெனப்படுபவரே, தம் வகுப்பு மெஜாரிட்டி பாத்தியத்திற்கு ஹானி ஏற்படுவதை சகியாது, தனது உயிரைநீர்க்கத் துணிந்தாரென்றால், இவரின் மனத்தின் மூலக்கொள்கை இன்னதுதானென வெகு சீக்கிரமாய்த் தெரிந்துகொள்ளலாம். மேலும், இனி சும்மாவிருந்தால் தமது நோக்கப்படி வெற்றிபெற முடியாதென்பதைத் தெரிந்துகொண்ட அப்பெரியார், 'காங்கிரஸ் திட்டத்தைத் தாம் இனிமேற்கொண்டு நடாத்துவதில்லை' எனவும், 'தீண்டாமைவிலக்கையே மும்முரமாக நடாத்தப்போவதாகவும் அரசாங்கத்தாரிடம் கூறி, சிறைக்கூடம்விட்டு வெளிவந்தபின், அவ்வியக்கத்தை புனருத்தாரணஞ்செய்து நடாத்த முற்பட்டு, சில வருடங்களுக்குமுன் வடநாட்டு ஹிந்துக்களால் தீண்டாதார்களுக்கு "வால்மீகியர்" என இடப்பட்டிருந்த பெயரையும் நீக்கி, வேறொரு உச்சப்பெயரை இட்டு, அவர்களை உச்சத்தில் தூக்கிவிட்டோமென்னும் பாவனையை அவர்களுக்குக் காண்பித்து, தமது கருத்தில் வெற்றிபெற வேண்டுமென இவர் கருதியதால், பூனா நகரில் ஆரம்பமாய்க் கூடிய தீண்டாதார் கூட்டத்தில் நீங்கள் 'ஹரி' கடவுளின் அடியார்களாவீர்; உங்களுக்கு "ஹரி ஜனங்கள்" என்னும் பெயரே தகுதியானதென, மேற்படியார்களுக்கு நாமஞ் சூட்டி, அவ்வியக்கப் பிரசாரத்திற்கென பிரத்தியேகமாய், அவர்கள் பெயராலே ஓர் வாரப் பத்திரிகையும் அப் பூனா நகரிலே ஸ்தாபித்து, தம் முழுகவனத்தையும் அவ்வியக்கத்தில் செலுத்தி, தற்கால், அவர் ஊரூராய்ச் சுற்றி அரிய முயற்சியோடு பிரசாரஞ் செய்து தீண்டாமைவிலக்கை போதித்தும், அவ்வகைக்காக பெரியதோர் நிதி சேர்த்தும் வருவதை நந்நாட்டு முஸ்லிம் கனவான்கள் நன்கறிவார்கள்.

எனவே காந்திஜீயானவர், தாழ்த்தப்பட்டார் விலங்கினங்கள்போன்று நடாத்தப்பட்டுவரும் பரிதாப நிலையைக் கண்டு, மனம்நொந்து, பக்ஷாதாபங்கொண்டு, அவர்கள்மீது உண்மையாகவே அநுதாபங்கொண்டு, இதில் நல்லெண்ணங் கொண்டிருப்பாராகில், இன்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னரே இவ்வியக்கத்தை இவ்வாறு இவர் ஆரம்பித்திருப்பார். அவ்வாறின்றி இவர் தற்போது இங்ஙனம் கவனமாய் நடதித் வருவதற்கு "போலிடிக்கல்" சூட்சியே காரணமென தெற்றென விளங்குகிறது.

ஆகவே காங்கிரசையும், ஹிந்துத்தலைவர்களையும், முழுதும் நம்பிவரும் இஸ்லாமிய மக்

கள், புறவகுப்புத் தலைவர்கள் தங்கள் வகுப்பு லட்சியங்களைக் காத்க எவ்வாறு கண்ணுங் கருத்துமாய் கங்கணங்கட்டி வருகிறார்களென் பதைக் கண்டு இனியாவது கண்விழித்து, அது போல் தங்கள் முஸ்லிம் வகுப்பாரின் லட்சியங் களும், பாதிக்கப்படாவண்ணம் காத்க முன் வருவார்களா? எனவே புற மதவாதிகளின் ஆசா, பாச வார்த்தைகளைக் கேட்டு முஸ்லிம் கள் ஏமாறாது, தத்தம் வகுப்பு லட்சியங்கள் மீதே கவனஞ் செலுத்தல்வேண்டும்.

ஹிந்துமகாசபை, ஹிந்து சங்கடன் சங்கம், சுத்தி இயக்கம், கோ, ரட்சணைக்கமிட்டி, காங் கிரஸ் இவைகள் யாவும், ஒரே பையிலிருந்து வெளிவந்த மாயா ஜாலங்களேயாகும்; ஏமாற்ற சபைகளாகும். இவைகள் யாவற்றின் நோக்க மும், இதை நிறுவியோர் கருத்துகளும், இந்தியாவில் "ஹிந்து ராஜ்யம்" ஸ்தாபித்து விடுவதென்பதே யாகுமென்பதை காங்கிரஸ் முஸ்லிம்கள் ஞாபகத்தில் வைத்தல்வேண்டும். ஓ, எல்லாம் வல்ல அல்லாஹ்!

கபடமற்ற எளிய மனதுடைய முஸ்லிம் களுக்கு, விவேகபுத்தியைக் கொடுத்து, இன்ன வர்களுக்கு நேரானவழியைக் காட்டி இன்ன ருள் புரிவாயாக! ஆமீன்.

ஈரான் தேசத்து ஸ்திரீகள்

இஸ்லாமிய தேசங்களிலுள்ள வாழ்க்கை முறைகளும், பழக்க வழக்கங்களும் இந் திய முஸ்லிம்களுக்குச் சரியான முறையில் தெரியாது. ஆனால் துருக்கி ஜனங்களின் வாழ்க்கை முறைகளிலும் ஆசாரங்களிலும் சமீ பத்திலேற்பட்ட புரட்சியை ஓரளவு தெரிந் திருக்கிறார்கள். இதல்லாமல், பொதுவாக இதர தேசங்களையும் சிறப்பாக ஈரானையும் பற்றிய சரியான தகவல் இந்திய முஸ்லிம்களுக்குத் தெரியாது. ஆதலின், இந்தியாவிலுள்ள சில படித்த அறிஞர்கள், ஈரான் தேசம் சென்று வந்து அங்குள்ள நிலைமைகளைப்பற்றி எழுதி இருக்கிறார்கள். ஆயினும், ஒரு ஆங்கில மாதின் கட்டுரை ஒன்று 'ஏஷியாட்டிக்ரிவ்யூ' என்ற சஞ்சிகையில் பிரசுரமாகி, அதில் ஈரான் தேச த்து ஸ்திரீகளைப்பற்றிய விபரமான தகவல் கூறப்பட்டிருப்பதால், அதன் சாராம்சத்தைக் கீழே தருகிறோம்.

துப்பட்டி

கிட்டத்தட்ட ஈரானிலுள்ள எல்லா ஸ்திரீ களும் கருப்புப் போர்வை (புர்கா) அணிகின்ற னர். இந்தத் துப்பட்டி, பட்டு அல்லது பருத்தி நூலினால் நெய்யப்படுகிறது. இதில் ஒரு பாகம் இடுப்பில் கட்டிக்கொள்ளப்பட்டு மற்றொரு பாகம் தலையிலும் உடலிலும் அணியப்படு கிறது. ஒரு கையினால், முகத்தைச் சுற்றிலும் அல்லது முகத்தின் மீது இழுத்துப் பொத்திக் கொள்ளப்படுகிறது. ஏழைகளில், பூர்வீக காலத்து வழக்கத்தையே தீவிரமாக அனுஷ் டிப்பவர்கள் முகத்தை முற்றிலும் பொத்திக் கொள்வதற்காக நீண்ட வெள்ளைத்துணியை (நிகாபை - மூகமுடியை)ப் போட்டுக்கொள் கிறார்கள்.

செல்வந்தர்களின் ஸ்திரீகள், "பீச்சா" என்று சொல்லப்படுகிற ஒருவகைத் துணியை அணிகிறார்கள். இது மிருதுவாகவும் கெட்டி யாகவும் வலைபோலுமிருக்கிறது. இதை ஸ்திரீ களின் கண்களுக்கெதிரில் தொங்கவிடுகிறார் கள். இது 20 வருடங்களுக்கு முன் இராக் தேசத்திலிருந்து 'கிர்மான் ஷாஹ்' என்ற ஊரில் பரவிற்று. பின்னர், கொஞ்சங் கொஞ்சமாக, நாளடைவில் கிழக்குப் பிராந்தியங்களில் தோன்றிஇப்பொழுதுஈரானிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் காணப்படுகிறது.

கிராமாந்தரங்களிலுள்ள சில ஸ்திரீகள் அணிகிற புர்காவானது அவர்களுடைய வீடு களில் தயார்செய்யப்படும் கெட்டியான நூல் துணியாக இருக்கிறது. இது பார்வைக்கு அழகாக இல்லாததாயும், பட்டிகளற்றதாயு மிருப்பதால், ஸ்திரீகள் இதை அணிந்துகொள் வதுகொண்டு முற்றிலும் அவலட்சணமாகக் காணப்படுகிறார்கள்.

ஈரான் தேசத்து நகரங்கள் இருநூறு, முந் நூறு மைல் தூரத்துக்கொன்றாக இருப்ப துடன், அந்த நகரங்களுக்கிடையில் போக்கு வரத்தும் மிகக் குறைவாக இருந்துகொண் டிருக்கிறது. ஆதலால், ஒவ்வொரு நகரத்தி

லும் தனித்தனியே ஒரு விசேஷம் காணப்படுகிறது. 'ஷீராஜ்' நகரத்து ஸ்திரீகள் மற்ற நகரத்து ஸ்திரீகளைப் பார்க்கினும் தேகாரோக்கியமுள்ளவர்களாகவும், முன்னேற்றவிருப்பமுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள்.

பூஷஹரிலுள்ள ஸ்திரீகள், கருப்பு நிறமுள்ள முகமூடியைத் தொங்கவிட்டு தங்களுடைய கண்களையுங்கூட மூடிக்கொள்கிறார்கள். இஸ்பஹானிலுள்ள ஸ்திரீகள் மிகக் கடுமையாகப் பர்தாவை அனுஷ்டிக்கின்றனர். இவர்கள் துப்பட்டி, பீச்சா (முகமூடி), கை உறை (மோஜா) ஆகிய எல்லாவற்றையும் அணிந்துகொள்கிறார்கள். இந்நகரத்தில் முகமூடியில்லாமலிருப்பது குற்றமாகும். சென்ற 1933-ம் வருஷத்திய வெய்யற் காலத்தில் ஒரே ஒரு ஸ்திரீக்கு மாத்திரம் முகமூடியில்லாமல் வெளியில்வர அனுமதியிருந்தது. இஸ்பஹானுக்குப் பக்கத்தில் அர்மீனியர்களின் 'ஜலபா' என்ற நகரமிருப்பதால் அங்கு கிறிஸ்துவ ஸ்திரீகள் சுயேச்சையாக வெளியில் திரிவதை இவ்விலாக்காவிற்கு வருகிற அந்நியதேசத்தார் பார்த்து, 'முஸ்லிம் ஸ்திரீகள் முகமூடி இல்லாமல் வெளியில் வருகிறார்கள்' என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

ஆணும் பெண்ணும் ஒன்றுகொள்ளாது, அவர்கள் தனித்தனியே வாழ்கிறார்கள் என்பதற்குத் துப்பட்டி ஒரு அடையாளமாக இருக்கிறது. இதனால் சுயேச்சையாக அந்நிய ஆணும் பெண்ணும் கலந்துறவாட முடியாது. ஆதலால், வாலிப ஆண்களும், பெண்களும் இதை ஒழித்துவிட விரும்புகின்றனர். ஆனால், 'நாகரீகமடைந்த துஹ்ரான் பட்டணமும், அதைச் சுற்றியுள்ள மாகாணங்களிற் பெரும்பான்மையானவைகளும் இவ்வஸ்திவாரப் புரட்சிக்கு இன்னும் தயாராகவில்லை' என்று விஷயமுணர்ந்தவர்களும், அறிவுள்ளவர்களும் கருதுகிறார்கள். கணவன், தந்தை, தனையன் ஆகியவர்களுடன்மாத்திரம் கூடிக் கலந்துவாழும் ஸ்திரீகளுக்கு அந்நிய ஆடவர்களிடம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பது தெரியாது. இதே நிலைமைதான் ஆடவர்களுக்குமிருக்கிறது ஆதலின், இன்றையத்தினம் துப்பட்டி போர்த்திக்கொள்ளும் வழக்கம் ஒழிந்துவிடின், ஆண்களும் பெண்களும் தங்களுக்கிடையிலுள்ள சம்பந்தங்களில் முற்றிலும் காட்டுமிராண்டிகளின் ஜீவனத்தைப் போலவே வாழ்க்கையை நிறைவேற்ற ஆரம்பித்துவிடுவார்கள். இது ஈரானிலுள்ள அழகான, படித்த ஒரு ஸ்திரீயின் அபிப்பிராயமாகும்.

துப்பட்டியும், நாகரீகமடைந்த துஹ்ரானும்

ஆரம்பத்தில் செல்வந்தர்களின் ஸ்திரிகள் மாத்திரம் துப்பட்டியை உபயோத்துவந்தனர். பின்னர், காலஞ்செல்லச்செல்ல இதர வகுப்பு ஸ்திரிகளும் அதனை அணிய ஆரம்பித்துவிட்டார்கள். இன்னுங்கூட உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களான செல்வந்தர்களின் ஸ்திரிகளிடத்தில், 'புர்கா' மிகவும் நெருங்கிய இணைப்புள்ளதாக இருக்கிறது. புர்காவை அணிவதால் சமூகத்தில் மிகுந்த மரியாதை ஏற்படுகிறதாகையால்அதை விட்டுவிடுவது மிகுந்த சிரமம் என்று தோன்றுகிறது. கிராமங்களில் பொதுவாக ஸ்திரீகள் துப்பட்டி இல்லாமல்தானிருக்கிறார்கள். அவ்வாறிருந்தும், கஷ்டஜீவனமில்லாத விவசாயிகள் தங்களுடைய சீமான் தனத்தைக்காண்பித்துக்கொள்வதற்கு சிரேக முழுவதையும் மறைத்துக் கொள்ளும்படியான கருப்புத் துப்பட்டியை வாங்கிக்கொள்வது அவசியமெனக் கருதுகிறார்கள். எனவே, அநேகம் பெண்கள் புர்க்காவை அதிகமாக அணிவதால் இதையே தங்களுக்குறிய ஆடையாக நேசிக்கிறார்கள். இந்த ஸ்திரீகளில், ஏராளமான வாலிப ஸ்திரீகளும் இருக்கிறார்கள். இவர்களிலுள்ள வாலிப ஆடவர்களிற் பலருங்கூட இதைத்தங்களின் சமூக உடை என்று கருதி, இதைக் காப்பாற்றுவது புதிய தேசீய இயக்கத்தின் ஒரு அம்சம் என்றும் கருதுகிறார்கள்.

விவாகம்.

'புர்க்கா கருப்பாக இருப்பதானது, மனதுக்குள்உள்ள வருத்தத்தையும் துக்கத்தையும் வெளியில் அறிவிக்கக்கூடிய ஒரு அறிகுறி' என்று ஐரோப்பியரிற் பெரும்பாலர் கருதி இருக்கிறார்கள். இது சத்தத்தவறு. ஏனெனின், ஈரான் தேசத்திலுள்ள மத்திய வகுப்பு ஸ்திரீ ஒருவளை ஐரோப்பாவிலுள்ள மத்திய வகுப்பு ஸ்திரீயுடன் ஒப்பிட்டுச் சீர்தூக்கிப்பார்த்தால், ஐரோப்பிய ஸ்திரியைப் பார்க்கினும் ஈரானிய ஸ்திரீ அதிகச்சந்தோஷமற்றவளாக இருக்க மாட்டாள். இதற்குக் காரணம் யாதெனில், ஈரானிய ஸ்திரீயின் தேவைகள் மிகச்சொற்பம்; இவர்கள் தினந்தோறும் புதிய ஆடைகளையும் விருப்பங்களையும் தேடிக் கொண் டிருக்க மாட்டார்கள் ; அவர்களுக்குள்ள தற்போதைய

ஜீவனத்தைக் கொண்டு திருப்தியடைபவர்களாகவும், சந்தோஷ வாழ்க்கையுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள். இனி எதிர்காலத்தில் தங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்ற உறுதியுள்ளவர்களாகவு மிருக்கிறார்கள். இவர்களை விவாகம் செய்து கொடுப்பது, மற்றவர்களாக இருந்தும், இவ்விவாகத்தினால் விளையும்பலனைக் கவனிக்கும்போது, இந்த ஸ்திரீகள், தாங்களாகவே தங்களுக்குரிய வரனைத் தேடிக்கொள்ளும் ஐரோப்பிய ஸ்திரீகளைப் பார்க்கினும் அதிக வெற்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

முல்லாவின் புத்தகத்தில் சம்பந்தப்பட்ட இலாக்காவின் சிவில் ஆபீஸர் ஒருவரின் முன்னிலையில் விவாகம் பதிவு செய்யப்படுகிறது. விவாகத்தின் ரிக்கார்டுகள் மிகவும் பத்திரமாக வைக்கப்படுகிறது. அறபிப் பாஷையிலேயே நிக்காஹு ஓதப்படுகிறது.

ஆடவர்கள் இரண்டாவது விவாகம் செய்வதற்கு முன்னர், தங்களது முதல் மனைவியிடத்தில் சம்மதம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், ஒரு ஆடவன் விவாகம் செய்வதற்குமுன், தான் இதற்குமுன்னர் விவாகம் செய்தவனு இல்லை என்பதைப்பற்றிய பிரமாண வாக்குறுதியை ஸ்திரி வாங்கிக்கொள்ளவேண்டும் என்றும், இவ்விதமான வாக்குமூலம் முல்லாவுக்கு முன்னிலையில் கொடுக்கவேண்டுமென்றும் விவாகச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆடவன் இரண்டாவது விவாகம் செய்ய விரும்புவானாயின், இவ்விரண்டாவது விவாகத்துக்குப் பின்னர், முதலாவது விவாக காலத்தில் நடத்திய முறைப்படி இருமனைவிகளுடனும் வாழமுடியுமா இல்லையா என்பதற்கான ஆதாரமும் காட்டவேண்டும். இந்த விதமான சட்டம் ஏற்படுத்தியதற்கு, "பலதார மணமானது ஸ்திரீகளின் சம்மதமில்லாமல் நடைபெறாது" என்பதுதான் பொருள். ஆயிரத்தில் ஒரு ஸ்திரீதான் தனது கணவன் மறுமுறையும் மணந்துகொள்வதைச் சம்மதிப்பதாகப் பெரும்பாலர் கூறுகின்றனர். சமூகக் கட்டு, சேர்ந்துவாழ்தல் என்ற காரணங்களால் இவ்விரண்டாவது விவாகத்தை ஸ்திரியானவள் சகித்துக்கொள்வது அவசியமாக இருக்கிறது.

படித்த வகுப்பினரிடம்ஏகபத்தினி உணர்ச்சி அதிகமாக இருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை. ஒருமனைவிக்குமேல் அதிகமான மனைவிகளை வைத்துகொண்டு செலுத்து வதற்கான சக்தி இவர்களுக்கு இல்லாதலால்தான் ஏகபத்தினி விரதத்தை இவர்கள் விரும்புகிறார்களென்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், பலதாரமுள்ள மனிதனின் வாழ்க்கையைப் பார்க்கினும் ஒரு தாரமுள்ளவனின் வாழ்க்கை மிகவும் அமைதியாக இருக்கிறது என்று ருஜுவாகிவிட்டதால், இதுதான், ஏகபத்தினிவிரதத்தைப்படித்த வகுப்பார் அதிகம் நேசிப்பதற்கு உண்மைக் காரணமாகும் என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

வயதைப்பற்றியும், அழகைப்பற்றியும் கூறி ஸ்திரீ புருஷர்களை ஏமாற்றுவது இப்பொழுது குற்றம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், பழையகாலத்தில் நிகழ்ந்த சம்மந்தங்கள் இப்பொழுது கேள்வியில் வருவதில்லை. முற்காலத்தில் கிழவிகளை தெய்வலோகத்து ரம்பை என்றுகூறி வாலிபர்களுக்கு விவாகம் செய்துகொடுத்து விடுவதும், வயோதிகனை வாலிபன் என்றுகூறி கன்னிகைகளை விவாகம் செய்துகொடுத்து விடுவதும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கல்வி

ஸ்திரீகள் கல்வி விஷயத்தில் ஆடவர்களைப் பார்க்கினும் அதிகம் பிந்தி இருக்கிறார்கள். பெண்பாடசாலைகள் சமீபகாலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை எண்ணிக்கையிலும் மிகக் குறைவாக இருக்கின்றன. இங்குள்ள அநேகம் ஸ்கூல்களில் தையல் வேலை சமையல் வேலை, வீட்டு வேலை முதலியவைகள் கற்பிக்கப்படுகின்றன. தையல் மெஷீன்கள் சிறிய பாடசாலைகளிலும் அதிகவேலை செய்கின்றன. இதில் தையல்வேலை செய்வது மாத்திரமன்றி கிழிந்த வஸ்திரங்களை இழையாடும் வேலையும் செய்யப்படுகிறது. கிழிந்த வஸ்திரங்களை இழையாடுவதில் நுட்பமான வேலை செய்வது பெருமையாகக் கருதப்படுகிறது. எனவே, உலகத்திலுள்ள எந்த தேசத்திலும் செய்யமுடியாதபடி அவ்வளவு நேர்த்தியாக இங்கு இழையாடப்படுகிறது. நவநாகரீக ஸ்திரீகள் சதுரமான ஸாட்டின் துணியில் பூ, நக்ஷாவினால் பூனைகள் விளையாடுவதுபோலும், குதிரைகள் ஒழுங்கில்லாமல் ஓடுவதுபோலும் செய்து காண்பிப்பதில் அதிக நேரத்தைச் செலவு செய்கிறார்கள்.

தொழில் வசதிகள்

கல்வி கற்ற ஸ்திரீகளுக்கு உபாத்தியாயினி, மருத்துவச்சி வேலைபார்க்க அதிக சந்தர்ப்பங்

கள் கிடைக்கின்றன. ஈரானில் உபாத்தியாயினி படிப்புக்கு அதிக வசதியில்லை. துஹ்ரானில் 'நார்மல் டிரெய்னிங் காலேஜ்' என்ற பெயரால் இருக்கிற கல்விச்சாலை மிகவும் சாமான்யமான கல்லூரியாகும். இதில் அநேகம் சந்தர்ப்பங்களில் ஸ்திரீகளின் திறமையைக் கவனிக்காமல் அவர்களது விருப்பத்துக்காக, அவர்களை உபாத்தியாயினிகளாக்கப்படுகிறது. இம்முறையிலும் கூட போதிய அளவு உபாத்தியாயினிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

மதம்

உலகத்திலுள்ள ஏனைய தேசங்களைப்போல் ஈரானிலும் ஸ்திரீகள் ஆடவர்களைப்பார்க்கிலும் அதிக மத அனுஷ்டானமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால், மத சம்பந்தமாகப் போதிய கல்வி அவர்களுக்குப் புகட்டப்படுவதில்லையாதலால், திருக்குர்ஆனைப் படிக்கத் தெரியாத ஸ்திரீகள் ஏராளமாக இருக்கிறார்கள்.

எதிர்காலம்

இப்பொழுதிருக்கிற நிலைமையில் சீர்திருத்த மேற்படுமாயின், ஒவ்வொரு வகுப்பு ஸ்திரீகளுக்கும் இந்த ஜீவியத்தில் பிரயோஜனமடைவதற்கான வசதிகள் இப்பொழுதிருப்பதைப் பார்க்கினும் இனி அதிகமாக ஏற்படும்; தங்களுடைய திறமை, உழைப்பு, ஜாக்கிரதை ஆகியவைகளினால் சமூகத்தின் முன்னேற்றத்தில் தங்களுடைய வேலையை மிகவும் நேர்மையாக நிறைவேற்றுவார்கள்.

ஔரங்ஜீபும் வண்டிக்காரனும்

ஔரங்ஜீப் ஆலம்கீர் சக்கிரவர்த்தியின் மார்க்கபக்தியும், ஷரீஅத்துக்கு அவர் கட்டுப்பட்டு நடக்கும் தன்மையும் உலகப் பிரசித்தமானவை. அவர் வேஷதாரிகளை வெறுடன் களைபவராக இருந்ததுடன் போலிகளின் உயிர்ப்பகைவராகவுமிருந்தார். எனவே அவர், ஷரீஅத்துக்கு விரோதமாக நடக்கும் ஞானிகளையும் தயவு தாட்சண்யமின்றி தண்டிப்பவராக இருந்தார். ஆகவே, ஷரீஅத்துக்கு மாறாக நடந்த ஸூபீ ஸர் மதைச் சிரச்சேதம் செய்வித்தார்; திருக்குர்ஆனை அவமதித்த குற்றத்துக்காக மஜ்னூபை உயிருடன் மதிலில் அறைவித்தார். ஷரீஅத்துக்கு மாறு செய்பவர்களிடம் தயவு தாட்சண்யம் காட்டாது இவ்வாறு தண்டித்து வந்தாலும், ஷரீஅத்துக்கு மாறு செய்யாத மெஞ்ஞானிகளைத் தேடி அலைந்து அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்தும் வந்தார். இராக்காலங்களில் மாறுவேடம் பூண்டு, நகரத்தின் தெருக்களிலும், சந்துக்களிலும் சுற்றித்திரிந்து நகர்சோதனை செய்தும், ஜனங்களின் துக்கங்களையும், கவலைகளையுமறிந்து அவர்களுக்கு வேண்டுவன செய்தும் வந்தார். தேவையுள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவார். அநீதி செய்யப் பட்டவர்களை ஆதரித்து அவர்களுக்குத் தக்கன செய்வார்.

இந்நிலைமையில் வழக்கம்போல் ஓரிரவு 2-மணிக்கு நகர்சோதனைக்குப் புறப்பட்டு 'பஹார் கல்' தர்வாஜா (கேட்டு) வுக்குவந்து, அங்கிருந்து சந்துக்களைக்கடந்து, கேட்வழியாக நகருக்குள் பிரவேசித்து, அதிவேகமாக "அர்க்" கோட்டையின் பக்கமாகச் சென்றார். வரும் வழியில், பக்கத்திலுள்ள ஜாமிஆ மஸ்ஜிதில் "இல்லல்லாஹ்" என்று 'திக்ரு' செய்யும் சப்தம் வந்தது. இதைச்செவியுற்ற அரசர், வழியை முறித்துக் கொண்டு, ஜாமிஆமஸ்ஜிதின் பக்கமாகத் திரும்பினார். பள்ளிவாசலின் வாயில் பக்கமாக நின்று உள்ளே பார்த்ததில், அரண்மனை வண்டிக்காரர்களிலொருவர் 'திக்ரு' செய்துகொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே ஔரங்சீப் அரசர் அவர் பக்கல் சென்று, 'நீயார்? என்று விசாரித்தார். அதற்கு அவ்வண்டிக்காரர், நான் தட்க்ஷணத்தின் அதிபதி என்றனர். இதன் பேரில் இருவருக்கும் அடியிற் கண்ட சம்பாஷணை நடந்தது.

ஔரங்சீப்:—தட்சணத்துக்கு அதிபதிஆலம்கீரல்லவா?

வண்டிக்காரர்:—அவர் ஸ்தூலத்தை ஆட்சி செய்கிறார். எனக்கு இறைவன் ஆத்மாக்களுக்கு ஆட்சிபுரியும் அதிகாரத்தை அளித்துள்ளான்.

ஔரங்சீப் :— அரசன் சம்பளத்துக்கு வேலை செய்யமாட்டான். அல்லாஹு த ஆலாவைத் தவிர வேறு யாருக்கும் கீழ்படிய மாட்டான்.

வண்டிக்காரர் :—அல்லாஹ் சுபுஹான ஹுவ தஆலா ஸ்தூலங்களின் அதிகாரத்தை ஆலம்கீருக்குக் கொடுத்து, இம்மண்ணுடலத்தைக் கொண்டு அவருக்குக் கீழ்படிவதைக் கடமையாக்கியுள்ளானாதலின் ஆலம்கீர் சொல்லும் வேலையை அவருக்குச் செய்கிறேன்.

ஔரங்சீப் :—அரசர் அநியாயக்காரராகவும் அக்கிரமிப்புக்காரராகவுமிருக்கிறாரே ?

வண்டிக்காரர் :—இருக்கலாம். ஆனால் முஸ்லிம் பொதுஜனங்கள் அவ்வரசரை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் ; அவர் மார்க்கபக்தியுள்ளவர் என்று சாட்சியம் கூறுகின்றனர் ; அவர் ஷரீஅத்துக்கு விரோதமாக இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. ஆதலால் அவருக்குக் கீழ்ப்படிவது என் கடமையாகும்.

ஔரங்சீப் :—தாங்கள் ஆன்மாக்களின்மீது ஆதிக்கம் செலுத்தி வருவதானால், அவர் அல்லாஹ்வின்பால் திரும்புவதற்காக ஏன் அவருக்குக் கட்டளையிடுவதில்லை ?

வண்டிக்காரர் :—நான் பாதுஷாவாகத்தானிருக்கிறேன். அல்லாஹ்வல்ல. அல்லாஹு தஆலாவே 'மூமின்' என்றும், 'ஜிந்தீக்' என்றும் பாகுபாடு செய்துவைத்திருக்கும்போது, அவனுடைய ஏற்பாட்டில் தலையிட எனக்கென்ன உரிமையிருக்கிறது.

ஔரங்சீப் :—அல்லாஹு தஆலா 'குப்று' என்றும், 'இஸ்லாம்' என்றும் பாகுபாடு செய்திருந்தால் 'குப்று' செய்பவர்களுக்கு ஏன் தண்டனை விதிக்கிறான் ?

வண்டிக்காரர் :—எஜமானனுடைய செய்கையில் எதிர்வாதம்செய்ய அடிமைக்கு என்ன உரிமையிருக்கிறது ? அவன் நாடுவதைச் செய்பவன்.

ஔரங்சீப் :—அவ்வாறாயின், மக்கள் செய்யும் கிரியைகளெல்லாம் வீண். தக்தீரில் (விதியில்) என்ன எழுதப்பட்டதோ அதுதான் நடக்கும்.

வண்டிக்காரன் :—முயற்சியும் பிரயத்தனமும் தான் நாம் செய்யவேண்டிய காரியம். அதை முற்றுப்பெறச் செய்வது அல்லாஹு தஆலாவின் கையில் இருக்கிறது. கூலிக்காரனுக்கு கூலி அவசியமாகக் கிடைக்கிறது.

(2)

ஔரங்சீப்பின் மெய்க்காப்பாளர்களில்பட்டு நூல்காரர்களைக்கொண்ட பட்டாள மொன்றிருந்தது. இந்தப் பட்டாளத்தை ஷாஹ் ஜஹான் சக்கரவர்த்தி நிர்மாணித்து, தனது புதல்வரான 'தாரா'வின் ஊழியத்திற்காக ஏற்படுத்தியிருந்தார். தாராவின் மரணத்திற்குப்பின் இந்தப் பட்டாளத்தைக் கலைத்து விடாமல் அரசர் தம் ஊழியத்துக்கென வைத்துக் கொண்டார். இப்பட்டாளம் "அர்க்" கோட்டையை காவல்புரிந்து வந்தது. 'நாம் தார்கான்' என்பவர் இப்பட்டாளத்தின் தளகர்த்தராகவும், 'சுலைமான் ஷிக்வா' என்பவர் இவரின் பரிபாலனத்திலுள்ளவராகவு மிருந்தார்கள். அதுபொழுது 'தஃஜியா' வைக்கக்கூடாது என்று இவ்விருவருக்கும் ஔரங்சீப் உத்தரவு பிறப்பிக்கவே, பட்டு நூல்காரர்கள் கடுங்கோபமடைந்து, ஔரங்சீபை கொலைசெய்து விட வேண்டுமென்று இரகசியமாகச் சதியாலோசனை செய்தனர். இந்த சதியில் ஔரங்சீபின் லிகிதாதிபதியும் சேர்ந்திருந்தார். இச்சதி வெளியாகிவிடக்கூடாது என்று இவர்கள் ரொம்ப முயற்சி செய்துகொண்டிருந்தார்களாதலின், உண்மையில் ஔரங்சீபுக்கு இச்சதியைப்பற்றிய உளவுதெரியாது, மராட்டியர்களை அடக்குவதற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். எனவே ஹஜ்ஜுப் பெருநாளைக்குப்பின் ஔரங்சீப் நேரில் சென்று இக்காரியத்தை நிறைவேற்றுவது என்று முடிவாகி இருந்தது. இதற்கிடையில், மராட்டியர்களை அடக்குவதற்காகச் செல்லும்போது வழியில் 'தௌலத்தாபாதில்' பாளையமிறங்கி இருக்கும்போது, ஔரங்சீபைக் கொன்றுவிட்டு தேவகிரிக்கோட்டையில் வேறொருவருக்குப் பட்டங்கட்டிவைத்துவிடுவதென முடிவுசெய்யப்பட்டிருந்தது.

படையெடுப்புத் திட்டப்படி கூடாரங்களை முதல்நாளே அனுப்பிவிட்டு மறுநாள் ஔரங்சீப் படையுடன் புறப்படுவதாக இருக்கும்போது, அன்றைய இரவில் ஔரங்சீப், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் தர்பாரைச் சொர்ப்பனத்தில் கண்டார். அதில் எல்லாப் பெரியார்களும் வரிசை வரிசையாக இருக்கும் நிலைமையில், ஹஜ்றத் அமீறுல்மூமினீன் அலீ (ரலி.) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடத்தில், "பட்டுநூல்காரர்கள் நம்முடைய அடியாரான ஔரங்சீபைக் கொலை செய்வதற்

காக எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள் ; இந்தக் குழப்பத்தைத் தடுத்து விடுவது அவசியமாகும்'' என்று கூறி, அங்கிருந்த ஒருவரை அழைத்து, அந்தப்பிரதேசம் உமது அதிகாரத்தின் கீழிருப்பதால், இது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்யும்'' என்று கட்டளையிட்டார்கள். ஔரங்சீப் பாதுஷா அவர்கள் அந்த மனிதரை நன்கு அறிந்துகொண்டார்கள். அவர்தான் முன்னர் மஸ்ஜிதில் 'திக்ரு' செய்து கொண்டிருந்த வண்டிக்காரர்.

ஔரங்சீபின் கண்கள் திறந்துவிட்டன. ஏற்கனவே அவருக்கு இச்சதியைப்பற்றிய எவ்விதத் தகவலும் தெரியாதாகையால் அவர் அதிகத் திகைப்படைந்து, குதிரை லாயத்திலுள்ள வண்டிக்காரர்களெல்லாம் ஆஜராக வேண்டுமென்று, அவசர உத்தரவு பிறப்பித்தார். வண்டிகளின் மேற்பார்வையாளரான 'தௌரான் கான்' என்பவர் இவ்வவசர உத்தரவைக்கண்டு அதிகப்பிரமை யடைந்து, அரச ஆக்கினைக்கு மீறுவது முடியாத காரியமெனக் கருதி, எல்லா வண்டி ஓட்டிகளையும் ஆஜர் படுத்தினர்.

ஔரங்சீப் யாவரையும் பார்வையிட்டும், அவர் தேடிய வண்டி ஓட்டி காணப்படவில்லையாதலால், தௌரான் கானிடம், ''எல்லாவண்டிக்காரர்களும் ஆஜராகி இருக்கிறார்களா ? இனி எவரும் பாக்கி இல்லையோ ?'' என்றுவினவினர். அதற்கு அவர் கையைக் கட்டிக்கொண்டு ''நான்கு வண்டிக்காரர்கள் உணவுப் பொருள், கூடாரம் முதலியவைகளுடன் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்'' என்று பயந்து கூறினர்.

ஔரங்சீப் மிகுந்த சந்தோஷத்துடன் தேவகிரிக்குச் சென்று சொர்ப்பனத்திற் பார்த்த வண்டிக்காரரை அங்கு கண்டு பேசினர். பின்னர் ஔரங்சீப் தமது கூடாரத்தினுட் சென்றபோது, லிகிதர்களும் ஆஜரானர்கள். அப்பொழுது 'முனவ்வர்கான்' என்பவர் முன்வந்து ''நாம்தார்கான், ஸப்ஷிக்கன் கான், அலீயார்கான் ஆகியவர்கள் கதம்போஸி (பாதகாணிக்கை) செய்யவிரும்புகிறார்கள்'' என்று கூறினர். ஔரங்சீப் லிகிதரைப்பார்த்துவிட்டுப் பின்னர், இந்த அமீர்கள் தம்மிடம் வருவதற்கு அனுமதிகொடுத்தார். நார்தார்கானும், ஸப் ஷிக்கன் கானும் கூடாரத்துக்குள் வந்ததும், ஔரங்சீபின் காலில் விழுந்து, ''பாதுஷா அவர்கள் எந்தத் தண்டனை விதித்தாலும், அதற்கு நாங்கள் தகுதியுள்ள குற்றம் செய்தவர்களாயிருக்கிறோம்'' என்று கூறினர்கள். பாதுஷா அவர்களுக்கு பேராச்சரிய முண்டாயிற்று. ஆனால், 'நாம்தார்கான்' மிகவும் வெட்கமடைந்த தொனியில், இச்சதி சம்பந்தமான விருத்தாந்தங்களனைத்தையும் ஆதியோடந்தமாகக் கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இச்செய்தியைச் செவியுற்ற பாதுஷா ஸ்தம்பித்துவிட்டார். பின்னர், அந்த வண்டிக்காரரைப்பற்றிய ஞாபகம்வந்து, ஆளைத்தேடிப் பார்க்கையில், அவர் எங்கும் அகப்படவில்லை. இந்நிலைமையில், அன்று மாலை ஆலம்கீர் பாதுஷா 'கலதுஆபாத்'துக்குப் புறப்பட்டுச் செல்லும் வழியில் அவ்வண்டிக்காரரையும் அவரது வண்டியையும் கண்டு, தாம் ஏறிவந்த வண்டியை விட்டிறங்கி, அவ்வண்டியில் ஏறிக்கொண்டு 'கலதுஆபாத்' போய்ச் சேர்ந்ததும், தனிமையில் வண்டிக்காரரிடம், ''தாங்கள் என் உயிரைக் காப்பாற்றினீர்கள்'' என்று கூறினர். அதற்கு அவ்வண்டிக்காரர், 'உமது உயிரை, யானே, வேறெவரோ காப்பாற்றவில்லை ; அல்லாஹ் ஒருவனும் தத்துவ வல்லமையுள்ளவனுயுமிருப்பதால், தனது அடியார்களைக்கொண்டு எக்காரியத்தைச் செய்விக்க அவன் விரும்புகிறானே, அவரைக்கொண்டு அவ்வேலையைச் செய்விக்கிறான் ; தங்களுக்கு அவன் இவ்வுலகத்தின் அரசாதிபத்தியத்தைக் கொடுத்திருப்பதுடன், ஆத்மாக்கள் பாபம் என்ற அழுக்கில் புரளுவதைவிட்டுப் பரிசுத்தப்படுத்தும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றானதலின், இந்த அயோக்கியர்களின் ஆத்மாக்களை, சதி என்ற பாபத்தைவிட்டு பரிசுத்தப்படுத்தும்படி எனக்குக் கட்டளை பிறந்தது. ஆகவே, நான் அவ்விஷயங்களை உணர்ந்து, அவர்களின் ஆத்மாக்களைச் சுத்தப்படுத்தினேனாகையால், அவர்கள் அந்த சதியை விட்டு மனந்திரும்பி, தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். ஆனல் தாங்கள், 'கோபத்தை அடக்குபவர்கள் ; இன்னும் ஜனங்களை மன்னிப்பவர்கள்'' என்ற வேதவாக்கின் கருத்தின்படி நடந்துகொள்ளுங்களென்று கூறினர்.

பின்னர் ஔரங்சீப் தாமே நேரில் மராட்டியரை அடக்குமுறை செய்யச் செல்லும் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, அவர்களை அடக்குவதற்காக தமக்குப் பதிலாய் 'நாம்தார்கான்,'

'ஸப்ஷிக்கன்கான்' முதலியவர்களை அனுப்பினர். இவர்கள் செய்த கடும்போரினல் மராட்டியர்கள் நெருக்குண்டு ஔரங்சீபுக்குச் சரண் புகுந்தனர்.

பகுத்தறிவோ ! பகுத்தறிவு !!

(M. M. முல்லாஜி எழுதியது)

முன்னெரு காலத்தில் பகுத்தறிவின்மீதே விசேஷ நம்பிக்கை கொண்டு, அதைச் சிரந் தாங்கி ப....கு....த்....த....றி....வோ ! ப...கு...த்...த...றி...வு !! என்று, பறை சாற்றித் திரிந்தவர்களில் யானுமோர் இளங்காளை. அக்காலத்தில் யான், பகுத்தறிவின்மீது கொண்டிருந்த நம்பிக்கையைப்போல் மாதா, பிதா, குரு, தெய்வம், சந்திரன், சூரியன், வானம், பூமி முதலிய எப்பொருளின்மீதும் எனக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாதாகையால், எனது பகுத்தறிவிற்கேற்ற பொருளிருப்பின், அதைக் கொள்ளுவேன் ; இல்லையெனில், அதை நிராகரித்துத் தள்ளுவேன். எனவே, எனது பகுத்தறிவு இட்டதுதான், என்னிடத்தில் கட்டளை. வைத்ததுதான் சட்டம். அப்பொழுது யான் கண்டதே காக்ஷியாயும், கொண்டதே கோலமாயும் இருந்தது. அதுசமயம் பகுத்தறிவென்ருல் எனக்குப் போதும், களிப்படைந்து, யான் துள்ளிப் பாய்ந்து விழுவேன் ; அதற்கேற்றதை ஆனந்தமாய் நம்பிக் கொள்வேன். எனவே, எனது பகுத்தறிவிற்கு மாற்றம் பேசுவோரைக் கண்டால் போதும், அவர்கள் உண்மையில் அறிஞர்களாய், கலாவல்லுனர்களாயிருப்பினும், அஞ்சாமல் அவர்களை யான் இழிச்சொற்களால் இடித்து, அவர்கள் நெஞ்சைப் புண்படுத்துவேன். பாபம் ! பாபம் !! அந்தோ பரிதாபம் !!! இவ்வாறு யான் அவர்கள் நெஞ்சைப் பிளக்கும்போது, எனக்குக் கொஞ்சமும் இரக்கமில்லாதிருந்தது தான் இப்பொழுது என்னை பிரமிக்கச் செய்கிறது. அதுசமயம் எனது பகுத்தறிவின் முதிர்ச்சியால், பகாப்பதத்தைக்கூட, சிலசமயங்களில், பகுத்துப் பார்க்க யான் முயன்றதுண்டு. அப்பொழுது எனது அறியாமையின்மீது எனக்குக் கொஞ்சமும் நாணம் ஏற்பட்டதே இல்லையென்ருல், அப்பெரியார்களை யான் புண்படச் செய்தபோது, யான் இரக்கமற்றிருந்ததில் ஆச்சரியம் என்னே ! பகுத்தறிவிற்கு இலக்கான மக்களில், யானுமொருவனுய்க் கருதப்படும்போது எவ்வாறு யான், பகுத்தறிவின் நம்பிக்கையற்றிருக்க முடியுமென்பது, அக்காலத்தில் யான் கொண்டிருந்த கொள்கையாகும். ஆனல் பகுத்தறிவென்ருல், எனது பகுத்தறிவுதான் எனக்குப் பயன்படக்கூடியதேயன்றி, மற்ருேரின் பகுத்தறிவால் எனக்காவதென்னே ! எனவே, எனது பகுத்தறிவின் மீதுதான் எனக்கு விசேஷமான நம்பிக்கை என் பகுத்தறிவிற்கு மாற்றமான எவரின் பகுத்தறிவையும் யான் இளமையில் ஏற்பதே இல்லை. இதனல் எனது பகுத்தறிவு, அநேகரை ஆத்திரமூட்டியும், அநேகரை அழுகச்செய்துமிருக்கின்றது. மேலும், பலரை என்னை விட்டு ஓட்டியும், சிலரை கூட்டியுமிருக்கின்றது. ஆகவே, என் பகுத்தறிவு செய்த வேலை, இவ்வளவு தானென்ரு நினைக்கின்றீர்கள் ? இல்லை ! இல்லை !! பக்தி நிறைந்த அனேக பெரியார்களை யான் பார்த்துப் பரிகசிக்கச் செய்ததும், மார்க்க ஞானம்படைத்த முதியோர்களைக் கண்டு எள்ளிநகை கொள்ளும்படி என்னைத் தூண்டிவிட்டதும், அந்தப்பகுத்தறிவேதான். மேலும் இவர்களின் குணம், கொள்கை, நடை, முறைகளைப்பார்த்து, பைத்தியக்கார பாட்டி மக்களாய்ப்பிறந்த நீங்கள் யாவருமா, பயித்தியக்காரர்களாயுதிக்கவேண்டும் என்றெண்ணி, என்னை அடிக்கடி சஞ்சலிக்கச் செய்துகொண்டிருந்ததுவும் அதே என்பகுத்தறிவுதான். மேலும் மதஞானம் படைத்தோர், கதிமோட்க்ஷம் பெறுவதற்கான நன்னடக்கையுடையார் என்று சொல்லப்படுவோர் யாவரும், சுத்தப் பயித்தியக்காரரும், பாமரமாக்களுமாவர் என்று, யான் கூறும்படி, என் பகுத்தறிவு தீர்ப்பளிக்கும்போதெல்லாம், எனக்கேற்படும் உற்சாகத்திற்கு ஓர் எல்லை இருந்ததே கிடையாது. என்னே ! என் பகுத்தறிவின் தீரம் !

எண்ணிலடங்காச் சாந்தமூர்த்திகளுக்கும், அநேக ஞானவான்களுக்கும், பயித்தியக்காரப் பட்டத்தை, பக்ஷபாதமின்றி பங்கிட்டுகொடுத்துக்கொண்டிருந்த எனது பகுத்தறிவு, என்னையும் சும்மாவிடவில்லை. அப்பகுத்தறிவு இத்துணை தூரம் முதிர்ச்சியடைவான் வேண்டி, எனது ஐம்பொறிகளின் ஆராய்ச்சியைக்கொண்டு அல்லும், பகலும், தட்டிக்கொடுத்திருந்த என்னையும் ஒரு சந்தர்ப்பத்தில் கண்பார்க்க ஆரம்பித்துவிட்டது என்றால், பயித்தியக்காரப் பட்டத்தில் யான் பங்கெடுத்துக் கொள்ளாமலிருப்பது எங்ஙனம்? ஆனால் இப்பாழும் பகுத்தறிவு, எனக்குப் பயித்தியக்காரப் பட்டத்தை வழங்கியதில், யான்கண்ட விந்தை என்னவெனில், யான் பிறருக்கு அப்பட்டத்தை சூட்டும்போது, அவர்கள் அதை ஏற்காமல் சுவாதீனத்தோடு நன்றாய் உண்டுடுத்தி உலவிக்கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டனர். என்னை யானே பயித்தியமென்று எண்ணிவிட்ட அச்சந்தர்ப்பத்தில், என்னால் ஒன்றும் செய்யமுடியாது, மூளைகலங்கியது போலும், கண் இருண்டுவிட்டதுபோலும், எனக்குத்தென்பட்டது. பொதுவாய் என்மனதில் அப்பொழுது ஒன்றும் தோன்றாமல்இருந்ததாகத்தான் நினைக்கின்றேன். அதுசமயம் என்னை நினைத்து நினைத்துப்பார்த்து, கடைசிவரை என் ஞாபகத்தில் வராமலேயே போய்விட்டேன் என்பது இப்பொழுதென் ஞாபகத்தில் வருகிறது. எனவே, என் பகுத்தறிவு, என்னை பயித்தியங்கொள்ளி என்று தீர்மானித்துவிட்டபோது, யானதை நம்பாமலிருப்ப தெங்ஙனம்? ஆரம்பத்தில் அதை நம்பித்தானிருந்தேன். நல்லவேளையாய், ஒரு பெரியாரின் உபதேசத்தைக் கேட்டு அதன் மீது கொண்டிருந்த நம்பிக்கையை மாற்றிக் கொண்டேன். இல்லையெனில், இன்னாள் வரை யான் பயித்தியமாய்த்தான் இருந்திருக்க நேரிடும்.

என்னில் இச்சம்பவம், எப்பொழுது நிகழ்ந்ததெனில், நீண்டகாலத்திற்கு முன் யான் இளங்காளையாய்த் துள்ளித் திரியும்போது, எனது சுயபதியிலேயே நடுத்தர "அறபி" க்கலையைக் கற்றுணர்ந்தேன். அதன்பின் உயர்தர கல்வி கற்பான் வேண்டி, வேலூர் பி. எஸ். எ. காலேஜை நாடிச்சென்றேன். அதற்கு முன் இத்துணை தூரப்பிரயாணம் செய்ததே கிடையாது. யான் ஏறிச்சென்ற புகை ரதம் வேலூர் கண்டோன்மெண்ட் என்னும் ஸ்டேஷனை, குறித்த நேரத்தில் வந்தடைந்தவுடன் கீழிறங்கி காளை பூட்டிய கூண்டு வண்டியிலேறி, காலேஜ் முன் வந்திறங்கினேன். அழகியதோர் பெரும்பள்ளி, காலேஜுக்கு முன்னால் என் கண்களைப் பறித்துக் கொண்டிருந்தது. அதில் நிறைந்து வருசைக் கிரமமாய் நின்று ஜமா அத்தாகத் தொழுது கொண்டிருந்தார்கள். இவர்கள் தொழுது கொண்டிருப்பதைப் பார்ப்பதே பொதுவாய், ஒரு பெரும் பக்தி உணர்ச்சியை உண்டுப்பண்ணக் கூடியதாய் இருந்தது. அவ்வரிசைகளின் இடை இடையே, நீண்ட அங்கிதரித்த சில பெரியார்கள் காணப்பட்டனர். குறிப்பாய் அன்னாரின் தோற்றம், அன்பு, இவைகள் அச்சமென்பனவற்றை என் மனதில் பதியும்படி செய்து கொண்டிருந்தது. அப்பெரியார்கள்தான், கலாசாலையின் ஆசிரிப்பெரியார்களாக இருத்தல் வேண்டும்; மற்றோர் மாணவர்களாய் இருக்கக் கூடுமென்றும் மதித்திக் கொண்டே, யானும் அவர்களோடு தொழுகையை நிறைவேற்றக் கருதி, "ஒளு"ச் செய்ய அதிவேகமாய் ஓடிச்சென்றபோது, நல்லவேளையாக யான் கீழே விழுந்து விடவில்லை. ஆனால் சுத்திசெய்து கொண்டு, ஈறக்காலால் அகன்றதோர் எட்டெடுத்து வைத்தபோது, வழுக்கிக் கீழே அடித்து விழுந்தேன். என்றாலும், தட்டுக் கெட்டு உடனே எழுந்து அப்பெரியார்களோடு தொழுகையை நிறைவேற்ற வேண்டுமென்னும் பக்தியால், திரும்பவும் ஓடி வந்து சேர்ந்தேன். என்ன கேழ்க்கின்றீர்கள்? இத்துணை பாடும்பட்டு, அப்பெரியார்கள் கூடவே தொழுது முடிக்கவேண்டு மென்னும் அன்பு கொண்டயான், ஓடிவந்து பார்த்தால், என்னே ஏமாற்றம்! அன்னவரனைவரும் கிழக்குநோக்கித் தொழுது கொண்டிருக்கக் கண்டேன்.

அவ்வளவுதான்! அவர்களின்மீது கொண்டிருந்த பக்திகளெல்லாம் பறந்துவிட்டது. ஆரம்பத்தில் நான், இதைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. பள்ளி கண்களைப் பறித்ததும், அப்பெரியார்களின் தோற்றம் மனதை அள்ளிக்கொண்டதுமே இதற்குக் காரணமாகும். யானோ எனது பகுத்தறிவிற்கு எப்பொழுதும் மாற்றஞ் செய்ததே இல்லை. என் செய்வது? இப்பொழுதுதான் அதற்கு மாறாய் அவர்கள் நோக்கித் தொழும் திசையை நோக்கித் தொழுது முடித்தேன். என்றாலும், அதன் பின், இந்த ஊருக்கு (வேலூருக்கு) "கிப்லா" எத்திசையிலிருக்கிறதென்று விசாரிக்கப் புகுந்

தேன். யான் எவரெவரிடத்திலெல்லாம் விசாரித்தேனே, அவர்கள் யாவரும், மேற்கில் என்றுதான் விடையளித்தனர். இதைக் கேட்டவுடன் எனக்குப் பிடித்தது பைத்தியம். கிழக்கை, மேற்கு என்றல்லவா எண்ணி இவர்கள் தொழுது வருகின்றனரென்று என் பகுத்தறிவு முடிவுகட்டி விட்டது. இதை அடக்கிக்கொண்டு சும்மாவிருக்க என்னால் முடியவில்லையாகையால், மெதுவாய் ஒரு மாணவரிடத்தில், இக்கருத்தை வெளியிட ஆரம்பித்தேன். இவ்வளவுதான் தாமதம், ஏ! பைத்தியமே!! என்கூட வாரும், சூரியனைக் காட்டுகின்றேனென்று என்னை அவர் அழைத்துச்சென்றார். நான் அவர்கூட போய்க்கொண்டிருக்கும் போதே, கிழக்கிலிருந்து மேற்குத் திசையாய் சூரியன் நடந்து கொண்டிருக்கிறதென்னும் வாக்குமூலத்தை, அவர் என்னிடத்திலிருந்து உறுதிப் பிரமாணத்தோடு வாங்கிக்கொண்டார். நாங்களிருவரும் நடந்துகொண்டே இவ்வூர் கோட்டை மைதானத்தை வந்தடைந்தோம். அதுபொழுது, எனது தோழர், சூரிய ஓட்டத்தை எனக்கு நன்றாய்க் காட்ட ஆரம்பித்ததால், யானே கவனித்துப் பார்த்து, அவர்கள் நோக்கித் தொழும் திசைக்கு நேராகவே அது ஓடிக்கொண்டிருப்பதைக் கண்கூடாய்க் கண்டு கொண்டேன். என்றாலும், எனது பகுத்தறிவு அதை ஏற்கவேயில்லையாகையால், இவ்வூரில் மேற்கிலிருந்து கிழக்குப்புறமாகவே சூரியன் சென்றுகொண்டிருப்பதாய் என் பகுத்தறிவு தீர்மானித்தது. எனவே, அன்னவர்கள் நோக்கித் தொழும் திசை கிழக்கென்பதை மாற்றி நினைக்கவும் முடியவில்லை; எனது பகுத்தறிவின் முதிர்ச்சியால் தோன்றிய இவ்வபிப்பிராயத்தை அத்தோழரிடம் சொல்லாமலிருக்கவும் என்னால் கூடவில்லை. ஆதலால், உண்மையிலேயே இச்சந்தர்ப்பத்தில் என்னை அவர்கள், சுத்தப் பைத்தியங்கொள்ளி எனவே தீர்மானித்துவிட்டனர். அதன்பின் அவர்கள் என்னோடு சம்பாஷிக்கும்போதெல்லாம், பைத்தியக்காரர்களோடு சம்பாஷணை செய்வதுபோலவேயிருந்தது. அதன் பின்னும், யான் சும்மாவிராது, திசை காட்டும் கருவியைத் தேடித் திரிந்து, வெகு பிரயாசையின் மீது அதைப் பெற்றேன். திசைகாட்டும் அக்கருவியாவது, எனது பகுத்தறிவின் கக்ஷியில் சேரக்கூடாதா? அதுவும் அவர்கள் கக்ஷியில்தான் சேர்ந்துகொண்டது. இத்துணை பெரியார்களையும், அறிஞர்களையும், சந்திர சூரியனையும் நம்பாமலிருந்த யான், பகுத்தறிவிற்கு மாற்றமாய், கேவலம் இத்திசை காட்டும் கருவியையா நம்பப்போகின்றேன்? ஆகவே, எனது பகுத்தறிவின் மீது தான் எனக்கு நம்பிக்கையேயன்றி, வேறு எந்த வஸ்துக்களின் மீதும் எனக்கு நம்பிக்கை கிடையாது. என்னே! என்னைப்பிடித்த பயித்தியம்?

இப்பொழுது யான், மனசாட்சிக்கு விரோதமாய், ஒவ்வொரு வேளையும் தொழுது கொண்டு வந்தது என் பகுத்தறிவுக்குப் பிடிக்கவில்லையாதலால், வந்துவிட்டது கோபம் அதற்கு, உடனே சுத்தப் பயித்தியக்காரன் என்னும் பட்டத்தை எனக்கே ஸ்திரப்படுத்திவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் யான் ஊணுறக்கமற்று, தன்னை மறந்து, தவித்துக்கொண்டிருந்தேன். யார் செய்த தவப்பயனோ, யான் தெருவழியே போய்க்கொண்டிருக்கும்பொழுது, ஒரு பெரியாரின் உபதேசத்தை தற்செயலாய்ச் செவிமடுக்க நேர்ந்தது. அவர் பிரசங்கித்தவைகளில், எனக்குப் பயனளித்த பொன் மொழி யாதெனில், "பகுத்தறிவு மட்டிலும் மக்கட்குப் போதிய பயனளிக்கத்தக்கதாயில்லை எனவே, மன்பதைகட்கு பகுத்தறிவைத் தந்தருளிய வல்ல இறைவன் வேதங்களையும் இறக்கிவைத்திருக்கிறான்" என்பதே. இவ்வுபதேசத்தை நான் கேட்டுணர்ந்த பின்புதான், பகுத்தறிவின் மீது கொண்டிருந்த விசேஷ நம்பிக்கையை யான் களைந்தேன். அத்துடன என்னைப்பிடித்திருந்த உன்மத்தமும் ஒழிந்தது.

பக்தர்காள்! பகுத்தறிவின்மீதே விசேஷ நம்பிக்கை கொண்டிருப்பவர் யாவரும், ஒரு காலத்தில் நாஸ்திகர்களாய் மாறிவிடுகின்றனர். மேலும், யாவரின் பகுத்தறிவும், நேர்மையான வழியிற் செல்லுவதற்கிடமுமில்லை. இதனாலேயே, அறிஞர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களில்தான், அபிப்பிராய பேதம் மலிந்து மிளிர்கின்றது. முன்னொரு காலத்தில், பகுத்தறிவு, பகுத்தறிவென்று பறை போட்டுக் கொண்டிருந்த சு. மாக்கள், இன்று நாஸ்திகர்களாய்த் திகழ்வது கண்கூடு. இந்நாஸ்திகர்களை வெறுப்பவர்களேபோன்று பாசாங்கு செய்யும்—முஸ்லிம் சு. ம-களெனத் தங்களுக்குமுன் பேர்வைத்துக்கொண்டிருந்த நந்தமிழ்நாட்டு க. கா-க்கள், இப்பொழுது, பகுத்தறிவு பறையை பலமாய் அறைய ஆரம்பித்திருக்கின்றனர்.

எம் முஸ்லிம் சோதரீர்! பகுத்தறிவின்மீது விசேஷ நம்பிக்கையை மூட்டிக்கொண்டிருக்கும் முஸ்லிம் சு. ம-களாம் இக்காதியானிக் கருப்பர்களின் மூலக்கொள்கை என்னவென்று நினைக்கின்றீர்கள்? நாஸ்திகமே, நாஸ்திகம். இவர்கள், தங்கள் முட்டாள்தனத்தை, பகுத்தறிவென்று கருதிய முழு மூடர்களாகும். மானிடன் சுயமே பகுத்தறிந்து, சத்தியம் அசத்தியம் ஆகியவை இன்னதென அறிந்துகொள்ளக் கூடிய நிலைமையிலில்லை யாதலால், எல்லாம் வல்ல இறைவனும்! 'அல்லாஹு சுபுஹான ஹுவத்த ஆலா' ஒவ்வொரு வேளைத் தொழுகையின் 'ரக்அத்தி' (பகுதியி)லும், "சீரான பாதையில் எங்களைச் செவ்வையாய் நடாத்துவாயாக" (5-1: அல்குர்ஆன்) என்று, தம்மை மக்கள் இறைஞ்சும்படி கற்பித்துள்ளான். ஒவ்வொருவரும், தம்தம் பகுத்தறிவால் நேர்மையான பாதையைக் கண்டுபிடித்துக்கொள்ளும் நிலைமையிலிருந்தால், மக்கட்கு பகுத்தறிவே போதுமன்றோ? தீர்க்கதரிசிகள், வேதங்கள், வேதியர்கள் வேண்டுமென்பதேயில்லை. மக்கட்கு பகுத்தறிவை ஈந்தருளிய பின்னும், எல்லாம் வல்ல இறைவன் நேரான பாதையைக் காட்டும்பொருட்டு, தீர்க்கதரிசிகளாம் 'அன்பியா'க்களை (அலை.) அனுப்பியதிலிருந்தும், வேதங்களை இறக்கியதிலிருந்தும், அவர்களின் (மக்களின்) பகுத்தறிவு போதிய நிலைமையில்லையெனப் புலனாகிறதல்லவா? எனவே, பகுத்தறிவிற்கும் ஒரு வழிகாட்டி—உரைகல்—இருந்தே தீரவேண்டும். ஆண்டவனின் உண்மைத் தூதராய் அனுப்பப்பெற்ற எமது ரட்சகர் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களும், அவர்களின் தோழர்களாம் ஸஹாபாக்களும், (ரலி.) வேதியர்களாம் இமாம்களும், (ரஹ்.) அவர்களைப் பின்பற்றிய அறிஞர்களாம், உலமாக்களுமே பகுத்தறிவுக்குச் சரியான வழிகாட்டிகளாகும். அல்லா(ஹ்)வின் திருமறையான அல்குர்ஆனும், நாயகத் திருவசனங்களான அஹாதீதுகளும், ஒற்றுமைத்த முடிவான "இஜ்மாஉ"வும், இவைகளுக்கிணங்கப் பெற்ற அபிப்பிராயங்களான இமாம்களின் "கியாசு"ம் பகுத்தறிவைப் பரிசோதித்தறிய, தகுந்த உரைகல்லுகளாம். எனவே, எவரின் பகுத்தறிவு குர்ஆன், ஹதீது, இஜ்மாஉ, கியாஸ் முதலியவற்றிற்கு நேர்பட்டிருக்கிறதோ, அதுவே சரியான பகுத்தறிவாகும். இவ்வித பகுத்தறிவுடையோரைப்பற்றியே, 'எவர்களின்மீது நீ அருட் சொரிந்திருக்கின்றாயோ, அவர்களின் வழியில் (எங்களை நடாத்துவாயாக), (6-1-அல்குர்ஆன்) என்று ஆண்டவன் அருளியிருக்கின்றான். இவ்வுரைகற்களுக்கு முரணாகும் பகுத்தறிவுடையோரைப் பற்றியும், வல்ல இறைவன், (உன்அருட் குடையின்கீழ் இருப்பவர்கள், உன்னால்) கோபிக்கப் பட்டவர்களன்று, மேலும் (அவர்கள்) வழிதவரியவர்களுமன்று. (7-1-அல்குர்ஆன்) என்று திருவுளம்பற்றியிருக்கிறான்.

சோதரீர்! பகுத்தறிவை நம்புங்கள்! ஆனால் அல்லா (ஹ்) ரஸூலையும், அவர்கள் காட்டிய நேரான சீர்பாதையாம் இஸ்லாத்தையும், அதன் சட்ட திட்டங்களையும், உங்கள் பகுத்தறிவு அப்படியே பச்சையாய் ஏற்றுக்கொள்கிறதாவென்று பாருங்கள்!! ஏற்றுக்கொண்டால், அது பகுத்தறிவேயாகும். இல்லையெனில், அது சு. ம, க. கா. களின் முட்டாள்தனமான பைத்தியமே பைத்தியம். முட்டாள் பகுத்தறிவே காதியானிப் பைத்தியம். ஹுஷ்யார்! ஹுஷ்யார்!! ஹுஷ்யார்!!!

சந்தா நேயர்கட்கு!

நம் அரும் மாசிகைக்கு, வருட ஆரம்பத்திலேயே சந்தாவை முன்பணமாக செலுத்த வேண்டியது முறையாக இருக்க, இதோடு 11 மாதங்களாகியும், உங்களிலநேகர், இதுவரை சந்தா செலுத்தாமலே இருக்கின்றீர்கள். வி. பி. செய்வதுகொண்டு பெருஞ் சிரமமும், வீண் செலவுமேற்படுகிறது. ஆதலால், நமது சந்தா நேயர்களில் இந்தியா, பர்மா, மலாய்நாடு இவ்விடங்களிலுள்ளவர்கள், நேரே நமது ஆபீசிற்கும், சிலோன் நேயர்கள் நமது பிரதிநிதியாய் சிலோன் விஜயஞ் செய்திருக்கும், மௌலவி S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் (220, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு) அவர்களிடமும், சிங்கை நேயர்கள், ஜனாப் M. முஹம்மது ஷரீப் சாஹிப் (439, நார்த் பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்) அவர்களிடமும், பினங்கு நேயர்கள், ஜனாப் N. K. முஹம்மது கௌஸ் சாஹிப் (113, சோலியாஸ்டீட், பினங்கு) அவர்களிடமும், தங்கள் சந்தாக்களைச் செலுத்திவிடுமாறு கோருகிறோம். இம்மாதக் கடைசிக்குள் சந்தா செலுத்தாமலிருப்பவர்களுக்கு, அடுத்த டிஸம்பர் மாத இதழ், வி. வி. மூலம் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முல்லாவும், காதியானியும்

(அபந்தி அவிர்வது)

நியாயப் பிரதேசத்திய சத்தியமா நகரின் கண், ஸுன்னத்து ஜமாஅத்து சித்தாந்த முடைய வாலிப ராவுத்தரொருவர் இருந்து வந்தார். ஒருநாள் காலையில் அவர், மார்க்க உபதேசமென்ன? மார்க்கப் புரட்டர்களின் மூலக் கொள்கைகள் யாது? என்பவைகளைக் கேட்டுத்தெரிந்து தெளிந்து வரலாமென்னும் நாட்டங்கொண்டு, தம் ஊரிலுள்ள கியாதி பெற்ற 'முல்லாசாஹிப்' ஒருவரின் சந்நிதானஞ் சென்று, 'அஸ்ஸலாமு அலைக்கும்' எனக் கூறியவராய், மிகப் பணிவுடன் உட்கார்ந்து, முல்லாஜீ அவர்களை நோக்கி,

ராவுத்தர் :—ஹஜ்ரத்! தற்காலத்தில், நம்மில் இரண்டொரு நபர்கள் முளைத்து, இவர்கள் சீர்திருத்தக்காரர், ஆராய்ச்சியாளர், விஞ்ஞானிகள், நவீன சாஸ்திரிகள் என தங்களைச் சொல்லிக்கொண்டு, இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாற்றமாக, ஏட்டிக்குப் போட்டியாய், கூறியும், எழுதியும் வருகின்றார்களே, இவர்களின் கொள்கைகளையும், அந்தரங்கக் கருத்துக்களையும் தெரிந்துகொள்ள அடியேன் ஆவல்கொண்டிருப்பதால், அவைகளை விவரமாகக் கூறவேண்டுமென, தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

முல்லாஜீ:—ஓ, ராவுத்தரே! நீர் சொல்வது போல், நமது நாட்டில் இரண்டொரு விஷநரப் பூண்டுகள் முளைத்து, இவ்வாறு பிரசாரஞ் செய்து வருகின்றார்களென்பது, சில வருடங்களாக எனக்கும் கேள்விதான். ஆதலால் அந்நர விஷமிகளின் மூலக் கருத்துக்களையும், கொள்கைகளையும் யான் நன்கு விவரிக்கின்றேன், கவனமாகக் கேட்பீராக.

(1) ஹிந்து மதத்தில், சுயமரியாதைக்காரர்களெனத் தங்களை அழைத்துக்கொள்வோரும், முஸ்லிம்களில், சீர்திருத்தக்காரர்களெனப் பெயர்வைத்திருப்போரும், ஒரே தீய நாஸ்தீகச் சதியாலோசனைக் கூட்டத்தாரின் இருவிஷக் கிளைகளேயாவர்.

(2) ஆதாரமாக, சில வருடத்திற்கு முன், செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டில், ஷ்டி இருமதத்தின் நாஸ்தீகர்களும்கூடி, ஏகோபமாக, உலகிலுள்ள சர்வ மதங்களையும் கண்டித்து சொற்பெருக்காற்றியதே போதிய சான்றாக இருக்கின்றது.

(3) ஷாத்தான் பிரம்ம வேடம்பூண்டது போல், சுயமரியாதைக்காரர்களும், ஆரம்பத்தில், தங்களே சீர்திருத்தக் காரர்களெனப் பறை சாற்றி, சில நவீன காளையர்களையும், நவநாகரீகப் பிரியப் பேர்வழிகளையும் தங்கள் வயப்படுத்தி, ஒருபோலி ஆதரவைப் பெற்றுக்கொண்டபின், தங்கள் அசல் நோக்கமான மதநிக்ரஹத்தி லிறங்கி, ஆரம்பத்தில் ஹிந்துமதத்தையும், அதன் பண்டிதர் பிராம்மணர்களையும் குறை கூறி, இழித்து ஏசல் மாலைகளைத் தொகுத்து வந்தனர். இவர்களுக்கு உடனே அம்மதவாதிகள் தக்க வாயாப்புக்கொடுத்து, எதிர்பிரசாரஞ் செய்யாது அசட்டையாக இருந்துவிட்டதால், ஷ்டி வேஷதாரச் சுயமரியாதையர், பின்னர் தெய்வத்தையும் எதிர்த்து, தெய்வநிக்ரஹமுஞ் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர்.

பாமரமக்களை ஏமாற்றி, அவர்கள் செய்து வரும் நாஸ்தீகப் போதனையினால், மதமில்லா நாஸ்தீகமானது, இக்கால் ஓர் மதமாக உருக்கொண்டு தாண்டவமாடி வருகின்றது.

(4) இதே நாஸ்தீக நோக்கத்தை மூலமாகக் கொண்டு, இவர்களின் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதினால், அதைப் பிரசாரஞ்செய்து நிறைவேற்றத் தடைக்கல்லாய் நிற்கும் பிராமணர், வேதியர், பண்டிதர்களை இவர்கள் எள்ளியும், வேத கிரந்தங்களென இந்துக்கள் கொண்டாடும் நூற்களை இவர்கள் கண்டித்தும், அவைகளை நாசஞ் செய்தும் வருவதோடு, தங்கள் நாஸ்திகக் கொள்கையை நிலைநாட்ட, இச்சதி கூட்டத்தார் பகீரதப் பிரயத்தனமும், பிரசாரமும் செய்து வருகின்றனரென்பது அங்கை நெல்லிக்கனியேயாகும்.

இவர்களைப் போல், முஸ்லிம்களிலும் இரண்டொருவர், இந்நாஸ்தீக சதிக்கூட்டத்தில் சேர்ந்துகொண்டு, தங்களை சீர்திருத்தக்காரர்களெனவும், நவீன ஆராய்ச்சிக்கழகத்தாரென

வும் பெயர் வைத்துக்கொண்டு, இஸ்லாத்தின் மூலக் கொள்கைகளை நன்கறியாத சில பாமர முஸ்லிம் வாலிபர்களை ஏமாற்றி, எவ்வாறு எழுதினுல் அவர்கள் மனங்கவருமோ அவ்வாறு எழுதியும், பிரசாரஞ் செய்தும்வரும், சைத்தான் உருக்கொண்ட இவர்கள் வலையில், அவ்வாலிபர்கள் அகப்பட்டுக்கொண்டபின், இவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு, இஸ்லாம் மதத்தையும், மௌலவிமார், முல்லாக்களையும்தாக்கி, மதத்தைக் கண்டனஞ்செய்து வருகின்றனர். இக்குழாத்தினரின் சூட்சிகளை முஸ்லிம்கள் ஆரம்பத்திலே அறிந்து, அஃதைத் தடுத்து எதிர்பிரசாரஞ் செய்ய அஜாக்கிரதை பூண்டிருந்ததால், இக்கால் வேதத்தையும், வேத கிரந்தங்களையும் அவர்கள் கண்டித்தும், வேதமோதிய விற்பன்னர்களான முல்லாக்களையும், மௌலவிமார்களையும் இச்சகம்பாடிகள், கூழுக்குப்பாடிகள், மூட முல்லாக்கள், தண்டக் குடிராமர்கள், திண்ணை தூங்கிகள், ஆண்டிகள், பண்டாரங்கள், யாசகப் பயிற்சிசாலை மாணுக்கர்கள் என பலவாறு ஆற்ருமையும், அசூயையும் நிறைந்த அழுக்காறுப்பிரவாகத்தால் புழுக்கமுற்று நொந்து அழுகிப்போய், மமதையும், மமகாரமும், பூண்ட புழுத்த அம்மனத்தினரின் எழுதுகோலானது எழுதியும், பிரகடனஞ் செய்துவந்ததும் போதாது, இக்கால், வேதக்கர்த்தாவான அல்லாஹ்வையும், மனோவாக்குக் கெட்டாத அவனின் குத்ரத் (பரம சக்தி) யையும், ஆட்சேபித்து, தெய்வ நிக்ரஹஞ் செய்து, இன்னவர் நாஸ்தீகத்தை மறைமுகமாக எழுதிப் பிரசாரஞ்செய்து வருகின்றனர்.

இந்நாஸ்திக வீச்சமானது, பாமரமுஸ்லிம் வாலிபர்கள் மனத்தில் ஊடுருவி, அவர்கள் அதன் மயத்திலானபின், இனி பகிரங்கமாகவும், நாஸ்தீகப் பிரசாரஞ் செய்வதற்கு இவர்கள் பின்வாங்கமாட்டாரென்பது திண்ணம் என, ராவுத்தரே உங்களுக்கு யான் ஞாபகமூட்டுகின்றேன்.

(5) இவர்களின் நாஸ்திகப் பிரசாரத்தில் மறைமுகமாகப் பக்குவமடையப்பெற்ற சில வாலிபர்களை யான் பிரத்தியட்சப் பிரமாணமாக எம்பிக்கின்றேன். உதாரணமாக, ஷி நாஸ்தீக குருவின் வலது கரம் போன்று, கொழும்பு நகரிலிருந்து 13 வருடங்களாய்ப் புணைப்பெயர் பூண்டு கட்டுரைகள் எழுதிவந்ததும், இக்கால் சீர்திருத்தக்கார குருவின் நாஸ்தீக சக்தியானது ஷி கொழும்பானை இயக்கி, ஷியானில் குடிகொண்ட, பின் புரட்சி பகுத்தறிவு என்ற பத்திரிகைகளில் ஆஸ்தீகக் கைச்சாத்திட்டு நாஸ்தீகக் குப்பையுரையை எழுதிவந்த I. M. இப்ருஹீம் என்பார், சீர்திருத்தக்காரர்கள் என தங்களைச் சொல்லிக்கொள்ளும் காணு, காவன்ணு களின் மாணுக்கரே என, யான் உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றேன்.

இவரைப்போன்ற இன்னும் இரண்டொரு வாலிபர்கள், இவர்களின் நாஸ்த்தீ கத்தில் மயங்கி, பக்குவமடையுந் தருவாயிலிருந்து வருகின்றனர். இவர்களும் அரைப்போல் பகுத்தறிவில் இனி கட்டுரைகள் எழுத முற்படுவார்களென்பது திண்ணம்.

நமது நாட்டு பாமர முஸ்லிம் வாலிபர்களை, இவ்வாறு நாஸ்தீகர்களாகச் செய்து விடும் நோக்கமேதான் சீர்திருத்தக்காரர், சைன்ஸ் வாதிகள் எனத் தங்களைச் சொல்லி பறைசாற்றித் திரியும் சீர்கெடுக்கும் பேர்வழிகளின் முழுக்கவனமும் தூக்கத்திலும் இருந்து வருகின்றதென்பதை எச்சறிப்பதோடு, ஷியார்களுக்கேற்பட்டிருக்கும், வீண் செருக்கு, மமதை, மமகாரம் இவைகளை, அன்னோரின் சிரசை விட்டு மிறக்க நமது நாட்டு முஸ்லிம்களனைவரும் பிரயத்தனப் பட்டாலும் ஷியார்களின் மமதை, கிழே இறங்க சம்மதியாவென்பதை ராவுத்தரே உங்களுக்கு, யான் ஞாபகமூட்டுகின்றேன். ஆனல் சாட்சாத் பரபிரமமும் சர்வசக்தனுமான ஏக அல்லாஹ் (ஜல்) ஒருவன் நாடுவானுகில், நம்ரூத், பிர்ஔன், ஷத்தாத், கன்ஆ பட்டணத்து "அப்ரஹா" அபூஜஹ்லு, ஷைபா, உத்பா, போன்றோர்களின் செருக்கு, மமதையை இறக்கியது போலும், வல்லோனின் சக்தியை மறந்து, தமது சக்தியென்னும் மதுவால் போதையுற்று, "நம்போன்ருேர் இக் கப்பலில் யாத்திரை செய்யும்போது, இக்கப்பலுக்கு எத்தகைய ஹானியும் நேரமாட்டாது" எனக்கூறிக்கொண்டு, R. 101 என்ற ஆகாயக் கப்பலில் ஏறிச்சென்ற ஆகாயப்படை மந்திரியின் மமதையைக் கண்டித்தது போலும், மமகாரமூர்க்கத்தால் முல்லாக்களுக்கு ஏசல்மாலைகளைத் தொகுத்து எழுதிவரும் இவர்களின் மமதையையும் செருக்கையும் இறக்க, ஈஸா (அலைஹி) அவர்களை வானத்தில் உயர்த்திக் கொண்ட வல்லோனுக்கு சக்தி உண்டென்பது உண்மை.

எனவே, ஹிந்து சுயமரியாதை இயக்கத்தின் நாஸ்திகப் புருஷர்களைப் போன்று, முஸ்லிம் சீர்திருத்தக்காரர்களெனப் பறையிடும் இவ் வியக்கத் தலைவரும் இவரின் சகாக்களும் நாஸ் தீகரேயாவர்.

ராவுத்தர் :—ஹஜ்ரத்! தாங்கள் மேற்படி யாரின் கொள்கைகளை மிகப் பொருத்தமாயும், சவிஸ்தாரமாகவும், பிரத்தியட்சமாகவும், உண்மை விஷயங்களை நன்கு விளக்கிக் கூறி விட்டீர்களாதலின், மேற்படியார்களை ஆழ்ந்து நோக்குமிடத்து, தாங்கள் கூறும் விஷயங்க ளுக்கு அன்னோர் முற்றும் பொருத்தமானவர்க ளாகவே இருக்கின்றார்களெனக் கூசாது கூற லாம்.

முல்லாஜீ :—ராவுத்தரே! ஷை குழாத்தின ரின் மூலக் கொள்கைகளும், லட்சணங்களும் மாத்திரமே இப்போது சுருக்கமாக உமக்கு விளக்கிக் காட்டப்பட்டதேயல்லாமல், ஷை ஆசாமிகளின் சூழ்ச்சிகளையும், விஷமப் பிரசா ரங்களையும், தங்கள் கட்சிக்கு ஆள்சேர்க்கும் அவர்களின் குயுக்திகளையும் யான் கூறுவே ணுகில் அம்மம்ம! நீர் பிரமித்து விடுவீர் என் பது நிச்சயம்.

ராவுத்தர் :—ஹஜ்ரத்! ஷை நவநாகரீக நாஸ்தீக கோஷ்டியாரின் சூழ்ச்சிகளையும், விஷ மப் பிரசாரங்களையும் அடியேனுக்கு சற்று விவரிக்குமாறு கோருகின்றேனென, தயவுடன் கோரிக்கொண்டிருக்கும்போது, இவர்கள் சம்பா ஷித்துகொண்டிருக்கும் இடத்தை நோக்கி ஓர் ஆசாமி வந்துகொண்டிருந்தார். அவர் சமீபித்து நெருங்கிவரும்போது, வந்தவரின் நடை கொஞ்சம் துரிதமாகயிருந்தது. வருப வரை நானும், முல்லாஜீயும் அறியாவிட்டா லும், அவரை முல்லாஜீ, இன்னாரென அறிந் திருப்பாரென, முல்லாஜீயின் முகக் குறியால் நான் தெரிந்துகொண்டேன். ஆனால் வருபவர் தூரத்திலிருந்தே 'அஸ்ஸலாமு அலைக்கும்' எனச் சொல்லிக்கொண்டு, விரைவாக வந்து, முல்லா ஜீக்கு அடிபணிந்து, வெகு பக்தியோடு, சற்று தூரத்தில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தார். ஆனால் அவரின் முகத்தில் பதஷ்டக் குறிகள் தோன்றப்பட்டவராகக் காணப்பட்டார்.

முல்லாஜீ :—வந்தவரை நோக்கி ஓ! காதி யானி சாயபே! எங்கெவே!! வெகுநாட்க ளாகக் காணோம், உம்மைப்பார்த்து 15, 16, வருடங்களிருக்கலாமே!!!

காதியானி .—இருக்கலாம் ஹஜ்ரத்.

முல்லாஜீ :—இத்தனை ஆண்டுக்களாக எங் கேவே போயிருந்தீர்?

காதியானி .—அதை என் ஹஜ்ரத் கேட்கின் றீர்கள். அஃது பெரிய விருத்தாந்தமாகும். அதைக்கூற ஆரம்பித்தால் "நறையூர் நைட் டை"ப் படித்துக் கேட்பதுபோல அத்தணை சிரமமாகயிருக்கும். ஹஜ்ரத்! (பதஷ்டமுடைய வராய்) அதிருக்கட்டும், பின்னால் கூறுகிறேன். இதுபொழுது முக்கியதோர் விஷய மிருக் கிறது. அதாவது, சென்றவாரத்தின் ஓரிர வில், யான் சொர்ப்பனமொன்று கண்டேன்; அவை இத்தனைநாட்களாய் எம்மை ரொம்ப வாட்டி வருகின்றது; அதை நான் சொல்லு கின்றேன் அதன் தஅபீரை (தாத்பரியத்தை)க் கூறி, எம்மைத்தேற்றுதவரை, எமது மனம் சமாதானமடையாது கலங்கி நிற்குமென்பதை, ஹஜ்ரத்தவர்களின் சன்னிதியில் யான் வணக்க மாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முல்லாஜீ :—ஓ! காதியானியே! என்ன வே நீர், இவ்வளவு பதஷ்டப்படுகிறீர்? என்ன சொர்ப்பனந்தான் கண்டீர் சொல்லுமே.

காதியானி :—யான் நவீனக் கொள்கையை யுடையவனென்பதும், ஈஸா (அலை) அவர்கள் வானத்தின் மீது உயர்த்தப்படவில்லையெனவும், நமது நபிகளின் மிஃராஜ் ஸ்தூலத்தோடு நடை பெறவில்லையெனவும், மத்திய உலகின் சம்ப வங்களும், மறுமைநாளின் நடவடிக்கைகளும், சுவன, நரகமெனக் கூறப்படுபவைகள் யாவும் உவமதரிசனத்தோற்றப் பூச்சாண்டி எனவு மே யான் விசுவாசங்கொண்டு, அதைப்பிரசார மும் செய்து வருகிறேனென்பது திடப் பிரமாண மாகத் தாங்கள் அறிந்த விஷய மாகும். மேலும், 'வஹி'யின் வாயல் இறுதி நாள்வரை திறந்தே இருக்குமென்றும், எமக் கும் 'வஹி' வரும்வழக்கமென்றும், எமக்கு 'வஹி' வரும் அறிகுறி தோன்றினால், யான் உடனே ஆனைமலைமீது ஏறி வஹியைப் பெற்றுவந்து, அதை பொதுமக்களுக்குக் கூறி யும், எழுதியும், பிரசாரஞ் செய்து, பொது ஜனங்களை ஏமாற்றிவருவது எமக்கு சகஜமென் பதும் ஹஜ்ரத்துக்கு மறைந்த விஷயமன்று. இந்நிலைமையில், கடந்தவாரத்தின் ஓர் நாளிர வில், யான் கடிமணம் புரிந்த கட்டழகியோடு கனவுல்லாசமாக சயனித்திருக்குங்கால் கண் டனனொரு கனவு............"

முல்லாஜீ :—ஏ! ஏ!! காதியானிப் பயலே!!! என்னடா அகராதியில் விடுகிறாய்? நீ இங்கு

கனவிற்கு தஅபீர் கேட்க வந்தாயா? அல்லது அகராதி படிக்க வந்தனையோ? எம்மிடத்திலுமா உமது அகராதி குண்டை விடுகின்றாய்? உனக்கு மட்டிலுந்தான் அகராதி தெரியுமென நினைத்தாயோ? "யான் இம்மாபிரபஞ்ச வித்யா வியாகரணக் கழக மண்டலத்திற்கோர் அதிபீடாதி சற்குரு சபாபதி சந்நிதானமாய் விளங்குகின்றனம் என்றுணர்க."

காதியானி:—என்ன! ஹஜ்ரத்!! கொஞ்சம் இலக்கணமாக யான் பேசப்பழகுவதில் தாங்கள் அதட்டினீர்களே? தாங்கள் மட்டிலும் ஸ்டீமர் புகை போவதுபோல் கப, கபா, கப, கபா வென அகராதியிலே விடுகின்றீர்களே,

முல்லாஜீ:—ஏ, காவன்னா! நீ பெரிய அகராவிதிக்காரனென்பதையும், உமது குருநாதரான தென்மண்டல காதியானியிடத்தில், முல்லாக்களில் சிலர் சேர்ந்துகொண்டு அவரைச் சந்தித்துப்பேச விரும்பியபோது, உங்கள் குருநாதர் வீட்டின் அந்தப்புரத்திலிருந்து கொண்டு "நாகூர் மினாராக்களுக்கு வெள்ளையடித்தாற் போன்ற நீண்ட அங்கிகளையணிந்த முல்லாக்களுக்கு இங்கு யாதொரு ஜோலியுமில்லையென்றுணர்க"வென ஓர் தாளில் எழுதி தமது மாணாக்கர் ஒருவரிடம் கொடுத்து, முல்லாக்களிடம் காண்பித்து அவர்களை வெளியே போகச்சொன்ன உமது குருநாதரின் அகராவிதியையும் யான் அறிவேன் சாயபே, உமது சொர்ப்பனத்தைச் சொல்லும். (இதற்கிடையில், இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ராவுத்தருக்கு கோபம் வந்துவிட்டது.)

ராவுத்தர்:—ஓய் காதியானி! என்னங்காணு நீர் அதிகம் படித்தவராயிருக்கிறீர்? நான் வெகுதூரமிருந்துவந்து எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறேன்; நீர் சைத்தானைப்போல் இடையில்வந்து, குண்டு சட்டியில் குதிரை ஓட்டி, அகராதி பேசி நேரத்தைக் கழிக்கின்றீரே! உம்மைத் தவிர்த்து உலகில் எவருக்கும் இலக்கணமும், அகராதியும் தெரியாதென்ற மனப்பால் குடித்தேதான் நீர் இங்ஙனம் பேசுகின்றீர்போலும். ஹஜ்ரத் அவர்களிடத்தில் எந்த ஒழுங்கோடு பேச வேண்டுமோ அதை விடுத்து, தடித்தனமாக அகராதியிலே பேசுகின்றீரே?

காவன்னா:—(கொஞ்சம் ரப்போடு) தாங்களிடம் நான் பேசவில்லை, தாங்கள் எம்மைக் கண்டிக்க என்ன உரிமையிருக்கிறது. ஹஜ்ரத்தவர்களிடம்தான் நான் பேசுகிறேன், எம்மை கண்டிக்கவும், ஏசவும், செருப்பாலடிக்கவும், முல்லாஜீ அவர்களுக்கே உரிமையுண்டு. தாங்கள் இடையில் குறுக்கிடாது மௌனமாகயிருக்கவேண்டும். தங்களுக்கும் நமக்கும் பேச்சுக்கிடையாது.

முல்லாஜீ:—ஏ! காதியானி! இந்த ராவுத்தரை உமக்குத் தெரியுமா? இவர் இவ்வூர் நாட்டாண்மைக்காரராச்சுதே. இவருடன் இம்மாதிரியெல்லாம் எதிர்த்து ரப்பாகப் பேசினீரானால், நாளை ஒருகாலத்தில் உங்களுக்கும் ஹிஸ்புல்லாக்களுக்கும் சச்சரவுகள் வந்துவிட்டால், நீங்கள் ஊரின் நாட்டாண்மைக்காரர், பெரிய மனுஷாள்கள் பாதங்களைப்பிடித்து, கோ, கோவென அலறி அழுது நீலிக்கண்ணீர் வடித்துப் பாசாங்கு செய்யும் வழமை உங்களுக்கு உண்டே, அப்போது இந்த நாட்டாண்மைக்கார ராவுத்தரிடம் நீர் சென்றால் உம்மை இவர் கிட்டவர வேண்டாமென உதைத்துத் தள்ளிவிடுவாரே, அப்போது நீர் என்னவே செய்வீர்! ஆகையால் நீர் நாட்டாண்மைக்கார இந்த ராவுத்தரிடத்தில் சுணங்காது மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்.

காவன்னா:—ஆம், வாஸ்தவந்தான் ஹஜ்ரத்! அவ்வித சமயமும், நேரமும் எங்களுக்கு அடிக்கடி எதேஷ்டமாக ஏற்படுவது சகஜமாகயிருக்கிறது. அவ்வித சமயங்களில் ஊர் நாட்டாண்மைக்காரர், தலைவர் முதலிய சொற்மூப்புக்காரர்களின் கால்களைப் பிடித்து, நாங்கள் அழுது, நீலிக்கண்ணீர் வடித்து அவர்களை ஏமாற்றி, அவர்கள் மனம் இறங்கியபோது, எங்கள் அபாய சமயங்களை ஒருவாறு சமாளித்துக்கொள்ள வேண்டுமென்பது, எங்கள் குருநாதருடைய போதனையும் கட்டளையுமாகும். அக்கட்டளையை 'நறையூர் நைட்'டில் தாங்களும் பார்க்கலாம். அவ்வாறு நாங்கள் நீலிக்கண்ணீர் வடித்து, ஊர் நாட்டாண்மைக்காரர்களை எங்கள் அனுதாபிகளாகச் செய்துகொள்ளாவிடில், ஹிஸ்புல்லாக்களையும், முல்லாக்களையும் நாங்கள் திட்டிவரும் திட்டுக்கு, அவர்கள் எங்களை ஒரே அமுக்காக அமுக்கி மாட்டிவைத்து விடுவார்கள் ஹஜ்ரத்! ஆனதால் தங்கள் கட்டளைப்படியே இதோ நடக்கின்றேன். நாட்டாண்மைக்கார ராவுத்தர் அவர்களே! எஜமானே!! அடியேனை க்ஷமிக்கவேண்டும்!!!

ராவுத்தர்:—என்ன ஹஜ்ரத்! இந்த யமலோக ஜகஜ்ஜாலப் பேர்வழியை இடையில்

போட்டு ஆட்டி நேரத்தை செலவிடுகின்றீர்களே! காதியானியின் கனவைக் கேட்டு அவரைச் சீக்கிரம் அனுப்பிவிடும்படி கோருகிறேன்.

முல்லாஜீ :—ராவுத்தர் நாழியாகிறதென்கிறார். உமது கனவை சுணங்காது கூறும் காதியானியே!

காவன்ரு :—கனவு கண்ட இரவு யான் நித்திரை போயிருந்தபோது, நள்ளிரவில் மத்திய உலகில் யான் இருப்பதுபோலும், அங்கு கப்ரில் வெகு சகிக்கொணுத் துயரும், வேதனையுமடைந்திருந்த எம்மை எழுப்பி விலங்குகளால் பிணைத்து நியாயத் தீர்ப்பளிக்கும் கூட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டதுபோலும் ஆரம்பத்தில் கண்டேன்.

முல்லாஜீ :—ஏ! கா.......!! நீரும் உம்மைச்சார்ந்த சில வால்பிடிக்கிகளும் சொல்லிச் சலப்பிக்கொண்டிருந்தது போல், மத்திய உலகும், அதில்நிகழ்ந்தவைகள் யாவும் வெறும் ஊமை தரிசனத்தோற்றமாகத் தானிருந்ததா? அல்லது என் போன்ற முல்லாக்களும், உலமாக்களும், உபதேசித்து வந்ததுபோல், அவைகள் மெய்யாகவே, இவ்வுலகில் நீர் செய்தவைகளுக்கு, தக்க தண்டனையின் நமூனுவாக நீர் அனுபவிக்க நேர்ந்ததோ?

காதியானி :— ஹஜ்ராத்! அம்மத்திய உலகை எமக்கு ஞாபக மூட்டாதீர்கள். அதில் நான் பட்ட வேதனைகளும் அடிகளும் இப்போது என் நினைவுக்கு வரும்போது என் மனம் கலங்குகின்றது, அதில் விஷஜந்துக்களின் கடிகளானது எனக்கு நன்கு புத்தி கற்பித்து எம்மை தற்போது புதுச்சிருஷ்டியாகச் செய்துவிட்டன; தாங்கள் அதை ஞாபகமூட்டவே எனது மனமும், மூளையும் கலங்கி, நாவும் தாக வரட்சி எடுத்துவிட்டது; என் நேத்திரங்கள் இருண்டுவருகின்றன; தாங்கள் தயவுபுரிந்து அல்லாஹ்விற்காக ஸலவாத்துச் சொல்லி ஓதி, சீக்கிரம் என் முகத்தில் ஊதுங்கள் ஹஜ்ரேத், இன்றேல் நான் தலைக்குப்புற கீழே விழுந்துவிடுவேன்.

முல்லாஜீ :—ஏ! கானு, காவன்ரு! அல்லாஹ்வின் கற்பவிளையாலேற்பட்ட வினையானது, அவனின் திரு வாக்கியங்களின் மகத்துவத்தாலும், அவனது ஹபீபின்மீது ஸலவாத்தோதும் பரக்கத்தாலும், அவை நீங்கிவிட ஹக்கன் உதவிபுரிய வேண்டுமென மனத்தில் கோரிக்கொண்டு, திருக்குர்ஆன் ஆயத்துகளையும், ஸலவாத்துகளையும், நோயாளிகளுக்கு ஓதி ஊதிவரும் எங்களை, சில வருடங்களுக்கு முன்பெல்லாம் எள்ளி நின்று குறுநகை புரிவீர்களே! இப்போது என்னுவே நீர், ஸலவாத்து ஓதி முகத்தில் ஊதச் சொல்கிறீர், என்னே புதுமை!

காவன்ரு:—நானும் எமது சகாக்களும், முன் தாங்கள் சொல்வது போலவே, தங்களைப்போன்ற முல்லாஜீகளையும், உலகமாக்களையும் இவ்வாறெல்லாம் சொல்லி ஏமாற்றி மிரட்டி வந்ததோடு அல்லாஹ்வைப் பரிகசித்தும், இயற்கையென்னும் நாயனை வணங்கியும், அல்லாஹ்வின் பரமசக்திகளை எள்ளி நகையாடியும் வந்ததும் யதார்த்தமே. ஆனால், யான் கனவு கண்ட நிமிஷத்திலிருந்து, எம்மிடம் குடிகொண்டிருந்த மமதை, கௌர்வம், மமகாரப் போதைகளெல்லாம் பகலைக்கண்ட இரவு போல் பறந்தோடிவிட்டன. எனவே, தற்சமயந்தான் என்புத்தி சுவாதீனமடைந்து, எம்மையாட்டிவந்தகுதர்க்கவாதப் பைசாசமானது விலகிப்போய், யான் தெளிவு பெற்றேன். அது முதல் ஒவ்வொரு வினடியிலும் யான் அல்லாஹ்வையும், அவ்வின் அபாரகுத்ரத்துகளையும், ஸ்தோத்திரஞ் செய்தும் தியானித்தும், சதா ஸலவாத்தென்னும், மோட்ச வாக்கியங்களை ஜெபித்துக் கொண்டும் வருகின்றேன் ஹஜ்ராத்!

முல்லாஜீ:—இவ்வாறு மமதை, போதை கொண்டு, அல்லாஹ்வின் அபார சக்தியைப் பரிகசித்தும், உலகோரை ஏமாற்றியும் வந்தபின், அப் போதையினின்று தெளிவு பெற்று உண்மையை உணர்ந்து, தாம் தவருகக்கொண்டிருந்த சித்தாந்தத்தை நிந்தித்து நிற்பதற்கு தாரணமாயுள்ள கதை யொன்று சொல்கின்றேன்கேளும்.

"ஓர் நாள் நள்ளிரவில், ஒரு எலியானது அங்கு மிங்குமோடித் திரிந்து, ஓர் கற்குடத்தண்டை சென்று, அக்குடத்தின்மீதேறி அதன் வாயில் உலாவிவரும்போது, அஜாக்கிறதையால் அவ்வெலியானது தடுமாறி, அக்குடத்தினுள் விழ, அதினுள்ளிருந்த கள்ளின் ஓர் சிறிய துளியானது, அவ்வெலியாரின் வாயிற்குள் சென்று வயிற்றில் போய்விட்டது. உடனே எலியானது அந்தக் கள்ளில் நீந்தி, ஒருவாறு குடத்தின் வாயில்மீதேறி உட்கார்ந்து கொண்டது. ஆனால் எலியின் வயிற்றுக்குள் சென்றிருந்த ஒரு துளி மதுவின் போதையானது, அதன் தலைக்கேறி, மண்டைக்

கொண்டதால் குடத்தின் வாயிலிலிருந்து கொண்டு அப் போதைகொண்ட எலியனர், 'எம்மை மிகைப்போர் எவரே உளர்; யான் இக்காலத்தின் ராஜேந்திரனுவேன்; எங்கள் விரோதியான பூனையாரும் இப்போது என் முன் வருவாராகில் ஒரே அடியாக அடித்து, அவரைக் கிறிக் கிழித்துப் புசித்துவிடுவேனெனவும், தமக்கு நிகர் உலகில் எவருமில்லை எனவும் நினைத்து, ஆங்காரமாக பலவாறு கர்ஜித்துக்கொண்டு நிற்குஞ் சமயம், அங்கு உலாவி வந்த ஓர் பூனையானது இதன் போதை கர்ஜனையைக் கேட்டு, தன் மனதில் நகையாடி, வெகு கொடூரத்தோடு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவ்வெலியின் வயிற்றை கவ்விப் பிடித்துக்கொண்டது. அதுபொழுது எலியின் வயிற்றிலிருந்த சிறு துளி மதுவானது பூனையின் பிடியால் வெளியாகிவிட்டது. வயிற்றிலிருந்த மது வெளியாகி, போதையும் நீங்கிப் போனபின், தான் ஓர் கேவலமான எலியேயெனவும், தாம் புலம்பியதும், நினைத்திருந்ததும் அம் மதுபோதையின் காரணமே எனவும் உணர்ந்து, தனது போதை மமதையால் இவ்வாறு பூனையின் கையில் அகப்பட்டுக்கொள்ள நேர்ந்ததெனவும் உன்னி பெருந்துயரடைய நேர்ந்ததுபோல், உங்கள் குழாத்தினரின் குருவானவர் ஏதோ ஒரு தேச பாஷையைக் கற்று, தாம் உத்தியோக நாற்காலியில் இருந்ததொன்றுதொட்டு, அப்பாஷா போதையானது அவருக்கு மண்டை கொண்டுவிட, அவர் மமதை, மமகார, மனப்புளுக்கு உடையவராய் தோன்றப்பட்டு, எமக்கு நிகரானோர் இந்நாட்டில், எந்நாட்டில் எவ்வையகத்திலுமுண்டோ? மதக் கலை பயின்று எளிய ஆடை அணியும் முல்லாக்களும், நாமும் சமமாகுவோமோ? அவர்கள் சொல்வதையேனும் யான் ஒப்புக்கொள்ள முடியுமா? எமது உத்தியோக அந்தஸ்தென்ன? எமது பரநாட்டு யாத்திரையின் மதிப்பென்னை? யான் இவர்கள் சொல்வதை ஒப்புக்கொள்வது அழகாகுமா? இவர்கள் சொல்வதை ஒப்பிக்கொண்டு, அதையே யான் எழுதுவேனுகில், எமக்கும் எமது எழுத்திற்கும் என்ன மதிப்பிருக்கிறது, இவ்வைதீகர்கள் சொல்வதின்மீது விசுவாசங்கொண்டு அஃதை யான் ஒப்புக்கொண்டால், எமது பரதேச யாத்திரையின் மதிப்பும், புறபாஷைகற்ற அந்தஸ்தும் அடியோடு மடிந்துவிடாதா? வென்னும் மமதைபோதையால், அல்லாஹ்வை லட்சியஞ் செய்யாது "எமக்கு நிகர் இவ்வையகத்திலுண்டோ? என போதை மேலிட்டால் பிதற்றித் திரியும் இம்மமதாகர எலியனுரை, ஹிஸ்புல்லா என்னும் பூனையார் வந்து கவ்விப் பிடிக்கும்போதுதான் இவரின் மததை, மமகார போதைகள் நீங்கி தெளிவபெற்று, தமக்கேற்பட்டிருந்த செருக்காலும், எழுதவும் பேசவும் அமைந்திருந்த வன்மையாலும், போதை கொண்டு தூயமனம்படைத்த முல்லாக்களையும்,பாமரபொதுமக்களையும் ஏமாற்றி வந்ததற்குத்தகுந்த சிட்சை அனுபவிக்கக் கூடிய காலம் வந்துவிட்டதெனத்தெரிந்து, தாம் ஏமாறிச் செய்த துர்ப்பிரகடனத்தையும் உண்ணியும், இனி தமக்கு என்ன சிட்சை கிடைக்கப் போகிறதோவென ஆராத்துயர்கொண்டு கரம் பிசைந்து நிற்பார்.

காவல்ஞு:—சதக்த, யா ஷெய்கு முல்லா (தாங்கள் உண்மையே சொன்னீர்கள்) என காதியானி, நன்மனத்தோடு கூறிக்கொண்டிருக்கும்போது, தந்திப்பியோனொருவன், தந்தியொன்று கொண்டுவந்து காதியானி சாயபிடம் கொடுத்தான். அத்தந்தியை காவன்ஞு உடைத்துப்பார்க்கும்போது, கீழ்வருமாறு அதில் வரையப் பட்டிருந்தது.

"திருச்சி, திருநெல்வேலி, மதுரை, ஆகிய இம்மூன்று ஜில்லாக்களுக்கும், ஹிஸ்புல்லாக்கள் டெபுடேஷன் சென்று பிரசாரஞ் செய்ய தீர்மானித்திருப்பதைத் தெரிந்து, அவர்களின் டெபுடேஷன் ஷை ஜில்லாக்களுக்குப் பிரயாணிப்பதற்கு முன், நமது நாகரீக பாராயண மு.........வை அந்த ஜில்லாக்களுக்கு அனுப்பி, நாங்களும், ஹி.........களும் சமாதானமாகி விட்டோம், இனி எல்லோரும் ஒன்றுதான், இதற்கு உதாரணம், கிரேட் வாரில் ஆங்கிலப் பத்திரிகைகள் பெரிய மகுடமிட்டு எடிட்டோரியலில் "மகாசமரஸம்" என எழுதியது போல், எங்கள் பத்திரிகையில், நாங்கள் எழுதியிருந்ததை, தாங்கள் பார்த்திருக்கலாம். எனவே, எங்கள் பத்திரிகைக்கு சந்தாவும் ஓர் நிதியும் சேர்த்துவர வேண்டுமென்னும் முன்னேற்பாட்டின் மீது, நமது பாராயண முல்லா சாஹிபை ஷை ஜில்லாக்களுக்கு அனுப்பியதில், ஆரம்பமாக அவர் திரு சீனுமா நகரிற்குச் சென்று, ஆங்குள்ள தனவந்தர்களான சில கனவான்களின் சன்னிதியடைந்து, "நாங்களும் ஹிஸ்புல்லாக்களும் சமரஸமாகி விட்ட விஷயம் தாங்களறிந்ததே; எங்கள் பத்திரிகை இனி

மேலே போகப்போவதால், அதில் தாங்களும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, நாங்கள் ஹிஸ்புல்லாக்களுடன் சமாதானமாய் விட்டதற்காக பெரியதோர் சன்மானத் தொகையை கொடுத்தருளவேண்டுமெனக் கோரிக்கொண்டதற்கு, நாம் தப்பித்துக் கொள்வதற்காக ஹிஸ்புல்லாக்களுடன் செய்து கொண்ட போலி சமரஸத்தின் வண்டவாளத்தையும், நமது கோரிக்கை நிறைவேறிய பின்னர் சமரஸ ஒப்பந்தப் பிரகாரம் நாம் நடக்கப் பின்வாங்கியதால், சமரஸ ஒப்பந்தத்தின் பிரகாரம் மத்தியஸ்தம் செய்ய சமரஸக் கமிட்டியார் தங்கள் ஊருக்கு விளித்ததற்கு, அந்த ஊரென்பது என்ன வஸ்துவின் பெயர்? சமரஸமென்பது யானையா? குதிரையா? அக்ரிமெண்டென்றால் ஒரு நட்சத்திரத்தின் பெயரா, என்ன? சமரஸக் கமிட்டியாரெனப்படுவோர், எலிகள் மகாநாட்டின் அங்கத்தினருக்குச் சொல்லப்படுமா என்ன? என, உலகமே தெரியாத இந்திரலோகத்திலிருந்து வந்தவர்கள்போல், நாம் தெம்பு பேசியும் எழுதியும் வந்திருப்பதை அறிந்த அவர்கள், நமது பா......மு......யை புடைத்துபசாரஞ் செய்து அனுப்பிவிட்டனரென்ற துக்ககரமான செய்தியை யான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, இதர இரு ஜில்லாக்களிலும் நமது பாராயணர், நமது கோரிக்கைப்படி எவ்வாறு வெற்றிபெறுவாரென, எமக்கு ஏற்படும் திகைப்பையும் உங்களுக்கு யான் தெரிவிக்காமலிருக்க முடியவுமில்லை."

தங்களின்,

....

என, எழுதப்பட்டிருந்ததைப் பார்த்த காதியானி சாயபு திகிலடைந்து, மிக்க துயரப்பட்டு இரத்தக் கண்ணீர் வடிக்க ஆரம்பித்தார்.

முல்லாஜீ:—ஓய், காவன்னா! நீர் இப்போது மிக்க துயரமடைந்திருப்பதாலும், நாழிகை அதிகமாகிவிட்டதாலும் முழுக் கனவையும் நாளைவந்து கூறும், எனச் சொல்லி, காவன்னாவை அனுப்பிவிட்டு, முல்லாஜீயும், ராவுத்தரும் மஸ்ஜிதிற்குத் தொழுகச் சென்றார்கள். ஆனால், உலக முஸ்லிம்கள் அத்துணைபேரையும் காபிர்கள் எனத் தீர்மானித்திருக்கும் ஷை காதியானிமட்டிலும், இவர்கள்கூடத் தொழுகச் செல்லாமல் தமது இல்லத்தை நோக்கிச் சென்றார்.

(தொடரும்)

நாயக சரிதையில் நம்மவரின் தவறு

(சன்மார்க்க சூரணர் சாற்றுவது)

சென்ற மீ தொடர்ச்சி.

யான் சென்ற இருமாதங்களாக எழுதிவரும் கட்டுரையில், பல விஷயங்களுக்குப் பதில் கூறப்பட்டிருப்பதில் முக்கியமாய், நாயக சரிதைச் சுருக்கமென, பாவலர் எழுதிய "உன்னத நபியும், உயரியவழியும்" என்னும் நூலில், பத்ரு யுத்தத்தைப் பிரஸ்தாபித்து எழுதிவரும்போது, அந்தயுத்தத்தின் மகிமையையும், அதன் அற்புதங்களையும் சிதைத்து, அந்த யுத்தத்தை அல்லாஹ் தனது திருமுறையில், உன்னதமுறையில் கூறியிருப்பதற்கு யாதொரு மகிமையும் கொடுக்காத வண்ணமாய், "அந்தப் போரில் எதிரிகளின் அஜாக்கிரதையினாலே முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது" என எழுதி ஷை யுத்தத்தின் மதிப்பையும்கெடுத்து, அதில் நபிகளுக்களிக்கப் பெற்ற முஃஜிஸாவையும், அதில் அல்லாஹ் தனது விண்ணவப்படைகளை அனுப்பி அனுக்கிரஹித்ததையும் பொய்யாக்கி, எதிரிகள் அஜாக்கிரதையாக இல்லாதுபோனால், அந்தப்போரில் முஸ்லிம்கள் பெற்றி பெற்றிருக்கமாட்டார்களென புறமதவாதிகள்எழுதி, அப்போரில் நபிகளுக்களிக்கப்பட்ட முஃஜிஸாவையும், அதில் அல்லாஹ்வின் அனுக்கிரஹத்தையும், உதவியையும் ஆட்சேபித்து, முஸ்லிம்கள் வெற்றி பெற்றதற்கு எதிரிகளின் அஜாக்கிரதையே காரணம் என, ஷை பத்ரு யுத்தத்தை சாதாரண யுத்தமாக மதிக்குந் தோரணையில் பிரசாரஞ் செய்து வருவதுபோல், நமது பாவலரும் எழுதியிருக்கிறாரென, அவரின்

தவற்றை யாம் எடுத்துக்காட்டியதற்கு, இது வரை பாவலர் எமக்கு பதிலே கொடுக்கவுமில்லை; அல்லது நான் எழுதியதை ஒப்புக்கொண்ட தாக அவரால் எமக்கு தகவலுமில்லை.

ஆனல், புதக்குடி சபையாரின் பெயரிடப் பெற்ற ஓர் துண்டு நோட்டீஸ் வரக்கண்டேன். அதனை ஷை சபையார்தான் வெளியிட்டார்களோ, அல்லது பின்னுதவி கொண்டுதான் வெளி வந்ததோ யாமறியோம். அதனை யான் மேம் போக்காக உற்றுநோக்கும்போது, அதன் தலையங்கம் மிக ஆபாசமாகவும், முஸ்லிமென்ற எவருக்கும் அவ்வாறு எழுத மனந்துணியாத முறையிலும், 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்க மௌலவிகளை யுத்தத்திற்கு அழைப்பது போலும் முறை தவறி எழுதப்பட்டிருந்ததைக் கண்ட எமது மனமானது, "இஃதை ஓர் படிப்பாளி எழுதியிருக்கமாட்டார்" எனத் தீர்மானித்தது.

இதல்லாமல் அந்நோட்டீஸில், எமது ஆட்சேபனைகளுக்கு பதில் கூறுந் தோரணையில், ஏதோ உளறப்பட்டுமிருந்தது. அது வக்காலத்துப் பெற்று எழுதப்பட்டிருப்பதால் அதி லுள்ள சில உளறல்களுக்கு பதில்கூற முன் வருகின்றேன்.

(1) 'நிராயுதபாணி' என்ற பதத்திற்கு வியாக்யானஞ் செய்துவரும்போது, "வாள், வில், கவண், கேடகம் முதலான சகல ஆயுதங்களைத் தன்னுடலிற் பூண்டு யுத்த முஸ்தீப்புடன் வருகிறவன் 'ஆயுதபாணி' என்று அழைக்கப்படுவான்" என, அதில் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் தமிழ் அகராதியில் ஆயுதபாணி என்ருல் "படைக்கலந் தரித்தவன்" எனப் பொருள் கூறப்படுகிறது. இதில், 'படைக்கலந் தரித்தவன்' என ஒருமையாகவே கூறப்பட்டிருக்கிறதேயல்லாமல், அதில் கூறப்பட்டிருக்குமாப்போல் பன்மையாகப் "படைக்கலங்கள் தரித்தவன்" எனக் கூறப்படவில்லை. மேலும் **படைக்கலம்** என்பது படையின் ஆபரணம் என்பனவாகும். இதில் ஆயுதம் ஒன்றோ, பலவோ தரித்திருப்பவர்களை யெல்லாம், ஆயுதபாணிகளென அழைக்கலாம் 'நிர்' என்னும் பதத்தைச் சேர்த்தால், அது இன்மையைக் குறிக்கும். எனவே நிராயுதபாணி யென்பதற்கு, எவ்வித ஆயுதமுமேயில்லாதவனையே குறிக்குமென்பது தமிழ் பாஷை பொருளாகும். இவ்வாறிருப்பதை, வியாக்கியானஞ் செய்யத்தெரியாது, சகல ஆயுதங்களையும் தரித்து, யுத்த முஸ்தீப்புடனே வருபவனை, ஆயுதபாணியென அழைக்கப்படும் என்று, தமிழ் அகராதியின் வல்லுனர் எழுதுவதென்ருல், அகராதியே தெரியாத அறைகுறையாகப் படித்த பேர்வழிகளெல்லாம் எங்ஙனம் எழுதுவார்களென்பதை நேயர்களுணரக்கடவர்.

எமது கடாவுக்கு இவ்வித போலி ஆதாரங்களும், தடுமாற்றமான பதில்களும் கூறுவதும், யானும் இவைகளையெல்லாங் கேட்டு சும்மாயிருந்துவிடுவதும் பொருத்தமாகுமா?

அதில் கூறப்பட்டிருக்கும் தவற்றுப் பொருளையும், எமது வியாக்யானத்தையும் கசடற தமிழ் கற்ற எந்த பண்டிதரிடமாகிலும் சொல்லிக் காண்பிப்போம். அவர் யார் சொல்லும் பொருள்தான் உண்மையெனக் கூறுகிருர் பார்ப்போம். இதுவிஷயத்திலும் நான் அன்னவர்களை சாலன்ஜிக்கழைக்கின்றேன், முன் வருவார்களா? பார்க்கலாம்.

தமிழில் படேபடே அகராதிகளின் பக்கங்களையெல்லாம் வரிசை வரிசையாக வரைந்திருப்போர், ஆத்திரப்பட்டு இவ்வாறு தவருன வியாக்யானஞ் செய்திருப்பதானது, விந்தையினும் விந்தையே. இதில் இன்னோர், இவ்வாறு வியாக்யானஞ் செய்தது இரு காரணங்களைக் கொண்டிருக்கலாம். (1) வது நமக்கு நிகருள்ளவர் எவருமில்லையென்ற செருக்கும், (2) வது இன்னோரிடம் ஆத்திரப்பட்டு வேலைசெய்யும் வழமை யிருப்பதுமே.

இவ்வாறு தவறு வியாக்கியானஞ் செய்ததின்கீழ், போதிய ஆயுதமில்லாதவர்களை நிராயுதபாணியெனக் கூறிவிட்டேன்; இதையும் சாரணர் குற்றமாகக் கண்டிக்கின்ருரே, இச்சிறிய குற்றத்தையும் மன்னிக்கக்கூடாதா என, குற்றத்தையும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனல் குற்றத்தை மனமார நேரில் ஒப்புக்கொள்வதைத் தவிர்த்து, மறைமுகமாக தவறை அந்நோட்டீஸின்மூலம் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

(3) அந்த நோட்டீஸில், தங்கள் கூற்றுக்கு ஆதாரமாக ஓர் தப்ஸீரின் பெயரையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தப்ஸீரை எடுத்துப் பார்க்கும்போது, இவர்களின் கூற்றிற்கு எவ்வித ஆதாரமுமேயில்லாது நேர்பாதகமாகவே இருக்கின்றது. அதாவது, ஷை தப்ஸீரின் 2-ம் வால்யூம், 407-ம் பக்கத்தின், 10-வது வரியில், "கில்லத்துஸ்ஸலாஹி வல்

பர்ஸி '' என, குறைந்த ஆயுதங்களும், குதிரைகளும் உள்ளவர்களாக முஸ்லிம்களிருந்தார்களெனத் தீர்மானித்து, உறுதியாக எழுதப்பட்டிருக்கிறது.

இதனைப் பார்க்க அன்னோருக்கு சக்தியில்லையோ, அல்லது தங்களைவிட தென்னிந்தியாவில் யாருமில்லையோவென மதிக்கின்றார்களோ, அல்லது தங்களுக்குத் தெரியுமாப்போல் தென்னிந்தியாவிலுள்ள உலமாக்களெல்லோருக்கும் மதக் கல்வியும், மத ஆராய்ச்சியும் இல்லையென நினைக்கின்றனரோ அறிகிலேம். எனவே, இன்னோர் உடனே தீவிரமாக இவ்வாறு ஆபாசத் தலையங்கமிட்டு எழுதியதிலிருந்து, நாயக சரிதை எழுதிய பாவலரைவிட தமிழ் ஞானத்தில் மிகைத்தவர் இத்தென்மண்டலத்தில் இருக்க முடியாதென நினைத்தே, இவர்கள் இவ்வளவு சீக்கிரத்தில் முன்பின் யோசியாமல் பதில்கூற முன்வந்திருக்கின்றனரெனத் தெரிகிறது.

நாயக சரிதை வரையப்படுவதில், பத்று யுத்தத்தை இவ்வாறு எழுதியவரைப்போன்ற சாமர்த்தியர் இவ்வையகத்தில் வேறெவருங் கிடையாதென இன்னோர் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறார்களென்பது, ஷீநோட்டீஸால் நன்கு விளங்குகின்றது. ஆனால் இவ்வாறு இன்னோர் நினைத்துப் புரிந்துவரும் கிருத்தியங்களெல்லாம், சத்தியமாக இருக்கும்பட்சத்தில், இவர்களுக்கு அதில் வெற்றியும் ஈருலகின் மோட்சமுமுண்டு. அவ்வாறில்லாது சாமர்த்தியத்தை சூட்சியாக உபயோகித்து, ஏக அல்லாஹ்வை மறந்து, பொதுமக்களை வஞ்சிக்கவேண்டுமென்னும் எண்ணமேற்பட்டிருந்தால், அதற்கு அப்ஜெயமும் வீழ்ச்சியு மேற்படுவது நிச்சயம்.

எனவே, பிரஸ்தாப விஷயமானது, மத சம்பந்தமானதும் நமது வள்ளலும், நாயகருமான நபிகள் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாவையும், திருஜீவியத்தையும் சம்பந்தப்பட்ட விஷயமானதாக யிருப்பதால், இதில் உண்மைக்கு மாறான விஷயங்களை எழுதி, தங்கள் சாமர்த்தியத்தால், விஷயமொன்றிருக்க மற்றொரு விஷயத்தை பிரஸ்தாபித்தும், எம்மையும், உலகோரையும், அல்லாஹ்வையும் ஏமாற்ற நாடுவார்களாகில், அதில் அன்னோர் முழு ஏமாற்றமுமடைய நேருமென்பதை யான் மீண்டும் ஞாபகமூட்டுகின்றேன்.

"சிலரை சில காலம் ஏமாற்றலாம் எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாது" என்னும் புறநாட்டுப் பழமொழியும் எமது அறிவூட்டலுக்கு ஆதாரமாக நிற்கின்றது.

எனவே, ஒரு விஷயத்திற்கு சமாதானங்கூற முன் வருவோர், சத்திய இறையையும், சத்திய நெறியையும் முன்னிறுத்தி, வஞ்சக எண்ணத்தையும் அதர்ம காரியங்களையும் விடுத்து, தெய்வ வேதவாக்கியங்களைத் தழுவியே அனுஷ்டானுஞ் செய்தும் பிரசாரஞ் செய்தும்வரவேண்டுமென விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஆதலால், எமது கேள்விகளுக்கு வேதஆதாரங்கொண்டு சரியானவும், பொருத்தமானதுமான பதிலையே எழுதிவர வேண்டும். அத்துடன் அதற்கு காட்டும் ஆதாரங்கள் சரியானவை என, நமது நாட்டின் பல முல்லா, மௌலவிமார்களின் பத்வாக்களும் வாங்கி அதில் சேர்த்து எழுதப்பட் டிருக்கவேண்டும்.

இத்தகைய லட்சணங்களோடு பதில் எழுதுவதே முறையாகும். இஃதை விடுத்து, தாறுமாறாக அண்ட பகிரண்டங்களையும், வட துருவ, தென் துருவங்களையும் அளாவிய, விஷயமற்ற கட்டுரைகளையும் எழுதி வெளியிடுவதை இந்நாகரீக உலகு தோல்வியெனக் கருதுமென்பதை யான் நினைப்பூட்டுகின்றேன்.

இவ்வாறான பதிலை யான் எதிர்பார்ப்பதோடு, பத்ரு யுத்தத்தில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த வெற்றியானது, எதிரிகளான குறைஷிக் காபிர்களின் அஜாக்கிரதையின் காரணத்தினாலேதான் என, பாவலரின் சொல்பிரகாரந்தானா பத்ரு சம்பவத்தின் உண்மை விஷயங்கள் எனத் தீர்மானிக்க வேண்டுமென, யான் உலமாக்களிடம் இப்பிரச்சினையை சமர்ப்பிக்கின்றேன். அவர்களே இதன் உண்மையைத் தெரிந்து, பாவலர் எழுதியதுசரிதானா, அல்லது தவறா என்பதை தீர்மானிக்கட்டும்.

இதுவிஷயத்தில் நான் உலமாக்களின் முடிவையும் எதிர்பார்க்கின்றேன். அல்லது நமது பாவலரே, சில உலமாக்களிடம் பத்வா வாங்கி வெளியிட்டாலும் ரொம்ப உத்தமமாகும். எவ்வாறாயினும் உண்மைவிஷயத்தை உலகோர் அறிய வேண்டுமென்பதுதான் எமது கோரிக்கை.

எனவே, பரம்பொருளான அல்லாவின் கிருபானுக்கிரஹத்தினாலும், இப்பிரபஞ்சத்திற்கு அருளாக அவதரித்த நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாவாலுமே தான், பத்ரு யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்த

தேவில்லாது, எதிரிகளின் அஜாக்கிரதையினுல் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்ததென்பது தவறே, என்பது சரித்திர ஆதாரமும் எமது திடப்பிரமாணத் துணிபுமாகும்.

ஆதலால், இதற்கு மாருய்க்கூறியிருப்போர், தம் தவறிழைத்திருப்பதை ஒப்புக்கொண்டு, அதனை பிசகென வெளியிடவேண்டும், அல்லது தமதுகூற்றுக்கு சரியான பதிலளிக்கவேண்டும்.

இதற்கு சரியான முடிவு ஏற்படும் வரை எமது பேனு கிழே வைக்கப்படமாட்டாதென்பதை தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

(தொடரும்.)

நம் பிரதிநிதிகள்

நம் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்க சார்பாய், சிலோன சென்று, ஆங்காங்கு பற்பல அரும்பிரசங்கங்களாற்றிவரும் பிரசிங்க சிங்கம் மௌலானு மௌலவி S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாயபு அவர்கள், சிலோனிலுள்ள பல பகுதிகளுக்கும் சென்று, நம்சங்கத்தின் நோக்கங்களையும், மாசிகையின் மகிமையையும் மக்கட்கு எடுத்துக்காட்டி, அருந் தொண்டாற்றி வருவது உங்களுக்குத் தெரிந்தவையேயாகும். மௌலானு அவர்களின் இப்பிரயாணத்தால் பொதுவாய் இலங்கை வாசிகளுக்கும், குறிப்பாய் லங்காதீவில் வதியும் நந்தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கும், மட்டற்ற அளவிலாப் பிரயோசனமேற்பட்டிருக்கிறதென்பது நாம் கூருமலே நேயர்களுக்குத் தெரிந்தவிஷயமாகும். மௌலானு அவர்கள் செல்லுமிடங்களிலெல்லாம், அன்பர்கள் அன்னுரை அன்புடன் வரவேற்று, ஆதரித்து, அரும் பிரசங்கங்களைக் கேட்டும், உயர்தரமாசிகைக்கு உதவிபுரிந்தும் வருவதை யாம் மிகமிகப் பாராட்டுவதுடன், அன்னேருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்த ஆலா நற்பதவி யளிப்பானெனவும் எதிர்பார்க்கின்ருேம். ஆதரவளிக்கும் அன்பர்களது திருநாமத்தை விபரமாகக் கூறி, நாம் அன்னேருக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருந்தும், சாவகாசக் குறைவால் அதனைவிடுத்து, பொதுவாய்க் குறிப்பிடுகிருேமாயினும், மௌலானு அவர்கள் இங்கு திரும்பிவந்தவுடன், ஆதரவு புரிந்த அன்பர்களின் அருமை நாமங்களை விபரமாகக் குறிப்பிட்டு நன்றி பாராட்டி எழுத நோக்கங் கொண்டுளோம். ஜனுப் மௌலானு அவர்கள் கூடிய சீக்கிரம் சிலோனின் இதர பகுதிகளுக்கும் செல்வார்களாதலின், அன்பர்கள் ஆங்காங்கு அன்புடன் ஆதரித்து அரும் பிரசங்கங்களைக் கேட்டு பயன் பெறுவதுடன், அரும்மாசிகையின் அபிவிருத்திக்கு ஆதரவு புரிவார்களெனவும் எதிர்பார்க்கின்ருேம்.

ஜனுப் மௌலானு மௌலவி M. முஹம்மது மியான் சாஹிப் அவர்கள், நம் சங்கத்தின் அரும் நோக்கங்களை மக்கட்கு எடுத்துக்கூறி, மாசிகையின் முன்னேற்றத்தை மகிமையோடு பிரசாரம் புரிய, சமீபத்தில் கூடலூர் ஜில்லா, பாண்டுச்சேரி, மாயவரம் தாலுக்காவின் பற்பல ஊர்களினும் சுற்றுப்பிரயாணம் செய்து வந்ததால், ஆங்காங்குள்ள அன்பர்கள் மௌலானு அவர்களை வரவேற்று ஆதரவுபுரிந்து மாசிகையின் அபிவிர்த்திக்கு அன்போடு ஆதரவளித்ததை நாம் மிகவும் பாராட்டுகின்ருேம். முக்கியமாய் இச்சுற்றுப்பிரயாணத்தில், நெய்வாசல் அறபி மத்ரஸாத் தலைவர் ஆலீ ஜனுப் மௌலானு மௌலவி முகம்மதுசயீத் சாஹிப் பாகவி கமால் அவர்களும், வடகரை அன்வாருல் இஸ்லாம் சங்கப் பிரசிடெண்டு மௌலானு மௌலவி முஹம்மது அபூபக்கர் சாஹிப் அவர்களும், நம் பிரதிநிதி அவர்களுடன் பற்பல ஊர்களுக்கும் சென்று உத்தமப் பிரசாரத்தில் உயர் பங்கெடுத்துக்கொண்டதை நாம் பாராட்டுவதுடன், அன்னேருக்கு எங்களது மனமார்ந்த வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

இதுபொழுது அநேக இடங்களிலுள்ளவர்கள், மௌலானு அவர்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ருர்களாதலின், கூடிய சீக்கிரம் தஞ்சை ஜில்லாவிலுள்ள இதர இடங்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்வார்களென்பதை அன்பர்கட்கு அருமையாய்த் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

சத்தியப் பிரசாரம்

காதியானிக் கண்டனம்

இதில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவந்த ஹிஸ்புல்லாக்களின் அருஞ்சேவைகளும், அந்த ஜில்லாவின் பல பாகங்களிலும் மகாநாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும், ஆங்காங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பரவிய விபரமும், அதன் பிரசாரத்தை எற்று நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் கூற்றுக்களும் விவரிக்கப்பட்டுளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின், தக்க பிரயோசனமேற்படுவதுடன், காதியானிக் கொள்கைகளின் அந்தரங்கத்தை யாவரும் எளிதில் தெரிந்துகொள்வரென்பது திண்ணம். இப்புத்தகம் ஒவ்வொருவரிடமுமிருக்க வேண்டியது மிகமிக ஆவசியமாகுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. முக்கியமாய் ஆங்காங்கு ஒரு சிலகாதியானிகள், மார்க்கத்தைக் கெடுக்கும் கோடறிக் காம்புகளே போன்று நரைப் பூண்டுகளாய்க் கிளம்பியிருக்கும் இக்காலத்தில், இவ்வரும்நூல் ஒவ்வொருவரிடமுமிருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இவ்வளவு அவசியமான புத்தகத்தை அச்சிட்டு இனமாய் வினியோகிப்பதற்காக, முகம்மதுபந்தர் வாசியும், சிங்கை ஜொஹர்பார் பிரபல வியாபாரியுமாகிய ஆலி ஜனுப் உ. றஹ்மான் சாஹிப் அவர்கள், இதற்கேற்பட்ட முழு செலவுகளையும் கொடுத்துதவியிருக்கின்றார்கள். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக வினியோகிக்கப்படுமாகையால், கீழ்க்கண்ட விலாசங்களுக்கு, அதற்கேற்படும் தபால் செலவுக்கு ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்வார்களாக.

கிடைக்குமிடங்கள் :—

(1) ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்

43 A. போஸ்டாபீஸ் தெருவு, சென்னை.

(2) O. றஹ்மான் சாஹிப்

2 3. ரேச்சர் ரோடு, சிங்கப்பூர்.

சித்தீக்மலர் கைவசமிருந்தது தீர்ந்து விட்டதால், அன்பர்கள் ஆடர் செய்யாமலிருக்கக் கோருகிறோம்.

சித்தர் மருந்து சாலை

இடமண்—புனலூர் போஸ்டு.

சித்த மருந்துகளும், யூனனி மருந்துகளும் முறைப்படி சுத்திக்கிரமத்துடன் செய்யப்படுகின்றன.

சித்தர் சஞ்சீவி செந்தூரம்

ஜுரம், ஜன்னி, காசம், பலவீனம், ஜலதோஷம், அசதி முதலிய பல வியாதிகளுக்கும், பிறந்த சிசு முதல், விருத்தாப்பியர், பிரசவித்த ஸ்திரீகள் முதலிய யாவரும் எவ்வித பயமுமின்றி உபயோகிக்கலாம்.

	சீசா 1-க்கு	ரூ.	1	4	0
அயச் செந்தூரம்	40 வேளை	ரூ.	2	0	0
உருக்கு செந்தூரம்	ஷை	ரூ.	3	0	0
காந்த செந்தூரம்	ஷை	ரூ.	5	0	0
தங்க செந்தூரம்	ஷை	ரூ.	13	0	0

சொர்ண சஞ்சீவி சுன்னம்

க்ஷயத்திற்கு தக்க ஔஷதம் 21 வேளை ரூ. 7 0 0

சித்தர் ரசாயனம்

மேக சம்பந்தமான வியாதிகளுக்கும், இரத்த சுத்திக்கும் மிகப் பிரயோஜனமுள்ளது. 40 நாள் மருந்து ரூ. 7 0 0

வீரிய விர்த்தி லேகியம்

40 வேளை மருந்து ரூ. 5 0 0

திரு நபி சரித்திரம்

காலிகோ பைண்டு ரூ. 2 0 0

இதுவன்றி இதர மருந்துகளும் கிடைக்கும். விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

இங்ஙனம் :

மு. ந. முஹம்மது சாஹிப்.

600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43 A, Post Office St., G.T., Madras.

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 5 | செந்தமிழ் | மாதசஞ்சிகை | இதழ் 12

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ஷஅபான்மீ 1934 டிசம்பர்மீ

1. அல்குர் ஆன் ... 437
2. நாயக வாக்கியம் ... 441
3. ஐந்தாம் ஆண்டுப்பூர்த்தி ... 443
4. இஸ்லாத்தின் முக்கியகடமை ... 445
5. றமலான் மாதமும் நோன்பும் ... 449
6. பலதார மணம் ... 451
7. வேஷமும்விஷமமும் மாபெரும்தோஷம் ... 457
8. வீழ்ச்சியை ஒழிக்க எழுச்சிவேண்டும் ... 462
9. முல்லாவும் காதியானியும் ... 465
10. காதியான் தப்லீக் கான்பரன்ஸ் ... 472
11. பயானுல் குர்ஆன் ... 474
12. கருணை நபி என்னும் நூலை ஆக்கியோனின் விஞ்ஞாபனம் ... 476
13. மதிப்புரை. ... 476

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ்செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600

REGISTRAR OF BOOKS
8-JAN 1935
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 ஷஅபான் மீ 1934 ௵ டிசம்பர் மீ	இதழ் 12

அல்குர்ஆன்

உங்கள்மீது அவன் விலக்கலாக்கியது (ஹராமாக்கியது), எல்லாம், செத்ததையும், உதிரத்தையும், பன்றியின் மாமிசத்தையும், அல்லாஹு வல்லாததற்காக அறுக்கப்பட்டதையும்தான். எனவே, மீறுதவனாகவும், (வரம்பைக்) கடக்காதவனாகவுமிருக்கிற நிலைமையில் ஒருவன் (இவைகளைப் புசிக்க) நிர்ப்பந்திக்கப்படுவோனாயின் (அவைகளைப் புசிப்பது) அவன்மீது குற்றமில்லை. ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்போன், கிருபை செய்வோன்.

"திருகுர்ஆன்"

மக்களுக்கு சன்மார்க்கத்தைப் புகட்ட ரஹ்மான் ஜல்லஷானுஹு வதஆலாவினால் அருளப்பட்ட திருமறையாம் 'புருக்கானுல் ஹமீதில்' கூறப்பெற்ற மேற்கண்ட ஆயத்துக்கு முந்திய ஆயத்தில், "விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள் நன்றிசெலுத்துவதற்காக நாம் உங்களுக்கு அளித்திருப்பதில் நல்லதையும் சுத்தமானதையும் புசியுங்கள்" என்று கூறியிருக்கிறான். இந்த வசனத்தின் பிரகாரம் உலகத்திலுள்ள நல்லவைகளையும் சுத்தமானவைகளையும் புசிக்க இறைவன் விசுவாசிகளுக்குக் கட்டளையிட்டுவிட்டு, புசிக்கத் தகாதவைகளை அதாவது விலக்கலாக்கப்பட்டவைகளை அதற்குப்பின் கூறியிருக்கிறான்.

எனவே, மேற்கண்ட ஆயத்தில் கூறப்பட்ட நான்குவகை வஸ்துக்களும் அசுத்தமானவையென்பதையும், நல்லவைகளல்லவென்பதையும் நாம் உணர்ந்துகொள்கிறோம். இவை சம்பந்தமாக ஐரோப்பிய தத்துவசாஸ்திரிகள் கூறுவதைக் கவனிப்போம்:

உணவுகள் மனித ஸ்தூலத்தை வளர்த்து அதற்குப் பலத்தைக் கொடுத்து பயனளிப்பது போல், அவனுடைய ஆத்ம சக்தியிலும் அவைகள் குணபாடுகளைச் செய்கின்றன. உதாரணமாக, நாம் நன்றாகக் கவனித்துப் பார்க்கும்போது, ஆரம்பமுதல் மாமிசத்தை அருந்தாத ஜனங்களிடம், மனிதனுக்கு இருக்கவேண்டிய வீர தத்துவம் கொஞ்சங் கொஞ்சமாகக்

குறைந்துகொண்டே வருகிறதென்பதையும், மாமிசம் அருந்தாத வகுப்பினர் இறுதியாகக் கோழையர்களாகி விடுகிறார்களென்பதையும் அறிந்துகொள்கிறோம். அதற்கு உதாரணத்தை நாம் மிருகஜாதிகளில் காணலாம். புற்பூண்டுகளையும், தழை கொழைகளையும் மாத்திரம் புசிப்பவைகளான சாகபக்ஷணிகளைப் பார்க்கினும், மிருகங்களை அடித்துத் தின்னும் படியான ஐவாய் மிருகங்களான மாமிசபக்ஷணிகள் அதிகப் பராக்கிரமமும்,ஊக்கமும்,துணிச்சலும், வீரமும் உள்ளனவாயிருக்கின்றன என்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். இதிலிருந்து உணவுகளின் மூலமாக ஒழுக்கத்திலும் தன்மையிலும் குணபாடுகள் ஏற்படுகின்றன என்பதில் என்ன சந்தேகம்?

இதுபோல், இரவு பகலாக இறைச்சியை அருந்தியும், இதர உணவுகளில் அதிகம் சிரத்தை காட்டாதிருப்பவர்களுமான ஜனங்கள் சாந்தம், பணிவு ஆகியவைகளில் மிகவும் குறைந்த தன்மையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். மாமிசங்களையும், மரக்கறிகளையும் சமமாக, நடுத்தரமாக உட்கொண்டு வருபவர்களிடம் வீர தத்துவம், பொறுமை என்ற இரு விதத்தன்மைகளுமிருந்து வருகின்றன. இதனை இறைவன் தனது திருமறையின்கண், "நீங்கள் நன்றாகப் புசியுங்கள், பருகுங்கள்; ஆனால் (ஒரு வஸ்துவைப் புசிப்பதில் அதற்கு ஏற்பட்ட) அளவுக்கு மீறாதீர்கள்" என்று கூறியுள்ளான். ஒரேவிதமான வஸ்துவை அதிகமாகப் புசிப்பதால் சுகத்துக்குங்கூடத் தீங்கேற்பட ஹேதுவுண்டு. சுகாதாரம்தான் ஸ்தூலத்துக்கும், ஆத்மாவுக்கும், ஒழுக்கத்துக்கும் உயிர்நாடியாக இருக்கிறதென்று முன்னோர் சொன்ன மொழி, பொன்மைகொண்டெழுதத் தகும். உணவுகள் மனித ஸ்தூலத்திலும், ஆத்மாவிலும், ஒழுக்கத்திலும் குணபாடு செய்கிறதென்பதை நாம் பிரத்தியட்சமாக மேலேகூறிய உதாரணங்களிலிருந்து தெரிந்துகொண்டோம். எனவே, அல்லாஹு தஆலா ஹறாமானவைகளென்று விலக்கலாக்கி வைத்தவைகளைப் புசிப்பதால் மனித ஸ்தூலத்திலும், ஆத்மாவிலும், ஒழுக்கங்களிலும் தீயகுணபாடுகள் ஏற்படுகின்றன என்பதில் சந்தேகமேயில்லை. ஏனென்றால், திருமறையில் கூறப்பட்ட ஆயத்தில் கண்ட இவ்விலக்குச் சட்டமானது சர்வமுமுணர்ந்த நிபுணனான, விவேகியான இறைவனின் சட்டமாக இருக்கிறது. "விவேகிகள் செய்யும் காரியத்தில் விஷயமில்லாமலிருக்காது" என்பது பழமொழி. இதற்கேற்ப அல்லாஹு தஆலா மக்களுக்குப் புசிக்கப்படாதென்று விலக்கலாக்கியதில் விஷயமில்லாமல் இல்லை. எனவே இறைவனின் விலக்கலைமீறி அவைகளைப் புசிப்பதால் நிச்சயமாகத் தீங்கு இருக்கிறது என்பது தெளிவு.

மேலே கூறப்பட்ட வேத வசனத்தில் செத்தது, உதிரம், பன்றியின் மாமிசம், அல்லாஹு தஆலாவின் பெயர்சொல்லி அறுக்கப்படாதவை ஆகிய நான்கு வஸ்துக்கள் மாத்திரம்தான் விலக்கப்பட்டிருக்கின்றன. இவை நான்கையும் தவிர வேறு எதுவும் விலக்கப்படவில்லையென்று மேலெழுந்தவாரியாகக் கவனிப்பவர்களுக்குத் தோன்றும். ஆனால் அரபியில் சொல்லப்பட்ட இந்த நான்கு வஸ்துக்களின் பெருக்கு முன்னிலையில் அலிப், லாம் என்ற இரு அக்ஷரங்கள் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அரபி இலக்கணச் சட்டப்படி ஒரு பெயர்ச்சொல்லில் இவ்விரு அக்ஷரங்களும் சேருமாயின் அப்பொருள் இனத்தையும் குறிக்கும் என்ற ஒருவிதியுண்டு. இவ்விதியின்படி, இந்த நான்கு வஸ்துக்களும், தனிப்பட நான்கு பொருளை மாத்திரம் குறிப்பிடாமல் நான்கு வகையான இனத்தையே குறிப்பிடும். எனவே, (1) செத்தது என்பதில் பிணத்தின் வகையும், பிணத்தின் தன்மையுள்ள எல்லா வஸ்துக்களும் சேர்ந்திருக்கின்றன. (2) உதிரம் என்றதில் உதிரத்தில் எத்தனை வகையுண்டோ அவையனைத்தும், உதிரத்தின் தன்மையுள்ள ஏனைய வஸ்துக்களும் சேர்ந்திருக்கின்றன. (3) பன்றியின் மாமிசம் என்றதில் அதன் இனமும், அதன் தன்மையுள்ள எல்லா வஸ்துக்களும் சேர்ந்திருக்கின்றன. (4) அல்லாஹு தஆலாவின் திருநாமஞ் சொல்லி அறுக்கப்படாதவைகளில் ஏனைய வஸ்துக்களும் சேர்ந்திருக்கின்றன. எனவே, இதன்படி உலகிலுள்ள அபரிசுத்தமானவைகளும், விலக்கலாக்கப்பட்டவைகளும் இந்த நான்கு வகையினுள் அடங்கிவிட்டன. இவைகளை நபிகள் நாயகமவர்கள் ஹதீது ஷரீபில் விளக்கிக் கூறி இருக்கிறார்கள். மார்க்கக் கலாவல்லுனர்களான இமாம்கள் அவைகளைத் துருவி ஆராய்ந்து மக்களுக்குப் பிரித்தறிவித்திருக்கின்றார்கள். ஆகவே இந்நான்கு இன வஸ்துக்களிலுமுள்ள குணதோஷங்களைக் கவனிப்போம் :

செத்தது

ஒரு வியாதியின் காரணமாகவோ, அல்லது விஷமருந்தியதாலோ ஒரு பிராணி செத்துப் போயிருந்தால், அந்தப் பிராணியின் மாமிசத்தைப் புசிப்பது மிகவும் கெடுதலை யுண்டு பண்ணுவதாக இருக்கிறது. குரல்வளையை நெறிப்பதுகொண்டு அல்லது உயரமான இடத்திலிருந்து விழுவதுகொண்டு செத்துப்போன பிராணியின் உடலில் ரத்தம் கட்டி விடுவதால் அதன் மாமிசத்தைப் புசிப்பது மனிதருக்குக் கெடுதியுண்டுபண்ணுவதாக இருக்கிறது. தானாகச் செத்துப்போன பிராணியின் மாமிசத்தில் பிணத்துக்குரிய அம்சங்கள் தேங்கி இருப்பதால், அதைப் புசிப்பதுகொண்டு மனிதனின் சுவாத்தியத்துக்குத் தீங்கு ஏற்பட இடமுண்டு. தானாகச் செத்ததைத் தின்பவர்களில் அதன் குணபாடு ஏற்படுகிறது. தானாகச் சாவதால் ரத்தமானது அதற்குரிய நரம்புகளில் ஓடாமல் உறைந்து கட்டிவிடுகிறது. மேலும் அது ஈரமுள்ளதாக இருப்பதால் மிக விரைவில் கெட்டுப் போயும்விடுகின்றது. இதன் துர்வாடையால் திரேகம் முழுவதும் நாற்றமெடுத்து விடுகிறது. உதிரத்தில் கண்ணுக்குத் தெரியாத கணக்கற்ற புழுக்கள் இருப்பதாகச் சமீப காலத்திற்கு முன்னர் தான் தெரியவந்தது. இப் புழுக்கள் விஷச்சத்துள்ளவைகளை திரேகத்தில் பரவச் செய்கின்றன. எனவே, மாமிசம் அருந்துவதால் திரேகத்தில் ரத்த விருத்தி ஏற்பட்டு, திரேகத்துக்குப் பலமும் நன்மையுமேற்படுவதற்குப் பதிலாக திரேகத்துக்குத் தீங்கும் கஷ்டமுமேற்படுகிறது.

இனி, அல்லாஹு தஆலாவின் பெயர்கூறி அறுக்கப்பட்ட பிராணியின் மாமிசத்தைப்பற்றிக் கவனிப்போம்: பிராணியை அறுப்பதால் திரேகத்தின் சதையைப் பார்க்கினும் அதிகமாக ஓடிக்கொண்டிருக்கிற உதிரம் வெளியில் வந்து விடுகிறது. சுகாதாரத்தைக் கெடுக்கக்கூடிய விஷநீர், கலப்புள்ள சத்துக்கள் உதிரத்துடன் சேர்ந்து வெளியில் வந்துவிடுகின்றன. அதனுடன் அல்லாஹு தஆலாவின் திருநாமம் உச்சரிக்கப்பட்ட பரக்கத்தும் (கிருபையும்) சேர்கிறது. ஆதலின், அதை அருந்துவது அனுமதிக்கப்பட்டதாகவும், சுத்தமானதாகவும் திரேக சுகத்துக்கு எவ்விதத்தீங்குமில்லாததாகவும் இருக்கிறது.

இந்நிலைமையில் விஷய ஞான முணராத சிலர், அதிகப் பிரசங்கித்தனமாக இஸ்லாத்தின் பேரில் செய்யும் ஆக்ஷேபனையும் இவ்விபரத்தால் நீங்கி விடுகிறது. அதாவது, தானாகச் செத்தவைகள் அல்லாஹு தஆலாவினால் மரிக்கச் செய்தவைகளாகும்; இவைகளை மனிதர் அருந்தக்கூடாதாம்; ஆனால், தாங்களாகக் கொன்றவைகளை அதாவது அறுத்தவைகளைப் புசிக்கலாமாம்; இது விலக்கப்படவில்லையாம்? என்று இஸ்லாத்தின் விரோதிகள் ஏராளமான முறையில் ஆக்ஷேபனை செய்கின்றார்கள். அறுப்பதனாலேற்படும் நன்மையை அவர்கள் உணராததினாலே இவ்விதம் ஆக்ஷேபனை செய்யநேர்ந்தது. அவர்கள் நன்கு ஆராய்ந்து அறுப்பதனாலேற்படும் பலனை வுணருவார்களாயின், அதில் அவர்களுக்கு ஆக்ஷேபனை செய்யவே இடமிராது.

இதில் இன்னொரு விஷயமும் நமக்கு வெளியாகி இருக்கிறது. அதாவது மீன்களைத் தக்பீர் சொல்லி அறுக்காமல் புசிப்பது மதசம்மதமாக (ஜாயிஸாக) இருக்கிறது. ஏனெனில் மீனினத்தில் உஷ்ண இரத்தம் இல்லை. அதாவது மனிதருக்கும் ஏனைய மிருகங்களுக்கும் இருக்கிற உதிரம்போன்றது மீனில் இல்லை. ஆகவே, அவை ஊதி நாற்றமெடுத்தாலும் திரேக சுகத்திற்குத் தீங்கு செய்வனவாயில்லை.

மனிதர் புசிக்கத்தகாதனவென்று விலக்கப்பட்ட வகைகளில் இரண்டாவது வஸ்து உதிரம். இது திரேகத்தைவிட்டு வெளியில்வந்து உறைந்து விடுவதால் வெகு சீக்கிரத்தில் அழுகி துர்நாற்றமெடுத்துவிடுகிறது என்று டாக்டர்களும், ஹக்கீம்களும், வைத்தியர்களும் ஏகமனதாகக் கூறியிருக்கிறார்கள். தினசரி நாம் பிரத்தியக்ஷமாகக் காண்பதும் இதற்கு சாக்ஷியாக இருக்கிறது. உதிரத்தில் கண்ணுக்குப் புலப்படாத கணக்கற்ற சிறுசிறு புழுக்களிருக்கின்றன. பூதக்கண்ணாடியினால் அவைகளை நாம் பார்க்கமுடியும். அவை சுகாதாரத்திற்குமிகவும் தீங்கானவை. விஷபேதி முதலிய வியாதிகள் உற்பத்தியாகுவதற்கான விஷச்சத்து அவைகளில் அதிகம் இருக்கின்றன. உதிரத்தைப் புசிப்பதால் அதையே புசிப்பதற்கான வழக்கம் மிகவிரைவில் ஏற்பட்டுவிடுகிறது. ஆதலால், அதிலுள்ள அசுத்தம் மனிதனைக் கடுஞ்சித்தமுள்ளவனாக ஆக்கிவிடுகிறது. இதனால்தான் இறைவன் இதனைப் புசிக்கலாகாது என்று விலக்கி இருக்கிறான்.

'ஹக்கீமே றப்பானி' முஹம்மது முஸ்தபா றஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஈரலையும், நுரையீரலையும் புசிக்க அனுமதித்த தானது அவைகள் உதிரம் என்ற அந்தஸ்தை விட்டுக்கடந்து தசை என்ற நிலைமைக்கு வந்து விட்டதால்தான். ஆகவே, உதிரத்தில் இருக்கிற தீமைகள் அவைகளில் கிடையா.

மூன்ருவது, விலக்கப்பட்ட வஸ்து பன்றியின் மாமிசம். அது மிகவும் கெட்டதாகவும் மனிதனின் ஆத்மீகசக்திகளையும், ஒழுக்கங்களையும், திரேகத்தையும் கெடுக்கூடியதாகவுமிருக்கிறது. தவிர, இது நரகல்களையும், மிகமிகத் தீங்கான வஸ்துக்களையும் புசிக்கும் பிராணிகளில் முதல் தரமானபிராணியாக இருக்கிறது. எந்த நேரமும் நரகலிலேயேபிரண்டு கொண்டிருக்கிறது. பார்ப்பதற்கு அவலக்ஷணமும், வெறுக்கத்தக்க தோற்றமுள்ளதாகவு மிருக்கிறது. காமவிகாரங்கொண்டதாகவு மிருக்கிறது. மிகவும் கோபமுள்ள பிராணியாகவு மிருக்கிறது. இதற்குக் கோபமூண்டுவிட்டால் தன்னுடைய விரோதி யென்றும் சிநேகிதனென்றும் வித்தியாசம் பாராட்டாது தன்னையே மறந்து எல்லாவற்றையும் நேருக்கு நேராகத் தாக்க ஆரம்பித்துவிடும். மதிலையோ அல்லது மரத்தையோ அல்லது கல்லையோ கவனியாது எல்லாவற்றையும் ஒரேமுகமாகத் தாக்கும். இதைப் புசிப்பவருக்கு ரோஷமின்மையும், மானங்கெட்ட தன்மையும் அதிகரிக்கிறது, இதை வழக்கமாகப் புசிப்பவருக்கு மற்றவர்களிடமிருக்கிற ரோஷமும், பெருந்தன்மையும், நாணமும் இருப்பதில்லை. நமது முன்னிலையில் பன்றியின் மாமிசத்தை அருந்தும் சமூகத்தார் இருக்கிருர்கள். அவர்களில் ஒருவருடைய மனைவியுடன் இன்னொருவர் கைகோர்த்துக் கொண்டு தனிமையில் அழைத்துச்சென்ருலும் அதனல் அவருக்கு ரோஷம் உண்டாகுவதில்லை.

இதல்லாமல், மேனாட்டு சாஸ்திரிகளும், இந்திய, கிரேக்க சாஸ்திரிகளும் பன்றியின் திரேகத்தின் ஒரு சதுர அங்குலத்திற்குள் பல்லாயிரக்கணக்கான விஷக்கிருமிகள் இருக்கின்றனவென்று ஏகமனதாகக் கூறுகிருர்கள். ஆகவே, அப்படிப்பட்ட பிராணியின் திரேகம், உரோமம் முதலிய யாவும் 'நஜிஸ்' என்று இஸ்லாம் மதம் தீர்ப்புக் கூறியதானது சாஸ்திரத்துக்கு ஒத்ததாகவே இருக்கிறதென்பது நன்கு புலனாகின்றது. இதுபோலவே இதன் இனப் பிராணிகளின் மாமிசத்தைப் புசிப்பதும் ஹறுமாக்க அதாவது விலக்கலாக்கப்பட்டிருக்கிறது. இதை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பொதுவான ஒரு விதியில் சுருக்கமாகக் கூறியிருக்கிருர்கள். அதாவது, "பஞ்சாவினல் அடித்துத் தின்னும் பிராணியும், பற்களினல் கிழித்துத் தின்னும் பிராணியும் ஹறுமானது" என்று கூறியிருக்கிருர்கள். இப்பொதுவிதியில் புலி, நரி, நாய், சிறுத்தை, கழுதை, ராஜாளி, வல்லூறு முதலியவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன்படியே பாம்பு, தேள், பல்லி முதலிய ஊர்வனங்களும் ஹறுமாக்கப்பட்டிருக்கின்றன.

நான்காவது, அல்லாஹு தஆலாவின் பெயர் சொல்லி அறுக்கப்படாமல் அவனல்லாதவைகளுக்காக அறுக்கப்பட்டவை. இது ஹறும் என்பது ஸ்தூல சுகத்துக்காக ஏற்படவில்லை. இது கொள்கையைப்பற்றிய விஷயம். கொள்கை சம்பந்தமான நம்பிக்கைகளில் இது கெடுதல்களை உண்டாக்குவதாக இருக்கிறது. இந்தப் பிராணி இன்ன விக்கிரகத்துக்காக நேர்ந்துவிடப்பட்டது, இன்ன சுவாமிக்காக பலியிடப்பட்டது என்ற ஏற்பட்டால் இதில் ஆத்மார்த்தத் தீமைகள் ஏற்பட்டு விடுகின்றன. எல்லாப் பிராணிகளும், இன்னும் எல்லாப் பொருள்களும் அல்லாஹுத ஆலாவின் சிருஷ்டிகளாகவும், அவனல் வளர்க்கப்படுபவனாகவும், அவனது பிரஜைகளாகவும் இருக்கும் போது அவனது பெயரைக்கூருமல் வேருென்றின் பெயரைக் கூறித் துதிப்பதாயின் இது பெரிய மோசக்கருத்தான செய்கையாகு மல்லவா? இதனல் அகமியமான தீமைகளும் கெடுதல்களும் ஏற்படுகின்றன என்பதிற் சந்தேகமில்லை. எனவே, இம்மாதிரியான பிராணிகளின் மாமிசங்களை ஏன் புசிக்கக்கூடாது என்பதற்கான காரணங்களைப்பற்றி ஆழ்ந்து கவனிக்கும்போது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எத்தகைய தூரதிருஷ்டியுடன் இவைகளைக் கவனித்து சட்டம் வகுத்திருக்கிருர்கள் என்பது நமக்கு நன்கு புலப்படுகிறது. இது மனிதருக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும் விஷயமென்பதைக் கவனியுங்கள்! இதர மதங்களில் இவ்விஷயங்கள் சொல்லப்படாமலிருப்பதே அவைகள் தெய்வசம்மதமான மதங்களன்று என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. இவ்விடத்தில் ஒரு சந்தேகமேற்பட இடமுண்டு. அதாவது, தௌராத், ஜபூர், இஞ்சீல் முதலியவைகள்

அல்லாஹு தஆலாவினல் அனுப்பப்பட்ட வேதங்களென்றும், யூதர்களுடைய மதம் ஹஜ்றத் மூஸா நபியவர்களால் கொண்டுவரப் பட்ட மதமென்றும், கிறிஸ்துவர்களுடைய மதம் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களால் கொண்டுவரப்பட்ட மதமென்றும் முஸ்லிம்க ளாகிய நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்களே அந்த மதக்காரர்கள், பன்றி முதலியவைகளைப் புசிக்கிருர்களே, முஸ்லிம்கள் அறுத்துப் புசிப் பதுபோல அறுத்து அந்த மாமிசங்களைப் புசிப்பதாகக் காணுேமே, ஆதலால், அவர்க ளுடைய மதமும் தெய்வ சம்மதமற்ற மதமோ என்ற கேள்வி பிறக்கிறது.

யூத கிறிஸ்துவர்களின் வேதங்களான தௌ ராத், ஜபூர், இஞ்சீல் முதலிய வேதங்கள் இறைவனல் அனுப்பப்பட்டவைகளென்பதை யும், ஹஜ்றத் மூஸா, ஈஸா (அலை.) போன்ற நபி மார்கள் நேரான வழியைக் காண்பித்தார்கள் என்பதையும் முஸ்லிம்கள் ஒப்புக்கொள்கின்ற னர். ஆனல், அந்த மதங்களின் பெயரால் இக்காலத்தில் அனுஷ்டானத்திலிருந்துவரும் மதங்களும், வேதங்களும் அந்த நபிமார்களால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உண்மையான வைகளல்லவென்று முஸ்லிம்கள் கூறுகிருர்கள். இதற்குச் சரித்திர சம்பந்தமான பல சான்று களுமில்லாமலில்லை. அந்த வேதங்களையும் மதங்களையும்பற்றி இவ்விடத்தில் விஸ்தாரமாக நாம் எழுதவேண்டிய அவசியமில்லையாயி னும், அவைகளைப்பற்றியசந்தேக மேற்பட்டு விட்டதால் நாம்கூறும் பதிலுக்கு ஒரு ஆதா ரம் மாத்திரம் தெரிவித்துவிட்டு இவ்வியா சத்தை முடித்துக் கொள்ளுவாம். அதாவது, பைபிளிலுள்ள முதல் ஐந்து ஆகமங்களை மூஸா நபியவர்கள் கொண்டுவந்த தோரா என்று யூத கிறிஸ்துவர்கள் கூறுகிருர்கள். தோரா என்று அவர்களால் கூறுவதைத்தான் நாம் தௌராத் என்று கூறுகிரோம். இந்த தோரா விலுள்ள லேவியராகமத்தில் புசிக்கத் தக்க பிராணிகள் இன்னின்னவை என்ற விப ரம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தற் கால மிருக்கிற பைபிளை எடுத்துப் பார்த்தா லும் கூட பன்றி, கழுதை நாய் முதலிய பல வகைப்பட்ட பிராணிகளும் ஹறாமாக்கப்பட் டிருப்பது நன்கு தெரியவரும். ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள், தௌராத்தில் சொல் லப்பட்ட விதிவிலக்குகளை அமல் நடத்தி வைக்கவும், அவைகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி நடக்கவேண்டுமென்ற விஷ யத்தை உணர்த்தவேண்டும் என்பதற்காகவுமே வந்தார்கள் என்று பைபிள் புதிய ஏற்பாட்டி லும் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் தௌராத் தில் கூறப்பட்டபடி கிறிஸ்துவர்கள், மேற் கண்ட பிராணிகளை புசிக்கத் தடுக்கப்பட்டிருப் பதுடன் அல்லாஹு தஆலாவின் திருநாமஞ் சொல்லி அறுத்துப் புசிக்கவும் தௌராத்தின் கட்டளைப்படி கடமைப்பட்டிருக்கிருர்கள், ஆனல், அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. எனவே, தற்காலமுள்ள யூத கிறிஸ்துவர்களின் செய்கைகளையும் நடவடிக்கைகளையும் கவனித்து இஸ்லாமியச் சட்டங்களில் ஆக்ஷேபனை செய் வது பொருந்தாது என்பதை உணரவேண் டும்.

நாயக வாக்கியம்

சதி செய்பவனது சாக்ஷி ஒப்புக்கோள்ளப்படமாட்டாது.

ஒருநாளன்று 'ஸலீம்' வர்க்கத்திலுள்ள சிலர் பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர் கள் சமுகம் வந்து, அல்லாஹ்வுடைய ரசூலே! தன்னை மூமின் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவன், பெரும்பாவஞ் செய்வதி லீடுபட்டு சதிமோசம் செய்கிருன் ; பரஸ்திரீயுடன் காம நுகர்ச்சி கொள்கிருன். இந்நிலைமையில் அவ னுடைய சாக்ஷியை ஒப்புக் கொள்ளலாமா வென வினவினர். அதற்கு நபிகள் பெரு மானர் (ஸல்.) அவர்கள், "சதிபுரியும், இன்னும் விபசாரஞ்செய்யும் ஆண்பெண் இன்னேரின் சாக்ஷியங்கள் ஒப்புக்கோள்ளப்படத் தக்கவைக ளல்ல" எனக் கூறினர்களென, ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ அவர்களைத் தொட்டும் ரிவா யத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், எவன் இதார்களின் சொத்துக்களை அபகரிப்பதிலும்

பாஸ்திரீகளுடன் சம்மந்தம் வைத்துக்கொள் வதிலும் அல்லாஹ்த ஆலாவுக்குப் பயப்பட வில்லையோ அவன் இதரார்களின் விஷயத்தில் உண்மையை வெளிப்படுத்துவானென நம் பிக்கை கொள்ளமுடியாது. இதற்காகத் தான் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர் கள் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்க ளெனத் தெரிவித்திருக்கிறார்கள்.

சம்பாத்தியம் செய்வதின் மேன்மை

ஒருநாளன்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், மானிடன் சம்பாத்தியஞ் செய்து சாப்பிடவேண்டுமென்னும் விஷயத்தின் மேன் மைகளை எடுத்துக் கூறுங்கால், "எவன் தன் கைகளினல் சம்பாத்தியஞ் செய்து சாப்பிடுகின் ருனே அவன் மறுமை நாளில் சாலிஹீன்க ளுடனிருப்பான்" என அறிவித்ததாக, ஹஸ்ரத் அப்துல்லா பின் மஸ்ஊத் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (றஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், துர் மார்க்க வழியைத் தவிர்ந்து சன்மார்க்கப்பாதை யில் பிரயாசையுடன் ஈடுபட்டு சம்பாத்தியஞ் செய்து ஜீவனஞ் செய்ய முற்படுவது மேலான வணக்கமாகுமெனவும், எவன் பிரயாசையோடு சம்பாத்தியத்திலீடுபட்டு, எவருடைய கடமை தம்மீதிருக்கின்றதோ அதை நிறைவேற்றிக் கொண்டு சன்மார்க்க சம்பாத்தியத்தினல் தன் வயிறை நிறப்பிக்கொண்டிருக்கிருனே அவன் உண்மை மூமினுகக் கருதப்படுவானெனக் கூறியிருக்கின்றார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் எவரிட மாகிலும் அறுதிமானம் வாங்குவார்களாயின் பிரதானமாக, அநீதி, அதிக்கிரமம், மோசம், ஏமாற்றுதல், துன்மார்க்க வழியில் சம்பாத்தி யஞ் செய்தல் ஆகியவைகளை ஒழித்துவிடுமாறு வற்புறுத்துவார்கள். சங்கைவான்களான சஹா பாக்கள் ஒவ்வொருநாளும் 8-அல்லது 10-மணி நேரம் கஷ்டப்பட்டு சம்பாத்தியஞ்செய்வதி லீடுபட்டு, அதில் கிடைக்கும் வருவாயில் தாங் களும் சாப்பிடுவதுடன் ஏழை, சக்தியற்றோர்க் கும் உதவிபுரிபவர்களாய் இருந்து வந்தார்கள்.

அனீதி செய்யப்படுபவர்களின் சாபத்தினின்று தப்பித்துக்கொள்ளுங்கள்.

ஒருநாளன்று நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் அநீதி புரிவதின் கெடுதல்களைப்பற் றிக்கூற முற்பட்டபோது, அநீதியானது மானிடனை நாசத்திலாக்கிவிடுகிறதென்றும், அநீதி செய்யப்பட்டவனின் சாபத்திற்காளாக வேண்டாமென்றும், அநீதி செய்யப்பட்டவ னுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலுள்ள திறை எடுபட்டுப்போய் விடுகிறதென்றும் அறி வித்ததாக ஹஸ்ரத் அனஸ்பின்மாலிக் (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், அநீதியா னது மன்னிப்பதற்குத் தகுதியற்ற ஓர் பெரும் பாவமாகுமென்றும், கைகில்லாது கஷ்டத்தில் சிக்குண்டிருக்கும் மனிதன்மீது தன் செல் வாக்கை உபயோகித்து அவன்மீது அதிக்கிரமம் புரிவது மானிடத்தன்மைக்கு தூரமானமிருகத் தன்மையாகுமென்றும் அறிவித்திருக்கின்றார் கள். மேலும் தூய்மை வாய்ந்த சன்மார்க்கத் தையுடைய நம் இஸ்லாம் மார்க்கமானது, அநீதி புரிவதை பெரியதோர் பாவகாரிய மென்று தீர் மானித்து அநீதிபுரிபவன் மானிடர்களிலெல் லாம் மகாக் கெட்டவனுகுமென்று முடிவுகூறி யிருக்கின்றது. ஆதலால் அநீதி செய்யப்பட் டவருக்கு உதவிபுரியவேண்டியது ஒவ்வொரு வர்மீதும் கடமையாகும். எனவே, நீங்கள் சாப் பாட்டிலோ, நபில் வணக்கம்புரிவதிலோ ஈடுபட் டிருக்குங்கால் ஒருவன்மீது அநீதிபுரியப்படுவ தாகக் கேள்விப்படுவீர்களாகில், உடனே முன் வந்து அநீதி செய்பவனின் மமதையைஅடக்கி அநீதி செய்யப்பட்டவனுக்கு உதவிபுரிய முற் படவேண்டியது உங்கள்மீதுள்ள முக்கியக்கட மையாய் விடுகிறதென, ஹஸ்ரத் ஜுனைத் பக் தாதீ (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதற் காகத்தான் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், "எவன் அநீதி செய்யப்படு வதை விலக்குவதிலீடுபட்டு அதிலேயே மரண மடைந்து விடுகின்றானே அவன் நிச்சயம் சுவனபதியை அடைவான்" எனத்திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

யார் அல்லாஹ்வின் கிருபையைப் பெற்றுக் கொள்ள அருகதையுடையவர் ?

ஒருநாளன்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மேலான வணக்கங்களின் மகிமைக ளைப்பற்றிக் கூறிவருங்கால், "ஆறு கூட்டத்தா ருக்கு இறுதித்தீர்ப்புநாளில் அல்லாஹ்த ஆலா வின் கிருபையால் கார்மானங்கிடைக்கும் என அறிவித்தார்கள்.



ஐந்தாம் ஆண்டுப் பூர்த்தி

இம்மாதத்துடன் நுங்கள் செல்வக்குழவியாம் நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' மாசிகைக்கு ஐந்தாண்டு பூர்த்தியாகி, இனி அதற்கு ஆறாம் ஆண்டு பிறக்கிறது. வாசக நேயர்களாகிய உங்களின் ஆசியையும் ஆசீர்வாதத்தையும் விரும்பி உங்களிடையே வந்த அதனை, பேரன்போடு ஆதரித்த உங்களது தயாள சிந்தையே அதன் வளர்ச்சிக்குக்காரணமாக இருக்கின்றது. இம்மாசிகையானது தனது பெயருக்கேற்ப இஸ்லாத்தின் பாதுகாப்பை முன்னிட்டு அதற்கான தொண்டையே செய்து வருகிறது என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமன்று. இதுபோழ்து நம்முன் நிற்பது இரண்டுவிஷயங்களாகும். ஒன்று இஷாஅத்தே இஸ்லாம், (இஸ்லாமியப் பிரசாரம்)மற்றொன்று ஹிபாஜத்தே இஸ்லாம். (இஸ்லாமிய பாதுகாப்பு) இவ்விரண்டினுள் 'ஹிபாஜத்தே இஸ்லாம்' தான் முதன்மையானதென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். ஏனெனின், "தான்தேறான் பிறனைஎப்படித்தேற்றுவான்" என்ற முதுமொழிக்கேற்ப, பிறமதத்தாரிடம் நமதுசத்திய இஸ்லாத்தைப்போதிக்க முற்படுவதற்குமுன், நாம் நம்மைச் சீர்திருத்திக்கொண்டு உண்மை முஸ்லிமாக இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல்—நாம் நம்மைத்திருத்திக்கொள்ளாமல் பிறரைத் திருத்தமுயலுவோமாயின், நமது முயற்சியில் நாம் வெற்றியடையாமற் போவதுமட்டுமில்லாமல் அதில் தோல்வியடைந்து பிறரால் நகைக்கப்படுவோம். இவ்வாறு தம்மைத்திருத்திக்கொள்ளாமல் பிறரைத்திருத்தும் வேலையில் ஈடுபட்ட நமதுநாட்டுப்பத்திரிகைகளிலொன்று, நேரான பாதை இன்னது என்றும், சத்திய இஸ்லாம் இன்னது என்றும் தெரிந்து கொள்ளாது இஷாஅத்தே இஸ்லாம் (இஸ்லாமியப் பிரசாரம்) செய்வதாகக் கூறிக்கொண்டு, இஷாஅத்தே குப்ர் (குப்ருப் பிரசாரம்) செய்து வருவது உங்களுக்குத் தெரியாத விஷயமன்று. அஃது இவ்விதப் பிரசாரத்தில் ஈடுபட்டதால், உயரிய இஸ்லாமியக்கொள்கைகளிலுள்ள நம் முஸ்லிம்களிற் சிலர்கூட அப்பிரசாரத்தைக் கண்டு மயங்கி, தங்களது நேரிய கொள்கைகளை விட்டு விலகிவிட்டது உங்களுக்குத் தெரிந்த விஷயமாகும். எனவே, குளிக்கப் போனவன் சேற்றைவாரிப் பூசிக்கொண்ட கதையைப் போலவே இப்பிரசாரத்தின் நிலைமையுமாகி விட்டது.

இவ்வாறான நிலைமையில் நாம் யாவரும் அவ்வழிகெட்ட பிரசாரத்தைப் பார்த்துக்கொண்டு இருந்துவிடுவோமாயின், வெகு சீக்கிரத்தில் நம்மவரிற் பலர் வழிவிலகி விடுதலும் கூடும். இவ்விஷயம் நம்பவர் என்று சொல்லிக் கொள்பவர்களைப்பற்றிய விஷயம். இனி, நம்மவர் என்று தங்களைக் கூறிக்கொள்ளாமல் பிறமதத்தவராக இருக்கிற நண்பர்கள் இஸ்லாத்தின் பாலுள்ள குரோத புத்தியினாலோ, அல்லது அறியாமையினாலோ இஸ்லாத்துக்குப் பல துறையிலும் இடைஞ்சல்களை உண்டுபண்ணி வந்தனர். இன்னமும் இடைஞ்சல்களைச் செய்துகொண்டும் வருகின்றனர். எனவே, சென்ற ஐந்தாண்டுகளாக உங்களுடைய இவ்வரும் மாசிகை, இஸ்லாத்துக்கு மாறாகப் பிரசாரம் செய்து வருபவர்களை, நம்மவர் என்றும் பிறமதத்தவர் என்றும் பாராமல், தயவு தாட்சண்யமின்றி தன்னாலியன்ற அளவுக்கு எதிர்த்து வந்திருக்கிறது. இந்த இடத்தில், இவ் அரும் மாசிகை எதிர்த்து வெற்றிபெற்றவைகளை ஒவ்வொன்றாகக் கூறினால் மிகவும் விரிந்து விடுமாதலாலும், அவ்வருந் தொண்டுகளை நாமே எடுத்துக்கூறிக் கொண்டிருப்பது தற்புகழ்ச்சி என்று கருத இடமேற்படுமாதலாலும் அவைகளைப்பற்றி அதிகம் எழுதாமல் விடுத்தனம். ஆயினும், நம்மவரில் சிலருக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு தப்பபிப்பிராயத்தை நீக்க நாம் கடமைப்பட்டுளோம்.

அதாவது, பல்வேறு மதத்தார் நடத்தும் மாசிகைகளில், அநேகம் அருமையான பொது விஷயங்கள் வெளிவர, நம்மவர் நடத்தும் மாசிகைகளில் அவ்வாறான விஷயங்களில்லாமல் இஸ்லாம் மதத்தைப்பற்றியே ஆதிமுதல் அந்தம் வரை எழுதப்பட்டிருப்பதாயும் அதிலும், நம்மவரிற் சிலருடைய பத்திரிகைகளில் காணப்படும் குறைகளையே எடுத்துஎடுத்து மறுத்துக்கொண்டிருப்பதாகவும், இதரமதத்தார்களால் நடத்தப்படும் பத்திரிகைகளில் இவ்வாறான தாக்குதல்களும் மறுப்புகளும் கிடையாதென்றும் சிலர் கூறுகின்றார்கள். அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு விஷயத்தை ஆழ்ந்து கவனிக்காததே குற்றமாகும். எவ்வாறெனில், மக்கள் உலகிற் றோன்றியது வீணுக்காகவும் விளையாட்டுக்காகவுமன்று. நபிமார்களும் வேதங்களும் வந்தது வீணுக அன்று. மக்களுக்கு நேரான வழியினைக்காட்டி, சன்மார்க்க நெறியில் அவர்களை நடக்கச்செய்து. இம்மை மறுமை ஆகிய இரண்டு பேறுகளையும் அடையச் செய்யவே அவைகள் இறைவனாலருளப்பட்டன. மனிதன் இவ்வுலகில் உண்டு, உடுத்தி, உறங்கி செல்வமாகக்காலங்கடத்தி விடுவதுடன் மனிதபிறவியின் லக்ஷியம் முடிந்துவிடவில்லை. இவ்வுலகில் மக்கள் வாழ்ந்த ஜீவியகாலத்தில் அவரவர் செய்த நன்மை தீமைகளுக்கு இறைவனிடம் கணக்கு ஒப்புவித்து அதற்கான பலாபலனை அனுபவிக்கவேண்டியதாக இருக்கிறது. எனவே, இவ்வுலகமானது இந்த அம்சத்தில் பயிரிடும் ஸ்தலத்துக்கு ஒப்பாகவே இருக்கிறது. ஆதலால், இவ்வநித்திய உலகில், மனிதவாழ்க்கை சாசுவதமானதல்ல என்பதையும், நித்திய ஜீவிய உலகத்துக்கு வேண்டியதை இவ்வுலகிலேயே சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்பதையும் நம்மவருக்கு உணர்த்துவது நமது முதற்கடமையாக இருக்கிறது. இவ்விதமான உணர்ச்சியை மறக்கச்செய்வதற்குத் தூண்டும் எந்த இயக்கத்தையும் நாம் மறுத்து, உண்மையை உரைக்க வேண்டியநிர்ப்பந்த மேற்படுவதால், நம்முடைய பாதுகாப்பு வேலையுடன் மறுப்புகளும் செய்ய வேண்டியதேற்படுகிறது.

இரண்டாவதாக, இவ்விதப் பாதுகாப்பு வேலையும் இரண்டுவிதமாக இருக்கிறது. அதாவது, நாம் மேலே கூறியதுபோல், நம்மவர் என்று தங்களைக்கூறிக்கொள்ளும்சிலர் இஸ்லாத்துக்கு மாறாகச்செய்யும் காரியங்கள். பிறமதத்தார்செய்யுங் காரியங்கள் ஆகிய இரண்டில், முதலாவது வகையினர் செய்யுங்காரியத்தினாலேயே முஸ்லிம்களுக்கு அதிகம் கெடுதி ஏற்படக் கூடும். ஏனென்றால், பொதுஜனங்களிற் பலர் அன்னோர் வெளிவேஷத்தில் நம்மைப்போல் இருக்கின்றார்களென்று உணராது "முஸ்லிம் என்று கூறிக்கொள்ளுபவர் இஸ்லாத்துக்கு மாறான விஷயங்களை எழுதுவாரா" என்று நினைத்து, அவர்கள் மாறாக எழுதுவதை உண்மை என நம்பிவிடுவர். இப்படிப்பட்டவர்களின் பிரசாரத்தால் நம்மவரிற் கெட்ட கொள்கைகளும், வழிகெட்ட நினைப்புகளும் மிகச் சுலபமாக அதிதீவிரத்தில் பரவ இடமுண்டு. ஆனால், பிற மதத்தார் இஸ்லாத்துக்குச் சாதகமான விஷயங்களைக் கூறினாலும், அவர்கள் பிற மதத்தாராக இருப்பதால் அவர்கள் கூறுவதை நம்மவர் சுலபத்தில் நம்பமாட்டார்கள். அவர்கள் கூறியவைகள் இஸ்லாத்துக்குச் சாதகமானவைகளா? அல்லது பாதகமானவைகளா என்று கவனித்தபின்னரே அவ்விஷயத்தில் நம்பிக்கை கொள்வர். ஆதலின், பிற மதத்தார் செய்யும் இஸ்லாத்துக்கு மாறான பிரசாரம் நம்மவரிற் தீவிரமாகப் பரவ இடமில்லை. இக்காரணத்தினால்தான் நாம் பிற மதத்தார் செய்யும் இஸ்லாத்துக்கு விரோதமான பிரசாரத்தை இரண்டாந்தரமாகவும், முஸ்லிம் என்று தங்களைக் கூறிக்கொண்டு இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு மாறாகச் செய்யும் பிரசாரத்தை முதன்மையாகவும்கவனித்து அவ்வப்போது தக்க கண்டனங்களையும் மறுப்புரைகளையும் எழுதிவருகிறோம்.

ஆகவே, நாம் இஸ்லாத்தின் பாதுகாப்புக்கான காரியங்களில் நம்மாலானதைப் படிப்படியாகச் செய்துவருகிறோமென்பதை மீண்டும் அறிவித்துக்கொள்வதுடன், வாசகநேயர்களின் அபிமானத்தையும், ஆதரவையும் உதவியாகக் கொண்டு இன்னும் பல ஊழியங்களைச் செய்யவும் தயாராக இருக்கிறோம். ஆனால், ஒரு விஷயத்தை நம்மவருக்கு இச்சமயத்தில் எடுத்துக்காட்டாமலிருக்க நம்மால் முடியவில்லை. இவ்விந்தியநாட்டில் பிறமதத்தார் ஆரம்பம் செய்யும் ஒவ்வொரு காரியமும் தக்க பலமடைந்து, நாளுக்குநாள் விருத்தி அடைகின்றன. நம்மவர்கள் எடுக்கும் காரியம் அவ்வளவு விருத்தியாகுவதில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், பிறமதத்தாரிடமிருக்கும் உணர்ச்சி நம்மவரிடம் இல்லை. பிறமதத்தார் சொற்பமாகப்பேசி அதிகமாகக்

காரியம் செய்கிறூர்கள். நம்மவரில் அவ்வாறுன பேச்சுக்கள் அதிகமாக இருந்தாலும் கிரியாம்சையில் அதனைச்செய்யும் சக்தி மிகக்குறைவாகவே இருக்கிறது. உதாரணமாகப் பத்திரிகைத் தொழிலையே எடுத்துக்கொள்வோம். இம்மாகாணத்தைப் பொருத்தமட்டில் நாம் இவ்விஷயத்தில் புள்ளிவிபரம் எடுத்துக்காட்டினல் அது நன்கு புலனுகாததலின், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட பஞ்சாப் மாகாணத்தை எடுத்துக்கொள்ளுவோம். அம்மாகாணத்தில் முஸ்லிம்கள் நூற்றுக்கு 56 பேர் வீதமிருக்கின்றனர். ஹிந்துக்கள் நூற்றுக்கு 20 பேர் வீதம்தானிருக்கின்றனர். அங்கு ஹிந்துக்களால் 7 தினசரிப் பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. அவைகளுக்கு 53 ஆயிரம் பேர்கள் சந்தாதாரர்களாக இருக்கின்றனர். ஆனல், ஹிந்துக்களைப் பார்க்கினும் இரண்டரை மடங்குக்கு அதிகமாகவுள்ள முஸ்லிம்களுக்கு மொத்தம் அந்த மாகாணத்தில் மட்டும் நான்கு தினசரிப் பத்திரிகைகள் தானிருக்கின்றன. இவைகளுக்கு மொத்தம் 9600 சந்தாதாரர்களேயுள்ளனர். இவர்களின் ஜனத்தொகை விகிதப்படி 19 தினசரிப் பத்திரிகைகளும், $1\frac{1}{2}$ லட்சம் சந்தாதாரர்களும் இருக்கவேண்டும். இவ்வாறிருந்தால்தான் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சம உணர்ச்சியும், சம முயற்சியும் இருக்கிறதென்று கருதமுடியும். பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஹிந்துக்களுக்கு அம்மாகாணத்திலுள்ள முஸ்லிம்களைப் பார்க்கினும் ஐந்து மடங்கு அதிக உணர்ச்சி இருக்கிறதென்பது புலனுகும். இதே நிலைமைதான் இக்காலத்திலுள்ள நமது முஸ்லிம் சமூகத்தின் நிலைமையாக இருந்துவருகிறது. ஆதலின், நம்மவர் இனிமேல் தங்களது உணர்ச்சியையும் செய்கையையும் அதிகப்படுத்திக்கொள்ளமுயல வேண்டும். இதற்கு முக்கிய முதற்சாதனம் நம்மவரில் பத்திரிகை படிக்கும் உணர்ச்சியும், பத்திரிகைப் படிப்போரும் அதிகமாகப் பெருக வேண்டும். ஆதலால், நமது வாசகநேயர்கள் இவ்விஷயங்களையெல்லாம் உணர்ந்து ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரையேனும் சேர்க்க முயலுவார்களாயின், இப்பொழுதிருப்பதைப் பார்க்கினும் இன்னும் அதிகமான பல அபிவிருத்திகளை நமது பத்திரிகையில் செய்து, சமூகத்துக்கு அதிக ஊழியம்செய்ய வசதியாக இருக்குமென்று நம்புகிறோம். வருகிற 6-வது வயதில் உங்களுடைய இவ்வருமை மாசிகை உங்களுக்குப் பல அருந்தொண்டுகளை ஆற்ற எல்லாம்வல்ல ரஹ்மான் துணைபுரிவானுக! ஆமீன்.

இஸ்லாத்தின் முக்கிய கடமை

விசுவாசங் கோண்டவர்களே! நீங்கள் பயபக்தியுள்ளவர்களாகுவதற்காக, உங்களுக்கு,
முன்னுள்ளவர்களின்மீது விதிக்கப்பட்டதுபோல, உங்கள்மீதும் நோன்புகள்
விதிக்கப்பட்டிருக்கின்றன. (திரு குர்ஆன்)

சன்மார்க்க சோதரீர்! இஸ்லாத்தின் முக்கிய கடமைகள் ஐந்தினுள், நோன்பு நோற்பதும் ஒன்ருகும். இந்த நோன்பு எப்பொழுது, எதற்காக விதிக்கப்பட்டது என்ற விஷயம், யாம் மேலே எடுத்துக்காட்டியுள்ள திருவேத வசனத்தை நன்கு கவனிப்பவர்களுக்குத் தெரியாமற் போகாது. ஆனுலும் இவ்வசனத்தில் கூறப்பட்டவைகளையே இதனடியிற் சிறிது விளக்குவாம். இந்த நோன்பானது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றியவர்களான "உம்மத்தே முஹம்மதியா"வுக்கு மாத்திர மில்லாமல், முற்காலத்திலுள்ள வர்களுக்கும் முக்கிய கடமையாக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. இந்த வேதவசனத்தை நாம் முன்னல் வைத்துக்கொண்டு யூதர், கிறிஸ்துவர், ஹிந்துக்கள் ஆகிய சமூகத்தாரின் பழக்க வழக்கங்களை நாம் பரிசீலனை செய்வோமாயின், ஆயத்தில் குறிப்பிட்டுள்ளபடி அவர்களும் நோன்பை அனுஷ்டிக்கிறூர்கள் என்பதை ஒருவாறு தெரிந்துகொள்ள முடியும். ஆனல், அவர்கள் அனுஷ்டிக்கும் நோன்புகளுக்கும் முஸ்லிம்கள் அனுஷ்டிக்கும் நோன்புகளுக்கும் வித்தியாசமுண்டு. இந்த வித்தியாசம் ஆதியிலேயே ஏற்பட்டதா அல்லது இடைக்காலத்தில் ஏற்

பட்டதா என்ற விஷயத்தில் நமது ஆராய்ச்சியைச் செலுத்துவதற்கு இது சமயமல்லவாதலால், அவர்கள் தற்போது நோன்பை அனுஷ்டிக்கும் முறையை மாத்திரம் இரண்டொருவரியில் குறிப்பிட்டுவிட்டு, முஸ்லிம்களின் நோன்பைப்பற்றிக் கவனிப்போமாக. வணக்கத்துக்குரிமை யில்லாதனவாகிய விக்கிரகங்களின் முன்னிலையில் தங்களது பணிவையும், வணக்கத்தையும் அறிவித்துக் கொள்ளும் நோக்கத்துடன் செய்யப்படும் சாமான்யகிரியைகளைப் போலுள்ள ஒருகிரியையின் அந்தஸ்திலேயேதான் அவர்கள் நோன்பு நோர்ப்பது இருக்கிறது. எனவே அன்னோர் அதனை தங்கள் இஷ்டப்படி தாங்களாகவே செய்யும் ஒரு கிரியைப் போலவே கருதிவிட்டனர்; குறிப்பிட்ட ஒரு நேரம்வரை குறிப்பிட்ட ஒருவஸ்துவை உட்கொள்ளாமலிருப்பதை அவர்கள் நோன்பு என்று கருதிவருகின்றனர். உதாரணமாக சாப்பாடு ஒன்றைத்தவிர்த்து ரொட்டி, காப்பி, பலகாரம் முதலியவைகளைச் சாப்பிட்டுக்கொள்வார்கள். அதுவும் காலைச்சாப்பாடு ஒன்றுக்கு மட்டும். இடைவேளை போஜனத்தைக் கொஞ்சம் நாழிகைகழித்து சுமார் 3 அல்லது 4 மணிக்கு இஸ்னானஞ்செய்து அருந்திக்கொள்வார்கள். இன்னுஞ்சிலர், தினசரி ஒருபிடிசாதமாக 15 நாட்கள்வரை குறைத்துக்கொண்டு வருவார்கள். அதற்கப்புறம் ஒவ்வொருபிடி சாதமாக 15 நாட்கள்வரை அதிகப்படுத்திக்கொண்டே வருவார்கள். இன்னினுஞ்சிலர், காப்பி, சாதம் ஆகியயாவற்றையும் அருந்துகிறார்கள். ஆனால்,ஜலத்தை மாத்திரம் அருந்துவதில்லை. சிலர் சாதத்தையும் காப்பியையும் அருந்தமாட்டார்கள். ஆனால், சோடா,ஜலம் பால்முதலியவைகளை அருந்திக்கொள்வார்கள். ஆகவே அவர்கள் இவைகளையெல்லாம் நோன்பு என்று கூறுகிறார்கள். இவ்வாறான நோன்பு நோற்கும் காலத்தில் அவர்கள் விசேஷமான வணக்கம் புரிவதுமில்லை; வழக்கமாக அவர்கள் செய்து வரும் பாபக்காரியங்களையும், தூஷணையான பேச்சுக்களையும் விட்டுவிடுவதுமில்லை. இதேவிதமாக ஸ்திரீசம்சர்க்கத்தையோ, இது போன்ற இதரசெய்கைகளையோ அவர்கள் துறந்து விடுவதுமில்லை. எனவே, பிறமதத்தார் அனுஷ்டித்து வருகிறநோன்பு அல்லது விரதம், பெயருக்கு மாத்திரமே நோன்பு என்றிருக்கிறதே அன்றி, உண்மையில் அவைகள் திருகுர்ஆனில் விதிக்கப்பட்ட நோன்பாக இருக்கவில்லை. எனவே, இறைவன் இவ்வேத வசனத்தில் புதிதான ஒருவகை நோன்பைப் பற்றிப் பிரஸ்தாபித்து விடவில்லை. முதற் காலத்திலுள்ள ஜனங்கள் மீது அவன் கடமையாக ஏற்படுத்திய நோன்பையே அவன் முஸ்லிம்கள் மீதும்கடமையாக ஆக்கினான். ஆனால் நோன்பு நோற்கவேண்டிய உண்மையான முறைகளையும், நோன்பு நோற்பதன் கருத்துக்களையும் நமக்கு இவ் வேதவசனத்தின் மூலமாகக் கற்பித்திருக்கிறான்.

ஜனங்கள் பயபக்தியாளராக இருக்கவேண்டும், பாவம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும், நன்மையான காயரிங்களைச்செய்ய முற்படல் வேண்டுமென்பதற்காகவே குறிப்பிட்ட சில நாட்களில் நோன்பு நோற்கவேண்டுமென்று கட்டளை பிறப்பித்துள்ளான். ஆகவே, நோன்பானது ஜனங்களைப் பாபம் செய்யாமல் தடுத்து, நற்காரியங்களைச் செய்ய உதவிபுரியக் கூடிய ஒரு அருமையான சாதனமாக அமைந்திருத்தல் வேண்டுமென்பது இதனால் நன்கு புலனாகிறது.

முஸ்லிம்காள்! இஸ்லாமானது இயற்கை மதமாக இருக்கிறது; அதில் கூறப்பட்டிருக்கிற விதி விலக்குகள் வீண் மூடநம்பிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு ஏற்பட்டனவல்ல; அவைகள் அநேக சமயங்களைத் தம்முள் அடக்கியிருக்கின்றனவென்ற விஷயங்களை நீங்கள் பலமுறையும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். உண்மையான மனிதர் ஒவ்வொருவரும் இஸ்லாம் மதத்தை அங்கீகரித்து அதில் கூறப்பட்ட சட்டதிட்டங்களின்படி நடந்துவருகிறார்கள். மத துவேஷமற்ற ஜனங்களின் கவனத்தைத் தன் பக்கல் ஈர்த்துக்கொண்டிருப்பது இஸ்லாம் மதம் ஒன்றேயாகும். நோன்பு என்ற பதத்தை வேறு வார்த்தையாகக் கூறுவதாயின் அதற்கு ''பட்டினிகடம்'' என்றும் சொல்லலாம். பட்டினிகடம் என்பதும், நோன்பு என்பதும் வெளிக்கு ஒரே விதமான பொருள்களைக் கொண்ட இரு பதங்களாகும். ஆனால், பட்டினி கடத்துக்கும், நோன்புக்கும், வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது. எனவே! இந்த நோன்பைப்பற்றி நான்குவிதமான விவாதம் உண்டு. அதாவது, நோன்பு நோற்பதாலேற்படும் ஆத்மார்த்த நன்மைகள், ஸ்தூலத்துக்கு ஏற்படும் நன்மை, றமலான் மாதத்தில் நோன்பு நோற்க வேண்டுமென்று

ஏற்படுத்தியதற்குள்ள காரணம், நோன்பின் விதி விலக்குகள் ஆகியவைகளாகும். ஆயினும் இவ்வியாசத்தில் முதலிரண்டு விஷயங்களைப் பற்றி எழுதப்படும்.

தொழுகையைப் போல் நோன்பும், மனிதரின் ஆன்ம வியாதிக்கு அரிய சஞ்சீவியாக இருக்கிறது. ஆகவே அல்லாஹுதஆலாவின் பெயரால் பட்டினியாக மாத்திரம் இருந்துவிடுவது சரியான நோன்பாகமாட்டாது. "நப்ஸே அம்மாரா" அதாவது தீமைகளின்பேரில் இச்சையை உண்டாக்கும் விருப்பத்தையும், மிருக உணர்ச்சியையும் அடக்குவதற்காகவும் இது ஒரு பலமான ஆயுதமாக இருக்கிறது. நோன்பு நோற்பதன் முக்கியநோக்கம் ஆத்மசுத்தியாயிருக்கிறது. இப்பெரும் நோக்கம் சித்தியாகுவதற்கு அதிக அனுகூலமேற்படும் முறையிலேயே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நோன்பு நோற்கவேண்டிய ஒழுங்குமுறைகளை அமைத்திருக்கிறார்கள்.

"ரமலான் மாதம் பிறந்து விட்டால் சூரியோதயத்துக்கு முன்னிருந்து சூரியாஸ்தமனம் வரை வெளிரங்கத்தில் எதையும் சாப்பிடாமலும், பருகாமலும் இருந்துவிட்டால் போதும்; இது பெரிய நோன்பாகிவிட்டது ; இதிலேயே சகல விஷயங்களும் முடிந்துவிட்டது" என்று நினைத்துக்கொள்கிறோம். ஆனால், நோன்பின் அந்தரங்க நோக்கத்தையும், அதன் தாத்பரியத்தையும் நாம் சிந்தித்துப் பார்ப்போமாயின் இதை உண்மையான, முழு அம்சமும் பொருந்திய நோன்பு அல்லவென்று நாமே கூறிவிடுவோம். ஆனால், இவ்வாறு நோன்பு நோற்பதால் சட்டப்படி கடமை நிறைவேறிவிடும். இதையும் ஒருவகையில் வணக்கம் என்று சொல்லலாம். ஏனென்றால், பர்லே, பர்லு என்று நினைத்து நாமாக இதைச் செய்கிறோம் ஆதலால், நோன்பு நிறைவேறிவிடும். ஆயினும், நோன்பின் அகமிய தார்ப்பரியம், அந்தரங்க நோக்கம் இவ்வாறு பட்டினியாக இருப்பதால் மாத்திரம் நிறைவேறிவிடுகிறதில்லை. நோன்பின் முழுப் பலனும் கிடைக்கிறதில்லை. ஆனால் அதனுடைய முழு அம்சத்துடனும் நாம் நோன்பு நோற்பதில்லையென்று நோன்பு நோற்காமல் நம்மவரிற் பலர் இருந்துவிடுகின்றனர். இவ்வாறு இருப்பதும் தவறாகும். அடியுடன் நோன்பு நோற்காமலிருப்பதைப் பார்க்கினும் மேற்கண்ட அளவுக்கேனும் நோன்பு நோற்பது எவ்வளவோ மேலாகும். தவிரவும், ஆரம்ப காலத்தில் இம்மாதிரியான நோன்பு நோற்றால் பின்னர் நாட்செல்லச் செல்ல நோன்பின் சகல அம்சங்களும் பொருந்தியவாறு நோன்பு நோற்க வழி பிறந்துவிடும். நோன்பு நோற்பதில் எவ்வித ஆத்ம முன்னேற்றத்தையோ ஸ்தூல நன்மையையோ காணவில்லை என்று கூறுபவர், பின்னர் ஒரு சமயம் இதன் நன்மைகளைத் தாங்களாகவே வாய்விட்டுக் கூறிவிடுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

மனிதனில் நேர்மையான உணர்ச்சிகளையும், நல்ல எண்ணங்களையும், உயரிய ஒழுக்கங்களையும் உண்டுபண்ணி, ஆத்மாவில் ஏற்படுகிற கலங்கல்களையும் அசுத்தங்களையும் சுத்தப்படுத்துவதுதான் நோன்பு நோற்பதின் நோக்கமாகும். நோன்பு நோற்பதால் உண்மையில் மலக்குகளின் தன்மை யுண்டாகிறது. ஸ்தூல நிலைமையைச் சீர்படச்செய்வதில் நோன்பைப் பார்க்கினும் சிறந்த உபாயம் வேறொன்றுமில்லை. இஃதிவ்வாறிருக்க, உலகத்திலுள்ள இதரமதங்களைக் கவனியுங்கள். மனிதனின் இயற்கைத் தன்மையிலுள்ள மிருக சுபாவத்தை அடக்கி, மலக்குகளின் தன்மையை அபிவிருத்தி செய்வதற்காக அம்மதங்கள் மனித ஸ்தூலத்துக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கும் முறைகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்! இஸ்லாம் மதம் இப்படிப்பட்ட கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. எனவே, மனித ஸ்தூலத்துக்கு ஒரு பெரும் ஊன்றுகோலாக இஸ்லாம் அமைந்திருக்கிறது. 'நப்ஸேஅம்மாரா'வைச் சீர்திருத்தம் செய்யவே இஸ்லாம் மதம் விரும்புகிறது. புத்த மதத்தாரும், ஹிந்துமத சாதுக்களும் தங்களுடைய 'நப்ஸே அம்மாரா'வை அடக்குவதற்காகத் துறவறம்' பூண்டு, தங்களது வீடு வாசல்களைத் துறந்து கானகஞ் சென்று கடுந்தவம் செய்கிறார்கள் ; யோக நிஷ்டையிலிருக்கிறார்கள் ; மூச்சை அடக்கி நாசியோகம் புரிகின்றனர் ; மரக்கிளையில் தலைகீழாகத் தொங்குகின்றனர் ; ஒற்றைக் காலில் நின்று வணங்குகின்றனர். இதனால் சிலருக்கு கைகால் விளங்காமல் சூகை பிடித்துவிடுகின்றது. இவ்விதமான பயங்கர முறைகளைச் செய்ய நமது இந்தியாவில் மிகச் சிலரே துணிந்து வருவர். இவர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகக் கணித்துப் பார்த்தாலும் சில ஆயிரம்பேர்களுக்குமேல் அதிகம் இருக்க மாட்டார்கள். இஸ்லாத்தின் முறையைச் சிந்தித்துப் பாருங்கள்! எவ்வளவு சுலபமான

முறை, யாவரும் எக்காலத்திலும் சிரம மில்லாமல் அனுஷ்டிக்கத்தக்க முறையாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட பாக்கியத்தை அடையக் கொடுத்துவைத்த அவ்விறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

'நப்ஸேஅம்மாரா' தான் மனிதனுக்குப் பெரிய விரோதியாகவுள்ளது. அது கெட்ட உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் மனிதனுக்கு உற்பத்திசெய்து கெட்ட நடவடிக்கைகளைச் செய்யத் தூண்டுகிறது. இதுதான் ஷைத்தானுக்கு மிகவும் பலமான ஆதரவளிக்கிறது. ஷைத்தானின் பிரதிநிதியாக இருந்து மனிதனைக் கெடுப்பதும் இதுதான். ஆகவே, எவர் இந்த 'நப்ஸேஅம்மாரா'வை ஒழுங்கு படுத்தி, தனக்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறாரோ அவர் உலகில் நல்லவராக விளங்குகிறார். இதனைக் கட்டுப்படுத்தாமல் இதற்குக் கட்டுப்பட்டு நடப்பவர் பாபம் செய்பவராகின்றார். இதுபோல், மனிதனில் இன்னொருவிதமான தன்மையுமிருக்கிறது. அதற்கு மலக்கூத்தியின் தன்மை என்றுபெயர். இது மனிதனுக்கு நல்ல எண்ணங்களையும், நல்ல உணர்ச்சிகளையும் உற்பத்தி செய்து நல்ல காரியங்களையே செய்ய எப்பொழுதும் தூண்டுகிறது. எனவே, மனிதனிலுள்ள முரண்பட்ட இவ்விரு தன்மைகளினும் எப்பொழுதும் போட்டி இருந்து கொண்டே இருக்கிறது. எனவே, மனிதனுக்கு நேரான வழியைக் காண்பித்து, இம்மை மறுமைப் பேற்றுக்கான துறையில் மனிதனை இறக்கி விடுவதற்காக வந்த இஸ்லாம் மதம், தன்னுடைய கட்டளைகளில் 'நப்ஸேஅம்மாரா'வை அடக்கி மலக்கூத்தியின் தன்மைக்குப் பலம் கொடுக்கும் முறைகளையும் கற்பித்திருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் நோன்பு நோற்பது மிகவும் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ஆகவே, நோன்பு நோற்பவர்கள் காலையிலிருந்து மாலை வரை பட்டினியாக இருப்பது மட்டுமின்றி நல்ல காரியங்களையே செய்வதுடன் நல்ல விஷயங்களையே பேசவும் வேண்டும். அல்லது இவைகளை முற்றிலும் செய்ய முடியாவிட்டாலும் இவைகளைச் செய்வதற்காக முயற்சியேனும் எடுக்க வேண்டும்.

"எவன் பொய் சொல்வதையும், அந்தப் பொய்யின் பிரகாரம் நடப்பதையும் விடவில்லையோ அவன் (நோன்பு நோற்பதாகக் கூறிக் கொண்டு) சாப்பாட்டையும் ஜலத்தையும் அருந்தாமல் விட்டுவிடுவதில் அல்லாஹு தஆலாவுக்கு எவ்வித ஹாஜத்துமில்லை" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

சோதரீர்! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள இந்த ஹதீதை நன்ருக ஊன்றிக் கவனியுங்கள். நோன்பு நோற்பதின் அசல் தத்துவமும் நோக்கமும் என்னவென்பது இந்த ஹதீதினுல் நன்குதெரிந்து கொள்ளலாம். எனவே பொய் சொல்லல், அது போன்ற செய்கைகளைச் செய்தல் ஆகியவைகளை விடாதவர்கள் நோன்பு வைப்பதால் பயனில்லை என்ற கருத்து இதில் விளங்குகிறது. பொய் பேசிக்கொண்டும், பொய்யாக நடந்து கொண்டுமிருப்பவர் நோன்பு நோற்பதாகக்கூறி சூரியோதயத்துக்கு முன்னர் இருந்து, சூரியாஸ்தமனம்வரை உண்ணுமலும் பருகாமலும் இருப்பதை இறைவன் விரும்பவில்லை என்பதை நாயகமவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். எனவே, நோன்பு, தொழுகை, தர்மம் முதலிய கிரியைகளிலெல்லாம் நம்முடைய பணிவும், பயபக்தியும்தான் இறைவனின் முக்கிய நோக்கமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறோம். ஆகவே, பயபக்தியும், பணிவுமின்றி நாம் வெளிவேஷத்தில் இத்தியாதி கிரியைகளைச்செய்து நடிப்பதில், அவைகளில் நாமடைய இருக்கிற பலன்களை முற்றிலும் அடைய இடமில்லை என்பதும் பிரத்தியக்ஷம். ஆகவே, றமலான் மாதத்தில் நாம் நோன்பு நோற்பதுடன் பொய், கோள், புறம் முதலிய சிறிய பெரிய பாவங்களைச் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதுடன், வணக்கம், தொழுகை முதலிய நன்மையான காரியங்களையும் அவசியம் செய்தல்வேண்டும். இவ்வாறு செய்தால்தான் 'நப்ஸேஅம்மாரா'வை அடக்கி, நம்மிலிருக்கிற மலக்கூத்தியின் தன்மைக்கு நாம் பலம்கொடுக்க முடியும். ஆகவே! வெளிரங்கமான கிரியைகளைச் செய்யும் சோதர சோதரிகாள்! றமலான் மாதம் முழுவதிலும் பகல் காலத்தில் உண்ணுமலும் பருகாமலுமிருப்பதை மட்டிலும் கைகொண்டு நோன்பினுலடைய இருக்கும் பலன்களைத் தவரவிடாமல் பெற்றுக்கொள்ளலாமென எதிர் பாராமல், அதற்கான சகல அம்சங்களுடனும் நோன்பு நோற்க முயலுவீர்களாக. இவ்விதமான காரியாதிகளைச் செய்வதால் நாம் புண்ணியத்துக்காளானவர்களாக மாறுவதால் நாம் யாவரும் சுவர்க்கலோகம் செல்வதற்கும் அருக

ராவோம். நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள், "றமலான்மாதம் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன, இன்னும் நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன, ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன" என்று கூறி இருக்கிறார்கள்.

முஸ்லிம்காள்! நோன்பானது நமது ஆத்மாவைப்பரிசுத்தப்படுத்தி, நமக்குச் சீர்திருத்தம் செய்வதில் எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். அந்தோ? இஸ்லாம்மதத்தைத் தழுவாத பிறமதத்தாரும், பௌதீகசாஸ்திரத்திலேயே மூழ்கி இருக்கிற ஐரோப்பியரும் கூட, நோன்பின் மாட்சியையுணர்ந்து அதைக் கடைப்பிடிக்க முன்வந்திருக்கும் இக்காலத்தில், நம்மவரிற் பலர் அதனைக் கடைப்பிடியாது அலட்சியமாக இருந்துவருகின்றனர். இப் பிறமதவாதிகள் நமது மதத்தில் கூறப்பட்ட சகல அம்சத்துடனும் அதனை அனுஷ்டிக்க முன்வரவில்லையென்றாலும், அதிலுள்ள சில விஷயங்களைமட்டிலும் கடைப்பிடித்து அநேகம் நன்மைகளை அறிந்துகொண்டார்கள். அதிகத் தூரம் செல்லவேண்டியதில்லை. நமது இந்தியநாட்டிலுள்ள ஸ்ரீ மோகனதாஸ் கரம்சந்த் காந்தியை எடுத்துக் கொள்வோம். இவர் பல சமயங்களிலும் 15-நாள், 21-நாள், 1-வாரம் என்று உண்ணாவிரதத்தை அனுஷ்டிக்கிறார். இவ்வுண்ணாவிரதத்தினால் தமது ஆத்மசுத்தியைப் பலப்படுத்துவதாகக் கூறுகிறார். சில வருஷங்களுக்கு முன்னர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக அவர் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தபோது, "நான் இந்த ஆத்மீக விரதத்தில் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறேன்; இதில் நான் வெற்றியடைந்து விடுவேன்; ஏனென்றால், விரதமிருப்பது பரிசுத்தமான ஒரு ஆயுதமாக இருக்கிறது; இந்தப் பாடம் ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் நோன்பு என்று ஏற்படுத்தியதன் மூலமாக எனக்குக் கிடைத்திருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

நோன்பின் மூலமாக தேகத்துக்கு ஏற்படும் சுகத்தையும், அதனால் பல வியாதிகள் நீங்குவதையும், அநேக வியாதிகள் வரவிடாமல் தடுப்பதையும்பற்றி ஐரோப்பாவிலுள்ள அறிஞர்களில் பலர், பல புத்தகங்களை இயற்றியுள்ளார்கள். இது விசேஷ வைத்தியமுறை என்பதாக ஐரோப்பியர் கருதுகிறார்கள். பிற மதத்தார் இதன் அருமை பெருமைகளை உணர்ந்து இதைப் போற்றி அனுஷ்டிக்க முன்வரும்போது, முஸ்லிம்களாகிய நாம் இதனை மதச் சட்டப்படி அனுஷ்டிக்கக் கடமைப்பட்டிருந்தும், இதன் பலன்களை உணருவதில் சிந்தைகொள்ளாமலும், அனுபவப்பூர்வமாக இதன் பலனை அடைய முயற்சிக்காமலும் இருப்பது எவ்வளவு மதியீனம் என்பதைக் கவனியுங்கள்! எனவே இனியேனும் நம்மவர் இவ்விஷயத்தில் சிரத்தைகொண்டு அனுபவப்பூர்வமாக இதனை அடைய முயலுவார்களாக!

றமலான் மாதமும் நோன்பும்

இஸ்லாத்தின் முக்கிய கடமைகள் ஐந்தினுள் நோன்பு நோற்பதும் ஒன்று என்பதை நம்மவர் அறிவர். ஆனால் அந்த நோன்பை றமலான் மாதத்தில்தான் நோற்கவேண்டும் என்று கட்டளையிட்டதற்கு யாதுகாரணம் என்பதைச் சிலர்தாம் அறிவர். திருகுர்ஆன் இஸ்லாத்தின் சத்தியவேதமாகும். இவ்வேதத்தில்தான் படித்தவன், பாமரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், ஸ்திரீ, புருஷன், அரசன், ஆண்டி என்ற பாகுபாடின்றி யாவரும் சம உரிமையுடன் சந்தோஷமாக இவ்வுலகிலும் அவ்வுலகிலும் வாழ்வதற்கான சட்டதிட்டங்களும், வரம்புகளும், விதி விலக்குகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இத்திருமறை இறங்கிய பின்னர்தான், உலகத்தில் மனிதருக்குள் ஏற்றத்தாழ்வில்லை என்பதும், ஸ்திரீகளும் மனிதர் தாம், அவர்களுக்கும் மனித உரிமைகளில் பங்கு உண்டு என்ற விபரமும் உலகிற்குப்புலப்பட்டது. இத்திருவேதம் இறங்கியபின்னர்தான் அடிமை வியாபாரம் குறைந்தது. ஸ்திரீகளின் அந்தஸ்து உயர்ந்தது. அடிமைகள் எனச்சிலரால் கருதப்பட்டுவந்தவர்களிற் பலர் பேரறிஞர்களாகவும், தளகர்த்தர்களாகவும், ஞானசிரியர்களாகவும்,

அரசர்களாகவும் ஆயினர். ஆகவே உலகத்தில் யாவருக்கும் அபயம் அளித்ததே இத்திருமறை தான் என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். அது இவ்வளவு நேர்மையான சமத்துவத்தை உற்பத்திசெய்ததுமட்டுமில்லாமல் சேர்ந்துவாழும் தன்மையை, மனிதசகோதரத்துவத்தை, உலகத்திலுள்ள யாவரும் உடன் பிறந்த சகோதரர்களைப்போல்பாவிக்கும் எண்ணத்தை உற்பத்தி செய்து அதை நிலைநிறுத்திவைத்தது. உலகத்திலுள்ள ஜனங்களிற் நஷ்டகெட்டவர்கள் என்று கருதப்பட்டுவந்த ஜனங்கள், உலகத்திலுள்ளயாவரிலும் அநாகரீகம் வாய்ந்தவர்கள் என்று மதிக்கப்பட்டு வந்த ஜனங்கள், உலகத்திலுள்ள ஜனங்களில் கல்வி அறிவில் மிகக் குறைந்தவர்கள் என்று சொல்லப்பட்டு வந்தவர்கள் இத்திரு குர்ஆனின் போதனைகளின்படி நடந்ததால் வெகு சொற்ப காலத்துக்குள் நாகரீகங்களுக்கு அஸ்திவாரக் கர்த்தாக்களாகவும், பலகலைகளையும் உற்பத்தி செய்பவர்களாகவும், உலகத்திலுள்ள நவநவமான அற்புதங்களைக் கண்டுபிடித்து அறிவித் தவர்களாகவும், அரசர்களாகவும், வெற்றி வீரர்களாவும்மாறி உலகம் போற்றும் உத்தமர்களாயினர். ஆகவே, உலகத்தாருக்குக் கிடைப்பதற்கரிய பெரும் பொக்கிஷமென்றே இத்திருமறையை இயம்பலாம்.

இத்தகைய சிரேஷ்டமான வேதம் வெளியாக்கப்பட்ட தினத்தை மானிடர் திருநாளாகக் கொண்டாடக் கடமைப் பட்டுள்ளனர். ஏனென்றால், சாதாரணமாக ஒரு நாட்டார் அல்லது ஒரு சமூகத்தார் தங்களுக்கு ஒரு வெற்றியோ அல்லது சுதந்தரமோ கிடைத்த நாளை வருடந்தோறும் கொண்டாடி வருவதை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். ஐரோப்பாவில் நடைபெற்ற மகா யுத்தம் நவம்பர் மாதத்தில்தான் முடிவடைந்தது. அன்று முதல் இன்றுவரை இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தேசங்கள் யுத்த நிறுத்தநினம் என்று நவம்பர்மீ 11-ந் தேதியை கொண்டாடி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதுபோலவே, இத்திருவேதம் றமலான் மாதத்திலேயே முதல் முதலாக அருளப்பட்டதால் இந்த மாதம் மானிடர்களுக்கொரு திரு மாதமாக அமைந்திருக்கிறது. இதனாலேயே இறைவன் இந்த மாதத்தை வணக்கத்துக்குரிய மாதமாக, தானதருமங்கள் நிறைந்த மாதமாக, தனது கருணைமாரி சொரியும் மாதமாக ஏற்படுத்தி, யாவரும் இந்த மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும் என்று திட்டஞ் செய்திருக்கிறான். இதனையே இறைவன் தனது திருமறையில் "றமலான் மாதம்—இதில்தான் திருகுர்ஆன் இறக்கப்பட்டது" என்று கூறிவிட்டு, திருகுர்ஆனின் அருமை பெருமைகளை விளக்கி இருக்கிறான். அதற்கப்பால் "ஆகவே உங்களில் எவர் அந்த மாதத்தைப் பெற்றுக் கொள்கிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கவேண்டும்" என்று கட்டளையிட்டுள்ளான்.

நிற்க, றமலான் மாதம் பிறைக் கணக்கிலல்லவா வருகிறது? இது சந்திர வருஷக் கணக்கையல்லவா தழுவி இருக்கிறது. ஏன் சூரிய வருஷக் கணக்கைப்பின்பற்றி டிசம்பர் அல்லது சித்திரை என்று ஏதேனும் ஒரு மாதத்தை அதாவது திருகுர்ஆன் இறக்கப்பட்ட சூரிய மாதத்தைக் கணக்கிட்டு, அதில் நோன்பு நோற்கும்படி கட்டளையிட்டிருக்கக் கூடாது என்று நினைக்கக்கூடும். சூரிய மாதங்களானவை, சூரியனின் கால மாறுபாடுகளையும் நடமாட்டத்தையும் கவனித்து நிர்ணயிக்கப்பட்டவை. அவைகளில் ஒரு மாதத்தைக் கணக்கிட்டு வைத்தால் அதே காலத்தில்தான் உலகம் முடியும்வரை நோன்பு நோற்க வேண்டியதாக இருக்கும். உதாரணமாக டிசம்பர் போன்ற ஒரு மாதத்தை எடுத்துக்கொள்வோம். இம்மாதம் இந்தியா, சிலோன் போன்ற தெற்குப் பிரதேசங்களுக்குக் குளிரான காலமாக இருக்கிறது. ஐரோப்பா போன்ற வடதிசையிலுள்ள நாடுகளுக்கு வசந்தகாலமாக இருக்கிறது. வேறு சில தேசங்களுக்கு உஷ்ணகாலமாக இருக்கிறது. இம்மாதத்தில் நோன்பு நோற்பது கடமையாக விதிக்கப்பட்டிருந்தால், ஒரு நாட்டினர் உஷ்ண காலத்தில் நோன்பு நோற்கும் கஷ்டத்தையும், இன்னொரு நாட்டினர் குளிர்காலத்தில் நோன்பு நோற்கும் தொந்தரவையும், இன்னொரு நாட்டினர் வேறுவிதமான ஒரு கஷ்டத்தையும் எப்பொழுதும் அனுபவிக்க நேரிடும். ஆனால், சந்திர மாதமாக இருந்தால் ஒவ்வொரு நாட்டினரும் உஷ்ணகாலத்திலும், குளிர்காலத்திலும், மாரிகாலத்திலும், வசந்தகாலத்திலும் நோன்பு நோற்கும் சிரமத்தை அனுபவிக்கச் சந்தர்ப்பமேற்படும். ஆகவே, வணக்கம் சம்பந்தமான கிரியைகளுக்கு உலகத்தாரனைவரும் சமமான கஷ்டங்களையும், சமமான பலனையும் அனுபவிப்பதற்குச் சந்திர மாதம்தான் மிகவும் பொருத்தமானதாகும். ஆதலால், இறைவன்

மக்களுக்கு நேரான வழியைக் காட்டி சிறப்புற்ற இந்த றமலானில் நோன்பு நோற்க நல்லுதவி புரிந்தருளுவானாக! மானிடர்களாகிய நாம், கேவலம் உலகவிஷயத்தில் ஒரு நன்மை ஏற்பட்டால் அத்தகைய ஒருநாளை நாம் புனிதமாகக் கொண்டாடும் சுபாவமுள்ளவர்களாக இருக்கிறோம். ஆதலின், நமது இம்மை மறுமைப்பேற்று இனியில்லாவண்ணம் அருள் நிறைந்த வேதம் அருளப்பட்ட இம்மாதத்தின் மகிமையையும் சிறப்பையும் கருதி இம் மாதத்தில் நோன்பு நோற்று இகபர சாதனங்களை அடைவோமாக!

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

பலதார மணம்

(கான்பூர் ஜமிய்யத்துல் உலமா காரியதரிசி மௌலானா அப்துல் ஹாமித்சாகிப் பதாயூனி)

எனது பழைய நண்பர் ஒருவர், இப்பொழுது சில வருஷங்களாக ஐரோப்பியநாகரீகத்தில் மோகங்கொண்டு சில மாதங்களாக, நான் ஹைதராபாதில் இருந்தசமயம், இஸ்லாம் மதத்தில் பலதார மணம் அனுமதிக்கப்பட்டிருப்பதைப் பற்றி தமக்குள்ள ஆக்ஷேபனைகளை எழுதி அனுப்பியதுடன், பகுத்தறிவுக்குத் தக்கவிதமாக யுக்திப்படியும், சுருதிப்படியும் தக்க ஆதாரத்துடன் பதில் எழுதி ஏதேனுமோர் பிரபல பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டுமாகக் கேட்டிருந்தார். எனக்கு இது சம்பந்தமாக விரிவான பதில்கூற சாவகாசமில்லாமலிருந்தது. ஆதலால், உடனே இதற்குப் பதில் கூறமுடியவில்லை. ஆயினும், எனது நண்பர் பலமுறையும் இதைப்பற்றிக் கடிதம் எழுதிக்கொண்டே இருந்ததால் சுருக்கமாக இதற்குப் பதில்கூற முன்வந்தேன். இது சம்பந்தமாக இந்தியாவில் பலமுறை விவாதம் நடந்திருக்கிறது. உருதுபாஷையில் பல புத்தகங்கள் இதைப்பற்றியே எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஏதேனுமொரு நூலை மேலெழுந்தவாரியாகவேனும் எனது நண்பர் படித்திருப்பாராயின் அவருக்கு இதைப்பற்றிய சந்தேகமே ஏற்பட்டிருக்காது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஐரோப்பிய நாகரீகத்தில் மோகங் கொண்ட சில சகோதரர்கள், சுதேச பாஷைகளிலுள்ள புத்தகங்களைப் படிப்பதுமில்லை, படிக்க இஷ்டப்படுவதுமில்லை. இங்நிலைமையில் இருகக்ஷியின் ஆக்ஷேப சமாதானங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல் ஒருதலைப்பக்ஷமாக இருந்து முடிவு செய்தும் விடுகின்றனர். இவர்களெய்யும் ஆக்ஷேபனை வருமாறு:—

கேள்விகள்.

(1) இஸ்லாம் மதம் ஸ்திரீகளை விசாலமில்லாத நெருக்கமான இருண்ட அறையில் கட்டுப்படுத்திவைத்து, ஸ்திரீ இனத்துக்குரிய நியாயமான உரிமைகளை அடைய விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.

(2) ஒன்றுக்கு மேற்பட்டு அதிகமானமனைவிகளை வைத்துக்கொண்டிருப்பது பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியமாகும்? பலதார மணத்தை பகுத்தறிவு ஒப்புக்கொள்ளவேயில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமஉரிமை அளிக்கவேண்டுமென்பதையேபகுத்தறிவு வற்புறுத்துகிறது. ஒரு ஸ்திரீ ஏககாலத்தில் இருபுருஷர்களை விவாகம் செய்துகொண்டிருக்க அனுமதிப்பதாக இருந்தால், ஆடவர்கள் பலதார மணம் செய்துகொள்ள அனுமதிக்கலாம். அவ்வாறில்லையாயின் பாரபக்ஷம் காட்டுவதாக ஏற்படும். வாழ்க்கையிலும் எவ்வித ஒழுங்குமுறையோ சந்தோஷமோ ஏற்படுவதற்கில்லை. எவ்வாறாயினும், பலதார மணம் செய்வது யுக்திக்குப் பொருத்தமாக இல்லை.

பதில்கள்.

(1) ஸ்திரீ புருஷர் இருவருக்கும் சமத்துவ உரிமை இருக்கவேண்டும் என்று மேனாட்டு நாகரீகத்தில் மூழ்கி இருப்பவர்கள் கூறும் வாதங்களை நன்கு கவனித்துப் பார்த்தால், அவர்களுடைய வாதம்தான் புத்திக்குப் பொருந்தாத விஷயமாகத் தோன்றுகிறது. ஏனெனில், ஸ்திரீ புருஷாள் ஆகிய இருவரின் திரேக அமைப்பும் ஒன்று போலில்லை. அங்க அடையாளங்களும் ஒன்று போலில்லை. இருவகுப்பாருக்கும் வெவ்

வேறு விதமான அவயவங்களிருக்கின்றன. இவ்வித நிலைமையில் இருசாராரின் பழக்க வழக்கங்களும், உணர்ச்சிகளும் உரிமைகளும் ஒன்றுபோலிருக்கவேண்டுமென்று கருதுவது எவ்வாறு புத்திக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை அவர்கள் சிந்தித்துப்பார்க்கட்டும்.

(2) ஆடவன் இயற்கையிலேயே ஸ்திரீகளைப் பார்க்கினும் அதிகச் சக்தியும் பலமும் பொருந்தியவனாக இருக்கிறான். பெரிய பெரிய யுத்தகளங்களுக்கு ஆடவர்கள் மிகச் சுலபமாகச் செல்வதற்கான வசதிகளை இறைவன் இயற்கையாகவே கொடுத்திருக்கிறான். இம்மாதிரியான சக்தியும் துணிச்சலும் ஸ்திரீ இனத்துக்கு எவ்வளவோ பிரயத்தனம் செய்தாலும் ஏற்படுகிறதில்லை. ஸ்திரீ, ஆடவர்களுக்கு அடங்கி இருக்க வேண்டியவள்தான் என்பதை அவர்களின் சிருஷ்டி வடிவமே அறிவித்துக் கொண்டிருக்கிறது.

மனித உரிமை என்ற விஷயத்தில் ஸ்திரீ புருஷரிருவரும் சமபங்காளிகள் தாம் என்பதிற் சந்தேகமில்லை. ஸ்திரீகளை ஆடவர்கள் மிருகங்களைப்போல் தங்களுடைய உடமைப் பொருளென மதித்து அவர்களுக்கு அநீதி அக்கிரமஞ் செய்தலும், மிருகங்களை நடத்துவது போல் அவர்களை நடத்துவதும் யுக்திக்குப் பொருந்தியதாகவுமில்லை. இவ்வாறு நடத்துவதை இஸ்லாத்தின் திருநபி (ஸல்) அவர்களின் போதனை ஒப்புக்கொள்ளவுமில்லை.

இஸ்லாத்துக்கு முன்னும் பின்னும் ஸ்திரீகளின் நிலைமை

மூழ்கிப்போன மரக்கலத்துக்கு ஒப்பாக இருந்த ஸ்திரீ இனத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியிற் கொண்டுவந்து கரை சேர்த்தார்கள். துர் அதிர்ஷ்டம் வாய்ந்த இவ்வினத்தாருக்கு எவ்விதமான தீங்குகளெல்லாம் செய்யப்பட்டு வந்தன என்பதை இஸ்லாம் மதத்துக்கு முன்னுள்ள சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் தெரியவரும். இவ்வினத்தாரின்மீது ஆடவர்கள் பலவிதத்தாலும் துன்பங்களை உண்டாக்குவதுதான் அக்காலத்தில் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததென்று அவர்கள் கருதி இருந்தார்கள் என்பது புலப்படும்.

கிரீஸ் தேசத்தில் பலஹீனமான ஸ்திரீகளை உயிருடன் விட்டுவைப்பது கேவலமாகக் கருதப்பட்டு வந்தது. ஆதலால், எவ்விடத்திலேனும் பலஹீனமான, சக்தியற்ற ஸ்திரீ காணப்படுவாளாயின் உடனே அவள் கொல்லப்பட்டு விடுவாள். உலகமனைத்திலும் நாகரீகத்தில் முதிர்ந்த தேசமெனக் கருதப்படுகிற இங்கிலாந்து தேசத்தில், ஸ்திரீகளின் நிலைமை எவ்வாறிருந்தது என்று சிந்தித்துப்பாருங்கள். அங்கும் ஸ்திரீகளை ஊழியக்காரர்களின் கூட்டத்திலேயே சேர்த்திருந்தார்கள்.

“ஹஜ்ரத் ஆதம் அலை ஹிஸ்ஸலாமவர்கள், ஸ்திரீயினால்தான் பாபம்செய்ய நேரிட்டது. அதற்குப் பரிகாரமாக ஹஜ்ரத் ஈஸா நபியவர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். ஆகவே, ஸ்திரீயிடத்தில் பிறந்தவன் பாபமுள்ளவனாகிறான். ஆதலால், ஸ்திரீயானவள் தண்டிக்கப்படத் தகுந்தவள். மேலும் அவள் வாரிசு பாத்திய உரிமைக்குத் தகுந்தவளல்ல, அவளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது” என்றும் கிறிஸ்துவர்கள் நினைத்திருந்தார்கள்.

“ஸ்திரீயானவள் இயற்கையிலே பரிசுத்தமற்றவளாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள்” என்று அப்போஸ்தலர் கூறியிருக்கிறார். “ஆடவர்களுக்குச் சமமான உரிமையை ஸ்திரீகளுக்கு அளித்தால் உலகம் ஒழுங்காக நடைபெறாது; அவள் தன்னுடைய எண்ணத்தாலும், துணிச்சலாலும் ஆடவர்களுக்குச் சரியாக இருக்கமுடியாது” என்று ஜெர்மனி தேசத்துப் பிரசித்திபெற்ற தத்துவசாஸ்திரி ஒருவர் கூறியிருக்கிறார். இவ்விதமாக கிரீஸ், ஈரான், இந்தியா, அரப் ஆகிய தேசங்களிலெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் காலத்துக்கு முன்னர் ஸ்திரீகளின் நிலைமை எவ்வாறிருந்தது என்று கவனியுங்கள்? இந்த தேசங்களில் ஸ்திரீகள் நடத்தப்பட்ட காக்ஷி இன்றைக்கும் சரித்திரங்களிலிருந்து வருகிறது.

ஆனால், கி. பி. 571-ம் வருஷத்தில் மனிதத்தன்மை என்பதில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. உலகத்தாரனைவருக்கும் கருணையாகத் தோன்றிய ஸர்வரே காயினாத் (ஸல்.) அவர்கள், ஸ்திரீ வகுப்பாரின் உன்னதத்தைப் பற்றிச் சிந்தனை செய்யாமலிருக்க முடியுமா? எனவே நாம் மேலே சுருக்கமாகக் கூறிய குறைகளையெல்லாம் நாயகம் (ஸல்.) அவர்கள் நிவர்த்தி செய்து ஸ்திரீகளின், அந்தஸ்தை நிலைநிறுத்தினார்கள். அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும், அவர்களை நியாயமாக நடத்த வேண்டும், அவர்களை அற்பமாக மதித்துக் கொலை செய்தல்,

சிறைவாரிச் செல்லுதல் முதலிய யாவற்றையும் அகற்றினார்கள். ஸ்திரீகளின் உரிமைகள் இன்னின்னவையென்று விவரித்துக் கூறினார்கள். திருகுர்ஆனில் இது சம்பந்தமாகக் கூறப்பட்ட இரண்டொரு விஷயங்களை உதாரணத்துக்காக ஈண்டு எடுத்துக் கூறுகிறேன். "ஆடவர்களுக்கு ஸ்திரீகளினிடத்தில் உரிமைகள் இருப்பது போலவே, ஸ்திரீகளுக்கு ஆடவர்களிடத்திலும் உரிமைகளிருக்கின்றன. ஆனால் ஸ்திரீகளைப்பார்க்கினும் ஆடவர்களுக்கு ஒரு அந்தஸ்து அதிகமாக இருக்கிறது. ஆடவர்கள் ஸ்திரீகளுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். அல்லாஹுதஆலா ஒருவரைப் பார்க்கினும் ஒருவருக்கு மேன்மையளித்திருக்கிறான். இன்னும், ஸ்திரீகளுக்காக ஆடவர்கள் செலவும் செய்கிறார்கள்."

ஸ்திரீகளை நேர்மையாக நடத்த வேண்டும்

"அவர்களுடன் நேர்மையாகக் கூடி வாழுங்கள்" என்றும் இறைவன் திருமறையில் கூறியுள்ளான். இதல்லாமல், ஒரு தாரத்துக்கு மேல் பலதாரங்களை மணக்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தவில்லை; அதை பர்லாக ஆக்கவுமில்லை. எனவே எந்தெந்த நிபந்தனைகளின் பேரில் பலதார மணத்தை இறைவன் அனுமதித்திருக்கிறானென்பதைக் கவனியுங்கள்.

"நீங்கள் நீதிசெய்ய முடியாது என்று சந்தேகப்பட்டால் அப்பொழுது ஒருத்தியை மட்டிலும் மணந்து கொள்ளுங்கள்." இதில், பலதாரமணம் செய்வதற்கு அந்த மனைவிகளிடத்தில் நீதியாக நடந்து கொள்ளவேண்டும் என்பதை முக்கிய நிபந்தனையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. திருகுர்ஆனில் இன்னுமொரு இடத்தில் "நீங்கள் நீதி செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டாலும் ஸ்திரீகளுக்கிடையில் உங்களால் நீதி செய்யவே முடியாது. ஆகவே, நீங்கள் ஒருபக்கம் முற்றிலும் சார்ந்து மற்றொருவளை (புருஷனுடன் வாழ்பவளாகவோ, புருஷனில்லாதவளாகவோ இல்லாமல் இரண்டுக்கும் மத்தியில்) தொங்கிக்கொண்டிருப்பவளைப்போல் விட்டுவிடாதீர்கள்" என்றும் கூறியுள்ளான்.

குடும்ப நிர்வாகம் ஏகபத்தினி இருக்கும் வீட்டில்தான் நல்லவிதமாக நடைபெறுகிறதென்பதைப் பெரும்பான்மை குடும்பங்களின் நிலைமையிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். ஆனால், பல முக்கிய அவசியங்களைக் கருதி இஸ்லாம் மதம், அவசியம் நேர்ந்துவிடின் பலதாரமணத்தையும் அனுமதித்திருக்கிறது. இவ்வனுமதியானது ஏகபத்தினி விரதத்துக்கு மாறானதாகவுமில்லை. ஆனால், பலதார மணம் செய்வதற்காக ஏற்படும் அவசியத்தை நிறைவேற்றாமலிருப்பதால் நிகழும் கெடுதியையும், பலதார மணம் செய்தபின் உண்டாகும் சில சில்லரை மனஸ்தாபங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது, பலதார மணத்தால் உண்டாகக்கூடிய கெடுதல் அவ்வளவு பிரமாதமாக இல்லை என்பது தெளிவு.

சென்ற மகாயுத்தமானது, பலதார மணம் இன்றியமையாதது; அதனால் அநேகம் நன்மைகள் இருக்கின்றன என்பதை ருஜுப்படுத்தி விட்டது. நாகரீகத்தில் மிகச் சிறந்தவர்களெனத் தங்களைக் கூறிக்கொள்ளும் ஐரோப்பியர், லக்ஷக்கணக்கான ஆடவர்களை யுத்தத்தில் கொன்றுவிட்டதால், கணவனில்லா ஸ்திரீகளின் எண்ணிக்கை அபரிமிதமாகப் பெருகிவிட்டதைக் கண்டபின், இஸ்லாம் மதத்தில் பலதார மணம் அனுமதிக்கப்பட்டிருப்பதன் இரகசியத்தை அவர்கள் போற்றினார்கள். இவ்வாறு ஸ்திரீகளின் எண்ணிக்கை அதிகமாகி விடுங்கால் பலதாரமணம் இல்லாமல் அதைப் பரிகரிக்க முடியுமா?

ஒரு ஸ்திரீ கொடியநோய்களால் பீடிக்கப்பட்டவளாக இருந்து, சந்தான விருத்திக்கு அவள் தகுந்தவளாக இல்லாமலிருக்கும்நிலைமையில் அவளை விவாக விலக்குச் செய்தால், அவள் வேறொருவனை விவாகம் செய்துகொள்ளும் வரை அந்த ஆடவன் விவாகம் செய்துகொள்ளவும் முடியாது என்று ஐரோப்பியநாட்டில் சட்டம் செய்திருக்கிறார்கள். ஆதலால், அவளை விவாகவிலக்குசெய்யாமல் ஒவ்வொரு ஆடவரும் வியபிசாரம்முதலிய துர்நடத்தைகளால் தனது இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளுவதா? அல்லது அந்த ஸ்திரீயைக் கொலை செய்துவிட்டு வேறுஒரு ஸ்திரீயை மணந்துகொள்வதா? என்பதை யோசித்துப் பாருங்கள்! இவைகளையெல்லாம் கவனித்துத்தான் இஸ்லாம் மதம் பலதார மணத்தை அங்கீகரித்தது. அவ்வாறு மணம் செய்துகொள்வதால் ஆடவனின் இச்சையும் நிறைவேறுகிறது. அவனுக்குச் சந்தான விருத்தியும் உண்டாகிவிடுகிறது. நோயாளியாகவுள்ள அவனுடைய முதல் மனைவிக்கு அவனால் உபசாரமும் கிடைக்கிறது.

தற்காலமுள்ள அரசாங்கங்கள் தங்களுடைய அரசாங்க எல்லையை விஸ்தீரணப்படுத்திக் கொள்வதற்குப் பிரஜாபிவிருத்தியை முக்கிய சாதனமாகக் கொண்டிருக்கின்றன. எனவே, பிரஜாபி விருத்தியைப் பெருக்கிக் கொள்வதற்

குப் பலதார மணத்தைப் பார்க்கினும் சிறந்த உபாயம் வேறெதேனு முண்டா என்பதை நன்கு யோசித்துப் பாருங்கள்? நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "நீங்கள் விவாகம் செய்யுங்கள், சந்ததியை உற்பத்திசெய்து கொள்ளுங்கள், நிச்சயமாக நான் கியாமத்து நாளில் உம்மத்துகளைக் கொண்டு பெருமை பேசுவேன்'' என்று எவ்வளவு அழகாகக்கூறி இருக்கிறார்கள். ஒரு ஸ்திரீக்கு இரண்டு ஆடவர், கணவர்களாக இருந்தாலும் அல்லது இருபதுபேர் கணவர்களாக இருந்தாலும் ஒரு ஸ்திரீயானவள் எத்தனை குழந்தைகளை ஈன்றெடுக்க முடியுமோ அதற்குமேல் அதிகமாக அவள் மக்களைப் பெற்றெடுக்க மாட்டாள். ஆனால், ஒரு ஆடவன் பல ஸ்திரீகளை மணந்திருந்தால் ஒவ்வொரு ஸ்திரீகளும் பல மக்களைப் பெறுவார்கள். இவ்விஷயம் சாமான்யருக்கும் தெரிந்தவையாகும். எனவே, சந்தான விருத்திக்குப் பலதார மணம் இன்றியமையாதது என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

தவிரவும் ஸ்திரீயானவள் 50-வயதைக் கடந்து விட்டால் அப்புரம் அவளிலிருந்து சந்ததி யுற்பத்தியாகுவதற்கு இடமில்லாமற் போய்விடுகிறது. ஆனால், ஆடவர்களின் சக்தியானது 50 வயதிலும், முன் போலவே இருந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது ஏகபத்தினி விரதம் என்றிருந்தால் அந்த வயதையுடைய மனைவியுள்ள ஆடவர்கள் சந்தான விருத்திக்கு யாது செய்தல் கூடும்.

பலதார மணத்துக்கு இஸ்லாம் விதித்த கட்டுப்பாடு

இஸ்லாம் மதம் பலதார மணத்தை, இதர சமூகத்தாரைப்போல் வரையரையில்லாமல் ஏற்படுத்தி விடவில்லை. எனவே, நான்கு பேர்களைத் தவிர அதிகமான மனைவியர்களை ஏககாலத்தில் மணந்துகொண் டிருக்கக்கூடாது என்று கட்டுப்பாடு செய்திருக்கிறது. அதுவும் சில குறிப்பிட்ட விதிகளுக் குட்பட்டுத்தான் விவாகம் செய்து கொள்ளலாம். இன்னும், இந்த எண்ணிக்கையிலுள்ள விசேஷங்களையும் கவனிப்போம்: ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாகி விட்டால் அவளுடன் மூன்றுமாத காலம்வரை தான் வீடுகூட முடியும். அதற்கு மேலும் ஸம்ஸர்க்கம் செய்வது சிசுவுக்குக் கெடுதியை உண்டுபண்ணக்கூடும். இதே விதமாக, பிரசவமான மூன்றுமாத காலம்வரை அந்த ஸ்திரீயுடன்கூடி இருக்க முடியாது. இம்முறைப்படி ஒரு ஸ்திரீயுடன் கலவி செய்த முதல் நாளிலேயே அவள் கர்ப்பவதியாகி விட்டால், மூன்று மாதத்துக்குப்பின் அந்த ஸ்திரீயுடன் குறைந்த பக்ஷம் 9 மாத காலம்வரை கலவி செய்ய முடியாது. இவ்விதமாக இரண்டாவது, மூன்றுவது, நான்காவது மனைவிகளுக்கும் நடைபெறுமாயின், நான்கு மனைவிக ளிருந்தால்தான் ஸ்திரீ புருஷாளின் இச்சைக்கு எவ்விதப் பங்கமும் நேராமற் காக்கமுடியும். சிசுக்களுக்கும் எவ்விதத் தீங்கும் விளையாது. ஸ்திரீகளின் இச்சைக்கும் இடைஞ்சல் நேராது. இதல்லாமலிருந்தால் இம்மூன்று காரியத்தில் ஏதேனும் ஒன்றுக்குப் பங்கம்தான்விளையும் என்பது திண்ணம்.

நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றிச் சிலர் கூறும் ஆக்ஷேபனைகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பலதார மணம் செய்திருந்ததைப் பற்றிக் குறுகிய திருஷ்டியுள்ள சிலர், வெறுக்கத் தக்கவிதமான ஆக்ஷேபனைகளைச் செய்கிறார்கள். ஆனால், நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு மணம் செய்ததன் நோக்கத்தையும் கருத்தையும் அன்னோர் கவனிப்பதே இல்லை.

1. மக்காவை வெறுத்து, மதீனாவிற் குடியேறிய முஸ்லிம் சீமாட்டிகள் (முஹாஜிராத்துகள்) பிரபல குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இஸ்லாம் மதம் வியபிசாரத்தை அடியுடன் ஒழிப்பதாக இருந்ததால் முஹாஜிராக்களான ஸ்திரீகளைக் கவனிக்காமல் அவர்களுடைய சுயேச்சைப்படி விட்டுவிடுவதற்கில்லை. ஆதலால், அவர்களைத் தக்கவரனுக்கு விவாகம் செய்வித்துவிட வேண்டியதிருந்தது. எனவே, அவர்களிற் சிலர் தங்களுடைய இஷ்டத்துக்கு, தாங்களாகவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவி என்ற பேற்றை அடைய வேண்டுமென்று விரும்பினார்கள். ஆதலால், அவர்களை நாயகம் (ஸல்) அவர்கள் விவாகம் செய்து கொள்ள நேர்ந்தது.

2. வெள்ளாட்டிகளாக இருப் பவர்களை அறபிகள் லக்ஷியம் செய்வதில்லை. அவர்களை, அறபிகள் கேவலமாக மதித்தார்கள். ஆதலால், நாயகம் (ஸல்) அவர்கள், வெள்ளாட்டிகளும் ஏனைய ஸ்திரீகளைப்போல் சம அந்தஸ்துள்ளவர்கள் தாம் என்பதைக் கிரியாம்சையில்

செய்து காட்டுவான் வேண்டி அவர்களிலும் விவாகம் செய்தார்கள்.

3. சம்பந்த வழியில் உண்டாகும் பந்தத்து வத்துக்கு அறபிக் கோத்திரங்களில் அதிகம் சலுகையும் தாட்சண்யங்களும் காட்டப் படுவதுண்டு. எனவே ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணை விவாகம் செய்தால் அந்தக் கோத்திரம் முழுவதுமே அவரை ஆதரிக்கும் வழக்கமிருந்தது. ஆதலால், நாயகம் (ஸல்.) அவர்கள் பலகோத்திரங்களிலும் விவாகம் செய்து, பலகோத்திரங்களிலும் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் உண்டுபண்ணினார்கள்.

4. நாயகம் (ஸல்.) அவர்கள் பலதாரங்களை மணந்ததில், மதப்பிரசாரம் செய்வதும் முக்கிய நோக்கங்களிலொன்றாக இருந்தது. நாயகம் (ஸல்.) அவர்களுக்காகத் தங்கள் இன்னுயிரையும் தத்தம் செய்திருந்த பெரியார்களான ஸஹாபிகள் ஏராளமாக இருந்தார்கள். ஆனால், ஸ்திரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. ஹைது, நிபாஸ்போன்ற சிலமுக்கிய சட்டவிதிகளை ஸ்திரிகளின் மூலமாகப் பிரசாரம் செய்வதில் எவ்வளவு அனுகூலம் இருந்ததோ அவ்வளவு அனுகூலம், ஆடவர்கள் மூலமாக ஏற்படுவதற்கு இடமில்லை. இத்தகைய விஷயங்களைப்பற்றி, ஸ்திரிகள் ஆடவர்களிடம் தெளிவாகச் சொல்லிக்கேட்டுத் தெரிந்துகொள்ளமாட்டார்கள். இவ்விஷயங்களை ஆடவர்கள் தெரிந்துகொள்வதும் ஒருவகையில் அவ்வளவு பொருத்தமாகவுமில்லை. ஆதலால், ஸ்திரிகளிடம் பிரசாரம் செய்வதற்கு, ஸ்திரீ பிரசாரகர்களை உற்பத்திசெய்வதும் அவசியமாக இருந்தது.

5. நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் தனிமையிலும், வீட்டிலும் இருக்கும்போது செய்த வணக்கங்களும், குடும்பத்தாருடன்பழகிவந்த முறைகளும், நாயகம் (ஸல்.) அவர்களின் மனைவிமார்களைத் தவிர வேறு யார்மூலமாகவும் நமக்கு அறிவிக்கப்படவில்லை. இது சம்பந்தமான விபரங்களைக்கூச்சமில்லாமல் நாயகம் (ஸல்.) அவர்களிடம் அந்நிய ஸ்திரீ புருஷாள் கேட்கவும்முடியாது. ஆதலால், இவைகளைப் பற்றி நாயகமவர்களின் அபிப்பிராயங்களைப் பிரசாரம் செய்வதற்கு "உம்முல்மூமினீன்" என்ற சிறப்புப் பெயர்களை அடைந்த ஸ்ரீமாட்டிகள் தேவையாக இருந்தனர்.

எனவே, குறுகிய நோக்கமும் கோர மனப்பான்மையும் துர்க்கிருத்திய எண்ணங்களுமுள்ளவர்கள், தங்களைப்போலவே மற்றவர்களுமிருப்பார்கள் என நினைத்துக் கொண்டு, நாயகம் (ஸல்.) அவர்கள்மீது தங்கள் மனம்போனவிதமாகக் 'காம இச்சைநிறைந்தவர்' என்றெல்லாம் கூறத் துணிந்துவிட்டார்கள். இவர்கள், நாயகம் (ஸல்.) அவர்கள் பலதார மணங்களைச் செய்த காலத்தையும் தேதியையும் உணருவார்களாயின், இப்படிப் பட்ட வீணான தகுதியற்ற ஆக்ஷேபனைகளைச் செய்ய முன்வரமாட்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் வாலிபமாகஇருந்தகாலத்தில், வாலிப உணர்ச்சிகள் உச்சஸ்தானத்திலிருக்கக்கூடிய காலத்தில் "உம்முல்மூமினீன்" ஹஜ்றத்கதீஜா நாயகி அவர்களுடன் ஏகபத்தினி விரதம் பூண்டவர்களாக இருந்தார்கள். அதுவும் நாயகி அவர்கள், நாயகம் (ஸல்.) அவர்களைப் பார்க்கினும் பல வருஷங்கள் முதிர்ந்த வயதுள்ளவர்களாக இருந்தார்கள். ஹஜ்றத்கதீஜா நாயகி அவர்களின், வபாத்துக்குப் பின்னர் 50 வயதுக்கு மேற்பட்டே பலதாரங்களையும் மணந்தார்கள். ஆதலால், அவர்கள் மீது காம இச்சை என்ற குறையைக் கூற முற்படுவது நீதியாகாது.

இதர மதங்களும் பலதார மணங்களும்

இஸ்லாமியப் பலதார மணத்தைப்பற்றி ஆக்ஷேபனைகளைச் செய்வதற்கு முன், இதர மதங்கள் இதனை அனுமதிக்கின்றனவா? எம்முறையில் இதனை அனுஷ்டிக்கின்றன என்பதையும் கவனிக்கவேண்டும். நூற்றுக்கணக்கான ஸ்திரீகளை ஒருவருக்கு மனைவிகளாக ஆக்கி இருந்த விபரங்கள் இதர மதங்களிலும் கானப்படுகின்றன. இஸ்ராயீலின் சந்ததியினரில் உதித்த நபிமார்களில் ஹஜ்றத் தாவூத், சுலைமான் (அலை) போன்ற நபிமார்கள் தலைக்கு நூறு மனைவிகளுள்ளவர்களாக இருந்தவிபரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வாறு 100 மனைவிகளுக்கு நாயகராக இருந்த ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களை, கிறிஸ்துமதம் அவமதிக்கவில்லை. இவருடைய சந்ததியிலேயே ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் உதித்ததாகக் கிறிஸ்துவர்கள் மிகப்பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார்கள் தங்கள் ஆராதனைகளில், ஹஜ்றத்தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்கள் கொண்டு வந்த வேதத்திலிருந்து அநேக வசனங்களை எடுத்துப்படிக்கிறார்கள். ஹஜ்றத் இப்ராஹீம், யாக்கூப் முதலிய நபிமார்களும்

பலதாரங்களை மணந்தவர்கள் தாம். இவ்வித நிலைமையில் கிறிஸ்துவ சகோதரர்கள் நாயகம் (ஸல்.) அவர்கள் மீது குறைகூறுவதற்கு எவ்வித உரிமையு மில்லை.

ஹிந்து மதத்தைப்பற்றிக் கவனிப்போம். ஹிந்துக்களால் கடவுள் அவதாரமென்று கருதப்படுகிற ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகளுக்கும் அவருக்கிருந்த கோபிகா ஸ்திரிகளுக்கும் கணக்கில்லை. இதுமட்டுமா? இன்னும்பல மதங்களிலும் பலதார மணங்களைச்செய்த மதப்பெரியார்கள் நூற்றுக்கணக்காக இருக்கிறார்கள். இவர்களிற் சிலருக்கிருந்த மனைவிகளின் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்காகவும் பெருகி இருக்கிறது. இவ்வாறு எல்லையில்லாமல் கணக்கற்ற மனைவிகளைச்செய்து கொள்வதைத் தடுத்து, நான்கு மனைவிகளுக்குமேல் அதிகமாக வைத்துக்கொள்ளக்கூடாதென்று இஸ்லாம் மதந்தான் கட்டுத்திட்டம் செய்தது. ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாமவர்கள் விவாகம் செய்யாமலிருந்ததைக் கிறிஸ்துவர்கள் பெருமையாக எடுத்துக் காண்பிக்கின்றனர். அவர்கள் 60, 70-வயது வரை இருந்திருந்தால், அப்பொழுது அவர்கள் மணம்செய்து கொள்ளாமலிருப்பார்களா இல்லையா என்ற விபரம் தெரியவரும். இவர்களைப்போல் மணம்செய்து கொள்ளாமல் இருந்தவர்கள் இவ்வுலகில் எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்துவ சகோதரிலுள்ள சிலர், விவாகமில்லாமலிருப்பதன் இரகசியம் கன்னியாஸ்திரீ மடத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு குளத்தில் 400 சிசுக்களின் மண்டை ஓடு இருந்து எடுத்ததிலிருந்து உலகத்துக்கு வெளியாகிவிட்டது. அந்தக்குளம் எந்த ஊரிலுள்ளது, அந்த மடத்தின் பெயரென்ன என்பதை இவ்விடத்தில் விவரித்துக்கூற யான் இஷ்டப்படவில்லை யாதலின், அதனை விடுத்தனன். விவாகமில்லாமலிருக்கும் இச்செய்கை வியபிசாரத்தைத்தான் அதிகப்படுத்திவிட்டது. முற்காலத்தில் நடந்த சம்பவங்களை விட்டுவிடுவோம்: நாகரீகமடைந்த தேசங்களென்று சொல்லப்படும் பிரான்சு, அமெரிக்கா முதலிய மேனாடுகளைக் கவனிப்போம். அங்கு வியபிசாரம் என்ற இந்தப் பிணியானது பலமாக இருந்துவருகிறது. வியபிசாரம், மதுபானமருந்தல் போன்றவைகள் தாம் நாகரீகம் என்று கூறுவதாயின், இப்படிப்பட்ட நாகரீகத்தைத்தான் இஸ்லாம் அழிப்பதற்காகவந்ததுஎன்பதை நாம் மலைமேலிருந்தும் கூறுவோம். நம்முடைய முஸ்லிம் ஸ்திரீகளிடம் இப்படிப்பட்ட நவநாகரீகத்தைப் பரவச் செய்ய மற்றவர்கள் விரும்புவார்களாயின், இதை இஸ்லாம் எவ்விதத்திலும் ஆதரிக்காது என்பதை அவர்கள் உணரட்டும். ஆனால், மனித உரிமையில் ஸ்திரிகளுக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டி பாத்தியதைகளை இஸ்லாம் மதம் அளித்துத்தானிருக்கிறது. இவ்வுரிமைகளை முஸ்லிம்களில் படித்தவர் மாமரர்யாவருக்கும் கொடுக்கத்தான் வேண்டும். இவைகளை நிராகரிக்க முஸ்லிம்கள் தயாராக இல்லை. ஆனால், மானங்கெட்ட வாழ்க்கையை நடத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுவான் வேண்டி ஸ்திரீகள் வீடுகளில் அமர்ந்திருப்பதை 'சிறைக்கூடம்' என்று கூறுவதாயின், அதனை முஸ்லிம்கள் லக்ஷியம் செய்யமாட்டார்கள். இஸ்லாம் மதம் இப்படிப்பட்ட சகல பிரசினைகளையும்பற்றித் தெளிவாகக்கூறி விட்டதற்கு அவ்விறைவனை வாழ்த்துகின்றோம். உலகத்திலுள்ள சகலமதங்களும் அனுமதித்திருக்கிறதும், பல நபிமார்களும் செய்திருக்கிறதும், பிரஜாபிவிருத்திக்கு பெருந்துணையாக இருப்பதும், ஸ்திரீகளுக்கு உதவிபுரிவதற்கு மிகவும் உயரிய சாதனமாக வுள்ளதுமான பலதார மணத்தை அனுச்சாரமென்று கூறி, மேனாட்டைப் பின்பற்றும் சகோதரர்கள், இனியேனும் இஸ்லாத்தின் விரோதிகள், இஸ்லாம் மதத்தின்மீது முட்டாள்தனமாகக் கூறும் இவ்வாதங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாதிருப்பார்களாக.

சிங்கை சந்தா நேயர்கட்கு!

அன்பர்களான அபிமானிகள், தாமதியாது தங்கள் சந்தாக்களை, அவ்விடமுள்ள நமது ஏஜண்டு, ஜனாப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் (439, நார்த்பிரிட்ஜ் ரோடு) அவர்களிடம் செலுத்திவிடுமாறு கோருகிறோம்

வேஷமும் விஷமமும் மாபெரும் தோஷம்

புரோபெஸர் அபுல்பாரூக் (பாகவீ) வரைந்தது

உண்மைக்கு உறைவிடமாயிருந்த முஸ்லிம் உலகு, இன்று இமிடேஷனைக்கண்டு ஏமாறும் நிலைமைக்கு இறங்கிவிட்டது. உண்மையை உணர கருவியாயிருந்த கல்வியறிவென்னும் உரைக்கல்லானது தேய்ந்து மறைந்துவருகிறது. போலிரகங்கள் மல்கிவிட்டன. ஏனைய பொருட்களிலும் அசலுக்கு நகல் உண்டும் எனவே, எத்துறையிலும் மக்களை உண்மையாளன் வேஷக்காரன், என இரு கூறுய்ப் பிரிக்கலாம்.

உதாரணமாய், மக்காவின் மேப்பை கோள சாஸ்திர வாயிலாகவுங்கூட விளங்கிக்கொள்ளாத பேதை யொருவன், மஞ்சள் துணியை மண்டையில் சுற்றிக்கொண்டமாத்திரத்தில், தம்மை ஹாஜியாய் ஆக்கிக்கொண்டதாய் மனப்பால் குடித்து பொது ஜனங்களிடம் தன்னை ஹாஜி என நடிக்க வாரம்பிக்கிறுன். ஆடைகட்கு அடையாளமாய், வண்ணுன் கறும்புள்ளி தீட்டுவதேபோல், மக்கத்து மார்க்கு மஞ்சள் துணிதானென அப்பேதை மதித்தான்போலும். மக்கா சென்றவருக்கும், மஞ்சள் துணிக்கும் என்ன சம்பந்தமுளது என்று பார்த்தால், ஹிந்து நண்பர்கள் சொல்லும் சுலோகத்தே போல், குலாம்காதிருக்கும் கோகுலாஷ்டமிக்கும் என்ன சம்பந்தமோ அதைவிட அதிகமாய் ஒன்றுங் கூறுவதற்கில்லை.

தவிரவும், நபிகள் பெருமானுர் (ஸல்) சுத்தக் கறுப்பும் தூயவெள்ளையுமான பாகைகளைத் தான் தரித்திருந்தார்களல்லாது மஞ்சள் சீலையால் முண்டாசுகட்டி இருந்தார்களென சரித்திரம் கூரக்காணேம். இப்பழக்கம் நம்மவரில் எவ்வாறு இடம்பெற்றதென்பதை நோக்குங்கால், ஒன்று ஹிந்துக்கள் தங்கள் புண்ணிய யாத்திரைகளி லொன்றுய்க் கருதும் திருப்பதி—வடக்குமலையானின் திருவடி நோக்கும்போது, மஞ்சள் துணியையே விசேடமாய் அணிவதைப் பார்க்கிறேம். எனவே, புண்ணிய யாத்திரையின் பிரதானிய சின்னம் மஞ்சள் துணிதானென இவர்களும் மதித்தனர்போலும், அல்லது ஹஜ் யாத்ரீகர்களை ஏற்றிச்செல்லும் கப்பல்களெல்லாம், அக்காலம் கவனிப்பாரற்று சுகாதார சௌகரியங்கள் சீர்கேடடைந்து, பிரயாணிகள் என்றென்றும் பிணியாளர்களாகவே பிரயாணம் பண்ணிவந்திருக்கும் நிலமையில், கப்பல் பழக்கத்திற்கேற்ப, கப்பலில் நோவுக்கடையாளமாய் மஞ்சள்கொடி பறக்கவிடப்பட்டிருக்கலாம். மக்கத்துக்குப் போவதென்பது மரணவியலைத் தேடிப்போவதுதான் என்னும் அக்காலமுதுமொழி ஓரளவு உண்மைதான் என மதிக்குமளவுக்கு சதா பிரயாணக் கப்பல்களில் நோவு வியாபித்திருப்பதற்கேற்ப, நிரந்தரமாய் மேல்படி மஞ்சள் நிற பாவட்டா பறந்து கொண்டிருப்பதை இவர்கள் பார்த்திருக்கவேண்டும்.

கிணற்றுத் தவளைகளேபோல் காலங்கடத்தி வந்த நம்நாட்டு மக்கள், கப்பல் பழக்கவழக்கம் கண்டறியாராதலின், மக்காவுக்கும் மஞ்சள் துணிக்கும் நெருங்கிய பொருத்தமிருப்பதாய் எண்ணி, இரண்டுக்கும் இறுகலான முடிச்சுப் போட்டுவிட்டார்கள் போலும். இதனுல்தான் தன்னை ஹாஜியென வேஷங்காட்ட முக்கால் பணத்து மஞ்சள் துணி பேருதவிபுரிகிறது.

பொய் வேஷம் நடிப்பதற்கும் கொஞ்சம் திறமையும் தீரமும் வேண்டும். திறமை அனுபவத்தால் ஏற்பட்டுவிடலாம். ஆனுல் தீரம் எங்கிருந்து வருகிறது? அவ்வூரில் உண்மையான ஹாஜிகளோ அல்லது இவனது புரட்டுகளைக் கண்டுபிடிக்கும் பேராற்றல் படைத்தவர்களோ அப்பகுதிகளில் யாருமிலர் என்பதை விஜாரித்து அறிந்துகொண்ட மாத்திரத்தில், அவனுக்கு புதிய தீரம் பிறந்துவிடுகிறது. ஆனுல் அவனது வேஷத்தைக் கண்டுபிடிக்கும் வல்லுனர் யாரேனும் குட்டை வெளியிட்டார்களானுல், ஸிங்கிள் பை, கூட செலவில்லாமல் கள்ள ஹாஜியென பட்டம் பெற்றுவிடுகிறுன். பிறகும் ஹாஜி யென்ற சொற்றெடர் அவனை விட்டுப் பிரிந்தபாடில்லை. இது அவனது அதிர்ஷ்டம்.

இது மட்டுமென்ன? உண்மையை உய்த்துணரும் வீரர்கள் யாருமே ஒரு ஊரில் இல்லையெனத்தெரிந்தால், எத்தனையோ வகை வேஷக்

காரர்கட்கு அவ்வூரில் வேட்டை பலித்து விடுகிறது.

உதாரணமாய், தலைப்பாகையும், தாடியும், குப்பாயமும், கிர்தாவும், ஜெபமாலையும் சரிகை வஸ்திரமும் தான் உண்மையான ஆலிம்கட்கு அடையாளமென, கொள்ளப்படுமிடங்களில், வெகு சுளுவில் ஒரு அறிவிலியால் அவ்வூர் வாசிகளை ஏமாற்ற முடிகிறது. உடனே அவன் சுமையைக் கூட பொருட்படுத்தாது பெரிய அளவு நிகளமுள்ள சீலையை சிரசில் வெகு பருமனைச் சுற்றி கொள்கிறான். கணுக்காலளவு நீண்ட குப்பாயத்துக்குள் நுழைந்து கொள்கிறான், கொப்பூழைப் போய் இடிக்கும் நீண்ட தாடி முடியாய் வளர்த்துகொள்கிறான். ஆயிர மணி கோர்த்தஜெபமாலையை என்றும் உருட்டிய வண்ணமாயிருக்கிறான், நாயடிக்கும் தடியைப் போன்ற உயரமான கோலை கையில் பிடித்துக் கொள்கிறான். இன்னும் நாடக வேஷக்காரனை போல் சிலகுறிப்பான சமயங்களில்படாடோபமான ஆடைகளை வாடகைக்காவது வாங்கி அணிந்துகொண்டு ஆடம்பரம் பண்ணுகிறான். இத்தனைவெளி அடையாளத்தோடு மட்டும் அவ்வூர் வாசிகளிடையே பெரிய அல்லாமாவென போற்றப்படுகிறான். பிறகு இவ்வேஷத்தினூடே விஷமத்தனமான திருவிளையாடல்களையும் புரிய ஆரம்பிக்கிறான். மார்க்க ஞானமோ, உலக ஞானமோ அவனுக்கு ஜன்மப்பகை. இத்தனை லட்சணத்தில் சக்கர் மக்கர் பண்ணி ஊரணத்துக்கு உணவுதேட அவனுக்கேற்பட்ட தீரத்தின் காரணமென்ன? அப்பகுதியில் அவனது சூட்சுமத்தைக் கண்டுபிடித்து தண்டிக்கும் தீட்சண்யமுடையார் யாருமே இலர் என்ற இறுமாப்புதான். எனவே யாரிடத்தில் ஏமாற்றுவித்தை காட்டுகிறானோ அவர்களையெல்லாம் சுத்த முழு முட்டாள்களெனத் தீர்த்துக் கட்டிவிட்டான்.

வேஷத்தைக் கண்டு மோசம்போகும் நேசர்கட்கு ஒருசில வினாக்கள் சொல்லவிரும்புகிறேன்.

தலைப்பாகையால் ஒருவன் ஆலிமாய்விடலாமென்றிருந்தால், நமது பகுதியிலுள்ள மடாதிபதிகளான பண்டாரசந்நிதிகளின் பேட்டாவுக்கு யாராவது போட்டிபோட முடியுமா? அப்படியிருந்தும் நம்மவர் யாருமே அவர்களையெல்லாம் ஆலிம்களெனக் கொள்ளக்காணோம். நீண்ட குடுத்தாவினால் ஒருவன் ஆலிமாய்விட முடியுமானால் வடதேசத்து ஜட்கா வண்டிக்காரர்களும், ஹைகோர்ட் ஜட்ஜுகளின் மெய்க்காப்பாளர்களும், ரயில்வே ரிபரெஷ்மெண்ட் பரிசாரகர்களும் அணிந்துவரும் குப்பாயங்கள், இவர்களின் குடுத்தாவுக்குக் குறைந்த நீளமுள்ளதா? அவர்களை யாரும் ஆலிம்களாய்க் கருதக் காணோம். அல்லது நீண்ட தாடியால் ஒருவன் ஆலிமாய்விடலாமென்றால், பஞ்சாப் தேசத்து சீக்கியர்களையும், பாலஸ்தீன் யூதர்களையும்விட நீண்ட தாடி வளர்த்துவிட முடியுமா? இவர்களையும் யாரும் ஆலிம்களெனக் கூறக் காணோம். கிர்தா வளர்த்துவிட்டால் ஆலிமாய்விட முடியுமென்றிருந்தால், நம் நாட்டின் கம்பங் கூத்தாடிகளின் கிர்தாவைவிட அழகாய் எங்கு காணமுடியும்? கம்பக்கூத்தர்களும் ஆலிம்கள்தானென யாரும் கொள்வாரில்லை. ஆயிரம் மணி கோர்த்த மாலையை ஆட்டுவதால் ஆலிமாகலமாமென்றிருந்தால், நரித் தொம்பன்களெல்லாம் பெரிய ஆலிமாயிருக்கவேண்டும். ஏனெனில், அவர்களின் விதவிதமான மணிக்கோர்வைகளை யாராலும் எண்ணிமாளாது; அவர்களையும் ஆலிமென்று யாரும் உரைக்கக் காணோம். அலங்காரமான ஆடைகளை வெகு ஷோக்காய் அணிவதினால் ஆலிமாய்விட முடியுமானால் நாடக கூத்தாடிகளில் ராஜா வேஷக்காரனின் சிரங்காரமான ஆடை ஆபரணங்களைவிட அதிகமாய் யாரால் அலங்கரித்துக் கொள்ளமுடியும்? அப்படியானால் கூத்தாடி—ராஜா வேஷக்காரன் பெரிய அல்லாமாதான் என யாரும் சொல்லக் கேட்டிலோம். உயர்ந்த தடிகளை ஊன்றித்திரிவதால் ஒருவன் ஆலிமாய்விடமுடியுமானால் வெள்ளாண்மைப் பயிர்காக்கும் தலையாரி தடிகோலை, வெள்ளிப் பூணுடன் உச்சியளவு உயர்ந்ததாகப் பார்க்கலாம். மேற்படி தலையாரி—பட்டிக்காரனையும் ஒருவரும் ஆலிமாய் மதிக்கவில்லை.

எனவே, வெளிவேஷமொன்றிலேயும் ஆலிமிய்யத்தும் மௌலவிய்யத்தும் நுழைந்து கொண்டிருக்கவில்லையென்பதும், அவரவர் அடைந்திருக்கும் அறிவாற்றல் புத்தி நுட்பம் மார்க்கஞான கிரந்தங்களின் கருத்தை உள்ளது உள்ளவாறு உணர்ந்து பிறருக்கும் உணர்த்தும் திறமை, தீரம், தீக்ஷண்யம் இவைகளின் அளவிற்கேற்பதான் மனிதன் பொதுமக்களை விட்டு உயர்ந்து, தனிமக்கள் கவாஸ்ஸுகளென்ற தனிப்பெருமையில் பாகம்பெற்று, மௌலவியென்றும் ஆலிமென்றும், அல்லாமாவென்றும் பெயர்வகிக்க இலக்காகின்றனர். என்

பதை நீங்கள் நினைவில் நிருணயம்பண்ணிக் கொள்ள நினைவூட்டுகின்றேன்.

அறிவாற்றலில்லாத பாமரர்கள் பரிந்துபேசுவதாலும், சலுகைகாட்டி பெருமை படுத்துவதாலும் இதுவெல்லாம் உண்மை ஆலிம்கட்கு ஸர்ட்டிபிகெட் ஆய்விடமுடியாது. இவர்களின் அறிவை உரைத்து, மாத்துப் பார்க்க அவர்களிடம் உரைக்கல் எது? "கத்ரேஜவ்ஹர் ஜவ்ஹரீ தானத்" (பார்ஸிகவி) இரத்தினத்தின் உயர்வும் மதிப்பும் இரத்தினவியாபாரிதான் உணர்வான். எருமுட்டை வியாபாரி இரத்தினத்தின் உயர்வைக் கண்டறிவானா? இராஜாக்களின் கிரீடத்தில் இடம் பெற்றிருக்கும் இரத்தினங்களை விட, குப்பைமேட்டில் குவிந்து கிடக்கும் பளிங்கி ஒடுகள்தான் அவன் கண்ணுக்குத் தகதகவென்று தோன்றும்.

இங்கு மற்றொருவிஷயம்: மேற்கூறிய ஆடைகளை அணியக்கூடாதென வாதிப்பதாய் என்னைக் குறுக்கே பிடித்தார்கள். கௌரமான ஆடைகள் அணிவது அவசியந்தான். நடையுடை அனுஷ்டான விதிகளில், எதை அணிவது ஹறாம், எது மக்ரூஹ், எது முபாஹ், எது அப்ஸல், எது ஸுன்னத்து, எது வாஜிபு, பர்லு என்னும் முறைமைகளையெல்லாம் உணர்ந்துகொண்டபின், காலத்திற்கேற்ப எந்த வகுப்பினருக்கு எது கௌரவம் கொடுக்குமோ அதை அணிவது மிகப் பொருத்தமாகும். இவைகளைச் சரிவர உணர்ந்துகொள்ளா தோஷத்தாலேயே சிலரைக் கண்டு ஏமாற்றமடையவும், சிலரைத் தூற்றித் திரியவும் ஆரம்பிக்கிறார்கள். வெளியில் அத்தர்வாடை வீசும் மூத்திரம் நிறப்பப்பட்ட சீஷாவைவிட, வெளியில் மூத்திரம் பூசப்பட்டு உள்ளே அத்தர் அடைக்கப்பட்ட சீஷா உயர்ந்ததென்பதைமட்டும் மறக்காமலிருக்கக் கோறுகிறேன். எனவே ஆகுமான ஆடைகளில் எதையும் அணிவதற்கு யாருக்கும் சுதந்திரமுண்டு. ஆண்டவன் நுங்களின் வெளிவேஷத்தை நோக்குகிறானில்லை. ஆனால் உங்கள் ஹிருதயங்களை கவனிக்கிறான் (நாயகவாக்கு).

எனவே, பகுத்தறியும் ஆற்றலில்லா அறிவிலிகள் பெருகிவிட்ட பாபத்தாலேயே, வேஷக்கார சூரர்கள் வெகுசுளுவில் அவர்கள் தலையில் எரி மிளகாய் அரைக்க வாரம்பிக்கிறார்கள். அவர்கள் விஷயம் புரியாமல் சொறிந்து கொடுத்த மாடுகளேபோல் வாளாவிருந்து விடுகின்றனர்.

வேஷக்காரர்களின் மோசத்தை எழுதித்தீர்க்க சாத்தியமாகாது என்றாலும் ஸாம்பிளுக்கு ஓர் சம்பவத்தை சொல்லிக்காட்டி வியாசத்தை முடித்துவிடுகிறேன்.

ஓர் பெரிய குடும்பத்தில் பிறந்த ஒரு சிறுமியின் வைரமாலை களவுபோயிற்று. வருவார் போவார் வேலைக்காரர்மீதெல்லாம் சந்தேகம் ஜனிக்கிறது. யாரைக் குறிப்பிட்டு கேட்பது? எடுத்தவனுக்கு ஒரே எண்ணம். கொடுத்தவனுக்கு பல எண்ணம். யாரேனும் கிளப்பிக்கொண்டுதான் போயிருக்கவேண்டும், அதை கண்டுபிடிக்க வழி என்ன? மந்திரம்போட்டுப் பார்த்தால் கிடைத்துவிடுமென்பது வெகுஜன வாக்கு. யாரைக்கொண்டு மந்திரம்போடுவது? நமது குடும்பவைத்தியர் நம்மிடையே இருக்கிறார். வெகுநாள் பழக்கம், நம்ம உப்பையே தின்றுவளர்ந்த நன்றியறிதலுள்ளவர்.

வைத்தியம், மாந்தரீகம், மைபோட்டுப் பார்த்தல், மருந்தெடுத்தல் புல்சூனியம் பார்த்தல், பேய்பூதங்களையெல்லாம் பாட்டிலில் அடைத்து பூமியில் புதைத்தல், பிள்ளை இல்லாதவர்கட்கு பிள்ளைவரங்கொடுத்தல் போன்றவைகளிலெல்லாம் பெரிய நிபுணர் — கைக்காரப் பேர்வழியென்பது, பொதுஜனவாக்கு.

வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்யிக் கழுவானேன்? அவரைக்கொண்டே மந்திரம் போட்டு மாலையை வெளிப்படுத்த ஏற்பாடாயிற்று. மந்திரவாதி இரண்டகம் பண்ணுபவரல்ல, கவனக்குறைவுங் காட்டமாட்டார். வெளியில் நான்குபேர் நல்லமனுஷ்யன் என்று சொல்லும் சலுகைபெற்றவர். நடையுடைபாவனையில் பக்திரஸம் ததும்பிய தோரணையில் தென்படக்கூடியவர். வேண்டியவாள் வீடாயிற்றே என்பதை முன்னிட்டு காசுக்கு அதிகம் ஆசிக்காமலே மந்திரம் பார்க்க ஒப்புகொண்டு, ஒருமாதக் கெடு கோரினார். ஜெபதப சில்லறை செலவுகட்கு மட்டிலும் உபாயமாய் ஒரு இருநூறு ரூபாய்கள் தான்பெற்றுக்கொண்டார். வைர மாலை கைக்கு வந்துவிடுமென்ற திடமான நம்பிக்கையில் மேல்படி ரூபாய்களை வீட்டுக்காரர் பெரிதாய் எண்ணவில்லை. கேட்டதெல்லாங் கொடுத்தார்கள். ராஜோபசாரவிருந்துகள் இடைவிடாது விசேஷமாய் நடந்துவந்தன. மாதமும் நெருங்கிற்று. ஓர்தினம் காலைவேளையில் வீட்டுக்கார ராவுத்தரை மந்திரக்கார சாயபு முகமன்கூறி சந்தித்தார். முகத்தில் அசடுதட்டிற்று. வாடிய முகத்தோடு வார்த்தையை ஓர்வழியாய்த்திருப்பி பய

பக்தியோடு பேச ஆரம்பித்து, பின்வருமாறு இழவுச் செய்தியை மொழிந்தார். மாலேவேளை, குழந்தை, வீதியில் தனிமையாய் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது, வழிப்போக்கனொரு வன், தந்திரமாய்க் கழட்டி எடுத்துக்கொண்டா னென்றும், அவன் இது சமயம் இந்தியாவி லேயே, இல்லாது பினங்கைச் சேர்ந்த அக் கரை பிரதேசத்துக்கு, மாலேயோடு மரக்கல மேரி பிரயாணமாய் விட்டானென்றும் சென்ற, இரவு சொப்பனத்தில் தனது குருவந்து இனி அதில் பாடுபடுவதில் புண்ணியமில்லேயென திண்ணமாய்ச் சொல்லிப் போய்விட்டாரென் றும் சொல்லிமுடித்தார். ராவுத்தர் செவியில் நாராசம் நுழைவது போலிருந்தது, மிகமிக மனம் நொந்தாராயினும், இந்த இழவு செய்தி யை அந்தப்புரத்து அம்மணிகளிடம் சொல்லி அவர்கள் மனதையும் புண்படுத்த மனம் ஒருப் படவில்லே, சொல்லவேண்டாமென்று சாயபுவை யும் எச்சரித்தார். ராவுத்தருக்கு இதுவரை மந்திரவாதியின்மீது இருந்த நம்பிக்கை தெய் வத்திடமாய் மாரியது. தன்னே நம்பினேரை தெய்வம் கைவிடுவதில்லேயென்பது புராண அறிக்கை. அப்படியானல் மாலே கிட்டியதா? போகப்போகத் தெரியும்.

ஒரு மாதகெடு நாளேயோடு பூர்த்தியாகிற படியால், பெண்டீரெல்லாம் மாலே கிடைக்கும் மறுதினத்தை வெகுவாய் எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்தபடி வைரமாலேக்கு வழிபிறந்ததா? ஆமாம் மாலே கிடைத்துவிட்டது, வாயோட்ட மாய் உளரவில்லே, உண்மையிலேயே கிடைத்து விட்டது, எப்படிக் கிடைத்தது? அதில்தான் ஆச்சரியம். அதைகேட்கவேண்டுமென்ற அவா, உங்கள் மனதில் எழலாம், அதை சொல்லிக் காட்டுவது சரியல்ல, விஷயத்தை எடுத்துக் கொண்டபின் சொல்லாமலிருக்கவும் கூடவில்லே. சொன்னல், மந்திரக்கார மாயாண்டி சாயபு வம் புக்கு வருவார், இதர்க்குத்தான் தருமசங்கட மென்பார்கள். மாந்தரீகர்களின் மனஸ்தாபத் தைப் பொருட்படுத்தவேண்டிய தவசியமில்லே, பொது ஜனங்கள்விழிப்படையவேண்டுமென்ப தொன்றுதான் எமது கட்டுரையின் கருத்து.

வளர்த்துவானேன், மாலே நேரம் வீட்டுக்கார அம்மணிகளெல்லாம் மந்திரக்கார சாஹிபுவை வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்திருந்தார் கள். வந்தார் வைத்தியர் வழக்கம்போலெ. பெண்டீரும், பிள்ளேகளும் கண்சிமிட்டாது நோக்குகின்ற காட்சியானது வருக வருகவென, வெகு மரியாதையாய் வரவேற்பதேபோல் தோற்றந்தந்தது. குலதெய்வமேபோல் அக் குடும்பத்தினரால் கொண்டாடப் பட்டுவரும் இந்த குருக்கள் சாஹிபுக்கு என்ன மரியாதை தான் நடக்காது. ராவுத்தர் வீட்டுவாயல் சிமண்டுபோட்டு மெழுகி வழுவழுப்பாயிருந் தது.கஷ்டகாலம் யாரைவிட்டது? நிலேயருகில் வாழைப்பழத்தோலொன்றை ஓர் குழந்தை உரித்து எரிந்திருந்தது. சாயபுவின் சாடை யெல்லாம் எதிரே தென்படும் அம்மா மார் களின்மீது அம்புபாய்ச்சப்பட் டிருந்தமையால், காலடியை கீழே கவனித்து வைக்க சாவகாசம் கிடைக்கவில்லே. உல்லாசமான வேகத்தோடு உள்ளே நுழைகிருர். ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால், நடுவே நிலேயரிகால். இயற்கையிலேயே ஆஜானு பாகுவாய், வாட உயர்ந்து வளர்ந்த உரு வகமுடையவர் அதோடு மூன்று அங்குல உயர முள்ள மிதியடியை பாதத்தில்மாட்டி இருந்தார். எனவே கீழே வாழைப்பழத்தோல் சாயபுவின் காலேப் பிடித்து காடிவித்தை காட்டத் தொடங் கிற்று. கையை விரித்து சர்கிஷ் கம்பி வித்தை காட்டினர். நிலேயின்மேல் பாகம் ஆட்டத்தை நிறுத்து என்று அதிகார அவசர ஆர்டர் போடுவதேபோல், சாயபுவின் நெற்றியில் முற் றுகை போட்டது படீலென்று. கோடு மாடாய் கீழே விழுந்தார். சிரசில் சட்டிக் குல்லாயொன்று கவிழ்த்து அதற்குமேல் பருத்த பாகையொன்றைச் சுற்றியிருந்தார், அவ் விரண்டுக்கும் சேர்ந்துவாழும் பிராப்தம் அக ன்றுவிட்டதுபோலும். சாயபு கீழே சாய்கவே குல்லாயும் முண்டாசும் ஒன்றுக்கொன்று பய ணஞ்சொல்லிப் பிரிந்தகாட்சி பரிதாபமானது. முகமறியா வேற்றுனேபோல், மூலேக்கொன் ருய்ச் சிதறிவிட்டன. இத்தனேயும் ஓர் வினடி யில் நடந்த விஷயம். விழுகவே என்ன ஆச் சரியம், மூலேயில் பதுங்கிய முண்டாசு துணி, சாயபுவின் இழிச்செயல் சகிக்க ஒண்ணுது பரி கசிப்பதேபோல் பல் இளிக்க வாரம்பித்தது. பல்லிளித்ததா இல்லே, பளிச்சு பளிச்சென மின் னல் வெட்டிற்று. நெருங்கிப் புரட்டிப்பார்க, காணுமல்போன வைரமாலே, ஒருமாத சிறைத் தண்டனே சாயபுவால் விதிக்கப்பட்டும் விடுதலே யடைந்துவிட்ட குதூகலத்தால் தகதகாய மான முகத்தோடு எல்லாருக்கும் காட்சி கொடுத்தது. மந்திரவாதி மூர்ச்சையானர் இல்லே அப்படி பாவனே செய்தார். ஏன் பாவனே? எத்தனேயோ மஹத்தான ஆபத்து

களிலெல்லாம் தப்புந்தவறுமான போக்குக் காட்டி எல்லோருக்கும் கடுக்கா கொடுத்து வந்தவர், ராவுத்தருக்கு எதிரிலேயே கையுங் களவுமாய் காசுகொடுத்து வாங்கிய சொந்தமுண்டாசே காட்டிக்கொடுத்துவிட்டதே. இந்நிலையில் ராவுத்தரிடம் எதைச் சொல்லித் தப்புவதென்பதை சிந்தனைசெய்யும் பொருட்டே அவ்வாறு பாவனைசெய்தார். சிந்தனையில் ஒன்றும் பொருத்தமாய்ப் புலனாகவில்லை, மூளைகுழம்பியது. வெகுநாள் திருடன் ஒருநாள்அகப்பட்டே தீருகிறான். ராவுத்தர் பிரமித்துப் போனார். முன்தினம் நடந்த சம்பாஷணையால் ராவுத்தருக்கு மட்டுந்தான் இரகசியம் தெரியும். வீட்டுக்கார அம்மணிகளெல்லாம், மாலையைக் கண்டுபிடித்து நம்மிடம் சேர்ப்பிக்கவந்த சமயத்தில் மந்திரவாதிக்கு இப்படிக்கொத்த அசம்பாவிதம் ஏற்பட்டதையுன்னி ஆயாசமும், மாலை கிடைத்துவிட்டதையெண்ணிய சமயம்சந்தோஷமும்,மறுசமயம் சஞ்சலமுமான தருமசங்கடத்தில் சாயபுக்கு சிகிச்சோபசாரம் செய்தார்கள். ராவுத்தர் கனவிலுங்கூட சாயபுவை குறைவாய் நினைத்தவரல்லர். எத்தனையோ குற்றங்கள் அவர்மீது கூறப்பட்ட காலங்களிலெல்லாம் ஒன்றுக்கும் இடங்கொடுக்காது எதிர்த்து நின்று வாதாடிய அனுதாபி, சாயபுவின் வண்டவாளத்தை நேரிலேயே கண்டுகொண்டாராதலின், முன் நடந்த சம்பவங்களெல்லாம் ராவுத்தர் ஹிருதயத்தில் ஒரு வினாடியில் ஒன்றன்பின் ஒன்றாய் சாக்ஷிச் சொல்ல ஆஜராயிற்று. வெளியில்சொன்னால் வெட்கக்கேடு,உடனே சாயபுவை வண்டியேற்றி சுய ஊருக்கு பத்திரமாய் அனுப்பி விட்டார். ஹாஸ்பெட்டலுக்கு அனுப்பியதாய் வெளி விளம்பரம். இம்மட்டுடன் தலைதப்பியது தம்பிரான் பாடென்று சாயபு திரும்பிக்கூட பார்க்காமல் தன் சுயபதிபோய்ச் சேர்ந்தார்.

மனித சுபாவம் எத்தனை நாளைக்கு இரகசியத்தை மறைத்துவைக்கும். ராவுத்தர் தனக்கு நெருங்கிய நண்பரொருவரிடம் மட்டும் வெளியிட்டார். நண்பருக்கு பல நண்பர்களுண்டும் அவர்கட்கும் அப்படியே பலர்,ஒவ்வொருவரும் தன் தன் நண்பர்களிடத்தில் தான் வெளியிட்டார்கள். எனவே இரகசியமாயிருந்தது மாறி பரகசியமாய் முடிந்தது. பலர் அதை நம்பினார்கள். சிலர் அதை நெம்புகிறார்கள்.

சுயபதிபோய் வெகுகாலமாகியும் சாயபு இந்த வழி திரும்பாமலிருப்பதானது, இருக்கலாமென்று எல்லோரும் எண்ண இடமேற்படுகிறது. மனிதன் கண்ணால்கண்டால்தான் ஒன்றை ஏற்கிறான். இந்தப்பூனையும் பாலைக்குடிக்குமாவென்றெண்ணியிருந்த அவ்வூர்வாசிகளெல்லாம் அதிஆச்சரியப்பட்டுப் போனார்கள். சாயபு போய்ச் சிறிதுகாலந்தானாயிற்று, அவர்மீது பல புகார்களும் அவதூறுகளும் அபவாதங்களும் தலைக்காட்டத் தொடங்கிற்று. ஒன்றை தரிசனமாய்க் கண்டுகொண்டபின் எல்லாவற்றையும், நம்பத்தொடங்கிவிட்டார்கள். இனி மேல்படி சாயபுவோ அல்லது அவர்போன்ற வேஷதாரிகளோ அவ்வூரில் பிரவேசிக்க முக்காலும் முடியாது.

இதேபோல், எத்தனையோவித கோலத்தில் பீர்களென்றும் மாந்தரீகன் என்றும், பெயரிட்டுக்கொண்டு அவர்கள் புரியும் திருட்டும், கள்ளநட்பும், கர்ப்பழித்தலும், கலகப்படுத்தி விடுவதும் நாள் தவராமல் நடைபெறுவதை கேள்விப்படுகிறோம். முரீதுகொடுக்கிறேனெ தானேமுன் வருவதும், மந்திரம் போடுகிறேன் என்பதும், இலவசமாய் வைத்தியம் செய்கிறேன் என்பதெல்லாம், பலபேர்களையும் அதிலும் பேதைகுணம் படைத்த பெண்மக்களைத் தன்பால் போக்குவரத்து வைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் சௌகரியத்தையும் சிருஷ்டித்துக் கொள்ளத்தான் என்னும் சூட்சமத்தை இவ்வுலகம் என்றென்றும் உணராமலா இருந்துவிடும்? ஊரிலுள்ள பேதை பதிவிரதைகளைப் பதம் பார்த்துவிட, கற்பரசிகளை கறைப்படுத்த—கிட்டெ நெருங்கி கொஞ்சல் மொழி பேசியாவது விரகதாபமடங்க துறவித் தோல் போர்த்திக்கொண்டு காமவேட்டையாட, வலை வீசியுலாவும் தோஷிப்பயல்களுக்கு ஒரு சிலர் ஆக்கமளித்து வருவது தான் ஏக்கத்திற்கிடமாகிறது. வெட்கம்! வெட்கம்!!” உலகம் விழிக்கவேண்டும்.

கள்ள வேஷக்காரனின் கோளாரைப்பற்றி வேதநாயக கீதைப்பகுதியில் சிலதை கீழே தருகிறேன்.

கையில் நாம் பிடிப்பதுவோ ஜெபமாலை;
கட்கத்தில் வைப்பதுவோ கன்னகோலை.

மெய்யாகத் தினம் படிப்பது தர்ம நூலை;
மேலும் மேலும் நமக்கு துன்மார்க்க வேலை.

ஒரு பெண் வேண்டாமென்று கொள்வோம் சன்யாசம்; ஊரில் உள்ள பெண்கள் மீதெல்லாம் நேசம்.

பருகப் பசியில்லாத போதுபவாசம்; பசித்தால் ஒருப்பானைப் பருக்கையும் நாசம்,

ஆனதலையில் வளர்ப்பது ஜடைமுடியே; அனு தினமுங் கெடுப்பதாயிரங் குடியே.

கள்ளத்தனமாக சந்நிதி முன்றழுவோம்; காசுக்கு நாயையும் கைகட்டித் தொழுவோம்.

சுசியாக பிறக்குப தேசிப்போம் ஞானம்; துர்க்குண கடலிலே தினம் செய்வோம் ஸ்நானம் என்னரும் நண்பீர்.

திருடிய வைரமாலையை மரைத்து வைக்கவும் தலைப்பாகை துணை புரிகிறது. அதனல் தலைப்பாகை கட்டியவரெல்லாம் தம்பிரானல்ல. கோணல் மாணலாகவும் மேடுபள்ளமானவும் மண்டை ஓட்டை மரைத்து வைக்கவும் மயிர் வளர்க்கலாம். அதனுல் மயிர் வளர்த்தவரெல்லாம் மஸ்த்தானல்ல. பேதை பெண்கள் பரவசமடைய ஒருவர் அலங்கார ஆடைகள் அணியலாம். அதனுல், அவர்கள் பீர்களாயும் முர்ஷித்களாயும் ஆய்விட்டதாய் அர்த்தமல்ல. நன்மையும் தின்மையும் அவரவர் எண்ணத்தைப் பொருத்துநிற்கிறது. இதற்குத்தான் "இன்னமல் அஃமாலு பின்னிய்யாதி" (நாயக வாக்கு) என்கிருர்கள். யாரை நம்புவது, காலம் கலிகாலம்—பிந்தின காலம்—ஒருவரையும் கண்மூடித்தனமாய்க் கொண்டாடாதீர்கள். இதேபோல், இஸ்லாமிய கொள்கைகளிலும் கோளாருண்டு. விஷங்கலந்த விஷமமும் வேஷமும் அனந்தமுண்டு. எழுத இடமில்லை. இன்ஷா அல்லாஹ் மருமுறை சந்திக்கிறேன். 'வேடிக்கை முடிந்தால் வேஷத்திற்கு வேலை இல்லை. அது வெளுத்துத்தான் போகும்.

"இன்னல் பாதில கான ஜஹூகா"

வீழ்ச்சியை ஒழிக்க எழுச்சி வேண்டும்

தெய்வப் பிரதிநிதிகளாய் உலகை ஆண்டு வரும் மனுக்கோடிகளில் பாலியம், வாலிபம், விருத்தாப்பியம் என்னும் முவ்வகை நிலைமைகள் மாறி மாறித் தோன்றக் காண்கிருேம்.

வில்லு போல் வளைந்த முதுகினராய், தசை தளர்ந்து, தோல் சுருங்கி, மயிர் நரைத்து, பார்ப்பதற்கு விகாரமாய், தள்ளாடித் தள்ளாடி தடியூன்றி நடக்கும் தாதாக்களெல்லாம், முன்னொரு காலத்தில் துள்ளிக் குதித்து தடபுடல் செய்த கட்டுமஸ்தான காளையர்தாம். அஃதேபோல், கூனிய முதுகுடன், பார்க்க பரிதாபமாய், காலை நீட்டிக் குந்தியிருக்கும் பாட்டிகளெல்லாம் முன்னொரு சமயம் சிருங்கார சிறுமியராயும், எத்தனையோ கற்பனசக்தி மிகுந்த கவிகளின் ஹிருதயங்கள் அப்பெண்களின் சாயலை எப்படி வருணிப்பதென்ற வகைபுரியாது ஏங்கச் செய்த எங்தெழில் பூம்பொழில்களும் சுவர்ணபிம்ப அரம்பையர்களுந்தானென்பதும் அறிவாளர்கள் மறக்க முடியாது.

மனிதன் தெய்வப் பிரதிநிதியாய், இத்தரணியில் அவதரிக்கிருனென்பது சாமானிய அந்தஸ்தல்ல. இதனுலேயேதான் சிருஷ்டிப் பொருள்கள் யாவற்றினும் மனித வர்க்கம் தனிச் சிறப்புற்றுத் திகழ்கிறது. இவனில் ஆன்மபலம் வெற்றியடைந்தால் இப்பிரபஞ்சம் மட்டுமன்றி, ஈரேழு லோகத்திலும் இவனது அதிகாரம் பிரயோகமாகலாம்.

பாலிய பருவத்தில் பயிற்சிப் பக்குவமடைந்தால், வாலிப வயதில் உலகாளும் வன்மையடைந்து, விருத்தாப்பியதிசையில் ஓய்வெடுத்துக்கொள்ளுகிருன். ஆன்மபலம் அதிகமிருந்தால் வயோதிக காலத்திலும் ஓய்வில்லாது தன்கடனுற்றுகிருன். ஆளுந்திறன் அதிகமுள்ள அளவுக்குத்தான் ஆண்டகையிடம் அவனது கௌரவம் காக்கப்படுகிறது.

எனவே, வாலிபமும் விருத்தாப்பியமும் உயர்ந்து விளங்குவதெல்லாம், பயிற்சிப்பிராயத்தைப் பொருத்தேயிருக்கிறது. ஒரு சமூகம் முன்னேறுவதும் பின்னடைவதும் பால்ய கால பயிற்சிப் போராட்டத்தில்தான் பதுங்கிக் கிடக்கிறது. இன்றைக்கு மஹான்களென்றும், மஹாத்மாக்களென்றும், சர்வாதிகாரிகளென்றும், தலைவர்களென்றும் பொதுமக்களால் போற்றிக் கொண்டாடப்படுகின்றனர்; ஏகாதிபத்தியம் அவர்களை அசட்டைபண்ண முடியவில்லை. எப்படியாவது அவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்றே பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட

செல்வாக்கு இவர்கட்கு எங்கிருந்து கிடைத்தது? பள்ளிமாணவர்களாய்ப் பயிற்சிபெறும் பால்யகாலத்தில் தேர்ச்சிபெற்ற திட்சண்யந்தான்.

எந்த வகுப்பினர், தன்னருங் காளையர் கரத்தில் தண்ணீர்பட்டையைத் தூக்கிக் கொடுத்தனரோ, அவர்கள் இன்றைக்கும் பட்டை இறைத்தவண்ணமாய்த்தான் சேற்றில் மண்டியிட்டுக் கொண்டிருக்கின்றனர். பால்மணம் மாறாப்பொழுதில் மரக்கலம் ஏற்றப்பட்ட பிள்ளைகள் வெள்ளைச் சட்டையும் வீசிய கையுமாய் வெறுமனே வந்து வந்து திரும்புவதைக் காண்கிறோம். மாடுகள் மேய்க்கவிடப்பட்ட மழலைகள் தும்பைப் பிடித்துக்கொண்டு இன்னும் திரிந்துலாவித்தான் வருகிறார்கள். கால் கவளி வெற்றிலையை கையில் சுமக்க சக்திவந்ததும், வெற்றிலை விற்றுவர வெளியில் விரட்டப்பட்ட பாலகர்கள், இன்று பாட்டன்களாய் மாறியும், வீதிகள்தோறும் வெற்றிலை விற்றுத்தான் சுற்றிவருகிறார்கள். எண்ணிய காரியம் ஒன்றும் வென்றார்களில்லை. இவர்களால் பிறருக்கு பரம் பைசாவுக்குக்கூட பிரயோஜனமில்லை. பயிற்சிக்காலப் பிராயத்தில் பெற்றோர்கள் படிப்பு விஷயத்தில் பராமுகமாயிருந்ததே இவ்வீழ்ச்சிக்குக் காரணம்.

ஆனால், இதற்கு மாறாய் கல்வியில் அக்கரை கொண்டு, கூலிக்கு நெல் குத்தியேனும் படிப்பு புகட்டப்பட்ட பிள்ளைகள் ஒன்று, வர்த்தகத் துறையில் புகுந்து அதன்மூலம் விருத்தியடைந்து, பொருளாதார பலங்கொண்டு குபேரப்பிரபுக்களாய் கவலையின்றி காலங்கடத்திவரக்காண்கிறோம்; அல்லது ஆட்சிமுறையில் ஆதிக்கங்கொண்டு கிராமக்கணக்கன் முதல் கவர்னர்-ஜெனரல் வரை உத்தியோகம் பெற்று உலகையே ஆட்டிவைக்கும் தோரணையில் அதிகாரவர்க்கத்தில் அமர்ந்திருக்கக் காண்கிறோம். எத்தனை கர்வங்கொண்ட முண்டர்களாயிருப்பினும் அவ்வதிகாரிகளின் முன்னிலையில் கைகட்டி வாய்பொத்தி வணக்கமாய் ருகூஃ அளவிற்குக் குனிந்து பயபக்தியாய் நடந்துகொள்வதைப் பார்க்கிறோம். நம் குடியானவனுக்குப் பிறந்த கீழ் ஜாதிக் கவுண்டன்தானே இன்று கலெக்டர் துரையாய் மாறியிருக்கிறானென யாரும் மரியாதை காட்டாமலிருக்க முடிகிறதில்லை. கீழ் ஜாதியாரை மேல் ஜாதியினராயும், தீண்டத்தகாதவனை தீண்டத் தகுதியுள்ளவனையும் பக்குவப்படுத்திவிடுவது இஸ்லாமியச் சமயமும் கல்விப் பிரளயமுமாய்த்தான் காணப்படாநின்றது.

உலகத்தின் காலப்போக்கு சுழன்றுசுழன்று வரும் நிலைமையில், வருங்கால வாழ்க்கையில் உலகைத் திறன்பட கட்டியாள்வது இக்கால இளஞ்சிறுவர்களை ஒட்டியே ஜோஸ்யம் துலங்க வேண்டியிருக்கிறது. அவரவர்கள் கற்ற கல்வியளவுக்குத்தான் ராஜீயத் துறையில் ஆதிக்கம் பெறமுடியும். நூற்றுக்கு நூறு படித்துவிட்டு உத்தியோகக் கோட்டையில் வேட்டையாடிக் கொண்டிருக்கும் இதர சமூகங்கள், மென்மேலும் மேற்படி வேட்டைக்கு வட்டமிட்டவர்களாய் கல்விமண்டலத்தை நோக்கி உத்வேகமாய் உயரப் பறந்து போட்டியிட்டுக் கொண்டிருக்கும் இதுகாலம், நமது இஸ்லாமியச் சமூகம் மட்டும் படிப்புத்துறையில் கிடுகிடாயமான பள்ளக்கிடங்கில் படுத்துக்கொண்டிருப்பதுமல்லாமல் பாதாளம்வரை இன்னும் கடகடவென உருண்டு காட்டுவேன்; என்ன பந்தயம் கட்டுகிறாய்? என்னும் வினாவை மனனம் பண்ணிக்கொண்டிருக்கின்றது. அதிலும் தமிழ் முஸ்லிம்களின் ஸ்திதியோ சொல்லஸ்திரமன்று; இதை யாரிடம் சொல்லி ஓலமிடுவது? நம் சமூக அபிமானிகளின் நன்முயற்சியால் எத்தனையோ சிரமங்கட்கு அப்புறம், கவர்ன்மெண்டிடமிருந்து 100-க்கு 25 ஸ்தானங்கள் உத்தியோகத்துறையில் முஸ்லிம்கட்கென்று வாதாடி வாங்கப்பட்டிருக்கிறது. என்ன பயன்? ஆளுந்திறனுக்கு அடிப்படையான படிப்பிருந்தாலன்றோ மேற்படி ஸ்தானங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும்?

பதினைந்து ரூபாய் சம்பளத்தில் ஸ்கூல் பைனல் படித்த திறமையான பேர்வழி ஒருவர் தேவை என்னும் விளம்பரம் வர்த்தமானப் பத்திரிகைகளின் "தேவை" என்னும் பகுதியில் பொறிக்கப்பட்ட மாத்திரத்தில், பிறசமூகத்தார்களான பதினாயிரக்கணக்கான பி. ஏ. பட்டதாரிகள் டஜன்கணக்கான சர்டிபிகேட்டுகளோடு மனுக்களைப் பறக்கவிடுகின்றனர். நம் சமூகமோவெனில், கழுத்தில் கயிற்றை மாட்டி இழுத்துக்கொண்டுபோய் உட்காரவைப்பதென்றாலும் ஆள் அகப்படுவது குதிரைக்கொம்பாய் இருக்கிறது. வயிற்றுக்குக் கஞ்சி கிடைக்கவில்லையே என்று வாது கிடைத்தால், வயிற்றுக்கு ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற குன்மக் கோளாறு! இந்த பொல்லாத விதிக்கு யாரை நொந்து கொள்வதோ?

தொளாயிர வருஷம் இப்பெருந் தேசத்தை அரசுபுரிந்த சமூக சந்ததிகளென்னும் சலுகையோடு வாரிஸ் பாத்தியம் கொண்டாடும் வீரப் பேச்சு, வாருங்கள், நியாயமாய் நீங்கள் அடைய வேண்டிய இடங்களை ரிசர்வ் செய்திருக்கிறோமென வருந்தி அழைக்கும்போது கீச்சு கீச்சு. இதற்குத்தான் கையாலாகாத அபிலாஷை என்பார்கள். முற்கால பெருமையைத் தற்காலம் கூறித் திரிவதால் பயனென்ன? அப்பன் பனையேறினால் மகனுக்கு மார் காய்த்து விடுமா? அவரவரும் தன் கையை ஊன்றிக் கரணம் பாய்ந்தால்தான் காரியம் கைகூடும். என் மூதாதைகள் அதிமேதாவிகளாய் இருந்தார்களென்பதெல்லாம் வெறும் திண்ணைப் பேச்சு. அக்காலத்தில் நம் குடும்பந்தான் பண்ணை வைத்துப் பூமியாண்ட பிரபுக்களென்பதெல்லாம், பாட்டிக்கதைகளின் ஓர் பகுதியேயாம். அதனாலெல்லாம் நாம் பெருமையடைந்துவிடலாமென்பது பகற் கனவின் பலனையே யொக்கும்.

வேறு உய்யவழி என்ன? புத்திரபாக்கியம் அருளப்பெற்ற பிதாமார்கள் தங்கள் வாழ்க்கையின் போக்கை முற்றிலும் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். தோளில் தொங்கவிடப்பட்ட தண்ணீர்டோலைக் களைந்துவிட்டு குழந்தைகளைக் கல்லூரிகட்கு அனுப்பவேண்டும். இதுகாலம் நீங்கள் வாலிபர்கள்; திடகாத்திரமான தேகக்கட்டுள்ளவர்கள்; எவ்வித ஜீவனோபாய உழைப்பிற்கும் உங்கள் எலும்புகளில் வலுவிருக்கிறது. குழந்தைகளின் தசையும் எலும்பும் உழைப்பிற்கு ஏற்றதல்லவென்பது நிபுணர்களின் துணிபு. கல்வி கேள்விக்குரிய கருவிகள் அவர்களிடம் மாசுமறுவின்றி நிஷ்களங்கமாய், எதையும் ஏற்றுக்கொள்ள சித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறது. சின்னஞ் சிறுவயது போதனை, நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதியுமென்பது அனைவருங் கண்ட அனுபவம். அதற்கான போதிய சந்தர்ப்பமும் சௌகரியமும் செய்துகொடுப்பது பெற்றோர் மேல் விழுந்த பொறுப்பு. உங்கள் பெற்றோர்கள் உங்களுக்குப் படிப்பு புகட்டாது மாடு மேய்க்க விட்டிருந்தார்களேயென பரவசப்படுகிறீர்கள். நீங்களும் விருத்தாப்பியமடைய வேண்டியகாலம் வெகு தூரமில்லை. அத்லஸே **உம்ரத் ப மிக்றாஜே ஷுஹூர்; பாறா பாறா கர்த் கைய்யாதே குஜர்.** மெருகு பட்டுபோன்ற உன தரும்பிராயத்தை, கர்வங்கொண்ட தையற்காரன், மாதங்களென்னும் கத்திரிக்கோலால், சன்னஞ் சன்னமாய்த் துண்டிக்கிறான் என்னும் கவியின் கருத்தை கவனிப்பீர்களாக! படித்த பிள்ளையானால் உங்களின் தள்ளாத காலத்தில் பஞ்சணை விட்டிறக்காமல் பாலும் பழமும் ஊட்டி போஷிப்பான்; வேளை பிசகாமல் அறுசுவைகளோடு அன்னம் படைப்பான். படிக்க வைத்திருந்தால் மட்டுந்தான் உங்களின் மேதை மரியாதையை உணர்ந்து பணிவாய்நடந்து கொள்வான். இல்லையேல், கெட்டான் கிழவன், தொணதொணவென எப்பவும் நம்மைத்தொந்திரவு கொடுத்துக் கொண்டிருக்கிறான்; இவனுக்கு என்றைக்கு சாக்காடு வரும், இழுத்தெறிந்து விட்டு ஏகாந்தமாய்க் காலங்கடத்தலாமென்பது போன்ற வெகு கசப்பான வார்த்தைகளையெல்லாம் விஷம்போல் கக்குவான். அது அவன் மேலுள்ள குற்றமல்ல; உங்கள் கௌரவம் காக்க முன்பு அவனுக்கு கல்வி புகட்டியிருக்க வேண்டியிருந்தது. அதில் அணுவளவுகூட அக்கரை கொண்டீர்களில்லை. மாடு மேய்க்கவும், பூட்டை இறைக்கவும்விட்டிருந்தீர்கள். இன்று உங்களையே அவன் மாடாய் மதித்து, கவணை கம்பத்தில் பிணைத்துவிட திண்ணைக்குத் துரத்தி துரத்தியடிக்கிறான். அப்பொழுது, அப்பா, உன்னைப் பெற்றேன், வளர்த்தேன், பசிக்குப் பாலூட்டினேன், போஷித்தேன், பாதுகாத்தேனே! இப்பொழுது எல்லாவற்றையும் மறந்து என்னை கரடியாயும், குரங்காயும் ஆட்டிவைக்கிறாயே என ஈனக்குரலோடு பிரலாபிக்கிறான். பெற்றோர்களை இப்படியெல்லாம் ஹிம்சிப்பது பெருந்தோஷமே! அவர்கள் மனம் கோணாமலும், நோகாமலும் நடந்துகொள்ள வேண்டுமென்பதும் வேதக் கட்டளையாகும். அது அவன் கடமைகளில் மிகமிக முதன்மையானதுமாகும். ஆனால் அதேபோல் பெற்றோர்கள்மீதும், பிள்ளைகளுக்கு செய்துவைக்கவேண்டிய கடமைகள் சில இருந்தன. அவைகளில் அவசியத்தினும் அதி அவசியமானது கல்வி அறிவு புகட்டி கண்திறந்து வைப்பதுதான். பெற்றவன், முன் இக்கடமையை கை நழுகவிட்டான். பிறந்தவன் தன் கடமையை இது பொழுது கால் நழுக விடுகிறான். தன் கடமையை குறைவின்றி செய்தவன்தான் பிறர்கடமையைக்கோரி நிற்பது இலக்ஷணமாகும். இல்லையேல் அது ஒரு தலை பக்ஷமென்றுதான் சொல்லவேண்டியிருக்கும்.

எனவே, முன் நாம் இழந்துவிட்ட செல்வம் திரும்பவும் அடைய வேண்டுமென்ற வேட்கை இருந்தால், பெற்றோர்கள்தான் சற்று முகம் பார்க்கவேண்டும். அதோடு கிராமத்தலைவர்களும் கொஞ்சம் கவனம் செலுத்தி, முஸ்லிம் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் கட்டாயப் படிப்பை கையாள்வது சிலாக்கியமாகும். ஏழை குடும்பம் ஈன்ற குழந்தைகளுக்கு முஸ்லிம் "பைதுல்மால்" பொதுப் பணத்திலிருந்து ஸ்காலர்ஷிப் கொடுத்து போஷிப்பது மார்க்க தோஷமல்ல. கற்றவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட கிராமங்களிளெல்லாம் கல்வியில் போதிய அக்கரை காட்டப்பட்டு வருவது போற்றத் தக்கதாகும். படிப்பு வாசனையறியாத உருப் படிகளை யெல்லாம், தான்தோன்றித் தலைவர்களாய்ப் பெற்றிருக்கும் சிறு பள்ளிகளின் விதியை யாரால் வெல்லக்கூடும்.

தெய்வப் பிரதிநிதியாய் ஆதம் (அலை.) சிருட்டிக்கப்பட்டாரென்பது வேதவாக்கு. நாம் ஒவ்வொருவரும் ஒரு ஆதமீதான். எங்கே மேற்படி பிரதிநிதித்துவத்தை பிரகடனப்படுத்த முன் வாருங்கள், பார்ப்போம்? இந்தப் போட்டியில் முதல் பரிசு யாருக்குக் கிடைக்கும்! பார்க்கலாம். எழுமின்! வீழ்ச்சியை ஒழிமின்!! வழியறிந்து வாழ்மின்!!!

முல்லாவும், காதியானியும்

(சென்றமீ 433-ம் பக்கத் தொடர்)

(அபந்தி அவில்வது)

கனவு கண்ட காதியானி சாயபு, நாளைவந்து மீதிக் கனவையுங்கூறி, அதற்கு தஃபீர் கேட்டுப் போகிறேன் எனச் சொல்லிவிட்டு முல்லாஜீயிடம் விடைபெற்றுச் சென்றவர், நாளை வருவாரென ஒவ்வொரு நாட்களும் முல்லாஜீ எதிர்பார்த்துக்கொண்டிருந்தும் காதியானியின் வரவைக் காணவில்லை.

நவம்பர்மீ 20உ காலையில் முல்லாஜியிருக்கும் சத்தியமா நகரில், சுவர்க்கலோகத்தின் நேரத்தைப்போல் இருளும், வெயிலுமில்லாமல் தென்றல்வீசி ஜனங்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. பறவையினங்கள் தங்கள்கூடுகளிலிருந்து வெளிக்கிளம்பி இரைதேடப்பறந்து சென்று கொண்டிருந்தன. முஸ்லிம்களெல்லாம் ஸுப்ஹு தொழுதுவிட்டு, குர்ஆன் ஷரீப், ஹிஸ்புகள் ஓதி முடித்துவிட்டு, பள்ளிவாயிலை விட்டும் தங்கள் தங்கள் இல்லங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர். நேரம் செல்லச் செல்ல கிழக்குத் திசையிலிருந்து கதிரவன் தனது கிரணங்களை வீசி உலகிற்கு ஒளிபரப்பிக்கொண்டுமிருந்தான்.

சுமார் 8 மணிக்குப் பின் ஏதோ விசேஷ தினங்களைப் போல், ஜனங்கள் அதிகமாக கூட்டங் கூட்டமாக நல்ல ஆடைகளையும், புதிய உயர்ந்த உடுப்புகளையும், அணிந்தவர்களாய் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்தனர்.

யாதொருவிஷயத்தையும் அறியாத முல்லாஜீயானவர், தமது வழக்கம்போல் அதிகாலையில் குளித்து, நாஷ்டாச் செய்தபின் மஸ்ஜிதிற்குச் சென்றார்.

முல்லாஜீ அவர்களிடம் வழக்கமாகவந்து மார்க்க உபதேசம் பெற்றுச் செல்லும் சத்திய விசுவாச பக்தரான நாட்டாண்மைக்காரரும், உயர்ந்த புதிய ஆடைகளை அணிந்துகொண்டு முகமலர்ச்சியோடு குறுநகை புரிந்தவராய் முல்லாஜீயிடம் வந்து வணக்கமாய்,

ராவுத்தர்:—ஹஜ்ரத் அஸ்ஸலாமு அலைக்கும்.

முல்லாஜீ:—வ அலைக்கு முஸ்ஸலாம் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு.

ராவுத்தர்:—(ஹஜ்ரத்தவர்கள் விசேஷ உற்சாகமில்லாமல் எப்போதும்போலிருந்ததை அறிந்த ராவுத்தர் முல்லாஜியை நோக்கி) ஹஜ்ரத்தவர்களுக்கு ஊர், தகவல் ஏதாகிலும் எட்டவில்லையோ?

முல்லாஜீ:—ராவுத்தரே! இதோ நாஷ்டாச் செய்து வந்து உட்கார்ந்திருக்கின்றேன். எமக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ராவுத்தர் :—தென்னாட்டின் முஸ்லிம் சிங்கமான மௌலானா செயிது முர்தஜா ஸாஹிப் பகதூர் அவர்களுக்கு, எலக்ஷனில் வெற்றி கிடைத்துவிட்டதென, ஹிஸ்புல்லாக்களின் ஹைகோர்ட்டிலிருந்து, நமதூர் ஜமாஅத்தாருக்கு இன்று காலை தந்திவந்தது. அதுநிமித்தம் இவ்வூர் முஸ்லிம்களெல்லாம் அத்தந்தியை பெருநாளின் பிறையைப்போல் கருதி, இன்று ஜனங்கள் குளித்து, புதிய நல்ல ஆடைகளை அணிந்துகொண்டு இன்றைய தினத்தை ஓர் பெருநாளாகக் கொண்டாடுவதென தீர்மானித்து, எல்லா முஸ்லிம்களின் வீட்டிலும் பிரியானி சமைக்க வேண்டுமெனவும் திட்டஞ் செய்திருக்கின்றார்கள். அடியேன் வீட்டிலும் இன்று கோழி பிரியானி சமைக்கும்படி சொல்லிவந்திருக்கின்றேன். மத்தியானம் ஹஜ்ரத் தவர்களுக்கும் இவ்வேழையின் வீட்டில் விருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேனதலால், தாங்கள் வந்து பசியாறி எங்களைச் சிறப்பித்து துஆச்செய்து போகுமாறு வணக்கமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

முல்லாஜீ :—மர்ஹபா, மர்ஹபா, தும்ம, மர்ஹபா ஜஸாக்கல்லாஹு—லக்க—வலி—ஜமீஇல் முஸ்லிமீன். ராவுத்தரே! இன்று ஓர்பெரிய சுபச்செய்தியைச் சொல்லி எம்மை உற்சாகப் படுத்திவிட்டீர், இருக்கட்டும் நமதூரிலுள்ள காதியானிகள் என்ன செய்கின்றார்கள் ?

ராவுத்தர் :—நமதூர் காதியானிகள் வீடுகளின் கூரையின்மீது துக்க அறிகுறியாக கறுங்கொடிகள் பறந்துகொண் டிருக்கின்றது. அவர்கள் வீடுகளெல்லாம் அடைக்கப்பட்டு மிருக்கின்றன.

முல்லாஜீ :—அஜீப் (ஆச்சர்யம்).

ராவுத்தர் :—ஆமா ஹஜ்ரத், நமது கனவு கண்ட காதியானியை வெகுநாளாக நான் காணவில்லை, தாங்களிடம் வருகிறாரா ?

முல்லாஜீ :—நானும் அவரை வெகுநாளாகக் காணவில்லை. இன்று அவரைக் கூப்பிட்டு விஜாரித்தால், காதியானிகளின் முழுச்சமாச்சாரங்களையும் நாம் நன்கு தெரிந்துகொள்ளலாம். ஆகவே, நீங்கள் கொஞ்சம் நமது காதியானி வீடுவரைசென்று அவரை இட்டுக்கொண்டு வந்தால் நலமெனக் கருதுகிறேன்.

ராவுத்தர் :—நல்லது. இதோ போய் கூட்டி வருகிறேன் ஹஜ்ராத்.

முல்லாஜீ அவர்களின் உத்தரவின் பிரகாரம், ராவுத்தர் மஸ்ஜிதிலிருந்து வெளியேபோய் "காதியானி ஸ்டிரீட்" சென்றார். அங்கு, கனவு கண்ட காதியானியின் வீடான 103 நெ. வீட்டின் வாயலண்டை சென்று சாத்தப்பட்டிருந்த கதவை கடகடவென இடித்துத் தட்டினார்.

வீட்டினுள் விசனத்தோடு தூங்காது படுத்துக்கொண்டிருந்த காதியானி சாயபு, இரண்டொரு தட்டிற்கு சும்மாயிருந்துவிட்டு மூன்றாவது தட்டிற்கு,

காதியானி :—யார்? அங்கே

ராவுத்தர் :— ஏன் நான்தான், நாட்டாண்மைக்காரன். கொஞ்சம் வெளியில் வரவேண்டும்.

காதியானி :— (கதவைத்திறந்து வெளியில் வந்து) ஓ! வாருங்கள் ராவுத்தரே! எங்கு இவ்வளவு தூரம்.

ராவுத்தர் :—உங்களைமுல்லாஜீ அவர்கள்ஞாபகம் செய்கிறார்கள், சற்று மஸ்ஜிதுவரை வர வேண்டும்.

காதியானி :— இன்றையத்தினத்தை நாங்கள் துக்கத்தினமாகக் கொண்டாட வேண்டுமெனவும், இன்று யாங்கள் எல்லோரும் கருங்கொடி வீட்டில் கட்டிக்கொண்டும், கூழைக் காய்ச்சி குடித்துக்கொண்டும், வீட்டைவிட்டு வெளிக் கிளம்பாது இல்லத்திலே இருக்க வேண்டு மெனவும், சென்னையிலுள்ள எங்கள் விசேஷ குருநாதரிடமிருந்து சுற்றுக்கடிதமொன்று பிரசன்னமாகியிருப்பதால், அதன் பிரகாரம் யாங்களெல்லோரும் அனுஷ்டானஞ் செய்துகொண்டு வீட்டிற்குள்ளேயே இருக்கின்றோம். ஆனால் எங்கள் குருநாதரின் கட்டளைகளை வேதகட்டளையென மதித்து அமுல் நடாத்திவந்த காலங்களெல்லாம், யான் கனவு கண்ட இரவிலிருந்து மலையேறிவிட்டது. அன்று முதல் காதியானியத்தில் எமக்கிருந்த பாசமெல்லாம் சூரியனைக்கண்ட பனியைப்போல் எமதுள்ளத்தைவிட்டுப் பறந்தோடிவிட்டது. தற்கால் ஸுன்னத்து ஜமாஅத்தின் உண்மைக் கொள்கைகளானது கொஞ்சங் கொஞ்சமாக எமதுள்ளத்தைக் கவர்ந்துகொண்டும் வருகின்றன. இது ஒரு பக்கலிருந்தாலும், நமது கிரேட் முல்லாஜீ, அவர்கள் எம்மை ஞாபகஞ் செய்திருப்பதால் கட்டாயம் நான்வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதோ வருகிறேன்,

எனக் கூறிவிட்டு, வீட்டிற்குள் சென்று தமது உடைகளை அணிந்துகொண்டு, கோட்டின் இடது கையில் ஓர் கறுப்புத்துண்டை கட்டிக் கொண்டு வீட்டை விட்டும் வெளியில் வந்தார்.

காதியானியும், ராவுத்தருமாக நடந்து கொண்டு மஸ்ஜிதிற்கு வந்து சேர்ந்தனர்.

காதியானி:—(முல்லாஜீ அவர்கள் சன்னிதானம் வந்து ரொம்ப வாடிய குரலராய்) "அஸ்ஸலாமு அலேக்கும் ஹஜ்ராத்" என்றார்.

முல்லாஜி:—வ அலேக்குமுஸ்ஸலாம் என பதிலுரைத்துவிட்டு, என்னவே காதியானி! நாளை வாரும் எனச் சொல்லி அனுப்பி, ஏறக்குறைய ஒருமாதமாகிவிட்டதே? வரச்சுணங்கிய காரணம் என்ன?

காதியானி:—தங்களிடம் விடைபெற்று, நான் வீடு சென்றபோது, விசேஷக் கடிதமென கவரின் மேல் சிவப்பு மையால் எழுதப்பட்ட கடிதமொன்று சென்னைப்பட்டணத்திலுள்ள எங்கள் குருநாதரிடமிருந்து வந்திருந்தது. அதை உடைத்து யான் பார்த்தபோது கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன்.

"மோட்ச மதமான காதியானி மத நமது சகோதரர்களுக்கு! மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது அலேஹித் தஹிய்யத்து வஸ்ஸலாம் (அலேஹி மா—அலேஹி) அவர்களின் அனுக்கிரஹம் உண்டாகக்கடவது.

நிற்க, தற்சமயம் இந்திய சட்டசபைக்கு, நமது குழாத்தினரின் ஜென்ம விரோதியும், தென்னிந்திய முஸ்லிம்களின் பெரிய தலைவரும், ஹிஸ்புல்லாக்கள் சைனியத்தின் சேனாதிபதியுமான மௌலானா செய்யிது முர்தஜா சாஹிப் அபேட்சகராக நிற்பான் வேண்டி, இன்று சேலத்திற்குச் சென்று ரூ.500-ம் டிபாஸிட் கட்டிவிட்டாரென, நமக்கு நம்பத்தக்க இடத்திலிருந்து சரியான தகவல் கிடைத்திருப்பதால், இவரைத்தோற்கடிப்பதற்கான வேலையிலீடுபட்டு பிரசாரஞ் செய்ய வேண்டும். நம் குழாத்தினரில், யுவர்களின் ஓட்டுகள் அத்தனையையும் அவருக்குவிரோதமாய்ப் போடும்படி தூண்டவேண்டும். மேலும் இந்த எலக்ஷன் சம்பந்தமாய் தென்னாட்டில் நாமே, மும்முரமான வேலை செய்ய வேண்டியிருப்பதால், தாங்கள் தயைகூர்ந்து இன்றே தங்கள் ஊரைவிட்டும் பிரயாணித்து, தென்னாட்டிலுள்ள ஜில்லாக்கள்முழுதிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து, முர்தஜா சாஹிபுக்குஎதிர்ப் பிரசாரஞ் செய்வது உங்கள் கடமையாகும். இதன் செலவுவகைக்காக "கோக்கநட்" பேங்கில் வாங்கும்படி 1000 ரூபாய் செக்கு ஒன்று இதில் அனுப்பி இருக்கின்றேன். இதுபோல், ஷை பேங்கில் ரூபாயைப் பெற்றுக்கொண்டு அதே நிமிஷத்தில் ஊரைவிட்டும் பிரயாணிக்க வேண்டும். வெகுமுக்கியம், சீக்கிரம், சீக்கிரம். வேணும் தங்களின்............

N. B. பிரசாரத்தில் கொஞ்சமும் அசட்டை செய்யக்கூடாது"

என,எழுதப்பட்டிருந்தது. ஆனால்நான்கனவு கண்டதிலிருந்து காதியானியத்தை மெள்ள மெள்ள கைநழுக விட்டுவந்தும் இந்த லெட்டர் பார்த்தபின் "இறுதியாக நமது காவன்னா குருநாதருக்கு ஓர் பெரிய வேலையைச் செய்து கொடுத்துவிட்டு அதோடு இனி (தீய) காதியானிக் கொள்கையை முத்தலாக்குச் சொல்லிவிடுவதாக யான் மனத்தில் தீர்மானித்தேன். அதுபோல், உடனே பேங்கிற்குப்போய், செக்கைக்கொடுத்து ஆயிரம் ரூபாயும் வாங்கிக்கொண்டு, பகல் போஜன மருந்திவிட்டு, தந்தி ஆபிஸ்சென்று "ரூபாய் கிடைத்தது இதோ பிரயாணிக்கிறேன் லட்டர் பார்" என, சென்னைக்குத் தந்தியும் சொல்லிவிட்டு, பில்குண்டா ரயில்வே ஸ்டேஷனுக்குச்சென்று மாமதுரைக்கு டிக்கட்டு வாங்கி, தயாராக ஸ்டேஷனில் இருந்த புகை வண்டியில் ஏறிக்கொண்டேன்.

முல்லாஜீ:—நீர் சென்னையால் வந்த ரூபாயை மட்டிலும் எடுத்துக்கொண்டீரா, அல்லது உமது சொந்த ரூபாயிலும் ஏதாகிலும்கூட எடுத்துச் சென்றீரா?

காதியானி:—ஹஜ்ரத், அதை ஏன் கேட்குறீர்கள்! சென்னையால் வந்த ரூபாயுடன் எமது சொந்தப் பணத்திலிருந்தும்கூட ஆயிரம் ரூபாய்சேர்த்து எடுத்துமடியில்கட்டிக்கொண்டு, பிரயாணித்த தினத்திலிருந்து போலிங்கு நாள்வரை, தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு சிறிய முஸ்லிம் கிராமங்கள்தோறும் சென்று எதிர்ப்பிரசாரஞ் செய்து பார்த்ததில், அக்கிராமங்களில் காதியானிகளை மருந்திற்குங் காண முடியவில்லை. ஆனால் சிலபட்டி, தொட்டிகளில் இஸ்லாமிய மூலக் கொள்கைகளையும், அதன் உன்னத தத்துவங்களையும் அறியாத ஆங்கிலங்கற்ற இரண்டொரு எம்போன்ற வாலி

பர்கள் மட்டிலும்; காவன்னாக்களாக இருக்கின்றார்கள். அவர்களும் பகிரங்கமாகத்தங்களைகாதியானிகளெனச் சொல்லிக்கொள்ள அஞ்சுகின்றனர். ஏனெனில், தங்களைகாதியானிகளெனப்பிரபல்யப்படுத்துவதால் ஊரார் தங்களை ஏளனஞ் செய்வார்களென்ற அச்சமானது அவர்கள் மனங்களில் குடிகொண்டிருப்பதைத் தெரிந்தேன். ஆனால் அவர்களின் சித்தங்களனைத்தும் காதியானிகளின் சித்தாந்தங்களாகவே இருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை.

அவர்களிடம்சென்று "உங்களுக்கு ஓட்டுகள் உண்டா?" எனக் கேட்டபோது, எங்களுக்கு அதுமட்டிலும் பூஜ்யம். மற்றதெல்லாம்உண்டு" என பதிலுரைத்தார்கள்.

ஆனால் இப்போது மறைக்காமல் உண்மைச் சங்கதி ஒன்று கூறுகிறேன். தாங்கள் சிரிக்காமலிருக்கவேண்டும், ஹஜ்ராத்?

முல்லாஜீ :—நல்லது, அப்படியே.

காவன்னா :—ஹஜ்ரேத், சத்தியமாகச் சொல்கிறேன். நான்சென்ற இந்த 11 ஜில்லாக்களிலுமுள்ள முஸ்லிம் ஊர்களில் இருந்த காதியானியுவர்களில் ஒருவருக்காவது ஓட்டுக் கிடையாது ஹஜ்ரேத்.

இதைக் கேட்டவுடன் ராவுத்தருக்கும், முல்லாஜீ அவர்களுக்கும் அடங்காச் சிரிப்பு ஏற்பட்டு கலகலவென, வயிர்குலுங்க வெகு நேரம் வரை சிரித்து ஓய்ந்த பின், காதியானியை நோக்கி,

முல்லாஜீ :—ஆமாவே, காதியானிகள் ஒருவருக்கும் ஓட்டில்லாவிட்டால் போகட்டும் நீர் சுற்றிய இந்த தென்னாட்டில், காதியானிகள் எத்தனை நபர்கள் உண்டு. அதில் கள்ளக்காதியானிகள் எத்தனை பெயர். பச்சைக் காதியானிகள் எத்தனை பெயர் இருக்கிறார்கள். பொய் சொல்லாமல் சொல்லும்.

காவன்னா :—நான் தங்கள்முன் கூறுவதில் கிஞ்சித்தும் பொய் கலக்கப்பட்டிருக்குமென, தாங்கள் கருதவேண்டாம். யதார்த்தமே சொல்லிவருகிறேன், இனியும் சொல்லுவேன்.

"நான் சுற்றிவந்த இந்த 11 ஜில்லாக்களிலும் காதியானிக்கொள்கைகளை யுடையவர்கள் 13 நபர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் வெளிரங்கத்தில் முஸ்லிம்களைப் போலவே அமல் செய்தும்வருகிறார்கள். ஆனால் அந்தரங்கத்தில் எங்கள் காதியானிக் கொள்கைகளை விசுவாசித்து நன்னம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள், இவர்களை, தங்களைப்போன்ற முல்லாக்கள், கள்ளக் காதியானிகளெனவும் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை 8 எட்டே தான்.

பகிரங்கமாக பிரஸ்தாபித்துநிற்கும் பச்சைக் காதியானிகள் சாத்தான் குளத்தில் மட்டிலும் இருக்கின்றார்கள். இவர்களின் எண்ணம் 5 தான்.

முல்லாஜீ :—பேஷ் காதியானி சாயபே! நீர் மெய்யே சொன்னீர். நமது நாட்டில் காதியானிகள், நீர் சொன்ன அளவேதான் இருக்கலாமென எங்கள் முல்லாப் பார்ட்டியாரும்கணித்து வைத்திருக்கின்றார்கள்.

ராவுத்தர் :—(இதுவரை மௌன விரதம் பூண்டிருந்துவிட்டு) என்ன, ஹஜ்ரத்! நமது நாட்டில் ஒரு ஓட்டுகூட கிடையாத மூன்றே முக்கால் காவன்னாக்களை வைத்துக்கொண்டு தானா? கா.........ப.......... எடுத்த உடனே, சையது முர்த்தஜா ஹஜ்ரத் அவர்களை இவ்வளவு ஆபாசமாகத் தூஷித்து எழுதியும், ஹஜ்ரத்திற்கு காதியானியுவர்களெல்லாம் ஓட்டுக் கொடுக்க வேண்டாமென்று வெகு படாடோபமாய் ஏதோ தமது கையில் தென்னாடு முழுவதுமே இருப்பதுபோல் சொர்ப்பனங்கண்டு பெரிய பெரிய தலையங்கங்கள் எழுதியுமிருந்ததைப் பார்த்தபோது, ஏதாகிலும் நூற்றுக்கு 5 வீதமாவது இத்தென்னாட்டில் காதியானிகள் இருக்கலாமென நாங்கள் நினைத்திருந்தோம். அவை பகற்கனவாகத்தான் முடிந்தது போலும்! என்னே ஆச்சரியம்! என்னே புதுமை! என்னே விசித்திரம்!!

காவன்னா :—ராவுத்தரே! தாங்கள் ஆச்சரியப்படுவது ஒருபுறமிருக்க, சென்னையிலிருந்து வெளியாகும் எங்கள் குலப் பத்திரிகையானது ஆவேசங்கொண்டு தடபுடலாக ஆர்ப்பரித்து எழுத ஆரம்பித்ததே, சையது முர்த்தஜா ஹஜ்ரத்திற்கு ஜெயக் குறியும் பக்கபலனும் ஏற்பட்டு, ஹஜ்ரத்திற்கு சிரமமின்றி வேலைகள் நடந்து வருவதற்குக் காரணமாயிற்று.

முல்லாஜீ :—எப்படிவே!

காதியானி :—அதை ஏன் கேட்கிறீர்கள்? ஹஜ்ரத்! நான் எங்கெந்த ஊர்களுக்குச் சென்றேனோ அங்கெல்லாம், ஒவ்வொரு ஊர்களிலும் நவ்வாலு முல்லாஜீகளுக்கு குறைவில்லாமலேயே கண்டேன்.

ராவுத்தர் :—அந்த ஊர்களில் உமக்கும் முல்லாக்களுக்குமிடையில் ஏதாவது சம்பாஷணைகள் நடந்திருக்கிறதா ?

காதியானி :—எத்தனையோ ஊர்களில் எவ்வளவோ முல்லாக்களிடம் சம்பாஷித்திருக்கிறேன்.

முல்லாஜீ :—இந்த எலெக்ஷனில் மட்டும் முல்லாக்கள் ஏன் வெகு மும்முரமாகவும், இவ்வளவு சுறுசுறுப்பாகவும் பிரசாரஞ் செய்து வந்தார்கள். அதுவிபரம் நீ சந்தித்த எந்த முல்லாவிடமாவது கேட்டீரா ?

காவன்னா :—ஹஜ்ரத்! இதைப்பற்றி நான் ஒவ்வொரு முல்லாக்களிடமும் கேட்டிருக்கின்றேன். அதற்கு இந்த 'கா.......' தனது பத்திரிகை மூலம் ஹஜ்ரத்திற்கு எதிர்ப்பிரசாரஞ் செய்வதுமல்லாமல், எங்கள் ஹஜ்ரத் அவர்களை நீசத்தனமாகத் தாக்கி, ஹஜ்ரத் அவர்களுக்கு நடுக்கமெடுத்துக்கொண்டதென, பலவாறாகப் பிதற்றி உளறி எழுதியிருந்ததைப் பார்த்துவிட்டு, நாங்கள் சும்மா இருப்போமா? இந்த கா...... ப......க்கு எதிராக நாங்கள் இரவு பகலாகப் பிரசாரஞ் செய்வது எங்கள் கடமையல்லவா? இதில் எங்கள் ஹஜ்ரத் அவர்களுக்கு காலணா செலவும் வைக்காமல், எங்கள் பொறுப்பிலேயே செலவெல்லாஞ் செய்து நாங்கள் பிரசாரம் செய்து வருகிறோமெனவே, எல்லா முல்லாக்களும் ஏகோபமாய்க் கூறினார்கள்.

முல்லாஜீ :—கா......ப..........இடையில் தானே குறுக்கிட்டு மரைக்காயர் அவர்களுக்கு ஆதரவு காட்டுவதுபோல நடித்தது, அவருக்குப் பாதகமாகவா முடிந்தது ?

காதியானி :—ஹஜ்ரத்! எங்கள் கா.........ப.........மட்டிலும் மரைக்காயரை ஆதரித்ததுபோல் பாவனைகாட்டி எழுதாதுபோனால், மரைக்காயர் அவர்களுக்கு இத்தனை பெரிய தோல்வி ஏற்பட்டிராதென்பது திண்ணம். இதில் எங்கள் கா..........ப.........குறுக்கிட்டு மரைக்காயரை ஆதரித்ததுபோல் பாவனைகாட்டி எழுத முற்பட்டதானது, மரைக்காயர் அவர்களை தோல்வியடையச் செய்துவிட்டது.

ராவுத்தர் :—காதியானி சொன்ன இந்த வார்த்தை 16 அணா பொருத்தமானதாகும். கா.......ப.......இடையில் குதித்து, தனது சைத்தானீயத்தை ஊடாடியதினாலேயே அநேக பொது கனவான்களான ஓட்டர்களும் ஹஜ்ரத்தையே கட்டாயமாக ஆதரிக்க நேர்ந்தது.

மேற்படி கா......ப......குறுகிட்டதினாலேயே பொதுவாக மரைக்காயர் அவர்களை ஆதரிக்கக்கூடியவர்கள்கூட ஹஜ்ரத் அவர்களுக்கு ஓட்செய்ய முன்வந்தனர். இரண்டாவது, ஹஜ்ரத்தவர்களுக்கு அதிகச் செலவில்லாமலும் விஷயம் நடைபெற்று விட்டது.

காதியானி :—ராவுத்தர் சொன்னதும் 17 அணா உண்மையேயாகும். எங்கள் கா........பத்திரிகை தாக்கி எழுத ஆரம்பிக்கவே, முல்லாஜீகளுக்கெல்லாம் கெடியாரங்களுக்குச் சாவி கொடுத்ததுபோலாகிவிட்டது. எனவே, எங்கள் பத்திரிகை எழுதியவுடன், எல்லா முல்லாக்களும் தென்னிந்தியா முழுவதும் கிர் கிரென, சுற்றிக்கொண்டே வந்தனர்.

முல்லாஜீ :—ராவுத்தரே! ஒரே விஷயம். அதாவது, தென்னாட்டு காவன்னாயிடத்தில், கானா காவன்னா ப.......யிருப்பதால், அதில் தாருமாறாக ஒரு பக்கத்திலும், மார்க்க விஷயங்களை தப்புந்தவறாய் மற்றொரு பக்கத்திலும், மூன்றாவது பக்கத்தில் காதியானியின் நாள்வழி சிட்டையும், நான்காம் பக்கத்தில் நாகரீகத் துணுக்குகளும், 5-ம் பக்கத்தில் ஆகாசப்புளுகுகளும், 6-ம் பக்கமான கதாப்பகுதியில் கொக்கோகப் படங்களும், 7-ம் பக்கத்தில் துன்மார்க்கத் தீர்ப்புகளும், 8-ம் பக்கத்தில் நறையூர் நைட்டும், 9-ம் பக்கத்தில் காதியானிக் கூண்டும், 10-ம் பக்கத்தில் ஸினிமாப்படங்களுக்கும் ரிஸர்வ் செய்யப்பட்டு, வெளிக்கிளம்பி வருகின்றது.

ராவுத்தர் :—மேற்படி காவன்னா ப........யைப் பார்த்தால் தாங்கள் திருவுளமானது போலவே தான் இருக்கின்றது ஹஜ்ரத்.

முல்லாஜீ :—(காதியானியை நோக்கி) ஓய் காதியானி! ஷை காவன்னா ப......யில் கொக்கோகப் படங்கள் போட்டு மன்மதனும் ரதியும், காதலனும்காதலியும் கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்வதுபோன்ற ஆபாசக் கொக்கோகக் காமக் கிளர்ச்சிப் படங்களைப் பிரசுரித்துப் படங்காட்டும் காரணமென்ன ?

காதியானி :—வாலிபர்களை, எங்கள் கட்சியில் சேர்த்து, எங்கள் பத்திரிகையை வாங்குவதற்கு

அதுவே தகுந்த முறையென எங்கள் குரு நாதர் சேலெக்ட் பண்ணி, அவ்வாறே வெளியாக்கியும் வருகின்றார். ஷெ கொக்கோகப் படங்கள் மட்டிலும் இல்லாது போனால், எங்கள் பத்திரிகையை எந்த வாலிபரும் கையிலுங் கூட தொடமாட்டார்களென்பது முக்காலும் நிச்சயமே.

ராவுத்தர் :—ஹஜ்ரத்! நமது ஆசாமி காவன்னாவாகயிருந்தும், தங்கள் வகுப்பாரின் வண்டவாளங்களையும் சூட்சிகளையும் கொஞ்சமும் மறைக்காமலே சொல்லி வருவதானது மெச்சத்தக்கதாகும்.

காதியானி :—நான் கனவு கண்ட இரவிலிருந்து, ஹஜ்ரத்தவர்களின் ஆசிர்வாதத்தால் என்பால் ஆண்டவனின் அருள் பொலிவுபெற்று வருகிறதென்பதை யான் இயம்பத் தயங்கமாட்டேன். இனி க்ஷண வேளையாவது எமதுள்ளத்தில் காதியானியத்துக் குடிகொண்டிருக்க முடியாதென்பதும் உறுதியே.

முல்லாஜீ :—ஆமா ராவுத்தரே! தம்மிடம் ப.......யிருக்கிறதென்றும் தமக்கு அகராவதியின் அச்சரம் தெரியுமென்றும், ஒரு க....... நமது தென்னாட்டைக் கிளப்பி, காதியானிக் கொள்கை யென்னும் அசுத்த வீச்சத்தை சில பாமர மக்களிடம் வெகு பிரயாசைப்பட்டு நுகரச் செய்கின்றார். ஆனால் ஒரு சிறிதேனும் இஸ்லாத்தின் சத்திய கொள்கைகள் மீது பக்தி பூண்டநமது நாட்டு முஸ்லிம்மக்கள், அக்கொடிய துர்வீச்சத்தைக் கண்டு அருவருப்புற்று அஃதை விட்டும் தூரமாக ஓடியே வருகின்றார்கள்; அல்லாஹ்வின் பாதுகாவலும் அவர்களின்மீதுண்டு என, மிகஆவேசத்தோடு கம்பீரமாகக்கூறி விட்டு, தனது இருகரங்களையும் மேலே ஏந்தி, வானத்தை நோக்கி, “ஓ! கிருபை அல்லாவே! இத்துர்நாற்றமுடைய கொள்கையான காதியானியத்தை எங்கள் தென்னாட்டில் பரவ விடாது அதை அழித்துவிடு. அக்கொள்கையில் சிக்குண்ட இரண்டொரு வாலிபர்களுக்கும் உனது நல்லருளைப்புகட்டி அவர்களின் நெஞ்சத்தை விட்டும் அம்மாயக் காதியானியத்தை ஓட்டிவிட்டு, அவர்களுக்கு இஸ்லாத்தின் சத்தியக் கொள்கைகளைப் புகட்டி, அன்னவர்களுக்கு நேர்வழி காண்பிப்பாயாக.

ஓ! கிருபை இறைவா! இவ்வுலகை விட்டும் தீயகாதியானியத்தை அடியோடு ஒழித்துவிடு. அதைச் சுட்டுக் கரித்துப் பொசுக்கிவிடு, அதை நிர்மூலமாக்கிவிடு” என வெகு ஓர்மையோடும், மனஉறுக்கத்தோடும் துஆக் கேட்டார்.

காதியானி :—ராவுத்தர் அவர்களே! “மூனே முக்கால் நபர்களையுடைய காதியானிப ... தானா இந்த ஓலமிட்டுத் திரிகின்றது” எனத் தாங்கள் முன் கேட்ட கேள்வி, கேழ்க்க வேண்டியதுதான். நமது நாட்டுக்கா........ப....... மட்டும் இவ்வாறுபுளுகி, டம்பமடித்து வருகிறதெனத் தாங்கள் நினைக்காதீர்கள். காதியானிகளின் ஹெட்கேம்பான, காதியான் என்னும் கிராமத்திலிருந்து வெளியாகும் ‘அல்பஸ்ல்’ என்ற பத்திரிகைதான் ஏனைய காதியானிப் பத்திரிகைகளுக்கு இவ்வித டாம்பீகப் புளுகுகளை எழுதக்கற்றுக்கொடுத்தது. ஷெ அல்பஸ்ல் என்ற பத்திரிகை புளுக ஆரம்பித்தால், அவை கந்தப்புராணத்திலும் கிடைக்காதென்பது நிச்சயம். இதற்கு உதாரணமொன்று கூறுகின்றேன். “சில வருடங்களுக்கு முன் நமது தென்நாட்டின் ஓர் கிராமத்தில் 30 நபர்கள், நம்நாட்டு கா........குருவின் தலைமையின் கீழ் “நாயக ஜனனவிழா” நடத்தியதை, தென்னாட்டு காதியானிகளால் வடநாட்டு காதியானி கேம்பிற்கு அறிவிக்கப்பட்ட போது, காதியானிகளால் நடத்தப்படும் உர்து, ஆங்கிலப் பத்திரிகைகளிலெல்லாம் ஏகோபமாய் “தென்னாட்டின் ஓர் கிராமத்தில் 30 ஆயிரம் மிர்ஸாயியர் (காதியானிகள்) கூடி நாயக ஜனன விழாவை, வெகு விமரிசையாகக் கொண்டாடி, மஹாநாடு நடத்தினார்கள்” என பெரிய பெரிய கொட்டை எழுத்துக்களால் தலையங்கங்களெழுதி, தங்கள் உம்மத்துமார்கள் தென்னாட்டிலும் இவ்வளவு மலிவாக இருக்கின்றார்களென எடிட்டோரியல்களும் வரைந்து பிரகடனப்படுத்தியிருந்ததை நம்மில் அநேகர் பார்த்திருக்கலாம்.

இதுமட்டுமா, கொழும்பில் பிரசுரமாகும் காவன்னா பத்திரிகையை வடநாட்டு காதியானிப் பத்திரிகையின் அப்பனெனவே கூறலாம்.

“ஒருநாள் நானும், மிர்ஸா சாஹிபின் புதல்வரான பஷீர் அஹ்மது காதியானி சாயபிடம் ஊதியம் பெற்று வயிர்வளர்க்கும் இதர இரு காதியானிகளுமாகக் கூடிப்பேசி, ஜபருல்லா கானை நிர்வாக சபைக்கு நியமிக்க வேண்டுமென ஓர் இருண்ட அறையிலிருந்து தீர்மானஞ் செய்து, அதை வைஸ்ராய்க்குத் தந்தி அனுப்பியிருந்தோம்.

சில தினங்களுக்குப் பின் ஷை கொழும்பு காஞ காவன்ஞ பத்திரிகையில், பெரிய தலையங்க மிட்டு, கொழும்பிலுள்ள மிர்ஸாயிய சகாக்கள் பதினாயிரம் நபர்வரை எட்டாங் குறுக்குத் தெருவிலுள்ள "காதியானி ஹாலில்" கூடி, ஜபருல்லாகானை நியமிக்க வேண்டுமெனத் தீர்மானஞ் செய்தனர்" என, பெரிய கொட்டை எழுத்துக்களால் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இவ்வண்ணமே, காவன்ஞக்களால் நடத்தப்படும் பத்திரிகைகளெல்லாம் ஆஷாடபூத அண்டப்புளுகுப் புராணங்களாகவே நடமாடி வருகின்றன.

மேலும் இவர்கள், தங்கள் உம்மத்துமார்களை உலகோருக்கு மிகைப்படுத்திக் காட்டுவான் வேண்டி, காதியானி சாயபு ஒருவர் வந்தார் என்ருல், ஆயிரம் பேர்கள் வந்திருந்தனர் என எழுதுவதே இவ்வகுப்புப் பத்திரிகைகளின் ஜென்மத் தொழிலுமாகும். இவ்வாறு எழுதுவதற்கு இவைகள் பின்வாங்கவும் மாட்டாது. இவ்வாறுதான் புளுகி எழுத வேண்டுமென்பது தற்கால இயற்கை நபியான மிர்ஸா பஷீர் சாயபின் போதனை போலும்.

இதுமட்டுமா, ஷை காவன்ஞப் பத்திரிகைகளெல்லாம், ஒன்றின் புளுகைப்போல், ஒரே விதமாகப் புளுகவும் கற்றுக்கொண்டிருக்கின்றன.

இன்னுமோர் மாபெரும் உதாரணங்கூறி, காவன்ஞப் பத்திரிகைகளின், படாடோபப் புளுக பூஷணங்களை, அத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

பிரதிவருடங்களிலும், முஸ்லிம்கள் மக்கமா நகரஞ்சென்று ஹஜ்ஜு செய்யுமாப்போல், இக் காவன்ஞக்களும் காதியானி நபி, மிர்ஸா சாஹிப் வானத்திலிருந்து நேரே இறங்கிய "மினரத்துல் மஸீஹ்" (மிர்ஸா இறங்கிய மினரா) இருக்கும்படியான காதியான் கிராமத்தின் கண், வருடாவருடம் ஹஜ்ஜுசெய்வதற்காகவே உலகிலுள்ள காதியானிகளெல்லாம் அங்கு வந்து கூடுவது வழக்கம்.

அங்கு மக்காவிலிருக்கும் புண்ணிய ஸ்தலங்களின் பெயரைப்போன்று, இவ் விமிடேஷன் மக்காவிலுள்ள சில இடங்களுக்கும், அது போன்ற பெயர்களுமிட் டிருக்கின்ருர்கள். உவமையில், அக்கிராமத்தின் கப்ரஸ்தானத்திற்கு "பிஹிஷ்திமக்பரா" என்றும், (இதிலேயே மிர்ஸா சாஹிபின் புதைகுழியுமுண்டு) மிர்ஸாவின் பங்களாயிருந்த தெருவிற்கு "மூர்மஹல்லா" என்றும், இவர்கள் இமிடேஷன் ஹஜ்ஜுச் செய்ய, ஷை குறித்ததினத்தில், கூடுமிடத்திற்கு "மைதானேறஹ்மத்" என்றும், அங்கு கட்டப்பட்டிருக்கும் பள்ளிவாயலுக்கு "மக்பிரத் மஸ்ஜித்" எனவும், அவ்வூரிலுள்ள பெரிய பஜாருக்கு "ஜன்னத்துபஜார்" என்றும், மிர்ஸாயிருந்த வீட்டிற்கு "மஸீஹிமஹல்" என்றும் நாமங்கள் சூட்டப்பட்டு மிருக்கின்றன.

ஷை குறிப்பிட்ட இமிடேஷன் ஹஜ்ஜு தினத்திற்கு பலபாகங்களிமுள்ள ஒன்றிரண்டு காதியானிகளாகச் சேர்ந்து மொத்தம் ஏறக்குறைய 90 முதல் 100 மிர்ஸாயிய மக்கள் வரை அங்குவந்து கூடிவிடுவார்கள்.

ஷை காதியானி ஹஜ்ஜு தினத்தன்று அவ்வூரிலுள்ள தற்கால மஸீஹான மிர்ஸா பஷீர் அஹ்மது சாயபு தனது பேகம் ஸாஹிபா உடனும் குடும்பசமேதராய் மாலை 4½-மணி சுமாருக்கு "காதியானி ஹஜ்ஜு" இறங்கும் அப்புண்ணிய நேரத்தில் (போலி) நபி அவர்கள் தமதுபரிவாரங்களோடு, அந்த "மைதானேறஹ்மத்" என்ற கிரௌண்டிற்கு விஜயந்தந்து, நபி அவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் விசித்திரமேடைமீதில் ஏறிக்கொண்டு நாகரீகத் தோரணையில்பெரியதோர் பிரசங்கமாற்றுவார். அவை அஸ்தமிக்கும் வரை நீண்ட பிரசங்கமாக யிருக்கும். அதன்பின் நபி அவர்களால் துஆ ஓதப்பட்டபின், எல்லோருக்கும் ஆசீர்வாதஞ் செய்து, உங்கள் கோரிக்கைகள் நிறைவேறி விட்டன, நீங்கள் இன்றுபிறந்த பாலர்கள்போல் ஆகிவிட்டீர்கள். ஓ! முமூட்சுக்களான மிர்ஸாயியர்களே !! நீங்கள் மோட்சமெய்துவிட்டீர்கள் ; உங்களை மிர்ஸாயிய உண்மை உம்மத்துக்களெனச் சொல்வதற்கு நீங்கள் முற்றும் இலக்காகிவிட்டீர்கள் ; உங்களின் ஹஜ்ஜும் இன்று மஸீஹ் மிர்ஸா (அலைஹி மா அலைஹி) அவர்களிடம் நிச்சயமாகவே ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டது" என ஆசீர்வதித்து ஹஜ்ஜுக் கூட்டத்தைக் கலைத்துவிடுவார்.

இத்தாதி சர்வ லட்சணங்களோடு கூடி அந்த காவன்ஞக்களின் இமிடேஷன் ஹஜ்ஜு வைபவமானது நடந்து முடிந்த மறுநாள், அக் காதியானி நபியின் "அல்பஸ்ல்" என்ற பத்திரிகையானது, ஷை. ஹஜ்ஜு வைப

வத்தை வெகு விமரிசையாக எழுத ஆரம்பித்து, "உலகின் பல பாகங்களிலிருந்தும் நமது சக உம்மத்துகள் 5 லட்சம் நபர்கள்வரை இங்கு ஹஜ்ஜு செய்வான்வேண்டி, வந்து கூடியிருந்தனர். ஷை தினத்தின் மாலையில் 4½மணி சுமாருக்கு நமது (போலி) நபிகள், அங்கு அமைக்கப்பெற்றிருந்த மேடையின் மீதேறி நின்றுகொண்டு உறுக்கமாக "குத்பா" ஓதி, மிர்ஸாயிய உம்மத்துமார்கள் மோட்சமெய்வான் வேண்டி, "மஸீஹேகுத்ரத்தி" (இயற்கைமஸீஹ்) இடமும் வஸீலாத்தேடி, ஆண்டகையிடம் மன்றாடி துஆக் கேட்டார்கள்.

ஆண்டவனருளாலும், மஸீஹ் மிர்ஸா சாஹிபின் அனுக்கிரஹத்தாலும் அங்கு கூடியிருந்தோரனைவரின் பாபங்களும் அன்று மன்னிக்கப்பட்டு, உம்மத்தே மிர்ஸாக்கள் பரிசுத்தாத்மாக்களாக ஆகிவிட்டனர்."

என எழுதி, "காதியானி ஹஜ்ஜின்" ஸ்பெஷல் அனுபந்தமொன்று வெளியாக்குவார்கள்.

எனவே இத்தகைய, பொய்பிரசார பிரகடனச் சூட்சிகளெல்லாம் செய்தால்தான், மாமாங்கத்திற் கொரு நபராவது ஆங்கிலம் படித்த வாலிபரை தங்கள் வலையில் சேர்க்க முடியுமென்ற எண்ணம் போலும்.

முல்லாஜி.—அதிருக்கட்டும் பின்னர் நடந்ததென்ன?

காதியானி:—சென்னைக்குத் தந்திகொடுத்துவிட்டு மருநாள், நான் மாறுவேடம் பூண்டு சென்னைக்குச் சென்றேன்.

முல்லாஜீ:—என் மாறுவேடம்பூண்டு சென்னைக்குப் போனீர்வே!

காதியானி:—இவ்வளவு பிரயாசையும், சிரமமும், மனோசிதைவுங் கொண்டிருக்கும் எங்கள் சென்னை குருநாதர் ஒட்டு, யாருக்குத்தான் விழப்போகிறதெனப் பார்கலாமென்ற நாட்டமே, தான்!

முல்லாஜீ:—இதைக்கேட்ட உடன் முல்லாஜீ சிரித்துக்கொண்டு, தமது தாடியை இடது கையால் கோதிவகிந்துவிட்டவராய், தமது இருப்பிடம்விட்டு நகர்ந்து காதியானிக்குச் சமீபமாக அணுகி) அதுபோல் நீர்பார்த்தீரா அவர் யாருக்குப்போட்டார்?

காதியானி:—ஹஜ்ரேத், கேளுங்கள் நான்) மாறுவேடம்பூண்டு சென்னைக்குப்போய், எமது விருப்பம், நிறைவேற முறை என்னவென, ஆலோசித்து, "போலிங் ஸ்டேஷன்" பியூனாக அமர்ந்துகொண்டால், நமது கோரிக்கை ஒருவாறு நிறைவேறலாமென, முடிவுசெய்து, அதுபோல் போலிங்ஸ்டேஷன் "டேம்பர்வரிப்பியோனக" எம்மைத் தாக்ககல் செய்யவேண்டுமென அதற்குறிய உத்தியோகஸ்தரைக்கண்டு விண்ணப்பித்துக்கொண்டதற்கு, அன்று முழுதும் நின்றால் சம்பளம் 7 அணாவே கொடுக்கப்படும், சம்மதமானால் உமதுபெயரையெழுதிவைத்துப் போகுமென, அவ்வுத்தியோகஸ்தர் சொன்னது போல் ஒப்புக்கொண்டு, ஷை உத்தியோகஸ்தர் ஆபீஸில் எமது பெயரையும் பதிவுசெய்துவிட்டு வந்துவிட்டேன்.

இரண்டு தினங்களுக்குப்பின் "போலிங்கு" தினமானதால், நான் ஷை ஆபீஸ் சென்றேன். அங்கு எமக்கு பியூன்களுக்குத் தோளில் மாட்டித் தொங்கவிடும் துணியால் செய்த பட்டையைப் போலொன்று கொடுத்தார்கள். அதைவாங்கி நான் மாட்டிக்கொண்டேன்.

அதன்பின் எம்மை தெய்வாதீனமாக எங்கள் குருநாதர் ஒட்டுப் போடவரும் போலிங்ஸ்டேஷனுக்கே, அனுப்பிவைத்தனர்.

(தொடரும்)

காதியான் தப்லீக் கான்பரன்ஸ்

மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானிதோன்றிய காலமிருந்து அவராலும், அவரது சிஷ்யர்களாலும் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் விளைந்த ஆத்மார்த்த இன்னல்கள் கொஞ்சமல்ல. இவர்களது வழிகெட்ட தீய பிரசாரத்தைப் பற்பல இடங்களிலும் உலமாக்கள் கண்டித்துப் பிரசாரம் புரிந்துவந்தனர், இன்னமும் புரிந்தும் வருகின்றனர். நியாயமானமுறையில் மதத்தர்க்கஞ் செய்து, தங்களது கொள்கையை அவர்கள் இதுவரை ருஜுப்பித்துக்காட்டாமல், சுன்னத்துஜமாஅத்து முஸ்லிம்களிடம் புறமுதுகு காட்டியே வந்திருக்கிறார்கள். தங்க

ளுடைய இப்புதிய மதத்தை முஸ்லிம்களிடம் பரவச் செய்வதில் அவர்கள் பகீரதப்பிரயத்தனம் செய்தும் பலியாமற்போனதைக் கண்ட பின், மிர்ஜாகுலாம் அஹ்மதுவுக்குப் பயம் தோன்றி, பிரிட்டிஷ் அரசாங்கத்தின்பால் அசைக்கமுடியாத இராஜவிசுவாசமாக இருக்க வேண்டும் என்று தமது கோஷ்டிக்குக் கட்டளையிட்டார். ஏனென்றால், முஸ்லிம்களால் தமது மதத்துக்கு ஆதரவு கிடைக்கமாட்டாது; தமது மதம் ஒழிந்துவிடும்; அரசாங்கத்தின் ஆதரவு இருந்தால் தமது மதத்தை ஒருவாறு பிரசாரம் செய்ய வழி பிறந்துவிடும் என்பது அவரது கருத்து. இவ்விதக் கருத்திருப் பதை அவர் பல முறைகளிலும் கூறி இருப்பதுடன், இராஜவிசுவாசமுள்ள ஒரு கூட்டத்தாரைத் தாம் உற்பத்தி செய்வதாக அரசாங்கத்தாருக்கு மனுக்கள் மூலமாகவும் அறிவித்து இருக்கிறார். இவ்வாறு அறிவிப்பதன் நோக்கம் முஸ்லிம்களுக்கு ராஜபக்தியில்லை என்பதையும், தமது காதியானி மதத்தாருக்குச் சிறந்த ராஜ பக்தியுண்டு என்பதையும் அரசாங்கம் உணர்ந்துகொண்டால், மத சம்பந்தமாக காதியானி மதத்தாருக்கும் இஸ்லாம் மதத்தாருக்கும் இருந்துவரும் வேற்றுமையில், அரசாங்கம் தமது காதியானி மதத்தாருக்கு எப்பொழுதும் ஆதரவுகாட்டும் என்பது அவரது எண்ணம். இந்த எண்ணம் ஒருவாறு பலிதமடைந்தது என்று கூறலாம்.

ஏனென்றால், காதியானி மதத்தார் பெரும்பாலும் ஆங்கிலக்கல்வி பயின்றவர்களாக இருப்பதால், சில உத்தியோகப் பதவிகள் அக்காதியானிகளுக்குக் கொடுக்கப் பட்டன. இதை அவர்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டு முஸ்லிம்களை தொந்தரையும் செய்யத்தொடங்கினர். காதியான் கிராமத்திலுள்ள சுன்னத் ஜாமாஅத்து முஸ்லிம்களை அடித்துத் தொந்தரை செய்வதும், தீ வைப்பதும், முஸ்லிம் ஸ்திரீகளைக் கற்பழிப்பதுமாக இருந்தார்கள். அக்கிராமத்தில் ஒரு முஸ்லிம் பகலில் ரஸ்தாவின்மீது கொலைசெய்யவும் பட்டார். ஆனால், அவ்வூரில் காதியானிச் செல்வாக்கு அதிகமிருப்பதால் இவைகளுக்கு சாக்ஷியங்கூறக் கூட ஒருவரும் தைரியமாக முன்வரவில்லை. இதனால், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் குற்றவாளிகளைத் தண்டிக்க இடம் கிடைப்பதுமில்லை. இரண்டொருவர் இவர்களின் ஹிம்சை பொறுக்கமாட்டாமல் காதியானைக் காலிசெய்துவிட்டு, வேறிடங்களுக்கும் வெளியேறி விட்டனர். இவ்வித நிலைமையில் இவர்கள் தங்களில் படித்தவர்களுக்கு உத்தியோகப்பதவி வாங்கிக் கொடுப்பதற்காகத் தங்களை, முஸ்லிம்களின் முன்னேற்றமான ஒருபிரிவார் என்று வெளிக்குக் கூறிக்கொள்வதும், முஸ்லிம் ராஜியகக்ஷி கூட்டங்களில் கலந்துகொள்வதும் வழக்கம். முஸ்லிம்கள் தங்கள்இனத்தார் எவரையும் பிரித்துத்தள்ள இஷ்டப்படாததால், இவர்கள் மத விஷயமாகக் கொண்டுள்ள மாறான கருத்தை, தங்களுடன் கூடிக்கலந்து கொள்வதால், மாற்றிக்கொண்டு, உண்மை முஸ்லிம்களாக மாறிவிடுவர் எனநினைத்து, அவர்களைத் தங்கள துராஜியக் கூட்டங்களிலும் வேறு பொதுச் சபைகளிலும் சேர்த்து தயவுகாண்பித்து வந்தனர். இந்த விஷநறப் பூண்டுகளுக்குச் சலுகை காட்டக்கூடாது என்று ஆரம்பமுதல் ஒருகூட்டத்தார் சொல்லிவந்ததையும், ஆங்கிலங்கற்ற முஸ்லிம்கள் லக்ஷியம்செய்யாமல் இவ்வாறு அணைத்து வந்தனர். ஆயினும், ஆங்கிலங்கற்ற முஸ்லிம்களின் கருத்துக்கு மாறாகவே காதியானிகள் நடந்துகொள்கிறார்கள்.

இந்நிலைமையில், காதியானி கலீபா தம்மதப் பிரசாரகர்களை பஞ்சாப்மாகாணத்தின்பலபகுதிகளுக்கும் அனுப்பி மிகப் பலமாகக்காதியானிப் பிரசாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்தார். இவர்களின் பிரசாரம் பாமர மக்களுக்கு எட்டி, இவர்களின் மாயவலையில் சிக்கினால் இஸ்லாத்துக்கு பெரும் தீங்குவிளையும் என்பதை உணர்ந்த லாகூரிலுள்ள "அஹ்ரார்" சபையார், காதியான் என்ற ஊரில் பிரம்மாண்டமான தப்லீக் (மதப்பிரசார) கான்பரன்ஸ் ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று முடிவுசெய்து, சென்ற அக்டோபர் மீ 22உ அக் கான்பரன்ஸை ஆரம்பித்து நடத்தினார்கள். இந்தக் கான்பரன்சில் 70 ஆயிரம் முஸ்லிம்கள் கலந்துகொண்டார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய முக்கிய நகரங்களி லிருந்தும் பல அறிஞர்களும் பிரமுகர்களும் இம் மகாநாட்டுக்குச் சென்றார்கள்.

இம் மகாநாடு நடைபெறுவதைத் தடுப்பதற்குக் காதியானிகள் செய்த சூழ்ச்சிகள் பல, பொய்ப் பிரசாரங்கள் பல. ஆயினும் இம்மகாநாட்டைக் கூட்டுவதை அரசாங்க உதவியின் மூலம் தடைசெய்யவும் முடியவில்லை. ஏராளமான ஜனங்கள் இம் மகாநாட்டுக்கு வருவதைத் தடைசெய்து அதைச் சாமான்யமான ஒரு கூட்டமாகக் காண்பித்து விடவும் முடியவில்லை.

இறுதியாக இம் மகாநாடு 70 ஆயிரம் பேர் களுக்கு அதிகமான ஜனக்கூட்டத்துடன் சென்ற மீ 22உ மாலையிலிருந்து ஆரம்பமாகி, இரவு 4 மணிவரையிலும், 22உ பகல் 10 மணி யிலிருந்து இரவு 12 மணிவரையும் தொடர்ச்சி யாக நடைபெற்றுப் பல முக்கிய தீர்மானங் களைச் செய்தது. இம் மகாநாட்டுக்கு ஹஜ்ரத் மௌலானா ஸெய்பித் அத்தாவுல்லா சாகிப் புகாரி அவர்கள் தலைமை வகித்து, 4 மணிநேரம் தொடர்ச்சியாகப் பிரசங்கம் புரிந்து, "காதி யானிய்யத்" என்றால் என்ன? இம்மதத்தால் இஸ்லாம் மதத்துக்கு எத்தகைய தீங்கு ஏற்படு கிறது? என்ற விஷயங்களை விவரமாக எடுத் துக் கூறினார்கள்.

இம்மகாநாட்டில் செய்த முக்கிய தீர்மானங் கள், முஸ்லிம்கள் யாவராலும் கவனிக்கத்தக்க விஷயங்களாகும். முஸ்லிம் பொதுஜனங்கள் பெருந்தன்மையோடு காதியானிகளுடன் வித்தி யாசம் பாராட்டாமல் சிறிது சலுகைகாட்டி வருவதால், அவர்கள் நேரான வழிக்கு வராமல் இஸ்லாத்துக்கு இன்னும் பலமான தீங்கு செய் யவே முன் வருகிறார்கள். ஆதலால், காதி யானிகள் வேறு, முஸ்லிம்கள் வேறு என்பதை அரசாங்கத்துக்கும், உலகுக்கும் எடுத்துக் காண்பிப்பது மிகவும் முக்கியமான விஷய மாகும். அவ்வாறு உலகம் உணரும்போது தான் காதியானிகள் தங்களது உண்மையான நிலைமையை உணர்ந்து, முஸ்லிம்களுக்குத் தொந்தரை செய்து, அவர்களின் மதக்கொள் கைகளைப் புண்படுத்த முயலமாட்டார்கள். நமது நாட்டைப் பொறுத்த வரையில், இனி முஸ்லிம்கள் காதியானிகளுக்கும், காதியானி அபிமானங் கொண்டவர்களுக்கும், யூனியன் போர்டு, முனிசிபல் கௌன்சில், டிஸ்டிரிக்ட் போர்டு, சட்ட சபை முதலிய ஸ்தாபனங்களில் அவர்களுக்கு வோட்கொடுத்து பிரதிநிதிக ளாய்த் தெரிந்தெடுக்காமல், தக்க முஸ்லிம்க ளுக்கு வோட்டுக்கொடுத்து அனுப்புவது மிக வும் அவசியமாகும். ஏனென்றால், இப்படிப்பட் டவர்களால்தான் இஸ்லாத்துக்கு மிகவும் தீங்கு உண்டாகும். உதாரணமாக, எல்லைப்புறச் சட்ட சபைகளில் 'ஷரீஅத் பில்' என ஒரு மசோதா சட்டமாக்கப்பட வேண்டுமென்று முஸ்லிம்களால் தீர்மானத்துக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. சென்ற நவம்பர் மீ 8உ அந்த பில்லைப்பற்றிய விவாதம் சட்ட சபையில் நடந் தது. இதைச் சில ஹிந்து அங்கத்தினர்கள் எதிர்த்துப் பேசினர். இவர்களுடன் காதி யானி அங்கத்தினரும் சேர்ந்துகொண்டு இதை எதிர்த்துப்பேசினர். முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத்துப்படி, முஸ்லிம்களின் வாரிசுபாத்தி யம், விவாகம், விவாகவிலக்கு, விவாகப்பிரிவினை செய்யவேண்டும் என்று சட்டமாக்குவதுகூட காதியானி அங்கத்தினருக்குத் திருப்தியளிக்க வில்லை என்றால், அவர்களது பொதுவான மனப்பான்மை எத்தன்மைத்து என்பதை இதி லிருந்து நன்கு உணர்ந்துகொள்ளலாம். ஆத லால், காதியானிகளோ காதியானி அபிமானி களோ முஸ்லிம் சமூகத்துக்கு நன்மை செய் வார்கள் என்று முஸ்லிம்கள் கனவிலும் கருத வேண்டியதில்லை. சட்டசபைகள், டிஸ்டிரிக்ட் போர்டுகள் முதலியவைகளுக்கு முஸ்லிம்கள் தெரிந்தெடுக்கப்பட்டால்தான் ஏதா வது சமூகத்துக்கு நன்மையான காரியங்கள் செய்யப்படக்கூடும் என்பதை நமது வாசக நேயர்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம்.

"பயானுல் குர்ஆன்"

"திருமறைத் தமிழுரை"

இப்பூவுலக வாழ்க்கையின் இயற்கைச் சட்ட திட்டங்களுக்கும், அல்வழி துறந்து நல்வழியைக் கடைப்பிடித் தொழுகுவதற்கும், அறிவாற்றல்களிற் சிறந்து எக்காலும் புகழ் பெற்றோங்குவதற்கும், மறுமையில் பரந்தாம னின் திருவருளைப்பெற்றுப் பேரின்ப சுகா னந்த மெய்துவதற்கும் இன்றியமையாச் சாதனமாய்—ஒப்புயர்வற்றவழி காட்டியாய்—போற்றத் தகுமுயர் போதகாசிரியனாய்த் திகழ் வது 'திருகுர்ஆன்' என்னும் சிரேஷ்டத் திருமறையே யாகும்:—

'சொல்வேறு' 'அநுஷ்டானம்வேறு' என்ற பேதமின்றி, உள்ளும்புறமும் ஒத்த மனத்தின ராய், இஸ்லாமிய நெறிகளைக் கைக்கொண்

டொழுகுபவரே, 'உண்மை முஸ்லிம்கள்' என அழைக்கப்பட உரிமை வாய்ந்தவர்களாத லின், அவர்களுக்குரிய இம்மாண்புமிக்க வேதத் தின்பால் செறிந்திரா நிற்கும் சர்வ சட்ட திட்டங்களையும், ஏவல் விலக்கல்களையும் தெரிந் தொழுக வேண்டியது அன்னார்களின் தலை சிறந்த கடமையாகும்.

இச்சத்திய வேதத்தின், உள்ளுரைப் பொக் கிஷத்தை நந்தமிழ் நாட்டு முஸ்லிம்களிற் பெரும்பாலோர் கைக்கொள்வதற்கு இதுவரை இயலாமலிருந்தமைக்குக் காரணம், அச்சுத்த சத்தியவேதநூல் நந்தாய் பாஷையாம் தமிழில் மொழிபெயர்க்கப்படா திருந்தமையே யாகும். எனினும், கூத்தாநல்லூர் சாந்தி பிரகடன சபையார் இப்புண்ணிய கைங்கர்யத்தி லீடு பட்டுத் தீவிரமாய் திருவருள் கருணையை யுன்னி உழைத்து வந்ததின் பயனாய், இது பொழுது திருகுர்ஆனின் 30 அத்தியாயங்களி ன் மொழிபெயர்ப்பும் முடிவெய்தி, முந்திய 10 அத்தியாயங்களும் அச்சாகி "பயானுல் குர் ஆன்" திருமறைத் தழிழுரையென நாமஞ் சூட்டப்பெற்று வெளிவந்துள்ளது. திறமான கிளேஸ் காகிதத்தில் ஒரு பக்கம் தமிழும், அத ற்கு எதிர்ப்பக்கத்தில் மொழிபெயர்ப்புக்குரிய மூலஅரபி வாக்கியங்களும், அவைகளுக்குக் கீழே விசேஷக் குறிப்புகளுமாக அச்சடிக்கப் பட்டு, லக்ஷணமான, பைண்டுஞ் செய்யப்பட் டிருக்கிறது. எனது பார்வைக்குக் கிடைத்தப் பிரதியொன்றினை நன்கு பரிசீலனைச் செய்து பார்த்தேன்:—

பாமரர் முதல் பண்டிதர் ஈறாக அனைவரும் எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடிய அத்துணை எளிய, அழகிய, செந்தமிழ் நடையில், திரு மறை மொழிகளை மொழிபெயர்த்திருக்கும் உத்தமபாளையம் ஆலீ ஜனாப் மௌலானா மௌ லவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி அவர்களது ஹிருதய பூர்வமான உழைப்பின் மேன்மையும், இவ்வபார வேலை யில் அணுவளவுங் குறையேற்பட வொண்ணா தென உண்மையன்புடன் பரிசீலனைச் செய்து தந்த கனமிக்க உலமாக்களின் உத்தமச் சேவை யும், தமிழ்நாட்டு முஸ்லிம்களனைவராலும் பாராட்டத் தக்கதாகும்.

இந்நூல் உற்பத்திக்குப் பிரதான கர்த்தர் களாயுள்ள, 'சாந்தி பிரகடன சபையார்' இப் பொருளாதார நெருக்கடி நேரத்திலும், குன்றா ஊக்கங்காட்டி 'தென்னாட்டுத் தமிழ் முஸ்லிம் களுக்கோர் தேவாமிர்தத் திரட்டுப் பாலெனத் தகும்' இவ்வரும்பெரும் நூலைத் தமிழ் முஸ் லிம் உலகிற்குச் சமர்ப்பணஞ்செய்ய முன் வந் தது 'இஷாஅத்தே இஸ்லாம்' திருப்பணியில் அச்சபையார் அடைந்துள்ள இணையற்றவெற்றி யென்றே கூறல் வேண்டும்.

இவ்வகையாய் உயரிய பரோபகாரத் திருப் பணிகளில் ஈடுபட்டுழைக்க ஷெ சபைக்கு ஏக வல்லோன் ஆக்கத்தையும், ஊக்கத்தையுந் தந் தருள்வானாக! ஆமீன்!

இவ்வரிய நூல் நந்தமிழ் முஸ்லிம்களுக்கு சொல்லுதற்கரிய, பெரும் பயனளிக்குமென் றேப் பூரணமாய் நம்புகின்றனம்!

ஆகவே, நஞ் சோதரர்களனைவரும் இந்நூலை வாங்கிப் படிப்பதோடுகூட, இன்னமும் 20 அத் தியாயங்களும் கூடிய சீக்கிரம் அச்சிட்டுப் பிர சுரம் செய்வதற்குரிய பேருதவி புரியுமாறுங் கோருகின்றனம்.

வேண்டும் அன்பர்கள் தஞ்சை ஜில்லா கூத்தாநல்லூர் சாந்திப்பிரகடன சபையாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"ஆத்மார்த்த நூல்களை ஆதரிப்பதே அறி வாளிகளின் லக்ஷணம்."

இங்ஙனம்,

நா. முஹம்மது இப்றாஹீம்,

இஸ்லாமியத் தொண்டன்.

சுவர்க்கம், நகரம்

கூத்தானல்லூர் சன்மார்க்கத் தொண்டர் சபையாரால் வெளியிடப்பெற்ற இவ்வரும் பிரசுரம், நமது பார்வைக்குக் கிடைத்தது. இஃது காதியானிகளின் பிரதா னக் கொள்கைகளுக்கு தக்க மறுப்பாக இருக்கிறது. இவ்வாறு நம் தென்னாட்டி லுள்ள ஒவ்வொரு சங்கங்களும் காதியானியத்தை அகற்ற முற்படுமாகில், அத்துர் கொள்கை கூடிய சீக்கிரம் நம் தென்னாட்டைவிட்டுப் பறந்தோடி விடுமென்பது திண்ணம்.

கருணை நபி என்னும் நூலை ஆக்கியோரின் விஞ்ஞாபனம்

அடியக்கமங்கலத்திற்கு நமது ஹி. இ. காரியதரிசி அவர்கள், சில சகாக்களுடன் சென்றிருந்தபோது, கனம் எஸ். புருஹானுத்தின் சாஹிபைச்சந்தித்து சம்பாஷிக்க நேர்ந்தபோது, ஹி.இ. செப்டம்பர் மாதஇதழில், தமது நூலிற் ஏற்பட்டிருந்த தவறுகளை எடுத்து எழுதப்பட்டிருந்ததை யொட்டி பிரஸ்தாபித்துப் பேசியதில், ஷை நூல் கொடிக்கால் பாளையம் மகாநாட்டின் சமீப தினங்களில் தம்மிடம் எழுத வந்ததாலும், தமக்கு இதர ஜோலிகளிருந்ததாலும், தாம் ஷை நூலை புரூப்பார்க்க வசதியே கிடைக்காத காரணத்தால் அதில் சில தவறுகள் ஏற்பட்டு விட்டன, எனக்கூறி அதற்கு தமது வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டு, இம்மாத ஹி. இ. சஞ்சிகையில், தமது வருத்தத்தையும் பிரசுரித்து வெளியிடும்படி கேட்டுக்கொண்டார். எனவே, ஷை நூலைக் கண்ணுற்ற நேயர்கள், அதில் நிகழ்ந்திருக்கும் தவறுகளைத் திருத்தி சரியாக வாசித்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

N. B.—மற்றொரு நூலான சி. மீ. மு. பாவலர் எழுதிய "உன்னத நபியும் உயரிய வழியும்" என்னும் நூலில் ஏற்பட்டிருக்கும் தவறுகளை எடுத்துக்காட்டி கண்டனஞ் செய்து எழுதிவரும் நமது நண்பரான "சாரணரவர்கள்" இம்மாத சஞ்சிகைக்கும் பத்ரின், யுத்த சம்பந்தமான அநேக விஷயங்களைத் திட்டப்படுத்தி, பல தக்க ஆதாரங்களைத் துருவி எழுதி அனுப்பியிருக்கின்றார். அவை இம்மாத, நமது சஞ்சிகையில் இடமின்மையால் பிரசுரிக்கப்படவில்லை என்பதை வாசக நண்பர்களுக்கும், சாரணருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.—ப-ர்.)

சென்னை-600 008

மதிப்புரை

காதியானிகளுக்கோர் வேடிகுண்டு :—

இவ்வரும் நூல் நமது சங்கப் பிரதிநிதியாய் சிலோன் சென்றிருக்கும் மௌலானா மௌலவீ S.K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களால் இயற்றப்பெற்றதாகும். இதில் காதியானிமஸ்தாபகரான மிர்ஸாவின் கூற்றுகள், பொய் தஅவாக்கள், அருவருக்கத்தக்க பிதற்றல் முதலியவைகள் வெகு தெளிவாகவும் தக்க ஆதாரத்தோடும் மனதைக் கவரும் முறையில் வரையப் பெற்றிருக்கிறது. கீர்த்திவாய்ந்த மகான்களான அநேக மேதாவிகளின்மதிப்புரையையும் தாங்கி நிற்கின்றது. இந்நூலை வாசிப்போர், காதியானி குழாத்தினரின் சூட்சிகளையும் மிர்ஸாவின் முன்னுக்குப் பின் முரண்பாடான கூற்றுக்களையும் எளிதில் நன்கு தெரிந்துகொள்வர். சுருங்கக் கூறின், இவ்வரும் நூல், தன் பெயர் நாமத்திற்கேற்ப, காதியானியத்தைத் தொலைக்க வெடிகுண்டே போலிருக்கிறதெனலாம். கள்ளகாதியானிகளும், உமை காவன்ணுக்களும் அங்காங்கே நரைபூண்டுகளேபோல் முளைத்து, முஸ்லிம்களின் ஈமானைக் கெடுத்து வருமிக் காலத்தில் இவ்வரும் நூல் ஒவ்வொருவரிடமுமிருக்க வேண்டியது அவசியத்திலும் அதி அவசியமெனக் கூறுவது மிகையாது. இப்புத்தகம் வேண்டுவோர் மௌலவீ S. K. முகம்மது ஷர்புத்தீன் சாயபு, 21, அஞ்சுமன் தெருவு, வேலூர். என்ற விலாசத்துக்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சத்தியப் பிரசாரம்

காதியானிக் கண்டனம்

இதில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவந்த ஹிஸ்புல்லாக்களின் அருஞ்சேவைகளும், அந்த ஜில்லாவின் பல பாகங்களிலும் மகாநாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும், ஆங்காங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பரவிய விபரமும், அதன் பிரசாரத்தை ஏற்று நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் கூற்றுகளும் விவரிக்கப்பட்டுளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின, தக்க பிரயோசனமேற்படுவதுடன், காதியானிக் கொள்கைகளின் அந்தரங்கத்தை யாவரும் எளிதில் தெரிந்துகொள்வரென்பது திண்ணம். இப்புத்தகம் ஒவ்வொருவரிடமுமிருக்க வேண்டியது மிகமிக ஆவசியமாகுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. முக்கியமாய் ஆங்காங்கு ஒரு சிலகாதியானிகள், மார்க்கத்தைக் கெடுக்கும் கோடறிக் காம்புகளே போன்று நரைப்பூண்டுகளாய்க் கிளம்பியிருக்கும் இக்காலத்தில், இவ்வரும்நூல் ஒவ்வொருவரிடமுமிருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இவ்வளவு அவசியமான புத்தகத்தை அச்சிட்டு இனமாய் வினியோகிப்பதற்காக, முகம்மதுபந்தர் வாசியும், சிங்கை ஜொஹர்பார் பிரபல வியாபாரியுமாகிய ஆலி ஜனுப் உ. றஹ்மான் சாஹிப் அவர்கள், இதற்கேற்பட்ட முழு செலவுகளையும் கொடுத்துதவியிருக்கின்றார்கள். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக வினியோகிக்கப்படுமாகையால், கீழ்க்கண்ட விலாசங்களுக்கு, அதற்கேற்படும் தபால் செலவுக்கு ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்வார்களாக.

கிடைக்குமிடங்கள் :—

(1) ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்

43 A. போஸ்டாபீஸ் தெருவு, சென்னை.

(2) O. றஹ்மான் சாஹிப்

2. 3. ஜேச்சர் ரோடு, சிங்கப்பூர்.

சித்திக்மலர் கைவசமிருந்தது தீர்ந்து விட்டதால், அன்பர்கள் ஆடர் செய்யாமலிருக்கக் கோருகிறோம்.

சித்தர் மருந்துசாலை

இடமண்—புனலூர் போஸ்டு.

சித்த மருந்துகளும், யூனனி மருந்துகளும் முறைப்படி சுத்திக்கிரமத்துடன் செய்யப்படுகின்றன.

சித்தர் சஞ்சீவி செந்தூரம்

ஜுரம், ஜன்னி, காசம், பலவீனம், ஜலதோஷம், அசதி முதலிய பல வியாதிகளுக்கும், பிறந்த சிசு முதல், விருத்தாப்பியர், பிரசவித்த ஸ்திரீகள் முதலிய யாவரும் எவ்வித பயமுமின்றி உபயோகிக்கலாம்.

	சீசா 1-க்கு	ரூ.	1	4	0
அ...ச் செந்தூரம்	40 வேளை	ரூ.	2	0	0
உருக்கு செந்தூரம்	ஷை	ரூ.	3	0	0
காந்த செந்தூரம்	ஷை	ரூ.	5	0	0
தங்க செந்தூரம்	ஷை	ரூ.	13	0	

சொர்ண சஞ்சீவி சுன்னம்

க்ஷயத்திற்கு தக்க ஔஷதம் 21 வேளை ரூ. 7 0 0

சித்தர் ரசாயனம்

மேக சம்பந்தமான வியாதிகளுக்கும், இரத்த சுத்திக்கும் மிகப் பிரயோஜனமுள்ளது. 40 நாள் மருந்து ரூ. 7 0

வீரிய விர்த்தி லேகியம்

40 வேளை மருந்து ரூ. 5 0 0

திரு நபி சரித்திரம்

காலிகோ பைண்டு ரூ. 2 0 0

இதுவன்றி இதர மருந்துகளும் கிடைக்கும். விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

இங்ஙனம் :

மு. ந. முஹம்மது சாஹிப்.

...ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Sa...
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.